தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

வெளியீடு—26-6-1980] [Issued—26-6-1980

1 5 SEP 1980
MADRAS-600 009
110
1992

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1979 மார்ச் 31-தொகுதி XXIX-எண் 1

Saturday 31st March 1979—Volume XXIX—No. 1

தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

1992

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம்-கனிவளம்.

2. திரு. கி. மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. க. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6 திரு. க. உரொ. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. திரு. இராம. வீரப்பன்: (செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. திரு. க. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம், இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்), தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு : (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் : (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (சமூக நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

1. திரு. எம். வின்செண்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆனூர் ஜெகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிரிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஐசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. HON. THIRU S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. HON. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees ; Correctional Administration.

18. HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மநபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

திரு. செ. சு. ஞானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

12-2-1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.).
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5	அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி.
6	அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
7	அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.)
8	அர்ச்சுனன், திரு. வீ.	ஆரணி.
9	அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ.வ.)
10	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
11	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி, சென்னை.
12	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13	அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம், சென்னை.
16	அன்பழகன், திரு. தி. ..	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதீசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. இல. ..	திருநாவலூர்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23	ஆறுமுகம், திரு. சேலம் மு. ..	சேலம்-2.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராசரத்தினம், திரு, து. ..	பூந்தமல்லி.
26	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.
27	இராமச்சந்திர ரெட்டி, திரு. .. என்.	ஹோசூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி (2)
28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33 இராமசாமி, திரு. எஸ்.ஜே. ..	சோளிங்கர்.
34 இராமசாமி, திரு. கே. என்.கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35 இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36 இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்.
37 இராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோவில்.
38 இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்,
39 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41 இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
42 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44 உச்சி, திரு. கே.	கூடலூர்.
45 உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49 எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50 ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பட்டு.
51 ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
53 கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54 கணேசன், திரு. எஸ். ..	பூம்புகார்.
55 கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56 கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57 கபாலி, திரு, டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59 கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
60 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61 கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62 கருப்பசாமி பாண்டியன் திரு. வீ.	ஆலங்குளம்.
63 கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64 காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65 காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66 காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.)
67 காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68 கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69 கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70 கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72 கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74 கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ.வ.
75 குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
77 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80 கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், புலவர் ..	கா.செய்யாறு.
82 கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
83	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.
84	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86	சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87	சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92	சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்.
95	சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி. ..	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.

	தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதி
	(1)	(2)
114	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ.	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா.	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா.	சீர்காழி (செ.வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்).	மொடக்குறிச்சி.
121	சுட்பையா, திரு. ச.	சங்கரநயினார் கோவில் (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ.	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா.	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ.	வலங்கைமான் (செ.வ.)
126	செல்வராசன், திரு. அ.	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி	சமயநல்லூர் (செ.வ.)
128	செல்வராஜ், திரு. மு.	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ.	திருப்போரூர் (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப.	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்)	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே.	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர.ச.	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. ரா.க.சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ.	பேரணாம்பட்டு (செ.வ

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப. ..	சங்கரி (செ.வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்).	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா).	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.).
162 பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
168 பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
169	பாலகிருஷ்ணன், திரு. சோ. ..	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சிபுரம்.
173	பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175	புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	பணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி... ..	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் ..	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிறி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே. ..	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) ..	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்-சென்னை.
207	ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ. ..	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை.
215	ராஜூ, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216	ராஜூ, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப், திரு. எம், ஏ. ..	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்). ..	நாகர்கோவில்.
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
225	வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226	வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
227	வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
228	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229	வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
230	ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
231	ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232	ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233	ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234	ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
235	ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.

2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

3 திரு. ஆர். எம். வீரப்பன்.

4 திரு. கே. நாராயணசாமி.

5 திரு. எஸ். இராகவானந்தம்.

6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,

சனிக்கிழமை, 1979 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணியளவில மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது,

1, வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டங்கள்,

*குறுகிய கால வினா எண் 32—திரு, இரா, தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்கு தமிழக அரசு செயல் படுத்திவரும் திட்டங்களின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு, பெ, சௌந்தரபாண்டியன் : மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன:—

1. அரிசன மற்றும் ஆதிவாசிகள் நலத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் :

இத்திட்டங்கள் மூலம் மலைவாழ் மக்களின் கல்வி. வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், மற்றும் சுகாதாரமும். வீட்டு வசதியும் செம்மையுற பல திட்டங்கள் செயலாக்கப் படுகின்றன.

[1979 மார்ச் 31

பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டம்: இத்திட்டத்தின் கீழ் விவசாயம், கால் நடை பராமரிப்பு, மின் வசதி, சிறு கிராம கைத்தொழில் வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், கூட்டுறவு போன்ற பல முன்னேற்றத் திட்டங்கள் செயலாக்கப் பட்டு வருகின்றன.

இது தவிர அரசின் பல்வேறு துறைகள் தங்கள் துறைகளின் பொதுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்தும் பல்வேறு பொதுத் திட்டங்களினின்றும் பழங்குடியினர் வாழும் இடங்களும் பயன் பெறும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, தாழ்த்தப் பட்ட மக்கள வாழ்கின்ற மலைப் பகுதிகளில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதிகாரிகள் சாதாரணமாக தரைவழியாக நடந்து போய் அந்த மக்களின் குறைகளை அறிய முடியாத நிலை இருக்கிறது, அப்படி இருக்கும்போது மலைப் பகுதி களுக்கு எப்படிப்போய் அறியப் போகிறார்கள்? ஆகையால் மலை வாழ் மக்கள் வாழக்கூடிய பகுதிகளுக்கு தனி அதிகாரிகளை நியமிக்கவும், அந்தப் பகுதிகளை தனி ஒன்றியங்களாக அமைக்க வும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவ ரவர்களே, தற்போது பெரும்பான்மையான மலைப் பகுதிகளில் போதுமான பாதை வசதி இல்லை. ஆகவே தான் அலுவலர்கள் அங்கு சென்று பார்க்க உரிய வசதி வாய்ப்பு இல்லாமல் செல்ல முடியவில்லை என்று கருதுகிறேன். இப்போது பாதை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனி அதிகாரி களை நியமிக்கவும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது, ஒவ்வொரு மலைப் பகுதியையும் தனி ஒன்றியமாக்கவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எஸ். வி. இராமசாமி: தலைவரவர்களே, மலைப் பகுதிளில் வாழும் மக்களுக்கு சாலைப் போக்கு வரத்து ஏற் படுத்திக் கொடுப்பதில் முன்னுரிமை அளிக்க இந்த அரசு வற் புறுத்துமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, இந்த அரசு வற்புறுத்துவது மட்டுமல்ல, நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மலைவாழ் மக்களின் பிற்போக்குத் தனத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு இருக்கிற அரசியல் சட்டத்தை கடுமையாக நிறைவேற்ற ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? Constitutional obligation on the part of Government of India அது எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் அமுல் படுத்தப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? குறிப்பாக திங்களோடு. குத்தியாலத்தூர் போன்ற பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் ரோடு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள், அந்த மக்களின் கஷ்டத்தைப் போக்க. அவர்களை முன்னேற்றுவதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மலை வாழ் மக்கள் மேம்பாட்டிற்காக 1976–77 ஆம் ஆண்டு முதல்தான் மத்திய அரசும் மாநில அரசும் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றன. இந்த மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய பங்கினை ஒதுக்கித் தருகிறது. எங்கெங்கே சாலை வசதி இல்லையோ அங்கங்கே அதைப் போட இப்போது இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகள் எத்தனை தமிழ்நாட்டில் இருக்கின்றன? அவைகள் யாவை ? மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காக தனி ஒன்றியத்தை அமைக்க வேண்டுமென்ற வகையில் அரசு ஏதாவது முடிவு செய்திருக்கிறதா ? அப்படியென்றால் எந்தெந்த ஒன்றியங்களை தனியாக மலைவாழ் மக்களுக்காக ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது ? குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்போது இந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏற்காடு, அனுராத்துமலை, பச்சைமலை, வடாற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலை, ஏலகிரி, தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி, தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலை, திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை போன்றவை இந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தனியாக ஒன்றியங்கள் அமைப்பது பற்றி கேட்டார்கள். அது பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கோ இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மலைவாழ் ஜாதியினர்களுக்குள்ளும் தாழ்த்தப் பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் என்ற பாகுபாடு இருக்கிறதா ? அப்படியானால் அதற்கேற்ப அரசு சலுகை அளிக்க முன் வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய இந்தியத் திருநாட்டில் எல்லாச் சமுதாயத்திலேயும் சாதி வேறுபாடு இருக்கிறது என்பதை நாடு அறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்றாக அறிவார்கள். ஆகவே, இந்த வேறுபாடுகளுக்கேற்பத்தான் இந்த சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காக அரசு சார்பிலே ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கி வருகிற தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க வேண்டுகிறேன். அதோடு நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் பணியர்கள் மேம்பாட்டிற்கு இந்த அரசு செய்து வரும் பணிகள் யாவை என்பதையும் அறிவிக்க வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டம் 1976—77-ல் துவக்கப்பட்டது. அந்த ஆண்டில் 101 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயும், 1977–78-ல் 153 இலட்சமும் 1978—79-ல் 200 இலட்சமும் அரசாங்கம் ஒதுக்கி செலவிட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்திலுள்ள பணியர்களுக்காக 105 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி 70 குடும்பங்கள் தங்களுடைய வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்வதற்கு பல்வேறு உதவிகளை இந்த அரசாங்கம் செய்து வருகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக வேண்டி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுமா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அத்துடன் இந்த ஆண்டு அவர்களுக்கு எந்த அளவுக்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டு பணிகள் நடந்து

1979 மார்ச் 31]

கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு அதாவது 1978–79-ல் 200 இலட்சம் ரூபாயை இந்த அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, மலை வாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் எங்கெங்கு இருக்கின்றது? அதற்காக அரசு எந்தெந்த வகையிலே என்னென்ன செயல் திட்டங்களை வகுத்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? அதே நேரத்தில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள கொத்தளம் பகுதியையும் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவர ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் எங்கெங்கு இருக்கிறது என்பதைக் கேட்டார்கள். அங்கே எங்கெங்கு மலை இருக்கிறதோ அங்கங்கே இந்தத் திட்டமும் இருக்கிறது. அடுத்து கொத்தளம் பகுதியை மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வர மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, குறிப்பாக இந்த மலைப் பகுதிகளுக்கெல்லாம் பஸ் விடுகிறார்கள். அந்த பஸ் விடுவதிலே மார்க் சிஸ்டம் கடைப்பிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மார்க் சிஸ்டம் இல்லாமல் அங்குள்ள மலை ஜாதி மக்கள் மனுச் செய்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அந்த மக்கள் இன்னும் சைக்கிள் விடுவதற்கே கற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அப்படி பஸ் விடுவதற்கு உரிமம் கேட்டு வருவார்களேயானால் அரசாங்கம் நிச்சயமாக அவர்களுக்குத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதிக்காக மத்திய சர்க்கார், ஜமுனாமருதூரைத் தனி ஒன்றியமாக்குவதற்கு நிதி ஒதுக்கியதாக அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். அந்த நிதி என்னாயிற்று ? அத்தோடு ஜமுனாமருதூர், ஏலகிரி போன்ற பகுதிகளில், பட்டுப் பூச்சி வளர்த்தல், தேனீ வளர்த்தல்

போன்ற தொழில்களை மு க்க முழுக்க அவர்களே செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஜமுனா மருதூர் மற்றும் ஏலகிரி மலைப் பகுதிகளைத் தனி ஒன்றியமாக்குவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியதாக நான் சொல்லவில்லை. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த தேனீ வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்ற தொழில்களை முழுக்க முழுக்க மலைவாழ் மக்கள்தான் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

திரு. பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனா மருதூர், ஏலகிரி மலையில் இருக்கிற விவசாயிகளுக்கு மின் இணைப்பு தரப்படாமல் இருக்கிறது. அந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சி நிதியிலிருந்து செலவழித்து அந்த விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பணிக்காக அரசாங்கம் மொத்தமாகத்தான் தொகை ஒதுக்கியிருக்கிறது. இதைத் தனிப்பட்ட ஒருவருக்கு வழங்குவது எந்த வகையில் சாத்தியம் என்பதை இனிமேல் ஆராய வேண்டும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் குளத்தூர், பால்மலை ஆகிய இடங்களில் மூன்று ஆண்டுகளாக கொண்டாரெட்டி சமுகத்தினர் அந்த மலைவாழ் மக்கள் ஜாதியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இப்போது சலுகைகளைப் பெறுவதை அந்த வட்டாட்சித் தலைவர் மறுக்கிறார். ஆகவே, அவர்களிடமிருந்து ஏதாவது முறையீடு அரசுக்கு வந்ததா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அந்த மலை வாழ் மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப் பெறுவதற்கு சில முற்போக்கான சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டாரெட்டியினர் மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தைக் காட்டி பல்வேறு சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். இப்படி சில முறைகேடுகள் நடந்திருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1979 மார்ச் 31]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எங்கள் பகுதியில் மலைவாழ் மக்களுக்காக காலனி ஒன்று கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த மக்கள் அங்கேயே குடிபோகவில்லை. ஒரு பள்ளிக்கூடமும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குழந்தைகள் அந்தப் பள்ளியில் படிக்கப் போகவில்லை. அதனால் அந்தப் பள்ளி செயல்படாமல் இருக்கின்றது. மலைவாழ் மக்களுக்கு ஒரு சொஸைடியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தனியார் வசத்தில் இருந்து லாபத்தில் நடந்து வருகிறது. அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதற்குத் தேவையான முயற்சி எடுப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஒரு கேள்விக்கு 12 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன என்பதைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு.

*குறுகிய கால வினா எண் 33—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம் சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன் மலைப்பகுதியில் 1976-77-ல் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் நல்வாழ்வுக்காக என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கல்வராயன் மலைப்பகுதியில் 5,828 குடும்பங்களைச் சார்ந்த 24,945 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப் பட்டார்கள். அம்முறையும் அகற்றப்பட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு விவசாயத்திற்கு நிலங்களும் வீடு கட்ட வீட்டு மனைகளும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக 18 குழந்தைகள் காப்பகங்களும் மூன்று குடியிருப்பு பள்ளியும் துவங்கப்பட்டுள்ளன. புதுப்பாலப்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகமும், சுகாதார பணிகளுக்காக 4 மருத்துவக் குழுக்களும் பணியாற்று

கின்றன. 3 கூட்டுறவு வங்கிகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது. வேளாண்மைப் பணிகளுக்கு விவசாயக் கடனும் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 57.3 இலட்ச செலவில் சாலைப் போக்கு வரத்து வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர்? எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது? அந்த நிலங்களை சிலர் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்புச் செய்தவர்களை வெளியேற்றுவதற்கு அரசு ஒரு சட்டம் இயற்றுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதியிலே உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர் என்று கணக்கிட தற்போது ரெவின்யூ துறையினர் அளந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவல் வந்தவுடன் சொல்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: அங்கே கேமூ டேம், மல்லியப் பாடி வழியாக வெள்ளிமலையில் சாலை போடும் திட்டத்தை இந்த ஆண்டில் நிறைவேற்றித்தர முடியுமா? மற்றும் 1,000 ஏக்கரில் பழத் தோட்டத்தைச் சாகுபடி செய்யவேண்டும் என்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்தச் சாலை போடுவது பற்றி கலந்து பேசப்பட்டு இப்போது தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. பழத் தோட்டம் விஷயமாக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கொட்டம்பட்டு அகதிகள் முகாம்.

*குறுகிய கால வினா எண் 34—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், கொட்டம்பட்டு அகதிகள் முகாமிலிருந்து மைசூர் அரசு விவசாயப் பண்ணைக்கு அகதிகள் எவரேனும் அனுப்பப்பெற்றனரா?

(ஆ) ஆம் எனில், இப்போது அவர்கள் பணியில் உள்ளார்களா?

1979 மார்ச் 31]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) ஆம்.

(ஆ) மைசூர் மாநிலத்தில் உள்ள சிந்தனூர் விவசாயப் பண்ணைக்கு அனுப்பப்பட்ட 36 குடும்பங்களில், 16 குடும்பங்கள் மேற்படி பண்ணையில் தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். 20 குடும்பங்கள் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து விட்டார்கள்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைசூருக்கு அனுப்பப்பட்ட 36 குடும்பங்களை அனுப்பியபோது அந்த அரசாங்கம் ஏதாவது உத்தரவாதம் தந்ததா, அதன் பேரில் தான் இந்த குடும்பங்கள் அனுப்பப்பட்டதா ? இப்படி அனுப்பப்பட்ட குடும்பங்களில் 16 குடும்பங்கள் அங்கே தங்கிவிட்டு 20 குடும்பங்கள் திரும்பி வந்துவிட்டனர். இதற்குக் காரணம் என்ன? இவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கவில்லையா ? அதோடு ஒரு நாளைக்கு 60 காசு மட்டுமே உணவுக்காக கொடுக்கப்பட்டதால், இது போதாத காரணத்தால் அவர்களாகவே திருட்டு ரயிலேறி இங்கு வந்து விட்டதாகவும், இங்கு அமைச்சர் அவர்களை சந்தித்ததாகவும் செய்தி இருக்கிறதே, அது உண்மையா ? அப்படியென்றால் இனிமேல் அவர்களாகவே எங்காவது ஓடிப் போய் பிழைத்துக் கொள்ளவேண்டியதுதானா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனூர் விவசாயத் திட்டத்தின்கீழ் குடியமர்த்துவதற்காக 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 8 குடும்பங்கள் மண்டபம் இடைத்தங்கல் முகாமிலிருந்தும், மற்றும் 28 குடும்பங்கள் திருச்சியிலுள்ள கொட்டப்பட்டு இடைத்தங்கல் முகாமலிருந்தும் அனுப்பப்பட்டனர். கண்டியில் உள்ள உதவி ஹை கமிஷனர் அலுவலகத்தில் உள்ள முதல் செயலாளர் மேற்கண்ட குடும்பங்களை முறையே அரசு பண்ணைக் கழகத்தின் திட்டத்தின்கீழும், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் தொழில் திட்டத்தின்கீழும், குடியமர்த்துவதற்கு அனுப்பப்பட்டு, 1978ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இந்தியா வந்து சேர்ந்தனர். அவர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் குடியேறுவதற்கு மறுத்து விட்ட காரணத்தால் அவர்களது சம்மதத்தையும், மத்திய இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று அவர்களை கர்நாடக மாநிலத்திலுள்ள சிந்தனூர் விவசாயத் திட்டத்தின்கீழ் குடியமர்த்துவதற்கு அனுப்பப்பட்டார்கள்.

திருச்சி, கொட்டப்பட்டு முகாமிலிருந்து அனுப்பப்பட்ட 28 குடும்பங்களில் 10 குடும்பங்கள் சிந்தனூரில் தங்களுக்கு தங்குவதற்கும், வேலைக்கும் சரியான வசதி செய்து கொடுக்கவில்லை

என்ற காரணங்களை கூறியும் உடனே திரும்பி விட்டார்கள். அவ்வாறு திரும்பிய அந்த 10 குடும்பங்களை மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, திருச்சி, கொட்டப்பட்டு முகாமில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் அவர்களுக்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி தொழில் திட்டத்தின்கீழ் மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

மேலும் 10 குடும்பங்கள் தங்களுக்கு விவசாயத்தில் முன் அனுபவம் எதுவும் இல்லை என்றும், சிந்தனூர் சீதோஷ்ண நிலை தங்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றும் மற்றும் அங்கு பேசப்படும் மொழி தங்களுக்கு புரியவில்லை என்றும் காரணங்களைக் கூறி 16—2—1979-ந் தேதி சிந்தனூரில் இருந்து அவர்களாகவே விவசாயப் பண்ணை நிர்வாகிகளின் அனுமதி பெறாமல் தன்னிச்சையாக தமிழ்நாட்டிற்குத் திரும்பி விட்டனர்.

தற்போது நடைமுறையில் உள்ள மத்திய அரசு விதிகளின்படி குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்படுபவர்களுக்கு அவர்கள் அந்த திட்டத்திலிருந்து தன்னிச்சையாக வெளியேறி விட்டால் மேற்கொண்டு எந்த திட்டத்தின்கீழும் மறுவாழ்வு உதவி பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆகிறார்கள்.

இங்கு அவர்கள் அனுப்பப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டில் குடியமர்த்த வேண்டும் என்று எதிர்பார்த்தபோது, மைசூருக்கு அனுப்புவதற்கு சம்மதம் பெற்றுத்தான் அனுப்பப்பட்டனர். அத்துடன் மத்திய மறுவாழ்வு அமைச்சர் அவர்களுடைய ஒப்புதல் பெற்று அனுப்பப்பட்டது. இப்போது அவர்களாகவே தன்னிச்சையாக திரும்பியிருக்கிறார்கள். என்னையும் வந்து சந்தித்தார்கள். மீண்டும் அவர்களை அங்கே போகவேண்டும் என்று சொன்னோம், அப்படி அவர்கள் அங்கே போகவில்லை என்றால், மாநில அரசின் திட்டத்தின்கீழோ அல்லது மத்திய அரசின் திட்டத்தின்கீழோ உதவியை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அவர்களாகவே தங்கள் மறுவாழ்வுத் திட்டத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, இன்று காலையில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்த பின்னால் அதைப்பற்றி கேளுங்கள்.

1979 மார்ச் 31]

மறுவாழ்வு இல்லங்களில் துவக்கப் பள்ளிகள்.

*வினா எண் 558—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள ஏழைகளின் குழந்தைகள் கல்வி வசதி பெற இல்லங்களில் தனியாக துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசினிடம் உள்ளதா?

(ஆ) தற்சமயம் அந்த குழந்தைகள் எப்படி கல்வி வசதியை பெறுகிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இல்லவாசிகளின் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் வயது வந்த எல்லா குழந்தைகளையும் இல்லங்களின் பக்கத்திலிருக்கும் அரசு அல்லது தனியார் மற்றும் அனாதை பள்ளி மற்றும் மதச்சார்புள்ள பள்ளிகள் முதலியவற்றில் சேர்க்கப்படுகின்றனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த இல்லங்களை கிராமத்தை விட்டு தூரத்தில் கட்டியிருக்கிறார்கள். என் தொகுதியில் மல்லவாடி என்ற இடத்திலுள்ள இல்லத்திலுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்காக நீண்டதூரம் செல்லவேண்டியிருக்கிறது. அதேநேரத்தில் கிராமங்களிலுள்ளவர்களும் ஆட்சேபிக்கிறார்கள். ஆகவே இப்பேர்பட்ட இல்லங்களில், தனியாக குழந்தைகள் படிப்பதற்கு அங்கேயே வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இல்லங்களில் மறுவாழ்வு பெற்ற தொழு நோயாளிகள் இருக்கிறார்கள். ஆகவே இக்குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள் சற்று தூரத்தில் இருப்பதுதான் நல்லது என்று கருதித்தான் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தக் குழந்தைகள் பெற்றோர்களுடன் இந்த இல்லங்களில் தான் தங்கி வருகின்றன. ஆகவே இந்த இல்லங்களிலேயே ஒரு பக்கத்தில் குழந்தைகள் படிப்பதற்காக பள்ளியை துவக்கலாம். இதை அரசு யோசிக்குமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : இது பற்றி செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனைக்கு கொண்டு வரப்படவில்லை.

[1979 மார்ச் 31

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிளை நிலையங்கள்.

*வினா எண். 559—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் இயங்கி வரும் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தில் உள்ள கிளை நிலையங்களை 100 கிளை நிலையங்களாக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : இல்லை.

[முற்பகல் 9–20]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளில் இந்தத் திட்டம் இருக்கிறது. பல்வேறு ஒன்றியங்களில் இல்லாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டே இதைப்பற்றி எடுத்துக் கூறினேன். அடிக்கடி அந்தப் பகுதிகளில் கால்நடைகளுக்கு நோய்வந்து, அவைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, தஞ்சை மாவட்டம் முழுவதும் தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் இரண்டு செயற்கை கருத்தரிக்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு செயற்கை நிலையத்தின்கீழும் 25 கிளைகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்குமேல் நிலையங்கள் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. கோவில்பட்டி அழகர்சாமி கேட்கிறார்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே பல கால்நடை கிளை நிலையங்களில் போதிய லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டுகள் இல்லாமல் மூடப்பட்டிருக்கின்றன. அப்படி செயல்படாமல் இருப்பது உண்மைதானா? ஆகவே, இமேலாவது அதிகப்படியான லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டு பதவிகள்

1979 மார்ச் 31]

ஏற்படுத்தி, இப்படி மூடப்பட்ட கால்நடை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கிளை நிலையங்கள் திறப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடை ஆய்வாளர்களுக்கு போதிய அளவு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அப்படி ஆய்வாளர்கள் இல்லாமல், வேக்சினேட்டர்கள் அந்தப் பணியினைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 576.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மருத்துவமனையை விரிவாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் அதிகமாக 20 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு நீண்டநாட்களாக மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டு இருக்கிறது. அதற்கான முயற்சி என்ன எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையை விஸ்தரிப்பதற்கு மேலும் ஒரு பகுதி கட்டப்பட வேண்டுமென்ற மக்களுடைய கோரிக்கை வரப்பெற்று, அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கின்ற படுக்கைகளோடு இன்னும் 12 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவைக் கட்ட வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டு, இயக்குநர் அப்படி அனுப்பி வைத்தார் என்றாலும், 1979–80 ஆம் ஆண்டுக்கான பகுதி திட்டமாக அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கத்திலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், முதன்மை வரிசையிலே அது இடம் பெறவில்லை.

[1979 மார்ச் 31

சென்னைத் துறைமுகத்தில் இரும்புக்கல் ஏற்றுமதிப் பிரிவு.

*வினா எண். 577—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தில் இரும்புக்கல் ஏற்றுமதி பகுதியிலிருந்து பரவும் இரும்பு தூசியினால் சென்னை நகரில் இராயபுரம் பகுதி பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மாநில அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) சென்னை துறைமுகக் கழகத்தலைவரை கேட்டுக் கொண்டதன் பேரில் தூசி பரவாதிருக்க அக்கற்களின் மேல் தண்ணீர் தெளிக்க ஏற்பாடு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் துறைமுகத்தில் இந்த இரும்புக் கல் ஏற்றுமதியினால் சென்னை நகரமே பாழாகின்ற ஒரு அவல நிலை இருக்கிறது. அதோடு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் ஒரு நிகழ்ச்சிக்கு துறைமுகத்திற்குச் சென்றபோது, இதை நேரிலே அனுபவித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சட்டைகள் கூட சிவப்பு நிறமாக மாறி விட்டதாகத் தெரிய வருகிறது. அது மட்டுமல்ல, சென்னையில் இருக்கக்கூடிய பெரிய கட்டிடமான எல்.ஐ.சி. கட்டிடம் கூட, இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில் தூசியால் தாக்கப்பட்டு, அழுக்குப் படிந்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதோடு, நம்முடைய கட்டிடமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பெரும்பாலும் கோடை காலத்திலே பாதிக்கப்படும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியா அல்லது விவாதமா? சுருக்கமாகக் கேளுங்கள். நேரமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: கேள்விதான். இப்படி இந்தக் கல்லை ஏற்றுமதி செய்கின்றபோது, அதற்குப் பக்கத்திலே சவுத் இந்தியா பிளவர் மில் என்ற கோதுமை மாவு தயார் செய்யும் ஒரு பெரிய பாக்டரி இருக்கிறது.

1979 மார்ச் 31]

ஒரு சமயம் இரும்புக்கல் சத்து அதிலே கலந்தால் மக்களுக்கு நல்லது என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. தொடர்ந்து அந்த தூசி வருகிறது. அயர்ன் பர்த் ஆரம்பத்திலிருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வெறும் தண்ணீரை மட்டும் சில சமயங்களில் தெளித்து வருகிறார்கள். ஆந்திராவில் இருக்கும் வைசாக்கிலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வாறு கேள்வி நேரத்தில் நீண்ட விளக்கமாகப் பேசுவதை அனுமதிக்க முடியாது. சுருக்கமாகக் கேளுங்கள். பெரிய விளக்கங்கள் தேவையில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: கண்ட்லா போர்ட்டிலும் வைசாக் போர்ட்டிலும் பாதுகாப்பு முறையில் கல் ஏற்றுமதி செய்யப் படுவதாகத் தெரியவருகிறது. அதே போன்று பாதுகாப்பான முறையில் கல் ஏற்றுமதி செய்ய இங்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அமெரிக்க தேசிய சுற்றுப்புற காற்று அழுத்த மிகுதியாக இதிலே தூசி கலந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காற்றில் அனுமதிக்கத்தக்க தூசி 3/220 மைக்ரோ கிராம் ஆகும். எனவே, தண்ணீர் தெளிப்பதோடு விளக்கெண்ணையும் கலந்து தெளிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பின்னால் இவைகள் பாதுகாப்பான முறையில் ஏற்றப்பட வேண்டுமென்பதற்காக நல்ல திட்டம் ஒன்றைத் தீட்டி அதன் வழியாக செயல்பட மத்திய அரசு ஒப்புதல் வந்தவுடன் 92 லட்சம் ரூபாய் செலவில் ஆவன செய்ய இருப்பதாக துறைமுகத் தலைவர் தெரிவித்திருக்கிறார். உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண் 578— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் கைத்தறி தொழில் கூட்டுறவுகள் ஏற்படுத்த மாபெரும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) மற்றும் (ஆ) தமிழக அரசு தயாரித்துள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப்படி, திட்டக்காலம் முடியும் முன்கூடுதலாக 1·25 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரப்படுவார்கள். இவர்களில் தறியில்லாத சுமார் 40,000 பேர்களுக்கு தொழிற்சாலை முறையில் 200 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும். மிகுதியுள்ள 85,000 நெசவாளர்கள், ஏற்கனவே செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களிலும் புதிய கூட்டுறவுச் சங்கங்களிலும் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டு வருகின்றனர். பங்குத்தொகையாக நெசவளார்களுக்கும், சங்கங்களுக்கும் அரசு அளிக்கும் தொகை ரூபாய் 1,605 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: கைத்தறி வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருப்பது வரவேற்கத்தக்கது. கைத்தறிக்கு முக்கியமானது நிலயான, நியாயமான விலையில் நூல் கிடைக்கவேண்டும். இப்போது கிடைப்பதில்லை. ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக நிலையான, நியாயமான விலையில் நூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: கைத்தறித் துறையில் நூல்விலையைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமை. நூல் விலையில் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கும் அனைத்து மாநிலங்களிலும் ஒரே நிலையான நூல் விலையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. இப்போது நூலின் விலை சற்று உயர்ந்திருக்கிறது என்பதை தமிழக அரசு மத்திய அரசுக்கு சுட்டிக்காட்டி நூல் விலையைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: சொந்தமாகக் கைத்தறி இல்லாதவர்களுக்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடங்களில் எத்தனை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. சொந்தமாக தறி இல்லாதவர்கள் எட்டையபுரத்தில் ஆயிரக்கணக்கான பேர் இருக்கிறார்கள். அங்கு தொழிற் கூட்டுறவு நெசவு சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்யப்படுமா?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: 1977-78 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 49 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு தறிஇல்லாத நெசவாளர் களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்ட கால முடிவுக்குள் இந்த 49 சங்கங்கள் உள்ளிட்டு 200 சங்கங்களை தறி இல்லாத நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியில் அமைக்க அரசு முயற்சித்து வருகிறது.

கைத்தறித்துணி விற்பனைக்குச் சலுகை.

*வினா எண் 579— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கைத்தறித் துணிகளுக்கும் தனிப்பட்ட கைத்தறி வியாபாரிகளுக்கும் ''ரிபேட்'' சலுகைகளை அளித் திட அரசு ஆலோசித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: தனியார் வியாபாரிகளுக்கு ரிபேட் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் கைத்தறி துணியை வாங்கி ஏற்றுமதி செய்கிறார்கள். அவ்வாறு ஏற்றுமதி செய்யக்கூடியவர் களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா? ஒரு ஆண்டிலே எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, கைத்தறித் துறையிலே தள்ளுபடி என்பது கூட்டு றவுத் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிற ரகங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. தனியார் துறையிலே உற்பத்தி செய்யப் படுகிற கைத்தறி துணிகளுக்கு அரசு எந்தவிதமான தள்ளுபடியும் கொடுப்பதில்லை. ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பியிருக் கிறார்கள். 1972 ஆம் ஆண்டிலே ஊக்க போனஸ் கொடுப்ப

[1979 மார்ச் 31

தாக ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு 3 சதவீதம் கொடுத்த தாகவும் அது பிறகு நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் நாங்கள் அறிகிறோம். அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அதை மீண்டும் அரசு பரிசீலித்து வரு கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, கைத்தறிக்கு ரிபேட் கொடுப்பது அதிகமாக அது விற்பனை யாகவேண்டுமென்பதற்காகத்தான். கைத்தறித் துணியை உற்பத்தி செய்கிறவர்கள் தனியார்களாக இருந்தாலும், கூட்டுறவுத்துறையாக இருந்தாலும் அதிகமாக விற்பனை செய்ய வேண்டுமென்பதுதான் தேவை. நடந்த பொருட்காட்சியிலே கூட்டுறவுத் துறை உற்பத்தியாளர்களுக்குத்தான் ஸ்டால் அங்கே கொடுக்கப்பட்டது, தனியார் துறையைச் சேர்ந்த கைத்தறி துணி உற்பத்தியாளர்களுக்கு ஸ்டால் கொடுக்கப்பட வில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறை இருக்கிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் விசேஷ கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, தள்ளுபடி கொடுக்கவில்லை என்ற ஒரு குறை பாட்டை இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்தை பொறுத்தவரையிலும் தள்ளுபடி கொடுப்பதுதான் குறை என்று நாங்கள் கருதுகிறோம். சரக்குகள் அதிகமாக தேங்கினால் அப்போது அவர்களுக்கு வேலை பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும், அதைத் தடுப்பதற்காகத்தான் தள்ளுபடியை அறிவிக்கிறோம். இன்றைய நிலையில் தள்ளுபடி தேவையில்லை என்று அரசு உணர்கிறது. தனியார் துறையிலே சரக்குகள் தேங்குவதில்லை. அவர்கள் விற்பனை செய்ய முழு முயற்சி எடுத்துக்கொண்டு விற்பனை செய்திருக் கிறார்கள். எனவே அங்கே துணி தேக்கம் ஏற்படுவது இல்லை. கூட்டுறவுத் துறையிலே உள்ள நெசவாளர்கள் உற் பத்தி செய்கிற துணி தேங்குகிறபோது அவ்வப்போது 20 சத வீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. அப்படி விற்பனை செய்தால்தான் தேக்கம் குறைந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கமுடியும். ஆனால் துணி தேக்கம் இல்லாத நேரத்திலே தொடர்ந்து அவர்களுக்கு வேலை கிடைக்கிற நேரத்திலே தள்ளுபடி தேவையில்லை என்றுதான் அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியை ஒருவேளை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் கேட்டது

ரிபேட் பற்றியல்ல. பொருட்காட்சியிலே தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஸ்டால்கள் கொடுக்கப் படவேண்டும். ஆனால் தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படாமல், ஸ்டால்கள் போட காலி இடங்கள் இருந்தும் அவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாட்டை—நான் ஏற்கனவே இதுபற்றி திரு ராதாவிடம் கூடச் சொன்னேன்—ஆகவே அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, விளம்பரத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு பேர்களுக்கும் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நடந்த பொருட்காட்சிபற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு நடைபெறுகிற பொருட்காட்சி கூட்டுறவுக் கைத்தறி வார விழா என்ற முறையிலே தான் நடத்தப்படுகிறது. ஆகவே அதிலே தனியார் துறைக்கு இடம் அளிக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றப் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் இன்றைக்கு வர இருக்கிற அந்த மானியத்திலே பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

வேலூர் சர்க்கரை ஆலை.

*வினா எண். 580— திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்த விவசாயிகளுக்கு கடன் தருவதாக ஒப்பந்தம் பெற்றும் பல மாதங்களாக கடனும் உரமும் தரப்படாமல் இருக்கின்றது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசாங்கம் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இல்லை. பொதுவாக விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுவதில் காலதாமதமேற்படுவதில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு விடை எழவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸே இருக்கிறது. ஏற்கனவே 25 ஷேர்கள் எடுத்துவிட்டு, என்னுடைய தகப்பனாரே சுற்றிச் சுற்றி வந்தும் பணம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனக்கே இந்த நிலைமை இருப்பதால், சாதாரண ஏழைகளுக்கும் இந்த கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியில்லை என்றால் மனமார வரவேற்கிறோம். இன்னொன்று கேட்க விரும்புகிறேன். 9.8 ரெக்கவரி என்று.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி நீண்டதாக இருக்கக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு 63·50 கொடுக்கப்படுவதாக சொல்கிறார்கள், அதை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? விலை வீழ்ச்சி அதிகமாக இருப்பதால் ஓரளவிற்கு வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலைக்கு கரும்பை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விலையைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தர இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த அனுபவத்தைப் பற்றிச் சொன்னார்கள். எம். ராஜு கவுண்டர் என்பவர் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி அன்று 4,500 ரூபாய் கடன் வேண்டுமென்று மனு போட்டார். 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி அன்று அது கூட்டுறவு பேங்குக்கு அனுப்பப்பட்டது. பணம் கிடைக்கவில்லை என்று 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் நாளில் மீண்டும் மனுச் செய்தார்கள். பரோடா பேங்கிலிருந்து கடன் அளிக்கப்பெற்றது. கூட்டுறவுத் துறையை விசாரித்ததில் அவர் இரண்டு சங்கங்களிலிருந்து கடன் பெறும் சூழ்நிலை இருந்ததால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது என்று கூறியிருக்கிறார்கள்.

Nylon Industry in Andipatti Constituency.

*Q. No. 581—Thiru K. KANDASAMY : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) whether there is any proposal to start a Nylon Industry near Vaigai Dam in Andipatti Constituency, Madurai district; and

(b) if so, the details thereof ?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1972-ம் ஆண்டு, மதுரை மாவட்டம், வைகை அணைக்கருகில் நைலான்—6 துணி நூலிழை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை டிட்கோ நிறுவ உத்தேசித்திருந்தது. ஆயினும் இத்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான அனுமதியை மத்திய அரசிடம் பெற முடியாததால் இதை செயல்படுத்த இயலவில்லை.

மின்சார உற்பத்தி மீது வரி.

*வினா எண் 582-திரு. என். பிட்டப்பா ; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு யளிப்பாரா—

(அ) மின்சார உற்பத்தி மீது மத்திய அரசு அண்மையில் விதித்த (எக்சைஸ் லெவி) வரியை குறித்து முற்றிலும் மறு பரிசீலனை செய்திடக் கோரி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய மேல் நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஆயத் தீர்வை விதிப்பின் மூலமாக பெறும் தொகையை திரும்ப மாநில அரசுக்குக் கொடுப்பதாகவும் இம்முடிவு 1979-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து செயல்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்த முடிவு 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இவ்வரசு மத்திய அரசுடன் கடித தொடர்பு கொண்டுள்ளது.

சேத்தூரில் உப மின் நிலையம்.

*வினா எண் 583 திரு. இரா. தாமரைக் கனி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தூரில் 66 . K.V. உப மின் நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்துவிட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே' இந்த சேத்தூர் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கு 66 கே. வி. உப மின் நிலையம் ஆரம்பித்தால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், பொது மக்களும் மிகவும் மகிழ்ச்சி அறை வார்கள். ஆகவே, அதை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்ததட காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் தமிழக முதல்வரவர்களுக் கும் அப்பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரப் பகுதிகளுக்கு போரூர் ஏரியிலிருந்து குடி நீர் வழங்கல்.

*வினா எண் 584—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரைச் சேர்ந்த அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகளுக்கு குடி தண்ணீர் விநியோகத்திற்கு போரூர் ஏரியிலிருந்து குழாய்கள் அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த குடி தண்ணீர் சப்ளை மூன்று நகர்களுக்கும் போது மானவையா அல்லது பற்றாக்குறையா?

(இ) இதனை விரிவுபடுத்த திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூபாய் 8.95 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டது. அசோக் நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகள் இதனால் பயனடையவில்லை.

(ஆ) போரூர் ஏரியில் உள்ள கிணறுகளிலிருந்து வழங்கப்படும் தண்ணீர் மட்டும் இப்பகுதிகளுக்கு போதுமானதல்ல.

(இ) இப்பகுதிகள் இப்போது முழுமையாக சென்னை மாநக ராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ளதால, தேவையான குடி நீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு அந்தப் பகுதியிலுள்ள கருணாநிதி நகர் இருக்கும் பகுதி, எம். ஜி. ஆர். நகர் இருக்கும் பகுதி ஆகியவற்றில் தண்ணீர்க் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படியிருந்தும் இவ்வளவு ரூபாய் செலவில் போடப்பட்ட அந்தத் திட்டம் *பெயிலியர் ஆகி விட்டதா அல்லது நல்லமுறையில் செயல்படுகிறதா என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியில் விரைவாகத்

1979 மார்ச் 31]

தண்ணீர் அளிக்கும் திட்டத்தை எந்த வகையில் மேற்கொள்ள இருக்கிறது? இல்லையென்றால், பாலாற்றில் இருந்தாவது அல்லது வேறு எங்கேயாவது இருந்தோ தண்ணீரை அரசு கொண்டு வருவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, முதல் திட்டத்தில் கருணாநிதி நகர் தவிர அசோக் நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகள் பலன் பெறவில்லை. இப்பொழுது 12 பஞ்சாயத்துக்கள் சென்னையோடு இணைந் திருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சேர்த்துக் குடிநீர் தரு வதற்கான திட்டம் ஆய்விலே இருக்கிறது.

திரு. பொ. சிவாமணி : பேரவைத் தலைவரவர்களே, இது போன்றே திருவொற்றியூர் பகுதியில் உள்ள எருக்கஞ்சேரி போன்ற பகுதிகள் சென்னையோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு டேங்க் மூலம் தண்ணீர் வசதி தர ஸ்பெஷல் ஆபீசர் ஆணையிட்டும் அது இதுவரையில் செயல்பட்டு இயங்கவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.40]

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு தாங்கள் போரூர் ஏரிப் பக்கம் போகும்போதும் வரும்போதும் பார்த்திருப்பீர்கள். கிணறுகள் உபயோகப்படுத்தப்படாமலிருக் கின்றன. மோட்டார்கள் எல்லாம் இருக்கின்றனவா? அங்கில் லாவிட்டால், வேறு எங்காவது அந்த மோட்டார்களைப் பயன் படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அங்கிருந்து கொண்டு வந்துதான் இப்பொழுது கலைஞர் கருணாநிதி நகருக்குக் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்தக் கேணிகள் பாழடைந்து விட்டன, தண்ணீர் வரவில்லையென்று சொன்னால், Madras Metropolitan Water Supply and Sewerage Board Authority அவர்களை அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

[1979 மார்ச் 31

சென்னை பெருநகர்த் திட்டம்.

*வினா எண் 585—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பெருநகர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் பணிக்கு இதுவரை மத்திய அரசின் நிதி உதவி எந்த அளவு கிடைத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னை பெருநகர் பகுதியில், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக இந்திய அரசு ஒருங்கிணைக்கப்பட்ட நகர வளர்ச்சித் திட்டத்தின் I.U.D.P. யின் கீழ் 1975–78 ஆகிய மூன்று ஆண்டு காலத்தில் தமிழக அரசுக்கு ரூ. 661 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வருடாந்திர ஒதுக்கீடு பின்வருமாறு:—

ஆண்டு.	இந்திய அரசு நிதி ஒதுக்கீடு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1975–76	135
1976–77	242
1977–78	284
மொத்தம் ..	661

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Tamil Nadu Slum Clearance Board

*Q. No. 586—Thiru N. KITTAPPA; Will the Hon. the Minister for Labour be pleased to state:—

(a) Whether the Tamil Nadu Slum Clearance Board has been recast; and

(b) if so, the details tnereof?

(b) if so, details the thereof?

[1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், ஒரு அலுவல் சார்பற்ற தலைவர், ஐந்து அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள், ஒன்பது அலுவலக உறுப்பினர்கள்—ஆகியோரைக் கொண்டு கீழ்க்கண்ட வாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது :—

தலைவர்.

திரு. பி. ராமபத்ரன், பி.ஏ. பி.எல்.

அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள்.

(1) திரு. ஜெ. பாலன்.

(2) திரு. எஸ். துரைசாமி.

(3) திரு. இ. மதுசூதனன்.

(4) திரு. எம். பாண்டியன்.

(5) திரு. எஸ். எச். மகாதேவன் (ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை.)

அலுவலக உறுப்பினர்கள்.

(6) அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

(7) சென்னை மாவட்ட ஆட்சியர்.

(8) அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை.

(9) அரசு செயலாளர், சமூக நலத் துறை.

(10) அரசு செயலாளர், நிதித் துறை (அல்லது) அவரால் நியமிக்கப்பட்டவர்.

(11) சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்தின் பிரதிநிதி.

(12) தலைவர், தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம்.

(13) ஆணையர், சென்னை மாநகராட்சி.

(14) உறுப்பினர்—செயலாளர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

[1979 மார்ச் 31

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்தக் குழுவிலே போடப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏனென்றால், மற்றவர்களை எல்லாம் அதிகாரிகளாகப் போட்டுவிட்டு, ஒருசில தனிப்பட்டவர்களைப் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தால், எல்லா—சர்வ—கட்சிகளைச் சேர்ந்தவர்களைப் போட உத்தேசம் உண்டா, அதைக் கலைத்துவிட்டு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் அத்தனை பேரும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், திரு. மகாதேவன் தவிர.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, குடிசை மாற்றுத் திட்டம் குறிப்பாக சென்னையிலேதான் முக்கியமான பிரச்னை. சென்னையிலே இருக்கிற இந்தப் பிரச்னையிலே அந்தக் குழுவில், மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப் போல் ஆளுங் கட்சிக்காரர்களை நியமித்திருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சித்தான் சென்னையிலே அங்கம் வகிக்கும் போது பிரதான எதிர்க்கட்சிக்காரர்களைப் புறக்கணிப்பதன் நோக்கம் என்ன ? ஏனென்றால், முக்கியமான பிரச்னை. புறக்கணித்தாலும் பரவாயில்லை ; குடிசை மாற்று வாரியத் தலைவர் மிக நல்லவர்—அவரைப்பற்றி ஒன்றும் சொல்ல மாட்டேன். எனவே, அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, மாதந்தோறும் குறிப்பிட்ட நாளில் சென்னை மாவட்ட உறுப்பினர்களைச் சந்தித்துப் பரிகாரம் காண அந்த அளவுக்காவது முயற்சி எடுப்பார்களா ? ஏனென்றால், அமைச்சரவர்கள் அதைச் செய்வார்களென்று நினைக்கிறேன். குடிசை மாற்று வாரிய, அந்தக் குழு உறுப்பினர்களைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஆளுங் கட்சிக்காரர்களே இருக்கட்டும். அதிகாரிகளைக் கூட எடுத்து விட்டு எல்லாம் உங்கள் கட்சிக்காரர்களைப் போட்டுக் கொள்ளுங்கள். மாதந்தோறும் சென்னை மாவட்ட உறுப்பினர்களைச் சந்தித்துப் பரிகாரம் காண முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே அநேகமாக எல்லா தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எனவே, ஒரு செக்ஷன் ஆஃப் பீப்பிளை அவர்கள் ரெப்ரசன்ட் செய்வார்கள். இன்னொரு செக்ஷன், அன்ரெப்ரசன்ட்டட் ஆகப் போய்விடக் கூடாதே, மெஜாரிட்டி என்றுதான் (குறுக்கீடு) One Section of people அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகப் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல (குறுக்கீடு)

1979 மார்ச் 31]

Don't be in a hurry. Mr. ARUMUGAM

திரு. சி. ஆறுமுகம் : ஒரு செட்டுக்கு இன்னொரு "செட்," என்று அமைச்சராக வந்த பிறகு பேசக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தவறு இருந்தால் திருத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்கள் என்னுடைய அனுமதியில்லாமல் எழுந்து பேசுவதே முறை தவறு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் மிக நெருங்கிய நண்பர், கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். 3 ஆண்டுக் காலம் மிக நெருக்கமாக இருந்திருக்கிறோம். நாங்கள் ஒரு கன்வென்ஷனை, ஒரு மரபை பின்பற்றி வந்திருக்கிறோம். பேரவைத் தலைவரவர்கள் கொஞ்சம் அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த குடிசைமாற்று வாரியம் ஆரம்பித்த காலத்திலிருந்து ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறது. அதைப் படித்துக் காட்டுகிறேன்.

1972 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் நாளிலிருந்து திருவாளர்கள் கே. மனோகரன், வி. முனுசாமி, முரசொலிமாறன், சைதை சம்பந்தம் டி. நடராஜன் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் நாளிலிருந்து திருவாளர்கள் வி. முனுசாமி, சைதை சம்பந்தம், ஏ. ஜார்ஜ், எம். கன்னியப்பன், ஏ. செல்வராஜ் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் நாள் முதல் திருவாளர்கள் ஏ. கே. கபாலமூர்த்தி, டி. கே. கபாலி, எம். கோபால், எம்.எல்.ஏ., எ. ஜார்ஜ், கே. எம். கண்ணபிரான் ஆகியோர் இருந்திருக்கிறார்கள்.

1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் நாள் முதல் திருவாளர்கள் ஏ. கே. கபாலமூர்த்தி, டி. கே. கபாலி, என். இராமதாஸ், எம். கோபால், எம். எல். ஏ., ஏ. ஜார்ஜ் இருந்திருக்கிறார்கள்.

இப்படித்தான் வந்திருக்கிறது. அதே கன்வென்ஷனில்தான் நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம்.

[1979 மார்ச் 31

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இப்போது அமைக்கப் பட்டிருக்கிற கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரும் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் என்று அமைச்சரவர்கள் அறிவித் தார்கள் என்று கருதுகிறேன். அது சரி என்றால், கட்சி சார்பற்ற அங்கத்தினர்களை நியமிப்பதுமுறையாக இருக்கும். மரபு எப்படி இருந்தாலும் நேர்மையான, ஊழலற்ற அரசு இங்கே செயல் பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உரிமை பாராட்டுகின்ற இந்த அரசு, அரசியல் சார்பற்ற முறையில் இந்த கமிட்டியை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பட்டியலை ஒரு வகையோடு நிறுத்திக்கொண்டேன், அதற்குப் பின்னால் 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் வரையில். இராஜாராம் தலைவர் ; திருமதி எஸ். மஞ்சுபாஷினி, திரு கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப், திரு. என். எம். மணிவர்மா, திரு. டி. அம்புரோஸ் ஆகியோர் உறுப்பினர்கள். இப்படித்தான் தொடர்ந்து வந்திருக்கிறது. நேரம் இல்லை. இன்னும் அனுமதி தந்தால் படிக்கிறேன். எனவே அவரவர்கள் ஆட்சியில் இருக்கும் போது ஏதோ ஒரு காரணத்தால் அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த வர்களைத்தான் போட்டிருக்கிறார்கள். இந்த அரசும் அதே 'ஹெல்தி கன்வென்ஷனை' பாலோ செய்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இது ஒரு ஹெல்தி கன்வென்ஷன் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் தேர்தல் என்றால் கூட்டு சேருவதும், வெற்றிபெற்றதும் தன் னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களைப் போட்டுக்கொள்வதும்— கொடி பிடிப்பவன் ஒருவன், சீட்டு பெறுவது ஒருவன் தான் கன்வென்ஷனாக இருக்கிறது. பழைய கன்வென்ஷன் தவறு என்று சொல்லும்போது புதிதாக வந்தவர்களும் அதே கன்வென் ஷனை கடைப்பிடிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகவே அம்பிகா பதி சேர்த்துக் கொள்ளப்படுவாரா என்று கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவது தவறு என்பதை அரசு உணருமா ? ஒருமுறை தவறு நடைபெற்றது என்றால் அதே தவறுக்கு மீண்டும் இடம் கொடுக்க லாமா ? அதை மாற்றுமா, திருத்துமா என்று வினவ விரும்புகிறேன்.

[1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே குடிசைமாற்று வாரியம் ஏற்பட்ட காலத்திலிருந்து எந்த வழி முறை பின்பற்றப்பட்டிருக்கிறதோ அதைத்தான் பின்பற்றி வரு கிறது இந்த அரசு. I have already said that we feel it is a healthy convention.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு நீண்ட பட்டியலைத்தான் சொன்னார்களே தவிர அவர்கள் எல்லாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட வில்லை. ஆகவே, அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிப்பார்களா ?

(பதில் இல்லை)

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, அமைச்சர வர்கள் அந்த வாரியத்திலே இருப்பவர்கள் அண்ணா தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். இதைப் போலத்தான் முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில் அந்தக் கட்சியியைச் சேர்ந்தவர்களைப் போட்டார்கள் என்றும் சொன் னார்கள். அவர்கள் செய்தது தவறு என்பதால் தான் அவர் களைத் தூக்கி எறிந்தார்கள். அதேபோன்று உங்களையும் தூக்கி எறியவேண்டுமென்று விரும்புகிறீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, நான் அதற்குப் பின்னால் சொல்லியிருக்கிறேன். 1976 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் வரையில் உள்ள அந்தக் காலத்தில் கூட எப்படி இருந்தது என்பதைச் சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் 1974 ஆம் ஆண்டு வரையில் குடிசைமாற்று வாரியத்தை தன் பொறுப்பில வைத்திருந்தார்கள். அதற்குப் பின்னால் இராஜாராம் வந்திருக்கிறார். இவர்களை எல்லாம் எப்படி தேர்ந்தெடுத்துப் போட்டார்களோ அப்படித்தான். இப் பவும் செய்யப்பட்டிருக்கிறது. பிறகு இராஜாராம் இருந்த காலத் திலும் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் இருந்திருக்கிறார்கள். ஆகவே, அதுதான் நல்ல மரபு என்று அதையே கையாண்டு வந்திருக்கிறோம் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

[முற்பகல் 9—50]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மிகவும் ஆச்சரியப்படத்தக்க முறையில் இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் அவர் இதை ஒரு ஹெல்தி கன்வென்ஷன் என்று சொல்கிறார்கள். ஒரு கட்சியை மக்கள் தேர்ந்தெடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பினால் அவர்கள் அமைச் சரவை அமைக்கட்டும். அதை ஹெல்தி கன்வென்ஷன் என்று

ஒத்துக்கொள்கிறோம். ஆனால் அரசாங்கத்தினுடைய மற்ற சில நடவடிக்கைகளில் எல்லா மக்களுக்கும் பங்கு உண்டு என்பதுதான் ஜனநாயக அமைப்பு முறை. ஆகவே அந்த முறையில் அனைத்துக்கட்சியினரையும் சேர்ந்தவர்களைக்கொண்டு இப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்த வேண்டாமா? ஆளுகின்ற கட்சியினரைக்கொண்டுதான் ஏற்படுத்தப்படவேண்டும் என்று சொல்வது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியைத்தான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவராகக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகுமே தவிர கேள்வி ஒன்றுதான். ஆகவே கேட்ட கேள்வியையே திரும்பத் திரும்பக் கேட்டு நேரத்தை வீணாக்கக் கூடாது.

திரு. கு. ரமணி: பிரிட்டிஷ் காலத்தில் கூட அவர்கள் இஷ்டம் போல் செய்தார்கள், ஆகவே அதையே நாங்களும் பின்பற்றுவோம் என்று சொல்வார்களா? ஆகவே கட்சிசார்பிலே அனைத்துக் கட்சியினுடைய பிரதிநிதிகளையும் கொண்டு போட வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த விஷயம் சென்னை நகருக்கு உட்பட்டதுதான். எனவே முன்பிருந்தவர்கள் சென்னை நகரிலே செல்வாக்குள்ள கட்சி என்பதாலும், சென்னை நகரைச் சேர்ந்த பலர் இருக்கிறார்கள் என்பதாலும் இப்படி செய்திருக்கிறார்கள் என்றுதான் இந்த அரசும் கருதுகிறது. ஆகவே இது ஒரு நல்ல கன்வென்ஷன் என்றுதான் நாங்களும் கருதுகிறோம். இந்த ஹெல்தி கன்வென்ஷனை, முன்பு எங்களோடு இருந்தவர்கள், மதிக்கத்தக்கவர்கள் பின்பற்றினார்கள். ஆகவே அதனை விட்டுவிடவேண்டாம் என்பதால் தொடர்ந்து அதே முறையைக் கடைப்பிடித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள்.

*வினா எண் 587—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பல்லடம் தாலுக்கா மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாகவே வேலை நிறுத்தம் செய்து வருவது அரசுக்கு தெரியுமா?—

(ஆ) தொழிலாளர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். கோவை மாவட்டம் பல்லடம் தாலூகா மங்கலம் பஞ்சாயத்தில் பவர் லூம் தொழிலாளர்கள் சம்பள உயர்வு, வார விடுமுறை, தேசீய பண்டிகை விடுமுறை, இரவு நேர டீ இவைகளைக் கோரி 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் இரவு 9—30 மணி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆனால் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் அன்று முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு அமைதி நிலவி வருகிறது.

(ஆ) கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர்-2 (சமரசம்) இருதரப்பினரிடையும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பயனாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் அன்று சம்பள உயர்வு, போனஸ், மற்றும் தேசீய பண்டிகை விடுமுறை தொடர்பாக இருதரப்பினராலும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த பவர்லூம்களை ஏராளமாக கிராமங்களிலே குடிசைகளிலே வைத்துக்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் இந்தப் பவர் லூம் எந்தெந்த இடங்களில் இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று ஒரு சர்வே செய்து அவற்றை சட்டத்திற்குள் கொண்டுவருகிற மாதிரியான ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருவது அரசுக்கு தெரியுமா என்பதைப் பற்றி. So, this Question is concerning strike. Let us not again strike at it. Leave it there.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஸ்ட்ரைக் என்று சொன்னார்கள். இந்த ஸ்ட்ரைக் குறித்த கேள்வி 6 மாதம், 8 மாதம் ஆகிவிட்டபிறகு இங்கே வந்திருக்கிறது. இது குறித்து நாமேதான் கலெக்டர் அவர்களுடன் உட்கார்ந்து முடிவெடுத்திருக்கிறோம். ஆனால் அந்த ஸ்ட்ரைக்குகளின் தோற்றுவாய் எப்படி உண்டாகிறது என்பது பற்றிக் கேட்கும்போது அதுவும் இந்தக் கேள்வியோடு சேர்ந்துதான் வருகிறது. ஆகவே அதைத் தனியாக கம்பார்மென்ட் வைஸாகப் பார்க்கக் கூடாது. ஆகவே இனிமேல் ஸ்ட்ரைக்குகள் போன்றவை ஏற்படாத வகையில் முன்கூட்டியே நியாயம் வழங்குவதற்கு இந்த அரசு சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஸ்ட்ரைக்குகளைக் குறைப்பதற்குரிய ஒரு புது முறையை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பின்பற்றுவதற்காக ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். மேலும் என்னுடைய தொழிலாளர் நலத்துறை மானியம் வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து பேசுவார்களேயானால் அரசினுடைய கருத்தைச் சொல்லி அதன் பிறகு நாம் எல்லோரும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து, ஸ்ட்ரைக்குகளைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கி எக்ஸ்பான்ஷன் அன்ட் மாடர்னைசேஷன் என்பதில் கான்சன்ட்ரேட் செய்வது பற்றி நாம் எல்லோரும் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரலாம்.

பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

*வினா எண் 588—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கியிருக்கும் இல்லக் கட்டிடம் மிக ஆபத்தான நிலையில் உள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) & (ஆ) பழநி நகரில் ஒரு அரிசன பள்ளி மாணவர் விடுதியும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் உள்ளன. இவற்றில் அரிசன கல்லூரி மாணவர் விடுதி தனியார் கட்டிடத்தில் இடம் பெற்றுள்ளது. அது பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அதை விரைந்து பழுது பார்க்க கட்டடத்தின் சொந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மற்ற விடுதிகள் நல்ல நிலையில்தான் உள்ளன.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே பழனி, நகரில் இருக்கக் கூடிய கல்லூரி மாணவர்கள் இல்லங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டடத்தை மராமத்து செய்ய வேண்டும். கட்டடத் சொந்தக்காரரிடம் வலியுறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

எந்தத் தேதியில் வலியுறுத்தப்பட்டது? மராமத்து செய்யப்படாமல் அங்கே பாம்புகளும், பெருச்சாளிகளும் அந்த விடுதியில் தங்கி இருக்கின்றன. அந்தப் பயத்தினால் உள்ளே படுப்பதற்குப் பதிலாக வெளியே படுக்கிறார்கள். ஆகவே, அதை எப்போது மராமத்து செய்வதற்கு உத்தரவிடப்படும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எந்தத் தேதி என்கிற விவரம் இல்லை. ஒரு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு மாவட்ட நல அதிகாரி அந்த இடத்தைப் பார்வையிட்டு அந்தக் கட்டடச் சொந்தக்காரரர் உடனடியாக அந்தக் கட்டடத்தைப் பழுது பார்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக அங்கு மேஜை, நாற்காலி, லைட் போன்ற வசதிகள் கிடையாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு வசதியையும் படிப்படியாக செய்து கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இங்கே போட்ட கேள்வியின் மூலமாகவும், அதற்கு அளித்த பதில்கள் மூலமாகவும் அந்தக் கட்டடம் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், அதனால் அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்க்க வேண்டும் என்பதற்காக அங்குள்ள அதிகாரி அந்தக் கட்டடத்தை பார்வையிடச் சென்றிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. பிறகு அவர்கள் நோட்டீஸ் கொடுத்து செய்யவேண்டியிருக்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படக்கூடிய ஒரு பிரச்னை இருக்கிறது. அந்த முறையில் காலம் தாழ்த்தாமல் அரசாங்கமே அந்தச் செலவை ஏற்று மராமத்து செய்யலாம். ஆகவே, ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுத்து அந்தக் கட்டத்தைப் பழுது பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆபத்து ஏற்படுகிற அளவுக்கு அந்தக் கட்டடத்திற்கு பழுது ஏற்படவில்லை. சிறுசிறு பழுதுதான் ஏற்பட்டிருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

மேல்நிலைப் பள்ளிகளாக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள்.

*வினா எண் 589—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–79-ல், எத்தனை அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளுள் எத்தனை மேல் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1978–79-ல் 24 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உயர்நிலைப்பள்ளிகளுள் நான்கு பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன (Higher Secondary Schools).

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் தான் தாழ்த்தப்பட்ட, அரிசன மக்கள் வசிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் நகரங்களுக்குச் சென்று மேல்நிலைப் பள்ளிகளில் படிக்க முடிவதில்லை. ஆகவே, அவர்கள் நலன் கருதி அந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன் : தலைவர் அவர்களே, 4 உயர்நிலைப் பள்ளிகள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு சில வரம்புகள், நியதிகள் இருக்கின்றன. படிப்படியாக இதர சில பள்ளிகளை மேல் நிலைப்பள்ளிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் 590 முதல் 599 வரை தள்ளிவைக்கப் பெறுகின்றன. கேள்வி நேரம் முடிவுற்றது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10–00]

2 ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) உறுப்பினர் திரு. கிட்டப்பா வீட்டில் கோவில் சிலை இருந்ததாக அவர் கைது செய்யப்பெற்றது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்ப விரும்புகிறேன். நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். உங்கள் பாது காப்பில் நாங்கள் இருக்கிறோம். இந்தச் சட்டசபையை சேர்ந்த ஒரு உறுப்பினர் வெளியூருக்குசென்று விட்டு மீண்டும் இந்தசபைக்கு திரும்பி வருவதற்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. நேற்றைய தினம் திரு. கிட்டப்பா அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, ஊருக்குச் சென்று விட்டு திரும்பி இங்கே வருவதற்காக போனார். அங்கே போன இடத்தில் வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு பின்னால் ஜாமீனில் விடப்பட்டிருப்பதாக அறிகிறோம். குறிப்பாக இந்த வழக்கின் விவரம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாட்டுக்காக ஒரு சட்ட உறுப்பினர் தனது கடமையைச் செய்கின்ற நேரத்தில், அதற்கு விரோதமான செயல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இங்கே தீவிரமாக பணியாற்றக்கூடிய ஒரு உறுப்பினர். இப்படிப்பட்ட ஒருவரை தங்கள் அனுமதியின்றி கைது செய்து இருப்பது சரிதானா? சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் உங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினருக்கும் இருக்கின்ற தொடர்பு அறுபட்டுவிடவில்லை. அவர்கள் சபாநாயகர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் கைது செய்யப்பட்டார்களா? அப்படி அனுமதி வாங்கவில்லை என்றால் அது அவையுரிமையாக வருகிறது. இங்கு கடமை செய்து கொண்டு இருக்கின்ற நேரத்தில், ஊருக்குப் போயிருந்த நேரத்தில், அவருடைய வீட்டின் கொல்லைப்புறத்தில் சிலை இருந்ததாக *** அவர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது.

அத்துடன் இது சம்பந்தமாக* * * * *என்ற இரண்டு பேர்களும் கைது செய்யப்பட்டு விசாரணையில் இருப்பதாக அறிகிறேன். இதற்கெல்லாம் நீங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே இதைப்பற்றி நீங்கள் ஒரு முடிவு சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Under the scope of privilege, it is stated as follows:

'A review of the development of this privilege reveals a tendency to confine it more narrowly to cases of civil character and to exclude not only every kind of criminal case but also cases which, not strictly criminal, partake more of a criminal than of a civil character (i). This development is in conformity with the principle laid down by the Commons in a conference with the Lords in 1641 that 'privilege of Parliament is granted in regard to the service of the Commonwealth and is not to be used to the danger of the commonwealth'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் தாங்கள் சொல்வதைப் போல், கிரிமினல் குற்றத்திற்காக ஒரு உறுப்பினர் கைது செய்யப் பட்டாலும், அவரை உடனடியாக பெயிலில்-ஜாமீனில் விடப் பட்டுவிட்டால் சபையில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வகையில் இதிலும் ஜாமீன் கொடுக்கப் பட்டு வாய்ப்புத் தந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர் கிரிமினல் குற்றத்தின் அடிப்படையில் கைது செய்யப் பட்டு உடனே ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டது சரிதானா என்பது வழக்கு மன்றத்தில் பார்த்துக் கொள்ள வேண்டியது. ஆகவே அவர் கைது செய்யப் பட்டிருந்தாலும் உடனே ஜாமீனில் விடப்பட்டிருப்பதால் இங்கே வருவதற்கு எந்தத் தடங்கலும் இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் கிட்டப்பா அவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன் தங்களிடம் போலீசார் அதற்கான அனுமதியைப் பெற்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன். போலீசார் தந்திருக்கின்ற தகவலின்படி வானொலியிலும், பத்திரிகையிலும் இந்தச் செய்தி ஒலிபரப்பப் பட்டிருக்கிறது. வீட்டுக்குள்ளிருந்து சிலை எடுக்கப்பட்டதாக. ஆனால் இன்று காலையில் என்னுடன் தொடர்பு கொண்ட கிட்டப்பா அவர்கள் தெரிவித்தது, அதையும் சொல்ல வேண்டிய வனாக இருக்கிறேன். வீட்டிலிருந்து எடுக்கவில்லை, கொல்லைப் புறத்தில் ஒரு சிலையை வேண்டுமென்றே விரோதம் காரணமாக சிலர் வைத்து, அதன் காரணமாக கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவித்திருக்கிறார். அத்துடன் உடனடியாக சிலையை யார் வைத்தார்கள் என்பதைப் பார்த்து, அதற்காக * * என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் தங்களிட மிருந்து அறிந்து கொள்ள விரும்புவது, திரு. கிட்டப்பாவை கைது செய்வதற்கு தங்களிடமிருந்து முன் அனுமதியைப் பெற்றார்களா என்பதைத் தான்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். என்னுடைய அதிகார இடத்திற்குள்—அதாவது காம்பஸ் என்று சொல்லுகின்ற அதிகாரத்திற்குட்பட்ட இடத்திற்குள் கோட்டைக்குள் உறுப்பினர்கள் கைது செய்யப்படவேண்டும் என்றால் என்னுடைய பெர்மிஷன் பெற வேண்டும் என்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சட்டப்பேரவை உறுப்பினர்கள் கைது செய்யப்படுகிற பொழுது, தங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் கைது செய்ய வேண்டும் என்று நம்முடைய விதிகளில் இல்லை. கைது செய்யப்படுகின்ற விவரத்தை தங்களுக்குத் தெரிவித்தால் போதும். கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டால், மீண்டும் சட்டமன்றத்தில் வந்து கடமைகளை ஆற்றலாம். இது குறித்து சட்டமன்ற விதிகள் 245 முதல் 247 வரை இருப்பதில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் வெளியே கைது செய்யப்பட்டிருப்பது சட்டப்படி நடந்திருக்கின்ற காரியம். இதில் அவர்கள் குற்றவாளியா இல்லையா என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய விஷயம். அதைப்பற்றி விசாரணையிருக்கும்போது, இதற்கான கேஸ் இன்வெஸ்டிகேஷனில் இருக்கும்போது, விவரங்களை எடுத்துச் சொல்வது கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். அது எந்த அளவுக்கு பொருத்தமானது என்று தெரியாது. இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜில் இருக்கிறபோது விவரங்கள் எதையும் வெளியிடக் கூடாது என்பது மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டுமல்ல. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதற்கு, என்னுடைய '' பிரிசிங்ட்ஸ் '' குள்ளே,

'Precincts of the House' means—

(i) in the case of Members of the Legislative Assembly, the entire Secretariat Buildings in the Fort St. George, Madras, including the Assembly Chamber, Lobbies and the rooms in which the associated officers are situated, the Ministers, rooms, the Library, the Canteen and the Lounge Rooms, the Committee room in the Old Legislators' Hostel and the Library in the Government Estate, Anna Salai, and such other places or buildings as might be named by the Speaker from time to time together with the verandas and steps to these

buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings, and shall be applicable only while the Assembly or any of its Committees or Sub-Committees sits and one hour before and after such a sitting; இதற்குள் வருகிறபோது தான், என்னுடைய அனுமதியைப் பெற்று கைது செய்ய வேண்டும். (குறுக்கீடு).

திரு. துரை முத்துசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆர்டர் கிடையாது, ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்தபடி, எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் தான் கேட்க வேண்டும். எனவே உட்காருங்கள்.

(திரு. கு. ரமணி, திரு. மு. அம்பிகாபதி ஆகியோர் குறுக்கீடு) —(பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ. பாயின்ட் ஆப் ஆர்டர். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : அன்றைக்கு ஒரு நாளைக்கு மட்டும் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. திஸ் இஸ் மோஸ்ட் இம்பார்டன்ட். எங்களுக்கு தலைவர் அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகரிசாமி அவர்களே, அம்பிகாபதிக்கு பதில் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று அன்றைக்கு முடிவெடுக்கப்படவில்லை. முன் வரிசையிலே...........

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டபோது, அழகரிசாமி அவர்கள் சொன்னதுபோல் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று பேசவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விட்டு, 'சீரோ' அவரில் எழுந்து கேள்விகள் கேட்கக் கூடாது என்று முடிவெடுத்திருக்கிறோம். கேள்வி நேரம் முடிந்து, ஏதாவது தகவல் வேண்டுமென்று கேட்க வேண்டுமானால், எதிர்க் கட்சிகளின் தலைவர்களோ அல்லது அந்தந்தக் கட்சியிலே உள்ள மூத்தவர்களோ, அவர்கள் மூலமாக கட்சி உறுப்பினர்கள் தகவ

கேட்கலாம் என்று முடிவெடுத்தோம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரில் 'சீரோ' அவரில் எழுந்து கேள்விகள் கேட்கக் கூடாது என்றுதான் முடிவெடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தான் சொன்னேன். திரு. அழகரிசாமி அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டும் உரிமையை நான் பறிக்க விரும்பவில்லை. பறிக்க முடியாது. உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் கேட்கவேண்டுமானால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல், 'சீரோ அவர்' முடிந்தவுடன், எல்லோரும் எழுந்து பிரச்னைகள் எழுப்புகின்றபோது, பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலே பல பிரச்னைகள் பற்றி கேட்கும்போது, யாரை அழைப்பது என்பதிலே சங்கடம் ஏற்படுவதால், முன்வரிசையிலே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கள் மூலமாக எழுப்ப வேண்டும் என்று முடிவு எடுத்தோம். இது இந்த நேரத்திற்கு மட்டும் தான். மற்ற நேரங்களில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். இதைப்பற்றி முதலிலேயே திரு. அம்பிகாபதி அவர்களுக்கு திரு. அழகரிசாமி அவர்கள் சொல்லியிருந்தால், இப்போது எழுந்திருக்க மாட்டார். இப்போது காங்கிரஸ் உறுப்பினர் துரை முத்துசாமி.

3. தகவல் கோரல்.

(அ) தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது குறித்து.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலே உள்ள கொடிக் கம்பத்தில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைய பத்திரிகையைப் பார்த்திருந்தால் தெரிந்து இருக்கும். மலேசியா அரசர் இறந்ததற்கு, அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில் நம்முடைய அரசு தேசீயக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விட்டிருக்கிறது.

(ஆ) அரசு ஊழியர்கள் போராட்டம் குறித்து.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தொடர்ந்து பல நாட்களாக போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறார்கள்; அரசுக்கும் தெரியும். நான் இது குறித்து

[திரு. கு. ரமணி] [1979 மார்ச் 31

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை அனுமதித்து, இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், திரு. சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பிய பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. என்னுடைய கருத்தை ஒரு நிமிடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு உறுப்பினர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடிந்துவிட்டப் பிரச்னை. இப்பிரச்னை கிளப்பப்பட்டு, விளக்கம் கொடுக்கப் பட்டு விட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

[முற்பகல் 10-10]

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையில் எனது தீர்ப்பு.

நேற்று (30—3—1979) திரு. சுப்பு அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார். இப்பிரச்னை குறித்து எனது தீர்ப்பு :

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்தே காவல்துறை தலைமை அதிகாரி அத் துறை குறித்த சீரமைப்பு பற்றி விளக்கம் அளித்தார் என்பது புலனாகிறது. எனவே, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தீர்ப்புக்கு மேல் அப்பீல் கிடையாது. அப்படி இருக்கும்போது கொஞ்சம் நிதானமாக தீர்ப்பைக் கொடுக்கக் கூடாதா ? இப்படி ஓட வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களைப் பற்றித் தெரியும். அதனால்தான் அவசரம் அவசரமாக **படித்தேன்.

உரிமைப் பிரச்சினைகள்

திரு. மு. அம்பிகாபதி: நீங்கள் ** குறிப்பிட்டது குறிப்பேட்டில் இருக்க வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரமாக ** என்பது வேகமாகப் படித்தேன் என்ற அந்தக் கருத்துக்கு உட்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி: நான் புரிந்து கொண்டேன். வெளியில் இருப்பவர்கள் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கும்.

திரு. கு. ரமணி: புரிய முடியாத வேகத்தில் தலைவர் அவர்கள் வாசித்தார்கள் என்ற கருத்துக்கு இடம் ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அம்பிகாபதி புரிந்து கொண்டதாகத்தான் கூறினார்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ** என்று சொன்னதால் தாங்கள் பேரவைத் தலைவர் பதவியை விட்டு அமைச்சரவைக்குப் போவதாக இருக்கக்கூடிய தகவல் சரியானதாக இருக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே திரு. துரை முருகன் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோதே தெரிவித்தேன். உங்களுக்கு நான் இங்கே இருப்பது பிடிக்கவில்லை என்றால் தாராளமாகப் பேசுங்கள். நான் இங்கேதான் இருக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: போலீஸ் ஐ. ஜி. பற்றிய உரிமைப் பிரச்சினையில் தாங்கள் தீர்ப்பைப் படிக்கிறபோது திரு. சுப்பு பேசுகிற வேகத்தைவிட அதிகமாக இருந்தது. என்னால் கூட அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை மறுபடியும் படித்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (30—3—79) திரு. சுப்பு அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்பினார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார். இப்பிரச்சினை குறித்து எனது தீர்ப்பு:

பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்தே காவல்துறை தலைமை அதிகாரி அத்துறை குறித்த சீரமைப்பு பற்றி விளக்கம் அளித்தார் என்பது புலனாகிறது. எனவே, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 31

(ஆ) மின்சாரத் துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் திரு.மு. அம்பிகாபதி அவர்கள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. திரு. மு. அம்பிகாபதி........

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 1978ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் அன்று இந்த அவையில் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் தஞ்சை மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு சம்பவம் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது அந்தச் சம்பவத்தின் தொடர்பாக நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட பிரச்சினையில் /திரு. ஷேக் தாவூத் சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபர்களை விசாரணை செய்யப்பட்டு, ருசுவாகவில்லை. இந்நிகழ்ச்சிகள் இரவில் நடைபெற்றமையாலும் நேரடி சாட்சிகள் இல்லாமையாலும் இதுவரை யாரும் கைது செய்யப் படவில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுக்கு இப்படிப்பட்ட தகவலைக் கொடுத்தது யார் என்று தெரியவில்லை. அமைச்சர்களுக்குத் தவறான தகவல்கள், கொடுக்கப்பட்டு அந்தத் தகவலை நம்பி அவையில் அறிவிப்பது என்ற நிலை வருமானால் அது எந்த நிலையை நாட்டிலே உருவாக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சித்தமல்லிப் பகுதியில் நடந்த சம்பவத்தில் உண்மைக்கு மாறான தகவலை தந்திருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாளில் ஐ.பி.சி. 111, 107 செக்ஷன்கள்படி எஸ். ஜி. ராதா கிருஷ்ணன் தலைமையில் 23 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செக்ஷன் 147, 148, 379, 447, 427 ஆகிய ஐந்து செக்ஷன்களின் கீழ் ஏ. கே. சுப்பையா மற்றும் 19 பேரை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களையும் கைது செய்திருக்கிறார்கள். ஒரு நிலத்திலே என்னமோ நெல் உதிர்ந்துபோய் விட்டதாகவும், வாழை இலை கிழிந்துவிட்டதாகவும், தேங்காய் கீழே விழுந்து விட்டதாகவும் சொல்லி இன்றைக்கு 25 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், ஆனால் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டபோது அது சம்பந்தமாக ஒரே ஒரு கைதுதான். ஒருவர் மீது தான்

1979 மார்ச் 31] [திரு. மு. அம்பிகாவதி]

வழக்குப்போடப் பட்டிருக்கிறது. அவர்கள் கூட இல்லை என்று செசன்ஸ் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். தழை உதிர்ந்த வழக்கிற்கும் தலை உதிர்ந்த வழக்கிற்கும் இருக்கக்கூடிய விவரங்களைச் சரியான தகவல்களை தெரிவிக்காமல், பொய்யான வழக்குகளைப் போட்டு உண்மைக்குப் புறம்பான முறையிலே அவர்கள் மீது குற்றஞ்சாட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களை 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் நாள் அன்று கைது செய்திருக்கிறார்கள். 17 ஆம் தேதி அமைச்சர் அறிவிக்கும்போது யாரும் கைது செய்யப்படவில்லை. குற்றம் ருசுவாகவில்லை. இரவிலே, நடந்ததாகச் சொல்லப்படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த வழக்குப் போட்டது தவறு என்பதை அரசு ஒத்துக்கொண்டு, அப்படி உண்மைக்கு புறம்பான தகவல் கொடுத்ததற்காக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையை நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் கொடுத்தது கவன ஈர்ப்புத் தீர்மானம், அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் கிடைக்கப்பெற்றது 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் அன்று. அந்தப் பதிலை 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் அன்று இந்த மன்றத்திலே படித்தேன். அப்படிப் படிக்கிறபோது இந்நிகழ்ச்சிகள் இரவில் நடைபெற்றமையாலும், நேரடி சாட்சிகள் இல்லாமையாலும் இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. இவ்வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றது என்பதை இந்த மன்றத்திலே நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். 15 ஆம் தேதி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் 17 ஆம் தேதி தெரிவிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அதை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் தெரிவிக்க விரும்புகிறேன், சாதாரணமாக ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு தகவல்களை நேரிலேயே அறிந்து சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு முன்னாலேயே அறிவிக்கப்பட்டு தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்டது என்பது அடுத்த கட்டம், சப்சிகுவன்ட் இன்சிடன்ட். எனவே தவறான தகவல் இந்த அவையில் தர வேண்டுமென்றோ அல்லது இந்த அவையின் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டுமென்றோ நிச்சயமாகக் கருதத் தேவையில்லை. தயாரிக்கப்பட்ட விவரங்கள் 10 தேதியே அனுப்பப்பட்டுவிட்ட காரணத்தாலே தான் அவ்வாறு இங்கே தெரிவிக்கப்பட்டது. ஆகவே வேண்டுமென்றே தவறான தகவலைத் தரவில்லை. இதிலே உரிமைப் பிரச்னை எதுவும் எழவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினைமீது எனது தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே........

திரு. பொ. உத்திராபதி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன இது, எழுந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்?

திரு பொ. உத்திராபதி : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதியில்லாமல் பேசிக்கொண்டே இருக்கலாமா ?

திரு. பொ. உத்திராபதி: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பேசுவது முறையல்ல. அவர் பேசியது ஏதாவது காதிலே விழுந்திருந்தால்கூட நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு விஷயத்தை நான் வேதனையோடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் பேசி, அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பேசக்கூடாது அமருங்கள்.

5. கவன ஈர்ப்பு

சென்னை, தேனாம்பேட்டையில் அமைக்கப் பெற்றுள்ள மருத்துவப் பரிசோதனை ஆய்வுக்கூடம் இயங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, சென்னை தேனாம்பேட்டையில் 1973-ல் அமைக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை ஆய்வுக்கூடம் இதுவரை இயங்காததால் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, கட்டிடம்.—மாதிரி எடுக்கப்படுகின்ற பல மருந்துகளின் தரத்தை ஆராய இம்மாநிலத்தில் ஒரு மருந்து ஆய்வுக் கூடம் அமைக்க 1973 ம் ஆண்டு ஆணை பிறப்பித்ததோடு ரூ. 1 லட்சம் செலவில் கட்டிடத்தின் அஸ்திவாரம் அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்தது.

ஆனால் 1974-ம் ஆண்டு அஸ்திவாரம் கட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகையாகிய ரூ. 1 இலட்சத்துடன் தரைத் தளக் கட்டிடம் (ground floor) அமைக்க ரூ. 4 இலட்சமும் சேர்த்து ரூ. 5 இலட்சம் செலவிட அரசு மறு ஆணை பிறப்பித்தது.

மேலும் 1975-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இக்கட்டிடத்தை இரு மாடிக் கட்டிடமாகக் கட்டுவதற்கு கூடுதலாக ரூ. 7 இலட்சம் அனுமதித்தது. ஆனால் நிதியாண்டு 1975-76-ல் ரூ. 6 இலட்சமாக செலவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆக மொத்தம் ரூ. 12 இலட்சத்திற்கு கட்டிடம் கட்ட 1973—ல் இருந்து 1975 வரை மூன்று அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

முந்தைய அரசு, அவ்வப்போது பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க, பொதுப்பணித்துறை கட்டிடத்தைக் கட்ட ஆரம்பித்தது, கட்டிடத்தை 1977—ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தான் கட்டி முடித்தது. எனினும் தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவைகளெல்லாம் செய்து முடித்து கட்டிடத்தை சுகாதார இலாகாவிடம் இந்த ஆண்டில் இரண்டு மாதத்திற்கு முன்புதான் ஒப்படைத்தார்கள்.

உபகரணங்கள்: இந்த ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான சிறப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு 1973-ம் ஆண்டு ரூ. 1 இலட்சமும் 1975-ம் ஆண்டு ரூ. 2 இலட்சமும் மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 1 இலட்சமும் அனுமதி வழங்கப்பட்டது. 1977-ம் ஆண்டு கூடுதல் உபகரணங்கள் வாங்குவதற்கு மேலும் ரூ. 3.70 இலட்சமும் மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 1.15 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது.

அவ்வப்போது அரசு பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க கட்டிட வேலையும் உபகரணங்கள், மரச்சாமான்கள் ஆகியவைகள் வாங்குவதும் நிறைவேற்றப்பட்டன.

1977-ம் ஆண்டு உபகரணங்கள் வாங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 3.70 இலட்சத்தில் இன்னும் சுமார் ரூ. 2.51 இலட்சத்திற்கு உபகரணங்கள் வாங்க வேண்டியுள்ளது. அவைகள் வாங்குவதற்கு டெண்டர்கள் கேட்கப்பட்டுள்ளன. இன்னும் ஓரிரு மாதங்களில் எல்லா உபகரணங்களும் வாங்கப்பட்டு விடும்.

பணியாளர்கள் : அடுத்து இந்த ஆய்வுக் கூடத்தில் பணியாற்றுவதற்கு சுமார் 36 பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இவைகளில் அரசுப் பகுப்பாய்வாளர், மற்றும் முதுநிலைப் பகுப்பாய்வாளர் போன்ற சில முக்கியமான பதவிகளுக்கு தற்காலிக நியமனம் செய்வதற்குப் பொது சுகாதார இயக்குநரிடமிருந்து செயற் குறிப்புகள் வந்துள்ளன. ஆனால் இப்பதவிகளுக்கான பணி விதிகள் இன்னும் வரையறுக்கப்படவில்லை. பணி விதிகள் முடிவு செய்வதற்கு அரசியல் சட்டப்படி சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசு பணித்தேர்வு ஆணைக் குழுவின் கருத்தும் கேட்கப்பட்டுள்ளது. இதற்குச் சற்று அவகாசம் தேவைப்படுகிறது. விரைவில் இந்த விதி முறைகள் நிர்ணயிக்கப்பட்டு பணியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.

இந்த ஆய்வுக் கூடம் இயங்குவதற்கு வேண்டிய உடனடி வேலைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த மருந்துப் பரிசோதனை ஆய்வுக் கூடம் 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் குறிப்பிலேயிருந்து, 16 இலட்சம் ரூபாய் இன்று வரையில் செலவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் எந்த வேலையும் அங்கே நடக்கவில்லை, அதற்குப் பதிலாக கிங் இன்ஸ்டிடியூட்டில் எல்லா விதமான பரிசோதனைகளும் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடம் சரியாக இயங்காததற்கான காரணம், சுகாதார மருந்தகமும், மருந்துக் கட்டுப்பாடு அலுவலகமும் பொருத்தமற்ற முறையில் ஒன்றாக இருப்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உரை அல்ல, ஏதாவது சந்தேகம் இருந்தால் மட்டும் உறுப்பினரவர்கள் கேட்க வேண்டும்.

1979 மார்ச் 31]

திரு. செ. சிவசாமி: எஸ்டிமேட் கமிட்டியும் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஹாபியா கமிட்டி 1954 ஆம் ஆண்டில், இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, போக்கர் கமிட்டி 1964 ஆம் ஆண்டில் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஹாத்தி கமிட்டியும். 1975 இல் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, மருந்து விசாரணைக் கமிட்டியும் கூட இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது, மத்திய சுகாதார கவுன்சில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இதை நான் அனுமதிக்க இயலாது, 41-வது விதியின் கீழ் கொண்டுவரப்பட்ட விஷயத்தில் இப்படிப் பேசிக் கொண்டே போனால் என்ன செய்வது ? சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி : அங்கு முக்கியமான புத்தகங்கள் கூட கிடையாது. ஐ.பி.சி. போன்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மன்னிக்க வேண்டும். இந்த முறையில் சென்றால் அனுமதிக்க முடியாது,

அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை மகிழ்ச்சியோடு அளிக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசினர் உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதி 21 உள்விதி 3-ன் கீழ்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 21, உள்விதி 3 இன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''இனம் 4. அரசினர் சட்ட முன்வடிவு என்று இருப்பதை நீக்கி, இனம் 5, 1979–80ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும், என்று இருப்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. கிட்டப்பா வீட்டில் கோவில் சிலை இருந்ததாக அவர் கைது செய்யப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே ஒழுங்குப் பிரச்சனையை திரு. சாதிக் பாட்சா எழுப்பியபொழுது ''**. . அவருடைய வீட்டின்கொல்லைப் புறத்தில் சிலை இருந்ததாக* *

* * *

அவர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு இல்லாமல்போய் விடுகிறது'' என்று குறிப்பிட்டார். நாமே முன்னிட்டு சொல்ல வேண்டாமென்றும் அது வழக்குக்குப் பாதகமாக இருக்கும் என்பதாலேயும் அந்த வரிகளை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். பின்னாலே எதிர்க் கட்சித் தலைவர்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 31] [பேரவைத் தலைவர்]

''......கொல்லைப் புறத்தில் ஒரு சிலையை வேண்டுமென்றே விரோதம் காரணமாக சிலர் வைத்து, அதன் காரணமாக கைது செய்யப்பட்டார்'' என்றும் தெரிவித்திருக்கிறார். பிறகு.... ''........சிலையை யார் வைத்தவர்கள் என்பதைப் பார்த்து அதற்காக * * * என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்றும் தெரிவித்தார். முதலிலே அவரை கைது செய்து, பிறகு இருவரைக் கைது செய்திருப்பதால் அவர் நிரபராதி என்ற தோரணையிலே இருக்கிறது. ஆகவே, அதையும் நீக்கி விட்டால் வழக்குக்கு இடையூறாக இராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு மின் வாரியத் துறை அமைச்சரவர்களே கூட இங்கே பதில் அளிக்கும் போது சிறந்த முறையிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கிட்டப்பா குற்றவாளியா, நிரபராதியா என்பதை நீதிமன்றம் நிர்ணயிக்க இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதே நிலைதான் நான் மேற்கொள்கிற நிலையும். ஆனால், நான் இங்கே சொல்ல வந்தது. வீட்டுக்குக் கொல்லைப் புறத்திலே காம்பவுண்டுக்குள் சிலையைப் போட்டு விட்டதாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு பெயர்களைச் சொன்னேன். அது உண்மைதான். அந்த ஃபாக்டைத்தான் சொன்னேனே தவிர, வழக்குக்குப் பாதகமாக ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, ஒரேஒரு பிரச்னைதான். அந்த வழக்கு இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷனில் டீடெய்ல்ஸ் வரும்போது வேறு மாதிரி வந்தால் சட்ட சபையிலே தவறான தகவலை கொடுத்ததாக ஆகிவிடும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் பிரச்னையாகி விடும், ஆகவே, விவரங்களுக்குள் போகாமல் அந்தக் கருத்தை மட்டும் சபையிலே வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் சொன்னது ரோடு ஓரத்திலே பிளான் செய்து அவ்வாறு போட வாய்ப்பிருக்கிறது என்றுதான் சொன்னேன். நான் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. டிஃபென்சில் என்ன போடுவார்களென்று தெரியாது. ரோடு ஓரத்திலேயோ கொல்லைப்புறத்திலேயோ வைத்தால் எங்களுடைய நிலை என்ன என்று கேட்டேன். நான் கூட வீட்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது,

டுக்குப் போகிறேன். என் வீட்டுக்கு முன்னால் வைத்துவிட்டுச் சொன்னால் என்ன ஆவது என்ற அச்சத்தில் எங்களுடைய பாதுகாப்புக்காகத்தான் கேட்கிறேன். நாங்கள் வீட்டுக்குப் போனால் கூட நாளைக்கு வருவோமா என்ற அந்த நினைப்போடுதான் இந்தப் பாதுகாப்பு கேட்கிறோம். வழக்குக்குள் போக விரும்பவில்லை, போகவும் மாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் ''அவருடைய வீட்டின் கொல்லைப் புறத்தில் சிலை இருந்ததாக * * * அவர் கைது செய்யப்படுகிறார் என்றால் அவருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய் விடுகிறது.''என்று குறிப்பிட்டிருப்பது, உறுதியாகச் சொல்வதாக இருக்கிறது. ஆகவே, அதை நீக்க வேண்டுமென்று சொன்னேன்.

அடுத்து, கலைஞர் அவர்கள் முதலிலே சொன்ன மாதிரி ''கொல்லைப் புறத்தில் ஒரு சிலையை வேண்டுமென்றே விரோதம் காரணமாக சிலர் வைத்து, அதன் காரணமாக கைது செய்யப்பட்டார், என்றும் தெரிவித்து இருக்கிறார். ''அத்துடன், உடனடியாக சிலையை யார் வைத்தவர்கள் என்பதைப் பார்த்து, அதற்காக * * * என்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்றும் சொல்லி இருக்கிறார். இது நமக்கு அவசியம் இல்லாத ஒன்று.

திரு. மு. கருணாநிதி: நான் அறுதியிட்டுக் கூறுவதாகச் சொல்லவில்லை. திரு. கிட்டப்பா என்னோடு தொடர்பு கொண்டு என்னிடம் அவரே சொல்லியிருக்கிறார் என்று சொன்னேன், நாளைக்கு அது தவறாக இருக்குமானால் கிட்டப்பா தான் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கும். எனவே, அது இருக்கலாம். சாதிக் பாட்சா சொல்லும்போது, * * * * * * அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக'' சொன்னாரே, அதை வேண்டுமென்றால் விட்டுவிடலாம். அதைத் தொடர்ந்து, இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பது இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''அத்துடன் தொடர்ந்து இருவர்'' என்று பெயர்களைக் குறிப்பிடாமல் வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

8. வரவு-செலவுத் திட்டம் 1979-80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 20—வேளாண்மை. கோரிக்கை எண் 36—பாசனம். கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.	தொடர்ச்சி.

*திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே கொண்டு வரப்பட்டிருக்கிற வேளாண்மை, நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

(முற்பகல் 10—30)

வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியங்கள் பற்றிய விளக்கக் குறிப்பின் ஆரம்பக் கட்டத்தில் வேளாண்மை எனும் தொழில் தமிழகத்தில் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது; மாநில வருவாயின் ஏற்ற இறக்கம் மேற்படி தொழிலின் உற்பத்தியைத்தான் பெரிதும் நம்பி இருக்கிறது; அந்த வகையில் இத்துறையின் பணி மகத்தானது; நடைமுறைச் சிக்கல்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதற்கான விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் இத்துறை தன் தலையாய பணியைச் செய்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், இதுவரையில் அந்தப் பணியை செழுமையாகச் செய்த அடிப்படையில்தான் நம்முடைய மாநிலம் இருந்து வருகிறது; ஆதலால், அதிக உற்பத்தியும் பெற்றிருக்கிறோம். ஆனால், இனிமேல் செய்யக்கூடிய விளக்க உரையிலே பல்வேறு கட்டங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன்படி விவசாயிகளுடைய நிலையைப் புரிந்து, அவர்களுக்கு ஆவன செய்தால் தான் நம்முடைய மாநிலம் உணவு உற்பத்தியை திட்டமிட்டபடி பெருக்க முடியும்.

சென்ற ஆண்டிலே நம்முடைய மாநிலத்தில் மிக முக்கியமான பயிரான நெல் சாகுபடியில் 27 இலட்சம் ஹெக்டேர் நிலம் இருந்தது. இந்த ஆண்டு 26.50 இலட்சம் ஹெக்டேராக அதைக் குறைத்து, அதாவது 50,000 ஹெக்டேர் அதில் குறைத்து சாகுபடி செய்ய இருப்பதை நாம் காண்கிறோம். இந்த 50,000 ஹெக்டேர் நிலத்தில் பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களை சாகுபடி செய்யத் திட்டமிட்டிருப்பது வரவேற்கத் தக்கது.

அதேநேரத்தில் சென்ற ஆண்டிலே அமோக விளைச்சல் திட்டத்தின் பேரால் 22.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டிருந்தது. அது இந்த ஆண்டில் 22.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பாக உயர்த்தப்படுவதை வரவேற்கிறோம் அதை பார்க்கும்போது இரண்டு சதவீதம் நிலம் கூடுதலாக இந்த அமோக விளைச்சல் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது ; அந்த அள வுக்கு உற்பத்தி பெருகும். அதே நேரத்தில் நாம் உரம் விநி யோகம் செய்யப்படுகிற அமைப்பையும் காணவேண்டும்.

சென்ற ஆண்டு தழை சத்து 3 இலட்சம் டன், மணிசத்து 80,000 டன், சாம்பல் சத்து 80,000 டன் என்று வினியோகித்து இருந்தது. அமோக விளைச்சல் திட்டத்தின்படி நிலம் அதி கரிக்கப்பட்டிருக்கிற விகிதாச்சாரத்தின்படி இந்த ஆண்டுக்குத் தழைச் சத்து 3,40,000 டன், மணிச் சத்து 90,000 டன், சாம்பல் சத்து 90,000 டன் என்று உரத்தின் வினியோக அளவை யும் நாம் உயர்த்தி இருக்கிறோம். அதாவது கிட்டத்தட்ட 12 சதவீதம் உரத்தின் வினியோக அளவை உயர்த்தி இருக்கிறோம். அது மிகவும் முக்கியம். இந்த அதிகப்படியான உரமானது அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் கூடுதலாக எடுத் துக்கொள்ளும் 2 சதவீத நிலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுமார் 6 மடங்கு கூடுதலாக உற்பத்தி செலவு ஏற் படுகிறது.

இந்தப் பரிந்துரைகளை எல்லாம் இப்படிச் செய்யும்போது நாம் உணவு உற்பத்தியை 64 இலட்சம் டன்னிலிருந்து 65 இலட்சம் டன்னுக்கு அதாவது சுமார் ஒரு இலட்சம் டன் அதிக மாக உற்பத்திச் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். இது அநேக மாக $1\frac{1}{2}$ சதவீதம் அதிக உற்பத்திக்கு திட்டமிட்டிருப்பதாக அமைகிறது.

அதே நேரத்தில், விவசாயினுடைய செலவு, நெல் உற்பத் திக்கு ஆகும் செலவு ஆறு மடங்கு அதிகமாகிறது என்பதை நாம் உணர வேண்டும். இந்தப் பரிந்துரைகளை நம்முடைய

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விவசாயப் பல்கலைக் கழகத்தில் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் செய்து வருகிறோம். விவசாயப் பல்கலைக் கழகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நாம் உணவு உற் பத்தியைப் பெருக்கும்போது, நெல் உற்பத்திச் செலவு 117 ரூபாய் வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது இந்த 117 ரூபாய் செலவிட்டு, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், தங் களுடைய குடும்பச் செலவுக்கும் மற்றச் செலவுகளுக்கும் போது மான வருமானத்தைப் பெறுகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

இன்று இருக்கிற நிலையில் 85 ரூபாய்தான் அவர்களுக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது. 117 ரூபாய் செலவாகிறது; ஆனால், அரசாங்கம் கொடுப்பது விலை நிர்ணயிப்பது 85 ரூபாய் தான். இப்படிக் கொடுத்தால் நிச்சயமாக விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு, உற்பத்தி குறைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உற்பத்திச் செலவின் அடிப்படையில் குறைந்தது அவர்களுக்கு குவிண்டாலுக்கு 125 ரூபாயாவது கொடுக்க வேண்டும். அதாவது குறிப்பிடப்பட்டிருக்கிற உற்பத்திச் செலவைவிட அது 8 ரூபாய் கூடுதலாக இருக்கும்.

ஒரு ஏக்கருக்கு சுமார் 18 குவிண்டால்தான் அதிகபட்சமான விளைவிக்க முடியும். அதுவும் இன்றைக்கு இருக்கிற நவீன முறைகளை எல்லாம் கையாண்டால்தான் இந்த 18 குவிண்டால் கிடைக்கும். இப்படி கிடைக்கும் நெல்லின் உயர்ந்த பட்ச விலையாக 125 ரூபாய் வீதம் கொடுத்தால் ஏக்கர் ஒன்றுக்கு நிகர வருமானமாக 150 ரூபாய்தான் கிடைக்கும். அதற்குமேல் நிச்சயமாகப் போகாது. 125 ரூபாய் நிர்ணயம் செய்தால்தான் ஏக்கருக்கு 150 ரூபாய் நிகர வருமானம் கிடைக்கும் என்றால் 85 ரூபாய் விலை நிர்ணயம் செய்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதனால்தான் இன்று இருக்கக்கூடிய விவசாயிகளுடைய பிரச்சினை மிகப் பெரியதாக வளர்ந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய உற்பத்திச் செலவைக் குறைப்பதற்குரிய நவீன வகை முறைகளிலே உற்பத்தி செய்வதில்லை என முடிவெடுத்துள்ளனர். ஆகவே, அவர்கள் இந்த ஆண்டிலே நாங்கள் உற்பத்தியைக் குறைத்துக்கொள்ளப் போகிறோம் என்ற அடிப்படையிலே இன்று வரீகொடா இயக்கம் போன்றவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் இன்றைக்கு நாங்கள் உற்பத்தியைக் குறைக்கப் போகிறோம் என்ற எழுச்சி வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்றாக அறிய வேண்டும்.

அடுத்து வட மாநிலங்களைப் பொறுத்த வரையில் கோதுமைக்கு 24 ரூபாய் 30 பைசா சகாயத் தொகையாக மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு 4 பைசா மட்டும்தான் கொடுக்கப்படுகிறது என்பதை மிக மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கோதுமையின் உற்பத்திச் செலவையும் நெல்லின் உற்பத்திச் செலவையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நெல் உற்பத்திக்கு கோதுமை உற்பத்திச் செலவை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகிறது. அதிகமாக இந்த மாநிலத்திலே

உற்பத்தி ஆகக்கூடிய நெல்லுக்கும் நல்ல விலை கிடைப்பதற்குரிய வழி வகைகளை மத்திய அரசு ஏற்பாடு செய்வதற்குரிய முயற்சி எடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மட்டுமல்லாது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மதிப்பிற்குரிய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களும் முயற்சி செய்து இங்குள்ள விவசாயிகள் நன்மை அடைய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் திட்டமிட்டப்படி 88.73 இலட்சம் டன் உணவுப் பொருளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், விவசாயிகள் இந்த நிலையிலேயே இருந்தால் இந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தை நாம் அதிகமாகப் பெருக்க வேண்டும் என்றால் நம்முடைய மாநிலத்திலே தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால், தண்ணீர் வசதி குறைவாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணருகிறோம். முன்பெல்லாம் அதாவது 100 கோடி ரூபாய்க்குக் குறைவாக பட்ஜெட் இருந்த காலத்திலே எல்லாம் பல்வேறு வசதிகளைச் செய்தோம். ஆனால் இப்போது 800 கோடி ரூபாய்க்கும் அதிகமாக பட்ஜெட் போய் இருக்கிற காலத்திலே இந்த வசதிகளை நாம் செய்கின்றோமா என்று பார்த்தால் அதாவது ப்ரப்போர்ஷனேட் ஆகப் பார்த்தால் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கின்றது.

அடுத்து விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலை மிகவும் குறைந்துவிட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வாழ்க்கைப் புள்ளிகள் உயர்ந்துகொண்டு போகிறது என்பதை, நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். அதாவது விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களின் விலை மிக மிகக் குறைந்து கொண்டு போகிற அதே நேரத்திலே வாழ்க்கைப் புள்ளிகள் மட்டும் உயர்ந்துகொண்டு போகிற காரணத்தால்தான் மூன்றாவது பே கமிஷன் போன்றவைகளில் சம்பளத்தை உயர்த்திக் கொண்டு போகிறோம். அப்படி உயர்த்திக் கொண்டு போகிற காரணத்தால்தான் நம்முடைய பட்ஜெட்டிலே நல்ல பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். ஆகவே, அந்த வழிகளில் உள்ள கோளாறுகளை சரி செய்ய சரியான முயற்சிகளை எடுத்து ஆவன செய்தால்தான் திட்டவட்டமான நல்ல முன்னேற்றத் திட்டங்களை ஏற்படுத்த முடியும். அத்தோடு விவசாயிகளுக்குரிய நல்ல திட்டங்களையும் அமல் செய்ய முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெரும்பாலான இடங்களில் விவசாயம் கிரவுண்ட் வாட்டரைத்தான் நம்பி இருக்கின்றது. இதனை முக்கியமாக நாம் கவனிக்க வேண்டும். என்னுடைய பகுதியை பொறுத்த

1979 மார்ச் 31] [திரு. செ. சதாசிவம்]

வரையில் அது மிகவும் வறண்ட பகுதி என்பதை அமைச்சரவர்கள் உணருவார்கள். அந்தப் பகுதியிலே சராசரி மழை 18 அங்குலம் தான். சென்ற ஆண்டுதான் எதிர்பாராத அளவில் மழை பெய்து வெள்ளக் காடாகிவிட்டது. கடந்த பத்தாண்டு காலமாகவே குடி நீர்ப்பிரச்சனையே அதிகமாகி இருக்கக்கூடிய பகுதி அது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலத்தில் குட்டைகளோ, ஏரிகளோ அல்லது குளங்களோ எதுவும் கிடையாது. மேலும் அப்படிப்பட்ட பகுதிகளில் அதிகமாக கிணறுகள் தோண்டுகின்ற காரணத்தினால் தண்ணீர் மட்டம் கீழேயே போய்க்கொண்டு இருக்கிறது அப்படி கீழே போகின்ற தண்ணீரை மேலே கொண்டுவருவதற்கான பல சிறிய குட்டைகளை நாம் ஏற்படுத்த வேண்டும். இந்தத் திட்டம் பல்லாண்டு காலமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டு பல்வேறு இலாக்காக்களின் மூலமாக பரிசீலிக்கப்பட்டு வரு கிறது. எஸ். எம். இ. பி. என்ற முறையிலே இலாக்கா மூலம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். அந்த இலாக்கா மூலமாக அவர்கள் செய்திருக்கக்கூடிய பரிந்துரைகளை இந்த அரசு கவனித்து அந்தப் பரிந்துரைகளுக்கு வேண்டிய வழிவகை களைச் செய்து வேண்டிய தொகையை ஒதுக்கி அந்தத் திட்டங் களை எல்லாம் நிறைவேற்றுவோமேயானால் நிச்சயமாக நம் முடைய நில நீர் மட்டத்தை அதிகமாக உயர்த்தி அதன்மூலம் வறண்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கை நிலை உயரும். அவர்கள் விவசாயத்தை அதிகமாகப் பெருக்கி உற் பத்தியை அதிகமாக்க முடியும் என்ற எண்ணத்தை இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

அடுத்து பல்வேறு பாசன திட்டங்களை நாம் தீட்டி யிருக்கிறோம். முக்கியமாக காவிரி நீர்ப்பாசன திட்டத் தைப் பொறுத்தவரையில் உள்ள சிரமங்களை தீர்ப்பதற்கு அரசு முயன்று வருவதை நான் வரவேற்கிறேன். பரம்பிகுளம்-ஆளியார் திட்டத்தினால் இன்றைக்கு பயன்பெறும் மாவட்டம் கோவை மாவட்டமாகும். எங்கள் திருச்சி மாவட்டத்தை யும் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். பரம்பிகுளம்-ஆளியார் திட்டம் ஏற்பட்ட காலத்தில், எங்கள் மாவட்டத்து பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி, நாங்களும் கடைசி வரை வாதாடி, கொஞ்சம் எங்களுக்கும் அந்த உரிமையை கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது அன்று இருந்த அரசு நிச்சயமாக நாங்கள் அந்தத் திட்டத்தை விரிவு படுத்துற றோம். அப்படி விரிவுபடுத்துகிறபோது கரூர் தாலுக்கா விற்கும் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது 1.15 லட்சம் ஏக்கருக்கு அதிகமாகத் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்த நேரத்தில் கோவை மாவட்டத்தில் சில பகுதிகளுக்குக் கொடுக்க வேண்டும்

என்று சொன்னார்கள். நான் வேண்டாம் என்று சொல்ல வில்லை. எந்தப் பகுதிக்குக் கொடுப்பதாக இருந்தாலும் நான் வரவேற்கிறேன். ஆனால் எங்கள் பகுதிக்கும் கொஞ்சம் பாசன வசதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய அடிப்படை திட்டமே தாராபுரம் தாலுக்காவில் கிட்டத்தட்ட 35,000 ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்கிறபோது எங்கள் பகுதிக்கும் ஒரு 5,000 ஏக்கர் பாசன வசதியாவது செய்து கொடுத்தால் எங்கள் எண்ணம் பூர்த்தியாகும்.

அதேபோல் ஆனமலை ஆறு திட்டம் வருகிறபோது அந்தத் திட்டத்தினால் வரக்கூடிய உபரி தண்ணீரை எங்கள் பகுதிக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நொய்யாற்றுத் திட்டம் என்பது மிகச் சிறந்த திட்டம். அது பரிசீலனையில் இருப்பதாக, நான் கேள்வி கேட்கிறபோது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நொய்யாற்றுத் திட்டத்தினால் கரூர் தாலுக்கா பயன் அடையும் என்று கூறி யிருப்பது உண்மையிலே எங்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படு கிறது. மேலும் நான் சென்ற முறை கேட்ட போது இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பரிசீலனை பூர்த்தியாகிவிடும் என்று சொல்லப்பட்டன. அந்த நொய்யாற்றுத் திட்டத்தின் மூலம் ஒரு 10,000 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு இதை ஒட்டியுள்ள இன்னொரு திட்டத்தின் மூலம் சுமார் 30,000 ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும். இதை இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, அமராவதியில் உள்ள பம்ப் செட்டுகள் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விழைகிறேன். 1962-ம் ஆண்டுக் குப் பிறகு வைக்கப்பட்ட அந்த பம்ப் செட்டுக்களுக்காக தண்ட தீர்வை போடப்பட்டு அதன் காரணமாக அந்த மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். நாம் தண்ணீர் சிக்கனமாக செல வழிக்க வேண்டிய சூழ்நிலையில் அமராவதி வாய்க்கால்கள் ரீமாடல் செய்து இருக்கிறோம் என்பதை பலமுறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதன்மூலம் கிடைக்கும் உபரி தண்ணீரை அந்தப் பம்ப் செட்டுகளுக்கு உரிய உரிமங்கள் அதாவது பெர்மிட் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 1977-78-ம் ஆண்டில் எந்த ஆண்டிலும் கண்டிராத அளவில் உரம் விநியோகித்ததாக இந்த 1979-80-ம் ஆண்டு அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவ சாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான

உரத்தைப் பெற்றிருக்கிறார்கள். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக அந்த விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு அந்த ஆண்டில் எவ்வளவோ நட்டம் அடைந்திருக்கிறார்கள். அந்த நட்டத்தின் காரணமாகத்தான் தங்களுடைய பூரணமான வலுவை இழந்து பல இன்னல்களுக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடன் பளுவை குறைப்பதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுடைய பிரச்சினை என்பது மிக முக்கியமான பிரச்சினை. அந்தப் பிரச்சினையில் நாம் தீர்வு கண்டுவிட்டால் விவசாயிகளுடைய போராட்டத்தை நிறுத்த முடியும். உயர்மட்ட குழுவினுடைய பரிந்துரைகளை சீக்கிரமாக ஆராய்ந்து அதன்மீது ஒரு நல்ல முடிவினை வெளியிட்டால் அந்த இயக்கத்திலே இன்றைய தினம் ஏற்பட்டுள்ள போராட்டத்தை தடுத்து நிறுத்துவதோடு, அந்த 88.73 லட்சம் டன் உற்பத்தி செய்ய முடியும் என்ற வகையிலே அரசு எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. நாச்சிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1979-80 ஆம் வருட பாசன மற்றும் வேளாண்மை குறித்த மானிய கோரிக்கையினை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். வேளாண்மை பாசனத்திற்கு ரூ. 22·56 கோடியும் பாசன வசதி இல்லாத இடங்களுக்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 37·46 கோடியும் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

இருந்தாலும்கூட, வேளாண்மை மற்றும் பாசனத்திற்காக இன்னும் அதிகமான நிதியை இந்த அரசு அளிக்க வேண்டும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய தொகுதியிலுள்ள சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வேலைகளை தீவிரமாக நடத்தி விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தில் ஒரு சில பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன. வரட்சியான பல கிராமங்கள் இந்த விஸ்தரிப்புத்

திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருப்பது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. அப்படிப்பட்ட பகுதிகளைப்பற்றி கூற விரும்புகிறேன். தாராபுரம் தாலுக்காவில் குண்டடம், மூந்தனம்பட்டி, அம்மாபாளையம், சங்கப்பாளையம், சூரிய நல்லூர், எரகாம்பட்டி போன்ற கிராமங்களையும், பல்லடம் தாலுக்காவில் நல்லூர், முதலிப்பாளையம் போன்ற கிராமங் களையும் பரம்பிக்குளம்—ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்கு விலை கட்டுப்படியாகவில்லை என்கின்ற ஒரு நிலை பரவலாக இந்த மாநிலம் முழுவதும் பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. விலை கட்டுப் படியாகவில்லை என்று சொல்லுகின்ற நிலையில் எல்லோருக்கும் விலை கட்டுப்படியாக வில்லை என்பது நன்றாகத் தெரியும். விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கொடுப்பதில் நம் முடைய அரசு தீவிரமாக கவனம் செலுத்தி விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு நல்ல விலை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தமிழ் நாடு முழுவதும் விவசாயிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே விவசாயிகள் கட்ட முடியாத நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு விவசாயம் செய்யக்கூடிய மூலதனச் செலவு அதிகமாக இருக்கிறது. உரம் போன்றவைகளை அதிகமான விலை கொடுத்து வாங்குகிறார் கள். ஆனால், விளைப்பொருட்களுக்கு குறைந்த விலைதான் கிடைக்கிறது. இரண்டு மடங்கு மூன்று மடங்கு செலவு செய்து விட்டு, ஒரு மடங்கு விலைதான் கிடைக்கக்கூடிய நிலைமை இருக் கிறது. ஆகவே, இந்த அரசு தீவிரமாக கவனம் செலுதித் கூட் டுறவுத்துறை அமைச்சரவர்களும் இதில் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு இருந்துவரும் அரசு கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் விவசாயி களுடைய நிலை அவ்வளவு மோசமாக இருக்கிறது. எந்தத் துறையில் கோரிக்கை வைத்து போராட்டம் நடத்தினாலும், தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் உடனே ஏதாவது சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் விவசாயி களுக்கு கடந்த 30 ஆண்டுகளாக எந்த அரசும் எந்த சலுகையும் அளித்ததாக தெரியவில்லை. இது எலலோருக்கும் தெரிந்த விஷயம்தான். இந்த நிலையில் விவசாயிகள்மீது அரசு தீவிர கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து

1979 மார்ச் 31] [திரு. க. நாச்சிமுத்து]

கொடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். தற்போது விவசாயிகள் 9 அம்ச கோரிக்கையை வைத்து பல நாட்களாக போராடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு சில சலுகைகளையாவது கொடுக்க வேண்டும். இதற்காக உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய பரிந்துரை இன்னும் ஓரிரு வாரங்களில் வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி என்ன பரிந்துரைகளை கூறுகின்றதோ அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு கமிட்டியின் பரிந்துரைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோவை மாவட்டத்தில் பாண்டியாறு புன்னம்புழா திட்டம் விவசாயிகளுக்கு ஒரு பெரியத் திட்டமாக இருக்கிறது. கேரளா அரசுடன் நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், நமது முதலமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாக தெரிகிறது. இதை இன்னும் தீவிரமாக கவனம் செலுத்தி அரசு பேச்சுவார்த்தை நடத்தி, இந்தத் திட்டத்தை வறட்சிப்பகுதியான கோவை, அவிநாசி, பல்லடம் போன்ற தாலுக்காக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் தாலுக்காவில் புகழூர் நீரற்ற திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இதற்காக அரசு ஒன்றரைக் கோடி ருபாய் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துள்ளது. ஆனால், இப்போது தெளிப்பான் பாசன முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது போதிய பலன் அளிக்காது. ஆகவே, நேரடிப் பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—50]

என்னுடைய தொகுதியில் காங்கேயத்திற்குப் பக்கத்தில், நொய்யலாற்றுத் திட்டமும், கொடுவாயிற்குப் பக்கத்தில் வட்டமலைக்கரைத் திட்டமுப், குண்டடத்திற்கு அருகில் வறட்டுப்பள்ளட திட்டமும் அரசு நிறைவேற்றாமல் இருக்கிறது. இநதத் திட்டங்களை எல்லாம் உடனடியாக இந்த ஆண்டில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குளங்கள் எல்லாம் பல ஆண்டுகளாக ஆழப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்தக் குளங்களையெல்லாம் ஆழப்படுத்திக் கொடுக்க

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேற்கு நோக்கி பாய்கின்ற சிறு நதிகளை யெல்லாம் ஒன்று சேர்த்து, கிழக்கு நோக்கி அணைக்கட்டி அதன் மூலம் கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் பெரும் பலனை அடையும் வாய்ப்பை கேரள அரசுடன் பேசி, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல், பழனி தாலுக்காவிலே குதிரையாற்றுத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாப்பம்பட்டி, உடுமலைப்பேட்டையிலுள்ள ஆத்தூர் விவசாயிகள் இந்த கேட்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், கிட்டதட்ட 5,000 ஏக்கர்கள் பாசன வசதி கிடைக்கும். அமைச்சர் அவர்கள் இதனையும் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொங்கலூர் தொகுதியிலுள்ள துணை மின்நிலையத்தில் எந்த நேரத்திலும் சரியான மின்சாரம் வருவதில்லை. மின்சார அமைச்சர் இதிலே கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு சரியான முறையிலே மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பரம்பிக்குளம் ஆளியாறு விவசாயிகளுக்கு வாய்க்கால் தண்ணீர் பாய்கின்ற பல இடங்களில் தண்டத்தீர்வை ஒன்றிற்கு ஐந்துமடங்கு விதிக்கப்படுகின்றது. ஒரு மடங்கு தண்டத் தீர்வையையே கட்டமுடியாமல் கஷ்டப்படுகின்ற விவசாயிகள், 5 மடங்கு தண்டத் தீர்வையை எப்படி கட்ட முடியும்? இந்த விவசாயிகள் இப்படி கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கிறதே தவிர, பாசன வசதி அதிகப்படுத்துகின்ற நிலைமை இல்லை. ஆகவே, இந்தத் தண்டத் தீர்வையை அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டும் என்று பலமுறை விவசாயிகளும், நானும் எடுத்துக் கூறியிருக்கிறோம். விவசாயிகள் வந்தும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தண்டத் தீர்வையை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பயிர் இன்சூரன்சு திட்டம். முதலில் இந்த பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை நாம் தான் கொண்டுவந்து, மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். நமது ஜனதா கட்சி ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசுடன் கலந்து, இந்த

[1979 மார்ச் 31] [திரு. க. நாச்சிமுத்து]

பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை விவசாயிகளிடையே கொண்டு வரவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தீவிர சாகுபடி திட்டத்தின் மூலம் கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் விவசாயிகள் கடன் வாங்கி, தீவிரமான உற்பத்தியிலே ஈடுபடுகிறார்கள். இந்தக் கடனை அவர்கள் தங்கள் சொந்தத்திற்காக வாங்க வில்லை அல்லது வேறு எதற்காகவும் வாங்கவில்லை. நாட்டு மக்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே, இந்தக் கடனை வாங்கி, இன்றைக்கு அந்தக் கடனைத் திருப்பி கொடுக்க முடியாத நிலையில், அவர்கள் தங்கள் நிலங்களை விற்று, இன்று நடு ரோட்டிலே நிற்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த விவசாயி களுக்கு எல்லாம் தேவையான வசதிகளையெல்லாம் இந்த அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டும். அப்படி நல்ல முறையிலே வசதிகள் செய்து கொடுத்தால் தான், அவர்கள் நல்லமுறையிலே விளைச்சல் செய்ய முடியும். கிராமத்திலே இருக்கின்ற விவசாயி சேற்றில் காலைவைத்தால்தான், நகரத் திலே, பட்டணத்திலே இருக்கின்றவர்கள் சோற்றிலே கையை வைக்க முடியும். இந்த நிலையை அரசு கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான வசதிகளையெல்லாம் உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. எஸ். வி. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளமை ஊஞ்சல் ஆடும், ஆற்றல் இணைந்துநிற்கும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பாசனத் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை கடமை உணர்வோடு எடுத்து வைக்க களிப்பு கொள்கிறேன். முதலாவதாக, தலையாய கடமையாக, எனது நன்றிக் கடனாகச் சொல்ல விரும்புவது, நடப்பு ஆண்டுத்திட்டத்திலே என்னுடைய தொகுதியிலே, பெரம்பலூரிலே சுவேதா நதி அணைத்திட்டமும், நூத்தப்பூர் நெற்குணம் ஏரி அமைக்கும் திட்டத்தையும் செயல்படுத்த இருப்பதற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்ள, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டினுடைய ரத்த ஓட்டமாக இருப்பது நீர்ப்பாசனத் திட்டமாகும். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, அந்த ஆட்சி யினுடைய மாட்சி ஆகியவற்றை வெளிப்படுத்துவது அந்நாட்டு வேளாண்மைத் துறை, பாசனத் துறை வளர்ச்சியாகும்.

நாம் இந்தக் கோரிக்கையைப் பார்க்கும்போது வரலாற்று வரிகளாகிய அசோகன், அக்பர், ராஜராஜன் காலத்திலே அவர்கள் அரசாண்டபோது அமைத்திருந்த ''ஏரி வாரியம்'' அதனுடைய மகிமை உண்மையிலே என்னுடைய மனதைக் கவர்ந்தது. அதை இந்த அரசு துரிதப்படுத்தினால் கூட மிகவும் நலம் பயக்கும். இந்த அரசின் மேலான எண்ணங்களுக்கு ஈடாக செயல்வடிவம் பெறும் என்ற காரணத்தால் அதனை நான் வற்புறுத்துகிறேன்.

நான் அங்கம் வகிக்கும் தொகுதி சோழவள நாட்டில் ஒரு பகுதியாக இருந்தாலும் காவிரி நதியினுடைய நீரினைக் காணாத ஒரு வறண்ட பகுதியாகும். அதே நேரத்தில் நிலத்தை நம்பியே வாழ்கிற உழைக்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதி என்னுடைய பெரம்பலூர் பகுதி. கங்கையையும் காவிரியையும் இணைக்கின்ற சிந்தனைத் தேரோட்டத்திலே அரசியல் சூழ்நிலை இருக்கும் இந்தக் காலகட்டத்தில் காவிரியைப் பெரம்பலூருக்கு இணைக்கவேண்டுமென்பதற்காக இந்த அரசினுடைய மேலான சிந்தனையைத் தட்டிவிடுவது என்னுடைய கடமையாகும்.

ஃபீடர் சிஸ்டம் என்று சொல்லப்படுகிற சிஸ்டத்தை வைத்து ஆங்காங்கே ஊற்றுக்களை உருவாக்கி வெள்ள காலத்திலே அதிகமாக வருகிற தண்ணீர் வீணாகாமல் தடுப்பதற்கும், அதே நேரத்தில் எங்கள் பகுதி நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கவும், உழைக்கும் மக்கள் பயனடையவுமான நிலை ஏற்படும். வயிராற சோற்றினை தமிழக மக்களுக்குத் தரவேண்டுமென்ற எண்ணமும் ஈடேறும் என்ற வகையில் அதை உடனடியாகச் செய்வது அவசியமாகும். காவிரியைப் பெரம்பலூர் பகுதிக்கு இணைக்க வாய்க்கால் வெட்டும் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளம்பாடி திட்டம் காவிரியிலிருந்து எடுக்கப்பட்ட திட்டமாகும். 50 கல் தொலைவில் இருந்து, நீண்ட நெடிய தூரத்திலிருந்து—காமராஜ் காலத்தில் கூட அது சாலச் சிறந்தது அல்ல, சாதனை மிகுதி அல்ல, சாத்தியக் கூறு அல்ல என்று கருதிய நேரத்திலும் அது பின்னாலே வெற்றிநடைபோடுகின்ற, விளைச்சலைப் பெருக்குகின்ற, 50 கல் தொலைவுக்குச் செல்லுகின்ற அந்தப் புள்ளம்பாடி திட்டத்தைக் காணும்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அன்பான கவனத்தை இக்காவேரி திட்டத்தில் அருள்கூர்ந்து ஈர்த்திட வேண்டுமென்று நான் மிகவும் கேட்டுக்கொள்வேன். என்னுடைய தொகுதியிலே

1979 மார்ச் 31] [திரு. எஸ். வி. இராமசாமி]

அண்மையிலே அமைச்சர் அவர்கள் உண்ணாமல் உண்மையிலேயே, என்னுடைய தொகுதியிலே சுற்றிப் பார்த்தார்கள். ஏரிப் பாசனம் சீர்திருத்தப்பட வேண்டுமென்ற தலையாய கருத்து முதலாவதாக என்னுடை தொகுதியிலே முந்திய அரசாலும் பரிசீலனை செய்யப்பட்டு இன்று அலுவலர்கள் கரங்களிலே இருக்கும் கோரிக்கையாகிய—செம்மலையையும் பச்சை மலையையும் இணைத்து மருங்கில் ஓடுகின்ற வற்றாத நீர் அருவியைக் கொண்டிருக்கிற ''கல்லாறு ஓடையிலே அணையைக்'' கட்டி 20 கிராமங்களுக்கு மேலாக, 20,000 ஏக்கருக்கு மேலாக பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அணைத் திட்டம் நிறைவேற்றப் படுவதால் வெங்கலம் பகுதி பாசனமும் பாதிக்கப்படாத வகையில் நிறைவேற்றுதல் அவசியம் என கோருகிறேன்.

காவிரியையும் பெரம்பலூரையும் இணைக்கும் வாய்க்காலை வெட்டினாலும், கல்லாறு அணையைக் கட்டினாலும் அதன் மூலம் இந்த அரசு அந்தப் பகுதியில் உருவாக்கியிருக்கிற சர்க்கரை ஆலைக்குப் பற்றாக் குறையாக இருக்கும் கரும்பு விளைச்சலைப் பெருக்குவதற்கு முடியும் என்ற கருத்தையும், அங்கு கிடைக்கிற கரும்புச் சக்கையைக் கொண்டு காகித ஆலையை உருவாக்கவும் நீர் வசதி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த அவையின் முன் வைக்கிறேன்.

நான் முன்னரே கூறியதுபோல் ஏரிப் பாசனத்தை அதிகமாகக் கொண்டிருக்கிற என்னுடைய பகுதியிலே புதிதாக ஏரியை உருவாக்குவதில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்கூட தங்களுடைய சுற்றுப் பயணத்தின்போது அதிகாரிகளிடம் தங்களுடைய எண்ணத்தை வெளியிட்டார்கள். 'மேலப் புலியூர் ஏரியையும்,' கலிங்க ஏரியையும் உடனடியாக நிறைவேற்ற வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

ஆகவே அதை உடனடியாகச் செய்யுமாறும் அத்துடன் புதிய ஏரிகள் என்ற முறையிலே கலிங்க ஏரி, வேப்பந்தட்டை, புதுநடுஊர், ரெங்கநாதபுரம், மேலப்புலியூர், சிறுவாச்சூர் ஆகிய் ஊர்களுக்கு புதிய ஏரிகளை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட கொண்டுவரலாமா என்று இருக்கிறேன். கரும்பலூர் பாளையத்திலே 'பாளையம்' என்ற ஒரு ஏரியிருக்கிறது. அந்த ஏரியிலே

அது குறுகலான பகுதி, அங்கே தூர் எடுக்காத நிலையும், கரைகளை உயர்த்தாத நிலையும் இருப்பதால்அந்தக் கண்மாயில் தண்ணீர் நிரம்பி வழியும்போது அதற்கு அருகாமையிலே இருப்பதால், சொந்தமோ என்னவோ தெரியவில்லை. அந்தத் தண்ணீரை 'செஞ்சேரிக்கு' எடுத்துச் சென்று விடுகிறார்கள் என்ற காரணத்தினால் ஒரு பதட்டமான நிலைமை இருக்கிறது, அதனால் அங்கே கண்மாய்கள் உடைக்கப்பட்டு அவர்களுக்குள் அடித்துக் கொள்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காக அந்த பாளையம் ஏரியினுடைய கரைகளை உடனடியாக உயர்த்தவும் அதை தூர் எடுக்கவும் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர், தொரமங்கலம், செங்கனம், பெரியம்மா பாளையம், அரும்பாவூர், கடம்பூர், லாடபுரம், பூலாம்பாடி வெங்கலம், பேரையூர் போன்ற ஊர்களில் ஏரிகள் இருக்கின் றன. அங்கே நெடுங்காலமாக தூர் எடுக்காமல் அவை பாழான நிலையிலே உடைப்பு எடுக்கிற நிலையிலே இருக் கின்றன. ஆகவே ஏரிக் கண்காணிப்புத் துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுத்து சீராக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே குடிமராமத்து என்று சொல்கிற இயக்கத்தை ஆக்கமுறச் செய்வதற்கும் அவர்களுக்கு அதிகமான பொருள் உதவி செய்வதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, வெங்கனூர் என்ற ஊரிலே உள்ள ஏரியிலிருந்து தண்ணீர் வெளியேறுவதற்கு சரியான வாய்க்கால் வசதிகள் இல்லை. ஆகவே அங்கே வாய்க்கால் ஏற்படுத்தித் தர அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வற்றாத வஸிஸ்டா நதியின் குறுக்கே காரியனூர் பில்லாங்குளம் பகுதியில் குகையூர் என்ற இடத்திலே அணையைக் கட்டினால், திருச்சி, தென் ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களை இணைக் கின்ற இடமாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்து அதன் அணைத்திட்டம் காரணமாக, தண்ணீர் கிடைக்காத வேப்பந் தட்டை யூனியன் போன்ற பகுதிகளுக்கும் நீர் கிடைக்கும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கைளத்தூர் ஏரியை பெரிதுபடுத்த வேண்டும். அந்த ஏரியை விரிவுபடுத்தி மேலும் நூத்தப்பூர் வாய்க்காலில் தண்ணீர் வரச்செய்தால் அந்தப் பகுதிகளுக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. எஸ். வி. இராமசாமி]

கொல்லிமலையில் புளியஞ்சோலை அமைந்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி அந்தப் பகுதிக்குச் சென்று அந்த கண்கொள்ளா காட்சியை உணர்ந்து அங்கே வீசுகின்ற தென்றலையும், அங்கே ஓடுகின்ற வற்றாத நீர்வீழ்ச்சி இவைகளை யெல்லாம் கண்டுகளித்து, அங்கே ஒரு அணையைக் கட்டுவது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய அந்த வார்த்தைகள் அடங்கிய குறிப்புகள் இருக்கின்றன, அங்கே ஒரு அணை கட்டினால் மிகவும் சிறந்த தாக இருக்கும் என்று சொல்லி அதை நிறைவேற்றித் தர வேண்டு மென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரம்பலூர் தொகுதி மக்கள் தொடர்ந்து பல மனுக்கள் எனக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். பெரம்பலூர் மிக மிக வறண்ட பகுதி. அங்கே குடிநீர் வசதியும் கிடையாது. பாசன வசதியும் கிடையாது. இந்த வசதிகள் மிகவும் குன்றிய நிலையில் இருக்கிறது. விவசாயி, பாட்டாளி அரும்பாடுபட்டு விதையை விதைத்து பயிரை விளைத்தால் ஏதோ தண்ணீர் இருக்கிறது என்ற ஏக்கத்திலே விதைத்தால் அங்கே நீர் வசதி குன்றி பயிர்கள் காய்ந்துவிடுகிற அவல நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை நான் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்கிறபோது கண்டு கண்ணீர் சிந்தி இருக்கிறேன். அந்த அவல நிலைமையைப் போக்குவதற்கும் நிரம்பத் தண்ணீரைக் கொடுப்பதற்கும் அரசு தன்னுடைய மேலான கவனத்தைச் செலுத்தி அங்கே இருக்கின்ற ஏரிகளை தூர் எடுப்பதற்கும், ஏரிகள் இல்லாத ஊர்களிலே வேப்பந்தட்டை போன்ற ஊர்களிலே ஏரிகளை உருவாக்குவதற் கும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பெரம்பலூரிலே நீர் பெறுவதற்கு ஆன சாத்தியக்கூறுகள் குன்றியிருப்பதால் நான் ஏற்கெனவே கூறியவாறு, காவேரி-பெரம்பலூர் திட்டத்தை நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோனேரி வாய்க்காலிலே மழைக்காலங்களிலே, வெள்ளக் காலங்களிலே நீர் பெருகி வந்து, அந்தத் தண்ணீர் வீணாகிறது. பாழாகிறது. அங்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டி, ரெகுலேட் செய்து, பாதுகாத்தால் குடிநீரும்கூட பெரம்பலூருக்குக் கிடைக்கும் என்ற நிலையும் உருவாகும். ஆகவே, கோனேரிபாளையத்தின் நீர் மிகவும் பாழ்படாத வண்ணம் நீர்த்தேக்கம் கட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழுதூரிலிருந்து பெரம்பலூருக்குத் தண்ணீர் கொண்டு வருவது பற்றி ஆய்வு இருப்பதாக நான் அறிகிறேன். அங்கே இருக்கும் நீர் பாசனத்திற்கும், குடி நீருக்கும் பெரம்பலூருக்கும் பயன்படும் என்ற கருத்தை நான் அறிகிறேன், ஆகவே, தொழு

தூரிலிருந்து பெரம்பலூருக்கு நீர் கொண்டுவருவதற்காக வேண்டி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையும் அருள்கூர்ந்து தங்கள் எண்ணத்தைக் கொண்டு செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவிரியைப்பற்றி எடுத்துக்கொண்டால், அருமை அண்ணன் முருகேசன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், இன்னும் அருமை அண்ணன் ஆறுமுகம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அருகிலே இல்லாவிட்டாலும்கூட, அங்கே ஏற்படுகின்ற அச்சம், வெள்ளம் ஏற்படும்பொழுது எங்களுடைய உறவினர்களெல்லாம், எங்களுடைய உடமைகளெல்லாம், எங்களுடைய மக்களெல்லாம் உயிர் பெறுவார்களா என்று அஞ்சியிருக்கும் நிலை கடந்த கால வெள்ளத்தின்பொழுது ஏற்பட்டது. அப்படியிருக்கின்ற நிலைமையைப் போக்குவதற்காக, மீண்டும் காவிரிக் கரையை, கரிகாற் பெருவளத்தான் செய்ததைப்போல ஸ்திரப் படுத்த வேண்டுமென்ற கருத்தையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்வேன்.

அடுத்து, குளங்கள் ஒரு சில எங்கள் ஊரில் இருக்கின்றன. அதாவது, கல்பாடி, கவுல்பாளையம், அய்யலூர் ஆகிய இடங்களில் இருக்கின்றன. அவைகளைப் பெரிதுபடுத்த வேண்டும். அதில் சுனை நீர் அதிகமாகவும், குன்றாது எப்பொழுதும் இருப்பதற்காக வேண்டியும், அந்தத் தண்ணீர் வேளாண்மைக்கும், மற்றும் பொது ஜனங்களின் உபயோகத்திற்காகவும் பயன்பட வேண்டியும், அந்தக் குளங்களைப் பெரிதுபடுத்த வேண்டுமென்ற என்னுடைய கருத்தினை நான் இந்த மாமன்றத்திலே வைக்கிறேன்.

அங்கே இத்தகைய நிலைதான் மிகவும் அவலநிலையாக இருக்கிறது. நான் என்னுடைய தொகுதியிலே ஆய்ந்தறிந்து கண்டபொழுது அங்குள்ள மக்கள் இந்த நீர்ப்பாசனத் துறையின் மூலம் தாங்கள் பெற வேண்டிய பயன்கள் என்னென்ன என்ற அந்த எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கள் தொகுதி மக்களுக்கு இவைகளைச் செய்து தருவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது அங்குள்ள மக்கள் நீர் மல்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே நான் சொன்ன வழிகளை ஏற்றுக்கொண்டு நீங்கள் உங்களுடைய, மேலான உதவிகளை நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் வேண்டும், வாரி வழங்க வேண்டும் என்று கூறினார்கள். உண்மையிலேயே இந்த அரசு கொண்டிருக்கும் இந்த எண்ணத்திற்கு, இந்தக் கோரிக்கைக்கு அவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைக் கூறியிருப்பது மன நிறைவைத் தருகிறது என்று கூறிக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

1979 மார்ச் 31]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, பாசனத் துறையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள வந்திருக்கிறேன். இன்றையதினம் பாசனத் துறைக்கு நமது தமிழக அரசு 1979-80 ஆம் ஆண்டுக்கு சுமார் 25 கோடி ரூபாய் சிறுபாசனத் திட்டங்களுக்கு என்றும், தூர் வாருவதற்காக 2·75 கோடி ரூபாய் என்றும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் அடிக்கடி ஏற்படக்கூடிய புயல், வெள்ளம், மற்றும் இயற்கையின் கோளாறுகளினால் விவசாயத் துறைக்குப் பல்வேறு செலவுகள் திடீர் திடீர் என வந்து விடுகின்கின்றன. இந்த நிலையில் இந்த ஒதுக்கப்பட்ட ரூபாயைக் கொண்டு குளங்களில் தூர் வாருவது, சீர் செய்வது என்பது முடியாத காரியமாகும். தமிழகம் பூராவும் இருக்கும் குளங்கள் இன்றையதினம் மேடிட்டுக் கிடக்கின்றன. இந்தத் தொகையை வைத்துக்கொண்டு இவைகளைச் சரி செய்ய முடியாது. எனவே இது போதுமான தொகை அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை மராமத்து செய்வதில் பொதுப்பணித் துறையினர் இன்றையதினம் ஒரு வேலையை ஆரம்பித்தார்கள் என்றால் அதை முடிப்பதற்கு இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. அதற்காக இன்றையதினம் அரசாங்கத்தினுடைய கொள்கை என்பது ஏதோ காண்ட்ராக்ட் முறையை ஒழித்துவிடுவதாக அடிக்கடி பேசப்படுகிறது. ஆனால் வேலைகளையெல்லாம் காண்ட்ராக்ட் முறையில்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த காண்ட்ராக்டரை ஊர்ஜிதம் செய்வதற்குக் கீழே உள்ள அதிகாரிகள் படும் துன்பங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. எந்த அதிகாரியைக் கேட்டாலும் நீங்கள் ஆள் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆளைக் கொண்டு போய்விட்டால் தகுதி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, காண்ட்ராக்ட் முறையை ஒழிக்கப்பாடுபடுவதில் அரசு கறாராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த காண்ட்ராக்ட் முறையின் காரணமாக பலவேலைகள் வருஷக்கணக்கில் தாமதம் ஆகிறது. அதோடு இன்றையதினம் ராமநாதபுரம் மாவட்டத்திறகு 183 இலட்சம் ரூபாயில் 100 குழாய்க் கிணறுகள் தோண்டுவதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதேசமயத்தில் எங்கள் மாவட்டத்திலே குறிப்பாக பழனி தாலுக்காவிலே இம்மாதிரி குழாய்க் கிணறுகளை வெட்டுவதன் மூலமாகச் சில பகுதிகளில் ஒட்டன் சத்திரம் போன்ற ஏரியாக்களில் உதவிகரமான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும்.

[முற்பகல் 11-10]

ஆகவே, அந்தத் திட்டத்தை அந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையிலே பல உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். என்ன சொன்னார்கள். வேளாண்மை உற்பத்தி செலவு விவசாயிகளுக்கு ரூ. 117 ஆகிறது என்று. அரசாங்கமே கூட சில நாட்களுக்கு முன்னால் கூறியது—அமைச்சரவர்கள் கூறினார்கள். நான் ஒன்றை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நானும் ஒரு சிறிய விவசாயிதான். சமீபத்திலே தான் நான் அறுவடை செய்துவிட்டு வந்திருக்கிறேன். உதாரணத்திற்காக சொல்கிறேன் 4 ஏக்கர் சாகுபடி செய்ததிலே ரூ. 3,600 செலவானது. ஆனால் ஏறத்தாழ 70 குவிண்டால் நெல் கிடைத்தது. அப்படி பார்க்கும்போது, அடக்க விலை ரூ. 75-க்குக் கீழேதான் வருகிறது. ஆனால், அரசாங்கம் ரூ. 117 என்று சொல்கிறது. அது யார் கொடுத்த கணக்கு, எப்படி அந்தப் புள்ளி விவரம் தயாரிக்கப்பட்டது என்பதை மறு பரிசீலனை செய்து அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது புள்ளிவிவரம் கொடுத்தால் எனக்கும் உதவிகரமாக இருக்கும்.

இன்றையதினம் உணவுப் பொருளை வாங்கி சாப்பிடக்கூடிய மக்கள் இன்றிருக்கக்கூடிய விலையிலேயிருந்து ஒரு இம்மியும், உயர்ந்தாலும் அவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள் என்பதை உண்மையிலே கவலையோடு பார்த்துத்தான் அதை இங்கே குறிப்பிடுகிறேன். விவசாயின் உற்பத்திச் செலவு, இன்னின்ன வகைகளுக்கு இவ்விவ்வளவு என்று சொல்ல வேண்டும்.

அத்துடன், உரம், பூச்சி மருந்துகள் விலைகள் எல்லாம் மிகப் பயங்கரமான அளவுக்கு ஒரு வருஷத்திற்கு ஒரு விலையாக இருக்கிறது. அதைக் குறைத்து, கட்டுபடியாகக்கூடிய முறையிலே அந்த உரம் மற்றும் பூச்சி மருந்துகளை விநியோகிக்க வேண்டும்.

அடுத்து, பணப் பயிரை எடுத்துக்கொண்டால் பழனிக்கு பக்கத்துப் பகுதியான, கொடைக்கானலில் வாழை என்ற தேசிய உணவுப் பொருள் பயிராகி வந்தது. அது இன்றைய தினம் அழிந்தே போய்விட்டது. மலைவாழைப்பழத்தை வாங்கவே முடியவில்லை. மீறி வாங்கினாலும் ஒரு பழம் 30 காசு என்று சொல்கிறார்கள். அந்தத் தொழில் அழிந்தே விட்டது. அந்தத் தொழிலுக்கு உதவி செய்கிறோம்.........

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன் :</u> பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, நமது நண்பர் அவர்கள் நெல்லினுடைய அடக்க விலையைப் பற்றிச் சொன்னார்கள். அதனுடைய அடக்க விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 120 என்பதற்கான காரணத்தை இந்தச் சபையிலே அறிவிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இதிலே மந்திரமோ மாயமோ எதுவும் இல்லை. இங்கே நான் அரசியல் பேசவில்லை. நானும் ஒரு விவசாயி. நேரடியாக விவசாயம் செய்து நெல்லை அறுத்துப் போட்டுவிட்டு வந்திருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள். வாதத்திற்காகச் சொல்லவில்லை. வேண்டுமானால் இடத்திற்கு இடம் வித்தியாசப்படும். வெறும் ரூ. 70 என்பதற்கும், ரூ. 120 என்பதற்கும் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50 வித்தியாசம் ஆகிறது. அது வரவே முடியாது. தமிழக அரசு நிர்ணயித்துள்ள கூலியை விவசாயத் தொழிலாளிகளுக்குக் கொடுத்தாலுங்கூட அந்த அளவு வராது. பல இடங்களில், அரசு நிர்ணயித்துள்ள கூலி கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் என்று பார்த்தால், மக்களை ஏமாற்றக் கூடிய முறையில் பல தப்பான கணக்குகளை அரசாங்கத்திற்குக் கொடுக்கலாம், அது வேறு விஷயம். ஆகவே, நண்பர் அவர்கள் கணக்கு அப்படி இருந்தால், அதனை அரசாங்கத்திற்குக் கொடுக்கட்டும். ஒரு காப்பியை எனக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

கொடைக்கானல் பகுதியிலே வாழை அழிந்து விட்டது. ஏதோ நிவாரணம் அளிப்பது என்ற முறையில் இல்லாமல், அதைப் பாதுகாக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம், அன்னியச் செலாவணியைச் சம்பாதிக்கக் கூடிய ஒன்றாக வாழை விவசாயம் இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் அதனைப் பாதுகாக்கவேண்டும்.

அதே போல், என்னுடைய பகுதியிலே கொய்யாவும் மாவும் ஒவ்வொரு வருஷமும் இலட்சக்கணக்கில் வருகிறது, கொஞ்ச காலத்திற்கு முன்பு, அமைச்சர் இராஜா முகமது அவர்கள், அந்தப் பகுதியிலே கொய்யா பதனத் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு ஆராய்ச்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா ? அந்தப் பகுதியில் ஆராய்ச்சி செய்ததாக இதுவரையில் எனக்குத் தகவல் இல்லை. ஆகவே, இதையும் ஆராய்ச்சி செய்து, பழனி வட்டத்திலே அத்தொழிற்சாலை அமைக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் ஒரு நண்பர் பேசினார். குதிரையாறுத் திட்டம் பழனி தாலுக்காவுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. தி.மு.க. ஆட்சி காலத்தில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆய்வு வேலைகள் எல்லாம் நடைபெற்றன. இந்த அரசு வந்த பிறகு அது ஏனோ தானோ என்று பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு அறிக்கையில்கூட அது இடம் பெறவில்லை. சில நாட்களுக்கு முன்னால் தலைமைப் பொறியாளரைச் சந்தித்துக் கேட்டபோது அவரும் அதிலே கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை ; அந்தமாதிரியாகத்தான்

அவருடைய பதில் இருந்தது ; சரியான தகவல் கொடுக்கவில்லை. ஆகவே இதை நான் வற்புறுத்திச் சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 100 குழாய் கிணறுகளை எப்படி இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைத்து 12,000 ஏக்கர் பாசன வசதிக்கான திட்டம் இருக்கிறதோ அதைப் போல இந்த குதிரையாறு திட்டத்தை நிறைவேற்றினால் 5,000 ஏக்கர் பாசன வசதி கிடைக்கும். ஆகவே, இந்த ஆண்டு இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவரவர்களே, 5 நிமிடம்தான் ஆகியிருக்கிறது ; இன்னும் 5 நிமிடம் கொடுங்கள்.

மின்சார வெட்டு 30 சதவீதம் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் 27-ந் தேதி ஊட்டியிலிருந்து வருகிறேன். அங்கே 70 சதவீதம் மின்சார வெட்டு அமுலில் இருக்கிறது. காலையிலே 10 மணியிலிருந்து மத்தியானம் 2 மணி வரையில் உள்ள 4 மணி நேரமும் இரவு 12 மணியிலிருந்து 3 மணி வரையில் உள்ள 3 மணி நேரமும் ஆக மொத்தம் ஒரு நாளைக்கு 7 மணி நேரம் மின்சாரம் கொடுக்கிறார்கள். இரவு 12 மணிக்கு கொடுக்க கூடிய மின்சாரத்தை பொதுமக்கள் பயன்படுத்த முடியவில்லை ; பயன்படுத்தும் நிலையில் இல்லை. ஆகவே, 30 சதவீதம் மின்சார வெட்டு என்பது விவசாயிகளை ஏமாற்றும் ஒரு அறிவிப்பு. அதிலே, உடனடியாக தலையிட்டு, அவர்களுக்கு உண்மையாகவே 30 சதவீதம்தான் மின்சார வெட்டு என்றால் 70 சதவீதம் மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். 30 சதவீதம் வெட்டு என்றால் அதில் அவ்வளவாக பிரச்சனை இல்லை. ஆனால் 70 சதவீதம் வெட்டு என்று சொல்லும்போது சிறு விவசாயிகள், சிறு தொழில்கள் செய்பவர்கள் எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நீங்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை. எனது தொகுதியில் இருக்கிற வரதமா நதியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அய்யன்குளம் இருக்கிறது. அதற்கு வாய்க்கால் வெட்டுவது, ஏனோ விடுபட்டுவிட்டது. அந்த காலத்தில் சர்வே செய்தவர்கள் அதை விட்டுவிட்டார்கள். ஒரு கிலோமீட்டர் தூரம் தான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு வாய்க்கால் வெட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், வரதமா நதியிலிருந்து பாப்பநாயக்கன் ஏரி 6 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதைப்போல பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் இன்றைய நவீன வேளாண்மை முறைகளைக் கையாண்டு, சாகுபடியைப் பெருக்க, அந்த வாய்க்கால்களுக்கு சிமின்ட் ஸ்லாப் அமைத்துக் கொடுத்தால் தண்ணீர் வீணாவதைத் தடுக்க முடியும் ;

பாசனப் பரப்பை அதிகரிக்க முடியும்; அது விவசாயிகளுக்கு பெருதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரதமா நதிக்கும் வாய்க்கால்களுக்கும் சிமின்ட் சிலாப் போட வேண்டுமென்று ஏற்கெனவே அந்த பகுதி விவசாயிகள் சென்ற ஆண்டு அமைச்சரிடம் மனு கொடுத்தார்கள். எனக்கும் மனு கொடுத்தார்கள். நான் அதையும் அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்த ஆண்டாவது அதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குதிரையாறு திட்டத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். குதிரையாறு திட்டம் பழனி தாலுகாவுக்கு முக்கியமான திட்டம். அதனால் சுமார் 5,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அது பழனி தாலுகாவில் மட்டுமல்ல; அதில் முக்கால்வாசி அமைச்சரவர்களின் தொகுதியில் இருக்கிறது. ஆகவே, அதை எடுத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப் பட்டது). இராமநாதபுரம் மாவட்டத்தில் 100 குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தைப் போல இதையும் எடுத்துக் கொள்ள வேண்டும்; அது விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான ஒரு திட்டம்; நல்ல திட்டம். ஆகவே, இந்த ஆண்டிலாவது எப்படியும் அதை எடுத்து வைத்து, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. இன்று பால் பண்ணை வளர்ச்சித் துறை மானியம் வருகிற காரணத்தால் இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரவர்கள் உறுப்பினர்களுக்கு பால்கோவாவும், பாலும், மோரும் கொடுக்க இருக்கிறார்கள் என்பதையும் உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு அருந்தலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த பால்பண்ணை வளர்ச்சி மானியம் மத்தியானம்தான் வரும்போல் தெரிகிறது. எனவே காலையிலும் மாலையிலும் தர ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, அது என்ன பால். ஆட்டுப்பாலா அல்லது மாட்டுப்பாலா அல்லது இரண்டுமா?

[முற்பகல் 11-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, அன்றையதினம் விவசாயத்துறை அமைச்சரவர்கள் ஃப்ரூட் சால்ட் கொடுத்தார்கள். இப்போது பால் வழங்கப்படுகிறது,

கைத்தறி மானியம் வருகின்ற காரணத்தால் எல்லா உறுப்பினர்களுக்கும் கைத்தறி ஆடையினை வழங்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று மாலையும் கொடுக்கப்படும். உறுப்பினர்கள் அருந்தலாம்.

(சிரிப்பு)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படியெல்லாம் வழங்கப்படுகிறதே. அடுத்து சிறை மானியம் வரப் போகிறதே. அப்போது எல்லோருக்கும் சிறை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு உறுப்பினர் திரு. பாலன் அவர்களைத்தான் நீங்கள் கேட்க வேண்டும். (சிரிப்பு)

திரு. வி. கே. கோதண்டராமன் : துணைத் தலைவரவர்களே, இதற்கு முன்னாலே எல்லாம் பதனீர் கொடுப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் சிலர் பதனீரைக் கள் என்று தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பதனீருக்கும் கள்ளுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. வெயில் காலத்தில் பதனீர் குடித்தால் உஷ்ணத்தைத் தணிக்கும். மேலும் பதனீரில் ஏ முதல் இஸ்ஸட் வரை எல்லா வைட்டமின்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பதனீரை இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கதர் மற்றும் கிராமத்தொழில் மானியம் வருகின்ற காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பால்கோவாவும், பனை கற்கண்டும் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : துணைத் தலைவரவர்களே, 1967-க்கு முன்னால் கைத்தறி கைக்குட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர்கள் தான் சொல்லிவிட்டார்களே பால்கோவா தருவதாக. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. ப. சோமசுந்தரம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

1979 மார்ச் 31]

திரு. ஓ. ப. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொள்ளாச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலேயும் உழவுத் தொழிலிலே முழுமையாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதால் அந்தத் தொழிலே உள்ள சூழ்நிலைகளை ஓரளவுக்குத் தெரிந்தவன் என்ற முறையிலேயும் என்னுடைய சில கருத்துக்களை இங்கே கூற முற்படுகிறேன்.

வேளாண்மை மானியக் கோரிக்கையின் முதல் பகுதியிலே வேளாண்மைத் தொழில் தான் தமிழகத்திலே முக்கியமான தொழில் என்றும் இந்தத் தமிழகம் அவர்களுடைய வருவாயையும் நம்பிக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்கள். இதைப் பல உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். இங்கே, இந்த சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களில் 80 சதவீதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும் இந்தத் தொழில் இன்றையதினம் நல்ல நிலையிலே இல்லை என்பதை எல்லோரும் உணருகிறோம். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை என்று எல்லா தரப்பினரிடமிருந்தும் குறைபாடு வருகிறது. உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லுக்கும் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை, சர்க்கரையும் அதிகமான அளவிலே தேங்கிக் கிடக்கிறது. அதே சமயத்தில் வெளிநாட்டிலேயும் விற்கக்கூடிய சூழ்நிலை இல்லை. பருத்தி உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும் அதற்கும் சரியான விலை கிடைப்பதில்லை. இந்த பருத்தி உற்பத்தியைப் பற்றி மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். உடுமலைப் பகுதியிலே நல்ல பருத்தி நிறைய விளையக்கூடிய நிலங்கள் உண்டு. அங்கே படிப்படியாக வருடத்திற்கு வருடம் பருத்தி உற்பத்தி சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் நாம் மனதிலே கொள்ளவேண்டும்.

அடுத்து இந்த விவசாயத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதுதான் விவசாயம் என்று நாமெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். அதாவது அரிசியையும், பருப்பையும் மட்டும் தயாரிக்கக்கூடியதல்ல இந்த விவசாயம். இதனை வேறு கண்ணோட்டத்தோடு நோக்கினால் இந்தத் தொழிலே ஈடுபட்டிருப்பவர்களால் லாபத்தையும் அடைய முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் நல்லபல அரிய பொருட்களை தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. நாம் பண்டைய கால வரலாறுகளைப் படித்திருக்கிறோம். பண்டைய காலங்களிலே நம்முடைய நாட்டவர்கள் தயாரிக்கின்ற வாசனை திரவியங்களும், வாசனைப் பொருட்களும் அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட பொருட்கள் இலட்சக்கணக்கான ரூபாய் வருவாய் தரக்கூடியது. இப்படிப்பட்ட அந்தப்

பொருட்களை உற்பத்தி செய்வதில் குறைவு ஏற்பட்டதன் காரணமாகத்தான் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக விவசாயத்திலே நாம் பின்தங்கி விட்டோம் என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தச் சூழ்நிலையிலே நாம் கேரள மாநிலத்தையும், கர்நாடக மாநிலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

நான் இருக்கின்ற பொள்ளாச்சிப் பகுதிக்கு மிக அருகாமையிலே என் நண்பர் ஒருவருக்கு 30 ஏக்கரா நிலமிருக்கிறது; அதிலே அவர் விவசாயம் செய்கிறார். அந்த 30 ஏக்கரிலே ஏறகுறைய 1,500 தென்னை மரங்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு இடையே 400 ஜாதிக்காய் மரங்கள் இடையிடையே நட்டிருக்கிறார்கள். இடையிடையே கொக்கொ போன்ற செடிகளும் வைத்திருக்கிறார். இந்த 30 ஏக்கர்களிலே ஆண்டுக்கு அவருக்கு 4 லட்சம் வருவாய் வருகிறது என்று சொல்கிறார். ஆனால், அவருக்கு இதிலே ஆகின்ற செலவு என்னவென்றால், 12 ஆட்களை வைத்துத்தான் வேலை செய்கிறார். இது தவிர, அவர் இந்தத் தொழிலுக்காக தினமும் செலவழிக்கின்ற நேரம் இரண்டு மணி நேரம்தான். இன்னும் ஐந்து, ஆறு வருடங்கள் கழித்து அந்த 30 ஏக்கரிலே 7 லட்சம் ரூபாய் வருமானம் அடைய முடியும் என்று சொல்கிறார். இப்படிப்பட்ட சாகுபடி பயிர்களை எல்லாம் நமது விவசாயிகள் மத்தியில் நாம் அறிவித்திருந்தால், இந்த விவசாயிகளுடைய இன்றைய சூழ்நிலை இப்படிப் போய் இருக்காது. இதுபோன்ற இன்னும் பல பயிர்களைக் குறிப்பிடலாம். உதாரணத்திற்கு, மாம்பழத்தை எடுத்துக் கொண்டால், வெளிநாட்டில் நல்ல கிராக்கி அதற்கு இருக்கிறது. அங்கே ரூ. 4 லிருந்து ரூ. 10 வரையிலும் இது விற்கப்படுகிறது. இந்த மாம்பழத்தை விவசாயிகள் பயிரிட்டால், ஒரு ஏக்கருக்கு சராசரி 400 ரூபாய் செலவில், 12,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளை யெல்லாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்னொன்றையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாம் நெல் பயிர் உற்பத்திக்கு மழையை நம்பிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் யூகாலிப்ட்ஸ் என்ற மரம் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 1,200 செடிகள் நட்டால், அது 10 வருடங்களிலே ஒவ்வொரு மரமும் 2 டன் எடை கொடுக்கிறது. டன் ஒன்றின் விலை ரூ. 240. இந்த விலைக்கு ரயான் கம்பெனியும், சேஷசாயி பேப்பர் கம்பெனியும் வாங்குகிறார்கள். இதிலே கணக்கைப் பார்த்தால் ஒரு ஏக்கரில் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் 10 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த சூழ்நிலையில், எந்தெந்தப் பயிர்களை, வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பயிர்களை கிராமத்திலே உள்ள விவசாயிகளுக்கு உற்பத்தி செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நகரப்புறங்களிலே மல்லிகை, ரோஜா போன்ற மலர்ச்செடிகளை உற்பத்தி செய்து, அதிலிருந்து எசென்ஸ் எடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்பினால், ஏக்கர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால், விவசாயிகள் நெல் சாகுபடிக்காக கடனைப் பெற்று, அந்த நிலத்திலே பயிரிட்டு, அதிலே கிடைக்கக்கூடிய வருவாய் ஏக்கருக்கு ரூ. 500 என்றிருக்கிறது. நம் நாட்டிலே புஞ்சையை எடுத்துக்கொண்டால், ஏக்கருக்கு ரூ. 200 வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் லட்சக்கணக்கான ரூபாய் வருவாய் வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, இந்த விவசாயிகளுடைய சிரமங்களைத் தீர்க்க ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

[முற்பகல் 11-30]

திரு. கா. ந. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த விவசாயத்துறை, பாசனத் துறை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் ஒரு சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இன்று அமைந்து இருக்கும் ஆட்சி மக்கள் ஆட்சி, மக்களால் தேர் தெடுக்கப்பட்ட ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைச்சரர்களாக வீற்று இருப்பவர்கள், புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வரிசையில் உட்கார்ந்து இருப்பவர்கள் நாம் என்பதை எண்ணு
௭ கிறபோது, அரசு அலுவலர்களோ, மற்றவர்களோ மட்டும்
7 ஓட்டளித்து இன்று ஆட்சிக் கட்டத்தில் வரவில்லை, 10-க்கு 7 சதவிகிதம் அடிப்படையில் விவசாயிகள் ஓட்டளித்த காரணத்தால் தான் இன்று நாம் இங்கே ஆட்சி பீடத்தில் வந்து இருக்கிறோம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அந்த விவசாயிகளின் நிலையைப் பார்க்கிறபோது, அரசாங்க சார்பிலும், வங்கிகளின் சார்பிலும் எவ்வளவுதான் கடன்கள் கொடுத்தாலும், அவர்கள் காலையில் எழுந்து சென்று பயிரைப் பார்த்து, அறுவடை வீணாகிவிடும் என்று கருதுகிற நேரத்தில் தனது மனைவியின் தாலியை விற்றாவது விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். அப்படிப்பட்ட விவசாயிக்கு அவன் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கிறதா என்றால் இல்லை என்பதை உண்மையிலேயே மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பாசனத்திற்காக ஒதுக்கியிருக்கும் தொகை 25.17 கோடி ரூபாய், சிறு பாசனத்திற்காக ஒதுக்கியிருக்கும் ரூ 2.75 கோடி. இதிலே குறிப்பிட்டு நான் சொல்ல ஆசைப்படுவது எல்லாம், மாண்புமிகு குழந்தை உள்ளம் படைத்த குழந்தைவேலு அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அரசு அலுவர்

களையும் கேட்டுக்கொள்வது எல்லாம், இந்த அரசுக்கு நல்ல பெயர் தேடித் தரும் வகையில் அமர்ந்து, ஆலோசனை செய்து விவசாயிகளுக்கு நல்ல முறையில் அவர்களுக்கு உற்பத்திக்கு ஏற்ற முறையில் விலையைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் பயிருக்கும் உரிய விலை கிடைக்கவில்லை. கரும்பு பயிரிடலாம் என்றால் மத்திய சர்க்கார் அளிக்கும் விலையைப் பார்க்கிறபோது கரும்பு பயிர் செய்யவும் எண்ணம் வரவில்லை. வாழை பயிரிடலாம் என்றால் இயற்கை அன்னை அளித்த காற்றால் வாழை அழிந்து போகின்றன. இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புவது, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகள் அடித்த புயலாலும், வெள்ளத்தாலும் அவைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதை அரசும் நன்றாக அறியும். இதை யெல்லாம் பரிசீலித்து, பயிர்களுக்கு உரிய விலையை கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் புள்ளம் பாடி வாய்க்கால் பற்றி கூறினார்கள். மேட்டூர் அணையில் தண்ணீர் இருந்தால்தான் புள்ளம்பாடியில் பாசனத்திற்கு தண்ணீர் விடுகிறார்கள். இதை தயவு செய்து மாற்றியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 4 மாதங்ளுக்கு அந்த வாய்க்காலில் தண்ணீர் பாய்கிறது. அப்படி இருந்து இந்த வருஷம் அந்த விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வரி நீக்கம் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என் தொகுதியில் உள்ள ஒரு குறைபாட்டைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். லால்குடி ஒன்றியத்தில் 3 ஏரி களும், புள்ளம்பாடி ஒன்றியத்தில் 10 ஏரிகளும் உள்ளன. இவைகளை சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறு பாசனத்திற்காக 2.75 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் முழுவதையும் என்னுடைய தொகுதிக்கு செல விட்டாலும் நிச்சயமாகப் போதாது காரணம், இதற்கு முன்னால் இருந்த என்னுடைய தொகுதியில் இருந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அந்தப் பகுதிக்கு ஏதாவது செய்தார்களா என்றால் உண்மையில் அப்படி ஒன்றையும் அவரால் செய்யமுடியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அருமை நண்பர் திரு. சண்முகம் அவர்கள் தொகுதியின் குறைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இருந்தார்கள், அவர் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்கிறார். இந்த மன்றத்தில் இருந்து அவர் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க

வாய்ப்பில்லாமல் இருக்கும் அன்பில் தர்மலிங்கம் பற்றி அவர் இழித்துப் பேசக்கூடாது என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரையும் குறிப்பிட்டுப் பெயரைச் சொல்லக்கூடாது.

திரு. துரை முருகன் : அன்பில் தர்மலிங்கம் செய்யவில்லை என்று சொல்கிறாரே அது அவைக்குறிப்பில் இருக்கலாமா? அப்படி எங்களுக்கும் பேச அனுமதி அளித்தால் பிரச்னை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதி கேட்டா திரு. துரை முருகன் பேசுகிறார் ?

திரு. கா. ந. சண்முகம் : எங்களுக்குக் கிடைத்து இருக்கும் வரப்பிரசாதமாக அன்று இருந்த வேளாண்மைத்துறை அமைச்சர் இல்லை. இந்த அரசு நிச்சயமாக அதைச் செய்யும் என்ற நம்பிக்கையில்தான் அதைத் தெரிவித்தேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் புள்ளம்பாடி ஒன்றியத்திலுள்ள கல்லகம் கிராமத்தில் வெகு நாட்களாக தடைபட்டு நிற்கும் ஆண்டிஓடைத் திட்டத்தை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் வாக்களிக்கவேண்டும் என்று கோரிய நேரத்தில் அங்குள்ள மக்கள் குறிப்பாக தாய்மார்கள் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். பின்னால், நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டு—புரட்சித் தலைவருடைய ஆட்சி வந்த பின்னால் இதை நிறைவேற்றித் தருவதாக நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கின்ற காரணத்தால் இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தாற்போல், பெரியகுருக்கை, சிறுகலூர் ஓடை பார் மேஷன் திட்டம் இதற்காக நிதியும் ஒதுக்கியிருக்கிறோம். இதனால் பல பகுதிகள் பயன் அடையும். ஆகவே இதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் நெய்க்குளம், பெருகலப்பூர் ஆகிய கிராமங்கள் மிகவும் பயன் அடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சந்திரமதி ஓடைத் திட்டம். அரிச்சந்திரனின் மனைவியின் பெயரால் இந்தத் திட்டம் அமைந்திருப்பதால் இதை விரைவாக முடித்தால் அங்குள்ள மக்கள் மிகவும் மனமடைவார்கள். ஆகவே இதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விராகாலூர் ஏரியில் உடைப்பு ஏற்பட்ட போது, அதற்காக ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து உடைப்பை சரிபடுத்தியிருக்கிறோம். இதற்கு செலவாகும் தொகையை கணக்கிட்டுப் பார்க்கும்போது, இந்த கரையை நல்லமுறையில் அகலப்படுத்தி, உயர்த்தினால் விராசலூர் பகுதி மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். நானும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் இங்கே போய் பார்த்த போது, உண்மையிலேயே மிகவும் கஷ்டமாக இருந்தது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, பெருவளை வாய்க்கால் சீரமைத்தலைப் பொறுத்த வரையில், இப்போது மிகவும் சீரழிந்த நிலையில் இருக்கிறது. இதன் கடைக்கோடியில் இருக்கும் சங்கேத்தி ஏரியை ஆழப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதன் மூலம் 2,000 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க முடியும். இதையும் நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆலங்குடி மஹாஜனம் ஏரியை ஆழப்படுத்த வேண்டும். பங்குனி வாய்க்கால் என்று ஒன்றிருக்கிறது. பெயர் தான் பங்குனி வாய்க்கால், இதன் மூலம் 20,000 ஏக்கா பாசன வசதி பெறுகின்ற நிலைமை இருக்கிறது. இதில் குமிழி கட்டிக் கொடுத்தால் உடனடியாக 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெற முடியும். இதையும் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஆலங்குடி மஹாஜனம் ஏரியையும் சீரமைத்து, பங்குனி வாய்க்காலின் குமிழியையும் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அன்பிலுக்கு அருகாமையில் உள்ள செங்கரையூர் வாய்க்காலை சீரமைத்துக் கொடுத்தால் 2,000 ஏக்கர்கள் பாசனவசதி பெற முடியும். இப்போது அந்த வாய்க்கால் மேடிட்டு கிடக்கிறது. இதை சீரமைப்பு செய்து, இங்கே தண்ணீர் வரும் என்று அங்குள்ள மக்கள் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதையும் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுமுடித்துக் கொள்கிறேன்.

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையில் அமைச்சர்களால் அறிவிக்கப் பெறவேண்டிய கொள்கைப் பிரச்சினைகளை அதிகாரிகள் நாளேடுகளுக்கு முன்கூட்டி அறிவிப்பது குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, 242ஆவது விதியின் கீழ் தங்களின் மேலான கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருகிறேன். இரண்டு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். நான்

ஏற்கனவே எழுப்பிய பிரச்சினைக்கு தாங்கள் தீர்ப்பு அளித்து விட்டீர்கள். அதற்கப்புறம் என்னால் பேச முடியாது. அதை தாங்கள் மறுபரிசீலனை செய்வதற்காக என்னுடைய கருத்தை விதி 242-ன் கீழ் தெரிவிக்கிறேன். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் மீது ஒரு பிரிவிலேஜ் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்குப்பின்னால் எனக்குப் பேசுவதற்கு அன்றையதினம் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்ப்பு அளித்துவிட்ட பிரச்னையைப்பற்றி இப்போது பேச வேண்டாம். புதிதாக ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: அதைத்தான் சொல்லுகிறேன். டைரக்டர் ஜெனரல் என்று ஏற்படுத்துவதாக இருக்கின்ற அரசின் திட்டத்தைத்தான் ஐ.ஜி. தெரிவித்தார் என்று அமைச்சர் அவர்கள் அன்றைக்கு சொன்னார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. எந்த ஒன்றும் பண்ணவில்லை. இதைக்குறித்து நிருபர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு, கார்னர் பண்ணி கேட்டு, இது அரசாங்கத்தினுடைய கொள்கையா என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி தகவல் எதுவும் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒரு அதிகாரியே அரசாங்கத்தின் பாலிசி இல்லாமல் இருக்கும்போது, அதைச் சொல்வது சரியல்ல. ஆகவேதான் நான் அவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருந்தேன். அதிகாரிகள் இப்படியெல்லாம் நடந்து கொண்டால் தாங்கள் தான் இதற்கு முடிவு கூற வேண்டும்.

[முற்பகல் 11-40]

மாண்புமிகு பேரவைத் தலைவர். கனம் உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார்கள். நான் கொடுத்த தீர்ப்பினை மதிப்பதாகவும், ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி ஐ.ஜி. அவர்கள் இன்றைக்குகூட அது பத்திரிகையிலே வந்திருக்கிறது என்றும், இந்த அவை நடக்கின்றபோது அமைச்சர் அவர்களாலே சொல்லப்பட வேண்டிய கொள்கை பிரச்னைகளை அதிகாரிகள் வெளியிலே சொல்லலாமா என்று ஒழுங்குப் பிரச்னை கிளப்பியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே பல முறை தீர்ப்புகளும், அறிவுரைகளும் தந்திருக்கிறேன். அமைச்சர்கள் ஆனாலும் சரி, மற்ற அதிகாரிகள் ஆனாலும் சரி, பேரவை நடந்து கொண்டிருக்கின்ற போது, கொள்கைப் பிரச்னை அல்லது கருத்துக்கள் சொல்லவேண்டுமானால், இந்த அவையிலேதான் சொல்லவேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன்

அதேபோன்று இப்போது இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருப்பதைப் பற்றி சுப்பு அவர்கள் கொண்டு வந்திருக்கின்றபோது,

நான் சொல்கிறேன். எந்த அதிகாரியும் ஒரு பேரவை நடந்து கொண்டிருக்கின்றபோது எந்தப் புதிய கொள்கைப் பிரச்னையையும், நடைமுறைப் பிரச்னையையும் சொல்லுகிறபோது, இந்த அவையில் அமைச்சர் மூலமாகச் சொல்லவேண்டும் என்பது மரபு. ஆகவே, கப்பு அவர்களின் யோசனையை ஏற்றுக் கொள்வதோடு, மேற்கொண்டு இம்மாதிரி அல்லாமல், பேரவை நடக்கின்றபோது இப்படிப்பட்ட கொள்கைப் பிரச்னைகளை, நடைமுறைப் பிரச்னைகளை வெளியிலே சொல்லாமல் இருப்பது நல்லது என்று என் தீர்ப்பாக அளிக்கிறேன்.

8 வரவு-செலவுத் திட்டம் 1979-80
வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தில் வேளாண்மை-பாசனம் ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பினை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக முக்கியமான இரண்டு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலே அவர்கள் பெருமைப்பட வேண்டும். தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு செய்ய வேண்டிய தலையாய கடமைகளில் ஒன்றாக உணவு அளிப்பதை மேற்கொண்டிருக்கிறது. பசியையும், பிணியையும் அகற்றுவதற்கு உணவு அளிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்திலே, அதைப் பற்றி மிகச் சிறப்பாக இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், இந்த உணவுக்கு முக்கியமாக இருப்பது நிலமும், நீரும்தான். அந்த நிலத்தையும் நீரையும் கொண்டு உற்பத்தி செய்பவன் உழவன்தான். எனவே, உழவன்தான் இந்த நாட்டிலே சிறந்தவன் என்ற கருத்தை நம்முடைய தமிழகம் உணர்ந்திருக்கின்ற ஒரு உண்மையாகும். அந்த நிலையிலே தான் இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கின்ற இந்த உயர்ந்த குறிக்கோளை மனதிலே வைத்து, இந்த ஆண்டு 88.73 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்வதென்றும், 36.45 லட்சம் டன் பணப்பயிர் விளைவிப்பதென்றும், 4.4 லட்சம் டன் பருத்தி உற்பத்தி செய்வது என்ற குறிக்கோளை அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு நாட்டிலே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆனால், இதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? எப்படி இந்தக் குறிக்கோளை அடையப்போகிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், அதற்கு சில வழிமுறைகளை அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கத்திலே அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் சாகுபடியை சிறந்த முறையிலே மேற்கொள்வதற்காக, பொறுக்கு விதைகள் அளிப்பது, அவர்களுக்கு வேண்டிய உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை மானியமாகவும், விலை குறைத்தும் வழங்குவது ஆகிய இவற்றோடு, நீர்ப்பாசன வசதியும் அளிப்பது. அதே போல் மண்

1979 மார்ச் 31] [புலவர் கா. கோவிந்தன்]

வளத்தை ஆராய்ந்து ஏற்ற பயிர்களை விளைவிக்கச் செய்வது என்ற வகைகளிலே, இந்தக் குறிக்கோள்களை அடைய முடியும் என்று அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது போதுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் முன்பே சொல்லியது போல், நிலமும், நீரும், இன்னும் இப்படிப்பட்ட உப கருவிகள் எல்லாம் இருந்தாலும், அவைகளை எல்லாம் ஒன்றுபடுத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயி தன் மனதிலே அப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு உழைத்தால் ஒழிய இத்தகைய காரியங்கள் நடைபெறாது. அப்படி உழவர்கள் காரியங்கள் செய்யவில்லை என்று சொன்னால் குறிக்கோளை அடைய முடியாது. குறிக்கோளை அடைய முடியாது என்று சொன்னால், நாட்டு மக்களுக்கு பசியைப் போக்குகின்ற அந்தப் பணியை இந்த அரசு ஏற்படுத்த முடியாது. ஆகவே, இந்த அமைச்சர் அவை, விவாதத்தை மேற்கொள்கின்ற நேரத்திலே, இன்றைக்கு நம்முடைய விவசாயிகளுடைய நிலைமை என்ன என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியது தலையாய கடமையாகும்.

அவனை எல்லோரும் புகழ்ந்து பாராட்டுகிறோம். வள்ளுவரும் கூட புகழ்ந்து பாராட்டுகிறார். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி', 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்', 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்றெல்லாம் புகழ்ந்து கூறியிருக்கின்றார். நீங்களும் பாராட்டியிருக்கிறீர்கள். பாராட்டிவிட்டால் போதுமா? பாராட்டுவதோடு நிற்கக்கூடாது. அவனுடைய வயிற்றை வாழவைக்கக்கூடிய நிலையில், நாட்டு மக்களை வாழ்விக்க அவனுடைய வாழ்வு வளம் பெறக்கூடிய நிலையில் அவனுடைய கோரிக்கைகளை எண்ணிப்பார்த்து நிறைவேற்றுவதைத் தலையாய கடமையாக மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வேளாண்மைத் துறையில் நம்முடைய குறிக்கோளை அடைய முடியும்.

இந்த மன்றத்தில் பல மானியக் கோரிக்கைகள் வந்தன. அவற்றைப் பார்க்கின்ற போது சில துறைகளிலே செலவிடுவது குறைவாகவும், அந்தத் துறை மூலம் வரும் வருவாய் அதிகமாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் விற்பனை வரித் துறைக்கு செலவுக்காகக் கோரப்பட்டிருக்கும் மானியத் தொகை ரூ. 5.88 கோடி. ஆனால், அந்த விற்பனை வரித் துறை மூலமாக அரசுக்குக் கிடைக்கும் வருவாய் 291.20 கோடி ரூபாய். அதுபோலவே வண்டி வாகனத்துறைக்குக் கோரப்பட்டிருக்கும் மானியத் தொகை 1.55 கோடி ரூபாய். அந்தத் துறை மூலம் அரசுக்கு வரும் வருவாய் 56.95 கோடி ரூபாய். முத்திரைத்தாள் பத்திரப் பதிவுக்குச்

செலவிடுகிற பணம் 3.26 கோடி ரூபாய்; வருவாய் 32.20 கோடி ரூபாய். ஆக சில துறைகளில் வருவாயை எதிர்பார்க்கிறோம். சில துறைகளில் வருவாயை எதிர்பார்ப்பதில்லை.

உதாரணத்திற்குக் கல்வி மானியத்தை எடுத்துக் கொண்டால் அந்தத் துறைக்கு 208.53 கோடி ரூபாயைச் செலவிடுகிறோம். ஆனால், அந்தத் துறை மூலம் அரசுக்கு வருகிற வருவாய் 6.50 கோடி ரூபாய்தான். மருத்துவத்திற்கு 68.40 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ஆனால், வருவாய் 5.05 கோடி ரூபாய்தான். சாலைகளும் பாலங்களும் என்ற துறைக்குச் செலவிடுகிற தொகை 45.02 கோடி ரூபாய்; ஆனால், வருவாய் 1.55 கோடி ரூபாய்தான். அதுபோலவே பாசனத் துறைக்கு எவ்வளவு செலவிடுகிறோம் என்று பார்க்க வேண்டும். இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கும் சேர்ந்து 54.02 கோடி ரூபாய் செலவிடுகிறோம். ஆனால், அந்தத் துறை மூலம், தண்ணீர்த் தீர்வை மூலம் வருவாய் 7.16 கோடி ரூபாய்தான். 54 கோடி ரூபாய் செலவிடுகிற அந்தத் துறை மூலம் எதிர்பார்ப்பது 7.16 கோடி ரூபாய்தான். இந்த வரி கூட குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் முதல்தரமான தண்ணீர்த் தீர்வை 10 ரூபாயாக இருந்தது 12 ரூபாயாகவும், இரண்டாந்தரம் 10 ரூபாயும் விதிக்கப்பட்டது. அதனை இந்த 12 ரூபாயை 10 ரூபாயாகவும், 10 ரூபாயை 8 ரூபாயாகவும் குறைத்திருக்கிறது. அப்படிக் குறைத்திருப்பதற்குக் காரணம் இது சமுதாயப்பணி. எப்படி கல்விக்கும், மருத்துவத்திற்கும், சாலைகளுக்கும் செலவிடுகிற பணம் சமுதாயப் பணி என்கிற காரணத்தால் அதிலிருந்து வருவாயை எதிர்பார்க்கக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு செலவிடப்படுகிறதோ அதைப்போலவே பாசனத் துறையிலும் 54 கோடி ரூபாயைச் செலவிட முன்வந்திருக்கிறது. அதிலிருந்து வருகிற 7.16 கோடி ரூபாயைக் கூடக் குறைக்க வேண்டுமென்ற நினைப்பு வந்திருக்கிறது. இந்த நினைப்பு வரவேற்கக்கூடிய நினைப்பு. இந்த நோக்கம் இன்னொரு துறைக்கும் செல்ல வேண்டுமென்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அணைகளின் மூலமாக வருகிற தண்ணீரை வைத்து விவசாயம் செய்வதுபோல் கிணற்றை வெட்டி மோட்டார் பம்ப் வைத்து விவசாயி விவசாயம் செய்கிறான். அப்படிப்பட்ட நிலையில் கிணற்றை வெட்டி, மோட்டாரை வைத்து அதன் மூலம் பாசனம் செய்கிற அந்த விவசாயியின் மீதும் இந்தக் கண்ணோட்டம் செல்ல வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் என்ன நிலைமை என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

[முற்பகல் 11—50]

1976—77 ஆம் ஆண்டு மின்வாரிய நிர்வாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது.

1979 மார்ச் 31] [புலவர். கா. கோவிந்தன்]

இந்த அறிக்கையிலே ஆண்டு மொத்தச் செலவு 162.75 கோடி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மொத்த மின்சாரத்திலே வேளாண்மைக்காக பயன்படுத்துகிற மின்சாரம் 26 சதவீதம்தான். அப்படிப் பயன்படுத்துகிற மின்சாரத்திற்காக பெறப்படுகிற கட்டணத்தின் மூலமாக 35.40 கோடி ரூபாய் வருகிறது என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். மின்சாரத் துறை வேளாண்மைக்காகக் கொடுக்கிற மொத்த மின்சாரத்தின் அளவு 26 சதவீதம். அந்த 26 சதவீத மின்சாரத்திற்காக வேளாண் பெருங்குடி மக்கள் 35.40 கோடி ரூபாய் கட்டணமாகக் கட்டியிருக்கிறார்கள். வேளாண்மைக்குப் பயன்படுத்துகிற 26 சதவீத மின்சாரத்திற்கு மின்வாரியம் ஏற்கின்ற தொகை 42.31 கோடி ரூபாய். ஆனால், அந்த வகையிலே அது பெறுகிற தொகை 35.40 கோடியாகும். 54 கோடி ரூபாய் செலவழித்து 7.16 கோடி ரூபாயை பாசனத் துறையிலே எதிர்பார்க்கிற அரசு, அதே வேளாண்மைக்குப் பயன்படுத்துகிறபோது 45 கோடி ரூபாயை செலவழித்துவிட்டோம், எங்களுக்கு 35 கோடி ரூபாயைத் தாருங்கள் என்று கேட்பது முறைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நாட்குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறபடி பார்த்தால், ஆற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் ஆகிய இரண்டு பாசனங்களுடைய பரப்பு 1,476 ஹெக்டேர் அதாவது 36 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர். கிணற்றுப் பாசனம் மூலம் 865 ஹெக்டேர் அதாவது 20,48,575 ஏக்கர் நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலைக் குறிப்புபக்கம் 69 இல் தண்ணீர் தீர்வை மூலம் வரவு 7.16 கோடி எனக் கூறுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் கொடுத்துள்ள 1977–78 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்கு ஐந்தொகை என்ற நூலின் 21–வது பக்கத்தில் விவசாயத் துறை மூலம் மின்சாரக் கட்டணம் வரவு 35.95 கோடி எனக் கூறப்பட்டுள்ளது. 3 லட்சத்து 47 ஆயிரம் ஏக்கருக்கு 7.16 கோடி என்றால் ஒரு ஏக்கருக்கு தண்ணீர்த் தீர்வை 20 ரூபாய் ஆகிறது. 20 லட்சத்து 48 ஆயிரத்து 575 ஏக்கருக்கு 35.95 கோடி ரூபாய் என்றால் ஒரு ஏக்கருக்கு மின்சாரக் கட்டணம் 175 ரூபாய் ஆகிறது. மின்சாரக் கட்டணம் என்பது தண்ணீருக்காகச் செலவிடப்படுவதே. ஆற்றுக் கால்வாய், குளம் ஆகிய பாசனப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு தண்ணீருக்காகச் செலவிடப்படுவது 20 ரூபாய் என்றால், கிணற்றுப் பாசனப் பகுதியில் ஒரு ஏக்கருக்குத் தண்ணீருக்காகச் செலவிடப்படுவது 175 ரூபாய் என இருப்பது முறைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1976—77 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை பக்கம் 23 இல் தொழில் துறை பயன்படுத்திய மின்சாரம் 3051 மில்லியன் யூனிட் என்றும் வேளாண்மைத் துறை பயன்படுத்திய மின்சாரம் 1692 மில்லியன் யூனிட் என்றும் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977—78 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்கு ஐந்தொகை என்ற நூலில் பக்கம் 21 இல் 1977 இல் தொழில் துறை மூலம் வரவு ரூ. 54,28,90,762 என்றும், வேளாண்மைத் துறை மூலம் வரவு ரூ. 35,39,73,413 என்றும் கூறப்பட்டுள்ளது. வேளாண்மைக் காகப் பயன்படுத்தியது 1692 மில்லியன் யூனிட் செலுத்திய கட்டணம் 35,39,73,413 ரூபாய்; அப்படி என்றால் ஒரு யூனிட்டுக்கு 21 காசு. மீட்டர் வாடகை இதில் சேரவில்லை. இப்படி தொழில் துறைக்கு 18 பைசா என்றும் விவசாயத் துறைக்கு 21 காசு என்றும் வசூலிப்பது நியாயம் தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் முன்பே இந்த மன்றத்திலே ஒரு முறை கூறி இருக்கிறேன் சிறு விவசாயிகளுக்கு 12 காசுகள்தான் என்று சொல்கிறார்கள். அது தவறான கணக்கு என்று சொன்னேன். ஒரு விவசாயி 41 யூனிட்டுக்கு 12 காசு வீதம் ரூ. 4.72 கட்ட வேண்டுமென்று போட்டுவிட்டார்கள். ஆனால் மீட்டர் வாடகை சேர்க்கப்பட வில்லை, மற்ற கட்டணங்கள் என்ற முறையிலே 4 ரூபாய் என்றும் 5 ரூபாய் என்றும் போட்டு மொத்தம் ஒரு யூனிட்டுக்கு 34 காசு போட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு யூனிட்டுக்கு 12 காசு என்று போட்டாலும் கூலி 34 காசுகள் வசூலிப்பது முறைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் இதிலே நம்முடைய அரசு புதிய கண்ணோட் டத்தை, புரட்சிகரமான கண்ணோட்டத்தைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். என்ன செய்ய வேண்டும். நம்முடைய பாசனத் துறையை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்ச ரவர்கள் எப்படி பாசனத் துறை மூலம் அதிகமாகச் செலவிட்டா லும்கூட, 7.16 கோடி ரூபாய்தான் வருவாய் என்று இருந்தா லும் கூட, இதுவொரு சமூகப் பணி என்ற முறையிலே விவ சாயிகளிடத்திலேயிருந்து செலவு அளவிற்கு வருமானத்தை எதிர் பார்க்க வேண்டாமென்று நினைக்கிறார்களோ அதைப்போல, மின்சாரத் துறை மூலம் அவர்களுக்கு மின்சாரம் அளிக்கின்ற காரணத்தால் நாம் செலவிடுவது அதிகமாக இருந்தாலும், அவர் களிடத்திலேயிருந்து நாம் செலவிடும் அளவிற்குக் கட்டணத்தை

எதிர் பார்க்க வேண்டுமென்று நினைக்கின்ற நினைப்பையும் மாற்றிக்கொள்ளவேண்டும். இது ஒரு சமுதாயப்பணி. உணவுஉற்பத்தி செய்து கொடுப்பதற்காகத்தான் இந்த மின்சாரம் பயன்படுகிறது என்ற முறையிலே அதைக் கருத வேண்டும். இப்பொழுது ஏக்கருக்கு இவ்வளவு தீர்வை என்று விதிப்பதைபோல கிணற்றின் மூலம் மின்சார மோட்டாரை வைத்துப் பயிர் செய்யும் விவசாய நிலத்திலே ஒரு போகத்திற்கு இவ்வளவு என்று அதிலும் பார்க்க வேண்டும். அணைக்கட்டு, கால்வாய் ஆகியவைகளின் மூலம் விவசாயம் செய்கின்றவர்கள் நிலைமை வேறு. ஆனால் கிணறுகள் வெட்டி, மின்சார மோட்டார்களை அமைத்துப் பயிர் செய்யும் அந்த அளவைப் பார்த்தால் கிட்டத்தட்ட 9 இலட்சம் மின்சார மோட்டார்கள் ஓடுகின்றன. மற்றபடி கிணறுகளில் ஆயில் என்சின்களை வைத்து பயிர் செய்யும் அளவில் கிட்டத்தட்ட 10 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். திரு. வெங்கிடு அவர்கள் பேசினார்கள் என்று கருதுகிறேன், கோவை மாவட்டத்தில் உள்ள கிணறுகளில் குனிந்து பார்த்தால் தலையிலே இருக்கின்ற தலைப்பாகை விழுந்துவிடும் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு நான் மதிப்பிடவில்லை என்றாலும், சராசரியாகப் பார்த்தால், கிணறு வெட்டி, கல் கட்டிடம் கட்டி, மின்சார மோட்டார் வைக்க அறை கட்டி, மின்சார மோட்டார் வைப்பதற்குக் கிட்டத்தட்ட குறைந்தது 20,000 ரூபாய் ஆகும். ஆக, பத்து இலட்சம் கிணறுகளுக்குக் கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் கோடி ரூபாயை மின்சாரம் மூலம் பயிர் செய்யும் விவசாயிகள் இந்த தொழிலுக்காக முதலீடு செய்திருக்கிறார்கள். இப்படி இரண்டாயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்திருக்கின்ற பொழுது, மேலும் மின்சாரக் கட்டணத்தை விதிப்பது முறைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் முன்பு சொன்னதைப்போல பாசனத்தின் மூலம் அதிகமாகச் செலவிட்டாலும், 7.16 கோடி ரூபாய் வந்தாலும் போதும் என்று இருப்பதைப்போல, இதுவும் உணவு உற்பத்திக்காக விவசாயிகள் செய்கின்ற முயற்சிதான் என்ற முறையில், அதிகமான கட்டணத்தை வாங்க வேண்டுமென்ற கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் உங்களுக்கும் இலாபம் உண்டு. மீட்டர் வைக்க வேண்டியதில்லை, கரண்ட் திருட்டு என்று வழக்கு போட வேண்டிய அவசியம் இல்லை, பில் போடுவதற்கு ஏராளமான ஆட்கள் வைக்க வேண்டியதில்லை. முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், மீட்டர் ரீடிங் எடுக்கக்கூடத் தெரியாதவர்கள் வேலையில் இருக்கிறார்கள், அவர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அதுகூட இலஞ்சம்தான் என்று சொன்னார்கள். இந்த முறையில் செய்தால் இந்த வேலையும் இல்லாமற் போய்விடும், பில் கலெக்டர் தேவையில்லை, தண்ணீர்த் தீர்வை வசூலிக்கின்றவர்களே இதையும் வசூலித்து விடலாம், கிராம அதிகாரியே வசூல் செய்து

விடுவார். ஆகவே, புரட்சிகரமான முதலமைச்சர் வீற்றிருக்கிறார் என்று சொல்லும் அரசு நான் சொல்லுகின்ற இந்த புரட்சிகரமான திட்டத்தைப்பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் எதற்காக இதைச் சொல்ல வேண்டுமென்றால், மிகப் பெரிய பிரச்னையாகிய உணவுப் பிரச்னையை நம்முடைய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு உணவு வழங்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். சில ஆண்டுகளுக்கு முன்னால் நாட்டிலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்தில் வெளி நாடுகளிலேயிருந்து அரிசியை வாங்கி நாம் நாட்டு மக்களுக்குக் கொடுத்த நேரத்தில் அரசுக்கு ஏற்பட்ட கடன் எவ்வளவு, அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஒரு கணக்கைக் கேட்டேன். செகரட்டேரியட்டில் சில அதிகாரிகளைக் கேட்டால் அதை உங்களுக்கு கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். தேடிப் பார்த்தபொழுது, 1973—74 ஆம் ஆண்டிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் செய்த வியாபாரம் என்ன? அந்த ஆண்டிலே 1973—74 ஆம் ஆண்டிலே 2·77 இலட்சம் டன் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வியாபாரம் செய்திருக்கிறது. அதற்கு எவ்வளது முதலீடு என்று பார்த்தால் 21 கோடி ரூபாய், நிர்வாகச் செலவு 58 இலட்சம் ரூபாய், இலாபம் 5 இலட்சம் ரூபாய். ஆக, 2.77 இலட்சம் டன் வியாபாரம் செய்வதற்காக இந்த அரசு 21 கோடி ரூபாய் முதலீடு செய்து 58 இலட்சம் ரூபாயை நிர்வாகச் செலவு செய்து 5 இலட்சம் ரூபாய் இலாபம் பெற்றிருக்கிறது என்ற கணக்கை வைத்துப் பார்த்தால் 88 கோடி இலட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வளவு பொருள்களையும் நாம் உற்பத்தி செய்தால்தான் நாட்டிலே உள்ள மக்களுக்குப் பசியில்லை என்று சொல்லுகின்ற நிலை உருவாகும். இவ்வளவையும் உழவன் உற்பத்தி செய்யாமல் விட்டுவிட்டு, இவ்வளவு பொருள்களையும் வெளிநாடுகளிலேயிருந்து வாங்கி விற்பது என்றால் என்னவாகும் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12—00]

இந்த மன்றத்திலே நம்முடைய ப. உ. ச. அவர்கள் இந்த அரசு அரியானாவிலே போய் நெல் வாங்கிய நிகழ்ச்சி பற்றி சொன்னார்கள். அதிலே நடந்த ஊழலைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அரியானாவிலேயிருந்து வாங்கிய கொஞ்ச நெல்லுக்கே அவ்வளவு பாடு படவேண்டியிருக்கிறது என்று சொன்னால், நாட்டு மக்களுக்கு வேண்டிய அவ்வளவு நெல்லையும்

வாங்க எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படும். எவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை எல்லாம் அவன் ஏற்றுக்கொண்டிருக்கிறான், உழவன் சுமந்து கொண்டிருக்கிறான். உழவன் சுமக்கிற அந்தச் சுமையை நீங்கள் கொஞ்சம் இறக்க வேண்டுமென சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மணியடிக்கப்பெற்றது) இன்னும் 1 மணி நேரமாவது கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'டிமாண்டில்' 1 மணி நேரம் ஒயின்ட் அப் பண்ணிப் பேசுகிறவர்களுக்குக் கொடுப்பதில்லை. 20 நிமிஷம் கொடுத்துள்ளேன். இன்னும் 5 நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

புலவர் கா. கோவிந்தன்: 20 நிமிஷம் என்றால் நான் உட்கார்ந்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11—45-க்கு ஆரம்பித்தீர்கள். மானியக்கோரிக்கையில் 1 மணி நேரம் என்று கேட்டால்.......

புலவர் கா. கோவிந்தன்: ஒயின்ட் அப் பண்ணி பேசுபவருக்கு எப்பொழுதும் 1 மணி நேரம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இன்னும் 5 நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

புலவர் கா. கோவிந்தன்: இருக்கின்ற நிலைமையிலே உழவனுடைய சுமையைக் குறைக்கவேண்டும். எப்படிக் குறைப்பது. அவனுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை; நாட்டிலே உள்ள எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும் உணர்ந்துள்ளார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள், நம்முடைய ஆளுநர் உரையிலே. மிகத் தெளிவாகச் சொன்னார்கள், முதல் பக்கத்திலே. 'தமிழக அரசு, நெல்லுக்கு அதன் உற்பத்திக்கு ஆகும் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நியாயமான அடிப்படை விலை நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இதுபற்றி பிரதமருக்கும், மத்திய வேளாண்மை துறை அமைச்சருக்கும் முதலமைச்சர் கடிதம் எழுதி அரசின் கோரிக்கையை வற்புறுத்தினார். இதன் விளைவாக முன்பு கொடுத்து வந்த குவிண்டால் ஒன்றுக்கு 78 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக

கட்டை ரக நெல்லுக்கு மத்திய அரசு அடிப்படை விலையை உயர்த்தியுள்ளது. இது விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்திக்குச் செலவிடும் தொகைக்குச் சமமாகக் கூட இல்லை. கோதுமையின் கொள்முதல் விலை சாகுபடி செலவை அனுசரித்து மத்திய அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தில், அதே அடிப்படையில் நெல்லின் கொள் முதல் விலையையும், நிர்ணயிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் நியாயமான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாதது வருந்தத்தக்கது, என்று நம்முடைய ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் நேற்றைக்கு முடிவு எடுத்ததைப் போல், புலவர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பார்த்தால், ஒரு மணி நேரம் வேண்டுமென்கிறார். அவர் பேசி, பிறகு 2 பேர் பேசி, அடுத்து பால் வள மானியத்தை எடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். நான், புலவர் 20, 25 நிமிடத்திலே முடிக்க வேண்டும் என்று சொல்கிறேன். முடியாது என்று சொல்கிற இதே புலவர், இந்தத் தலைவர் இருக்கையிலே உட்கார்ந்திருக்கும்போது, எப்படி என்னை உட்கார வைத்தார் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியும்.

புலவர் கா. கோவிந்தன் : வீணாக ஒரு நிமிடம் கூட எடுத்துக் கொள்ள மாட்டேன். (குறுக்கீடு.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலைஞர் சொன்ன மாதிரி 12—15-க்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

புலவர் கா. கோவிந்தன் : ஒயின்ட் அப் பண்ணிப் பேசுகிற நேரத்தில் தலைவர்கள் பேசினாலும் சரி, மற்ற உறுப்பினர்கள் பேசினாலும் 1 மணி நேரம் பேசியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர், இங்கே உறுப்பினராக உட்கார்ந்திருந்தபொழுது ஒயின்ட் அப் பண்ணிப் பேசவில்லை, பேசியிருந்தால் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 35 நிமிடம் அதிகம். தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும். அதற்குப் பிறகு, 2 பேர் பேசி, பாலவள மானியத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : இது மிக முக்கியமான பிரச்னை. நாட்டிலே முக்கியமான பிரச்னை, நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கும் பிரச்னை, கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆகவே, வேண்டிய நேரத்தை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 31 [புலவர் கா. கோவிந்தன்]

ஆளுநர் உரையில் மேலும் சொல்லியிருக்கிறார்கள். அரசு நியாயமான விலை தரவேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. உற்பத்தியாளருக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும் போது, நுகர்வோர்க்கும் நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக, கோதுமைக்கு இது வரை தரப்பட்டு வந்த அளவில், அரிசிக்கும் மானியம் தர மத்திய அரசு முன் வரவேண்டுமென்ற கருத்தை தமிழக அரசு தொடர்ந்து வலிறுயுத்தும்'' என்று, நேற்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது, அமைச்சர், கோதுமைக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 23.15 மானியமாக மத்திய அரசு தருகிறது; ஆனால், நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு வெறும் 4 காசு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது எப்படிப்பட்ட கேவலமான நிலை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று சொன்னார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்களுக்கும், திரு. இராமசாமி அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். ஒயின்டிங் அப் செய்து பேசுகிறேன் என்று சொல்கிறார். உங்களுக்கு வாய்ப்பு கிடைக்க நியாயம் இல்லை. நான் திரு. சாதிக் பாட்சா அவர்களிடத்தில் கேட்டேன், பரவாயில்லை அனுமதிக்கலாம் என்று சொன்னார். நானும், அப்படியே எண்ணி இருந்தேன். இப்போது புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுகிற வேகத்தைப் பார்த்தால், அவர் 12.15-க்கு முடிப்பாரா என்று தெரியவில்லை. மேலும், ஒயின்டிங் அப்புக்குப் பிறகு பேசுவதற்கு அனுமதிப்பது இல்லை. ஆகவே, மன்னிக்கவேண்டும்.

திரு. து. இராமசாமி : தலைவர் அவர்களே, அவருக்கு 1 மணி நேரம் பேச வாய்ப்பு அளிக்கிறீர்களா அல்லது குறைக்கிறீர்களா என்பது பிரச்னை அல்ல—அவர் எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாலும், எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரதான எதிர்க் கட்சி கடைசியில் ஒயின்டிங் அப் பண்ணி பேசுகிறேன் என்று சொல்லி விட்ட பிறகு உங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பது என்பது மரபு அல்ல. அவர் ஏற்கனவே பேரவைத் தலைவராக இருந்தவர். ஆகவே, அவர் 20—25 நிமிடங்களில் முடித்து விடுவார் என்று பார்த்தேன். 35 நிமிடம் கொடுக்கிறேன் என்றால் முடியாது ஒரு மணி நேரம் வேண்டும் என்று சொல்கிறார். ஆகவே, உங்கள் இருவருக்கும் வாய்ப்பு இல்லாமைக்கு நான் வருந்துகிறேன். மன்னிக்கவும் வேண்டுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவராக இருக்கும் நாங்களும், நானும், எதிர்க் கட்சித் தலைவர், மூக்கையாத் தேவர், கரியமாணிக்கம் அம்பலம், ராமசாமி, முத்தையா, சதாசிவம், சுவாமிதாஸ் ஆகியோர் இந்த மன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்து இருந்த நேரத்தில் விலைவாசியை எதிர்த்து இந்த சட்டமன்றத்தில் உண்ணாவிரதம் உட்கார்ந்து இருக்கிறோம். அப்போது, 'உண்ணாவிரதம் இருப்பது உடம்புக்கு நல்லது என்று போர்ட் எழுதி வைத்தார்கள்' ஆளும் கட்சியில் இருந்தவர்கள். இப்போது அமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள எல்லோரும் உண்ணாவிரதம் செய்து விட்டு டெல்லிக்குச் செல்வோம், தமிழ்நாடு எக்ஸ்பிரசில் நம்முடைய அமைச்சர் அவர்கள் டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய, 235 உறுப்பினர்களுக்கும் டிக்கெட் ரிசர்வேஷன் செய்யத் தயாரா, செய்வாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இங்கே விலையைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் கொடுத்ததைவிட அதிகமாகக் கொடுக்கிறோம் என்றுகூட சொன்னார்கள். கொடுத்தார்களா? அந்த விலைக்கு விவசாயிகளிடத்தில் இருந்து வாங்கினார்களா என்றால் இல்லை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது என்னசெய்தது? விவசாயி அறுவடை செய்து நெல்லை கொண்டு வருகிற நேரத்தில் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்தது. அதே நேரத்தில் அரிசி விலையும் உயரக் கூடாது என்று நியாய விலைக் கடைகளையும் ஆங்காங்கு திறந்தது. இன்றைக்கு அந்த முறையில் அரசு நடந்து கொண்டார்களா? இல்லை, என்ன செய்தார்கள். 89 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு, எவ்வளவு கொண்டு வந்தாலும் வாங்கத் தயார். 89-க்கு வாங்குகிறோம் என்று சொன்னால் வாங்குவதற்கு வழி செய்தார்களா? அவர்களுக்கு விவசாயக் கடன் அளிக்கும் அத்தகைய நிலை ஏற்பட்டதா? விவசாயி உற்பத்தி செய்கிற நேரத்தில் விலை குறைகிறது. அந்த நேரத்தில் நெல்லை என்னிடத்தில் வைத்து கடன் வாங்கி, நல்ல விலை வருகிற நேரத்தில் விற்கலாம் என்று சொல்லலாம். விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுக்கின்றன என்று சொன்னாலும், 75 சதவீதம்தான் கொடுக்கிறார்கள். அப்படியானால் 100 ரூபாய் வேண்டும் என்றால் இரண்டு மூட்டை வைக்க வேண்டும். அப்படிக் கொடுத்தாலும் மூட்டைக்கு 10 பைசா கொடுக்க வேண்டும், இரண்டு மூட்டைக்கு 20 பைசா, வட்டி 18 சதவீதம், இன்சூரன்ஸ் 4 பைசா, ஆக 42 பைசா ஒரு விவசாயி ரூ. 100 கடன் பெற்றால் கொடுக்க வேண்டும். இது எப்படிஇருக்கிறது என்றால் வட்டிக்கு அட்டிகை வாங்கி, வட்டியை அடைக்க அட்டிகை விற்றதுபோல் இருக்கிறது.

[1979 மார்ச் 31 [புலவர் கா. கோவிந்தன்]

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் என்ன நடை பெறுகிறது என்றால் அங்கே கொண்டு செல்லும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு மட்டும் கமிஷன் வாங்கினால் நியாயம். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு வராமல் மண்டிகளில் விற்கப்படும் பொருள்களுக்கும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கமிஷன் வசூலிப்பது என்ன நியாயம் என பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தி பற்றி சொன்னார்கள். பருத்தி வாங்குவதற்கு காட்டன் கார்ப்பரேஷன் அமைத்து இருக்கிறார்கள். அவர்கள் வாங்குவது இல்லை. அவர்கள் வாங்காமல் இருப்பதற்குக் காரணம் தருமபுரி மாவட்டத்தில் 5 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பஞ்சு தேங்கியிருக்கிறது. வாங்குவோர் இல்லை. பாதி விலைகூட இல்லை. மஞ்சள் போட்டு கோவை விவ சாயிகள் பெரும் பணக்காரர்கள் ஆகி விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தற்போது நிலைமை என்ன என் றால் மஞ்சள் வியாபாரிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். நானே போட்டு ஏமாந்தேன். சென்ற ஆண்டு விற்றது ரூ. 1,200 முதல் 1,500 வரை. இந்த ஆண்டு 450 ரூபாய்தான் விற்கிறது. அமைச்சர் சிரிக்கிறார், இதை உண்மை என்று ஒப்புக் கொள்கிறார் என்று நினைக்கிறேன்.

[பிற்பகல் 12-10]

கரும்பைப் பற்றி இங்கே ஒரு கேள்வி கேட்டார் ஆறுமுகம். ரூ. 112 என்று சொன்னீர்கள், ஆனால் ரூ. 85 தானே கொடுக் கிறார்கள். அவர் கேட்டதற்குப் பிறகு நானும் ஒரு துணை வினா கேட்டேன்.

நான் கேட்டேன்—நீங்கள் கேட்கின்ற கேள்வியையும் அதற்கு அளிக்கின்ற விடையையும் பார்த்தால் இனி கரும்பு பயிரிட மாட்டார்கள். அது கரும்பு பயிரிடுவோருக்கு பாதுகாப்பு அளிக்காது. விளக்கம் திருப்திகரமாக இல்லை. இப்படிப்பட்ட நிலையில் விவசாயி கடனாளியாக இருக்கிறான்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அவர் பெருமையாகச் சொல்லலாம். 'கம்பெனியம் ஆன் கோவாபர்ரட்டிவ் மூமெண்ட்' என்ற புத்தகத்தில் ஒரு கணக்கை சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கணக்கை இங்கே சொல் கிறேன்.

கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கம் 1968-69-ல் 31.93 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு 39.25 கோடி கடன் வழங்கியுள்ளது. அதாவது தனி நபருக்கு 123 ரூபாய் வீதம் வழங்கியுள்ளது. அந்த ஆண்டு தவணை கடந்த பாக்கி 25.9 சதவிகிதமாக இருந்தது.

1977-78-ல் 47.58 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு 120.69 கோடி கடன் வழங்கியுள்ளது. அதாவது தனி நபருக்கு 253 ரூபாய் வீதம் கடன் வழங்கியுள்ளது. அந்த ஆண்டு தவணை கடந்த பாக்கி 32.9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதை இந்த புத்தகத்திலே பக்கம் 2-3-ல் காணலாம். இது பெருமைதானா ?

நாங்கள் இவ்வளவு உறுப்பினர்களைச் சேர்த்தோம்; இவ்வளவு கடனைக் கொடுத்தோம் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் பெருமைப் பட்டுக் கொள்ளலாம். ஆனால் வேளாண்மைத் துறை அமைச்சர் பெருமைப் பட முடியுமா ? கடன் வாங்குகிறவர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது; கடன் தொகை உயர்ந்திருக்கிறது— கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் குறைந்து தவணை கடந்த பாக்கி அளவு உயர்ந்திருக்கிறது. கடன் தொகை 123 ரூபாயிலிருந்து 253 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் குறைந்து விட்டது. ஆனால் கடன் தேவை அதிகமாக இருக்கிறது. இது வேளாண்மைக் கூட்டுறவுத் துறையில் வழங்கப் பட்ட குறுகிய கால கடனைப் பற்றியது.

அடுத்தபடியாக இருப்பது நிலவள வங்கிக் கடன். 1968-69 5.17 லட்சம் உறுப்பினர்கள்; 1977-78-ல் அந்த எண்ணிக்கை 13.94 லட்சமாக உயர்ந்து விட்டது. தவணைக் கடந்த பாக்கி 1968-69-ல் 26 லட்சமாக இருந்தது - அதாவது 12 சதவீதமாக இருந்தது. 1977-78-ல் 32 கோடியே 38 லட்சமாக அதாவது 67 சதவீதமாக உயர்ந்து விட்டது. மொத்தக்கடன் 1968-69 ல் 42 கோடியே 35 லட்சமாக இருந்தது, 1977-78-ல் 140 கோடியே 40 லட்சமாக உயர்ந்து விட்டது. மொத்தமாகப் பார்த்தால் தமிழக விவசாயிகள் இன்னும் 347 கோடி ரூபாய்க்கு கடனாளியாக இருக்கிறார்கள். இதுதான் தமிழ் நாட்டு விவசாயிகளின் நிலைமை.

இந்து பத்திரிக்கையில் 27-2-1979 அன்று பார்லிமெண்டில் நடை பெற்ற ஒரு சம்பவம் வந்திருக்கிறது. பெரிய, பெரிய வியாபாரிகளின் பொருளாதாரம் தான் கடந்த 10 ஆண்டுகளில் பல மடங்கு பெருகியிருக்கிறது என்று பூபேஷ்குப்தா சொன்னதை மாண்புமிகு சட்ட அமைச்சர் சாந்தி பூஷன் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சாந்திபூஷன் விளக்கம் சொல்லும் போது பூபேஷ் குப்தா சொல்கிறார். டாட்டாவின் முதலீடு 1966-ல் 505 கோடி ; 1977-ல் 980 கோடி. பிர்லாவின் முதலீடு 1966-ல் 485 கோடி ; 1977-ல் 970 கோடி. ஆக இந்த 10 ஆண்டுகளில் இவர்களுடைய மூலதனம் பல மடங்கு கூடியிருக்கிறது

1979 மார்ச் 31] [புலவர் கா. கோவிந்தன்]

பெரிய, பெரிய முதலாளிகளின் முதலீடு 10 ஆண்டுகளில் பல மடங்கு கூடியிருக்கிறது. ஆனால், விவசாயிகள் 350 கோடி, 400 கோடி ரூபாய்க்கு கடனாளியாக இருக்கிறார்கள். இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆகவேதான் இந்த நிலைமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது விவசாயிகளின் பிரச்சனைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட காரணங்களால் வரி கொடா இயக்கம் செய்கிறார்கள் என்பதைச் சொல்ல தேவையில்லை. இந்த ஆட்சியில் கடனை ரத்து செய்யும் நடவடிக்கை ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. கடன் நிவாரணச் சட்டத்தை இராஜாஜி காலத்திலேயே கொண்டு வந்தார்கள். இந்த அரசும் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் நெசவாளர்களுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் கடன் கொடுத்தோம். அவர்களால் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னபோது ஒரு கோடி ரூபாய் கடனை ரத்து செய்தோம். இப்போதும் அதைப்போல விவசாயிகள், நெசவாளர்கள் வாங்கிய கடனை திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள் கட்டக் கூடாது என்று அல்ல, கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அந்த சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி கட்ட முடியாத நிலையிருக்கும் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். ரத்து செய்ய முன்வராததால், எந்தவிதமான நிவாரணமும் கிடைக்காததால் இன்றைக்கு வரி கொடா இயக்கம் நடத்துகிறார்கள். ஆகவே, இதை சீர் தூக்கிப் பார்த்து, மின்சாரத்தில் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் இந்த அளவுக்கு வசூலித்தால் போதும் என்று சொல்லி சலுகை அளித்திருப்பதைப் போல இந்த விவசாயக் கடனிலும் இவ்வளவு கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறதே என்று பார்க்காமல் கடன் உதவி அளிக்க வேண்டும்.

நெல்லுக்கும் மற்ற பொருட்களுக்கும் நியாயமான விலை கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அத்தோடு அவர்களால் கொடுக்க முடியாத காரணத்தால் அவர்களது கடன் சுமைகளைக் குறைக்க வேண்டும்.

இங்கே நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். அதாவது பெரிய விவசாயிகளின் எல்லாக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டிய தேவை இல்லை என்றும் சிறிய விவசாயிகளுடைய கடன்களை மட்டும் ரத்து செய

யுங்கள் போதும் என்றும் பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரை யில் வட்டியினை ரத்து செய்கின்ற முறையினை எண்ணிப் பார்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டம் என்று ஒன்று வந்தது. அதாவது நகைகளை அடகு வைத்திருந்தால் பணம் கொடுக்காமல் அவைகளை திருப்பிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இந்த முறை கூட்டுறவுத் துறைக் கடன்களுக் குப் பொருந்தாது. ஆகவே விவசாயிகள் தங்களது கடன் தீர்க்கப் படுவதற்குரிய முயற்சிகள் செய்யப்படாத காரணத்தாலேதான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. நகைகளின் பேரில் வாங்கப்பட்ட 100 ரூபாய் 200 ரூபாய் போன்ற கடன்களை ரத்து செய்கின்ற போது விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் கடன்களைத் திரும்பக் கொடு என்று சொல்வது நியாயம் இல்லை. அவர்களால் அந்தக் கடன்களைக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடன்களை ரத்து செய்ய வழி செய்ய வேண்டும்.

அடுத்து மின்சாரக் கட்டணம் குறித்து எல்லாக் கட்சித் தலை வர்களுடனும் முதலமைச்சர் பேச்சு நடத்தினார். அப்போது பல யோசனைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. ஆனால் அங்கே முடிவு செய்ததற்கு நேர் மாறான அறிவிப்பைச் செய்தார். அத னால், விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதன் பிறகு மின் துண்டிப்பும் செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக 3 ஆம் தேதி வரைக்கும் கெடு கூட விதிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்ட ணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் இந்த அரசு விவசாயி களைப் பழிவாங்குகிறதோ என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

மத்திய மின்சாரத்துறை அமைச்சர் இங்கே வந்து மின்சாரத் தட்டுப்பாடு இருக்காது என்று சொல்லிவிட்டுச் சென்றார். அதன் பிறகு நமது மாண்புமிகு அமைச்சரவர்களும் மின்சாரத்தட்டுப் பாடு இருக்காது என்று சொன்னார். ஆனால் உண்மை நிலையைப் பார்த்தால் 25 பெர்சன்ட், 15 பெர்சன்ட், 30 பெர்சன்ட் என்று விவசாயிகளுக்கு மின்சார வெட்டு செய்யப்படுகிறது. மின்சாரம் இல்லை என்றால் நிலம் காய்த்துவிடும். காய்ந்து வெடித்துவிடும். அதன் பிறகு எவ்வளவுதான் கிணற்று நீரை இறைத்து இறைத்து ஊற்றினாலும் போதாத நிலை ஏற்படும், ஆகவே, விவசாயி களுக்கு போதிய அளவு மின்சாரம் கொடுக்க வேண்டும். மின் சாரம் கொடுக்காதது குறித்து அந்த விவசாயிகளை அரசு பழி வாங்குவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அந்த நினைவு அவர் களுக்கு வரக்கூடாது. உரிய வழியில் வரவேண்டிய மின்சாரம், அவர்களுடைய வயிற்றிலே பாய்ந்திருக்கிறது. ஆகவே, மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மின் துண்டிப்பு செய்தால் விவசாயம் பாதிக்கப்படும், விவசாயம்

பாதிக்கப்பட்டால் உற்பத்தி பாதிக்கப்படும். அவ்வாறு உற்பத்தி பாதிக்கப்பட்டால் மக்களுக்கு உணவுப் பொருள் ஒழுங்காக விநியோகம் செய்ய முடியாது. ஆகவே மின்சாரம் போதிய அளவில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு பாசனத்துறை குறித்து பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தாலே என்னுடைய உரையினை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம், பாசனம் ஆகிய இரு துறைகளின் மீதும் கடந்த மூன்று நாட்களாக 21 உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய மேலான அவசியமான கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். 21 உறுப்பினர்கள் பேசினாலும் முக்கியமாக யாருமே வேளாண்மைத் துறையைப் பற்றியும், பாசனத்துறையைப் பற்றியும் அதிகமான குற்றச்சாட்டுக்களைச் சொல்லவில்லை. அதற்கு மாறாக விவசாயத்தை இன்னும் எப்படி அபிவிருத்தி செய்வது என்கின்ற கருத்துக்களையும், பாசனத்துறையின் மூலமாக இன்னும் பல்வேறு குளங்களையும், அணைகளையும் எப்படிக் கட்டலாம் என்கிற கருத்துக்களையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே நான் அவர்களுக்கு முதன் முதலாக கூறிக் கொள்வது உங்களுடைய மேலான யோசனைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு இந்தத் துறையின் மூலமாக கண்டிப்பாக நாங்கள் பணியாற்றுவோம் என்பதே.

மேலும், விவசாயத் துறையும் பாசனத் துறையும் ஒன்றாக்கிய முதல் நிதிநிலை அறிக்கையிலே, அதுவும் குறிப்பாக இன்று பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை இங்கே அளித்துள்ளார்கள். கடந்த 30 ஆண்டு காலமாக இதுபோன்ற ஒரு நிலை இல்லாவிட்டாலும், இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவரின் ஆட்சியிலே பாசனத் துறையையும், விவசாயத் துறையையும் ஒன்றாக்கி அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மையைச் செய்திட வேண்டுமென்ற எண்ணத்தோடு இப்படி இரு துறைகளையும் ஒன்றாக்கி ஒரே அமைச்சரின் பொறுப்பிலே கொடுத்திருக்கிறார்கள்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்"

என்கிற அவ்வைப் பாட்டியின் முதுமொழிக்கிணங்க புரட்சித் தலைவரவர்கள் "நீரின்றி அமையாது உலகு" என்ற கருத்தோடு பாசனத்துறையையும், விவசாயத் துறையோடு சேர்த்துக

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 31

கொடுத்து, அதன் மூலமாக கடந்த காலத்தில் இல்லாத இப்புதிய பொறுப்பு 1978 மே மாதத்திலே இன்றிருக்கும் அமைச்சரின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12—20]

உழவர்களுக்குத் தேவையான அளவில் தேவையான காலத்தில் தண்ணீர் திறந்து விடக்கூடிய சூழ்நிலையில் நாம் இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல் வேளாண்மைத் துறையும், நீர்ப்பாசனத்துறையும் 'ஆன் பார்ம் டிவெலப்மென்ட்' என்று தனித் தனியாக வயலுக்கான பாசன அமைப்புகளை உருவாக்கி பாசன நீரை சிக்கனப் படுத்தும் நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறோம். இன்றும் கூட பல உறுப்பினர்கள் மேற்கு நோக்கி ஓடுகின்ற நதிகளையெல்லாம் கிழக்குப் பக்கம் திருப்பிவிட்டால், மேலும் பல மாவட்டங்கள் அதன் மூலம் நன்மைபெறும் என்று சுட்டிக் காட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் இன்று நாம் தமிழகத்தில் 95சத மேல்மட்ட நீரை உபயோகப்படுத்தி விட்டதால் மேற்கு நோக்கி ஓடி அரபிக்கடலில் கலக்கும் நீரைக் கிழக்கு நோக்கி திருப்பி தண்ணீரை உபயோகப் படுத்த முனைந்து வருகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நில நீரை பொறுத்தவரையில் அதாவது 'கிரௌண்டு வாட்டர்' பொறுத்த வரையில், இன்றையதினம் அதனுடைய அளவு மிகவும் குறைந்திருக்கிறது. அதற்காகத்தான் மேற்கு நோக்கி ஓடுகின்ற நதிநீரை கிழக்குநோக்கித் திருப்பி விட்டால், தமிழகத்தில் ஏறத்தாழ 6 லட்சம் ஏக்கர் வறண்ட நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கமுடியும் என்ற அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் பிரதம அமைச்சர் தேசாய் அவர்களையும் வைத்துக் கொண்டு கேரள மாநில முதல்வருடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு குழுவும் போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் இது குறித்து அவர்கள் பரிசீலனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் குறிப்பாக வெள்ளக்காலங்களில் வைகை ஆற்றில்வரும் உபரிநீரை அருகாமையில் உள்ள கிருதமால் நதி படுகைக்குத் திருப்ப வேண்டும் என்ற திட்டத்தை ஆராய நம்முடைய அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்தினால் ராமநாதபுரம் மாவட்டத்தில் 103 ஏரிகளில் நீர் நிரப்பி 27,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும். அதற்கு ரூ. 70 லட்சம் செலவாகும். விரகனூர், பார்த்திபனூர் மதகுகளிலிருந்து புதிய காலவாய்களை வெட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 1978—79 ஆம் ஆண்டிலே பல பெரிய திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக பரம்பிக்குளம் அளியாறு—

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

திட்டமும், பெரியாறு—வைகை நவீனப் படுத்தும் திட்டமும், அவைகளில் முக்கியமானவை. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் நீராறு அணை கட்டும் பணியும், குடவரை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இத்திட்டங்களை 1979–80 ஆம் ஆண்டில் நாம் தொடர்ந்து நடத்த இருக்கிறோம். இத்திட்டத்தின்கீழ் பாசனம் பெறும் பகுதி வருகிற ஆண்டில் விஸ்தரிக்கப்படும். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் பயனை 1·15 லட்சம் ஏக்கர்களுக்கு விஸ்தரிப்பதற்கு நாம் ஏற்பாடு செய்துகொண்டிக்கிறோம். அதன் மூலமாக 4 தாலூகாக்கள் குறிப்பாக பொள்ளாச்சி, பல்லடம், உடுமலை பேட்டை, தாராபுரம் ஆகிய 4 தாலூகாக்கள் பயன் அடைய இருக்கின்றன. மேலும் ஆய்வு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்காக இதுவரையில் ரூ. 18,04,242 செலவாகியுள்ளது. விஸ்தரிப்பு திட்டத்திற்கு ரூ. 3·00 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல் பெரியாறு—வைகை கால்வாய்களை சீரமைக்கும் திட்டத்திற்காக ரூ. 41·04 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் தொடங்கி நடந்துகொண்டிருக்கின்றன. உலக வங்கியில் ரூ. 20·70 கோடி உதவி கேட்டு, அவர்களும் அதைக் கொடுப்பதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள்.

இத்திட்டத்ன் மூலமாக 6,800 ஹெக்டேர் நமக்கு சேமிப்பாக கிடைக்கும் நீரைக்கொண்டு உறுதியான பாசனவசதி பெறுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அத்துடன் புதிதாக பாசனவசதி பெறுகின்ற நிலத்தின் பரப்பு 18,270 ஹெக்டேர் என்பதையும் தெரிவித்துக் சொள்கிறேன்.

ஏற்கனவே பெரியாறு, வைகை திட்டத்தின் மூலமாக சிவகங்கை, திருப்பத்தூர் போன்ற பகுதிகள் பயன் அடைவதோடு உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளும் பயன் பெறும் என்பதையும் அறிவித்திருக்கிறோம். இன்னும் இத்திட்டத்தின் மூலமாக உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 6,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் நம்முடைய அருமை நண்பர் சந்தசாமி அவர்கள் இப்போது இங்கு இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது. அடிக்கடி அவர்கள் இதைப்பற்றி கேட்டுக்கொண்டு இருந்தார்கள். எங்களுடைய பகுதிக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இந்த அறிவிப்பைச் சொல்லுகின்ற நேரத்தில் அவர் இருந் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். ஆனாலும் அவர்கள் இதை பத்திரிகைகள் மூலமாக கண்டிப்பாக தெரிந்து கொள் வார்கள் என்று நம்புகிறேன்.

நீர் வரத்துக் கால்வாய்களில் 10 ஹெக்டேர் அளவு வரை சிமிண்ட் கான்க்ரீட்டினால் பூசப்படும். இதற்கான வேலை உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 1979-80 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தம் 70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டுக்கு 200 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 247 கால்வாய்களை மேம்படுத்தும் பணிகளும், 11 ரெகுலேட்டர்கள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கடந்த 1978-79 ஆம் ஆண்டில் சாத்தனூர்-வலது கரைக் கால்வாய்த் திட்டத்திற்காக 500 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக இதுவரை பாசனமற்றிருந்த நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் கௌவரப்பள்ளித் திட்டத்திற்கு 666 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாம்பாறு திட்டத்திற்கான மதிப்பீடு 240 லட்சம் ரூபாய். வாணியாறுத் திட்டத்திற்கான மதிப்பீடு 560 லட்சம் ரூபாய் தும்பளஹள்ளி திட்டத்திற்கு 113 லட்சம் ரூபாய். இப்படி ஐந்து திட்டங்களின் மூலம் 39 ஆயிரத்து 177 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் 1979-80 ஆம் ஆண்டில் பி.டி. ராஜன் கால்வாய், மருதா நதி அணைக்கட்டுத் திட்டம். மற்றும் பாலாறு புரந்தலாறுத் திட்டம் ஆகிய திட்டங்கள் முடிக்கப்பட்டு இதன் மூலம் 2,610 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் வருகின்ற ஆண்டில் 1979-80 ஆம் ஆண்டில் 5,000 ஹெக்டேர் புதிய பாசன வசதி பெறக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978-79-ல் அனுமதிக்கப்பட்டு, புதிய திட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது, வாணியாறு திட்டம் 560 லட்சம், தும்பளஹள்ளி திட்டம் 113 லட்சம், குல்லூர் சந்தை திட்டம் 127 லட்சம், வெம்பக்கோட்டை திட்டம் 296 லட்சம், குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம் 82 லட்சம், கொல்லிமலை திட்டம் 5 கோடி ரூபாய் இவ்விதம் ஆறு திட்டங்களின் மூலமாக 7,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி நிலைப்படுத்தவும் 24,788 ஏக்கர் புதிய பாசன வசதி ஏற்படுத்தவும் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

[மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) தலைமை]

இது போக சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 9 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத சில திட்டங்கள் இதில் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இப்போது 189 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. 1978—79-ல் அதாவது நடப்பு ஆண்டில்—ஒதுக்கப் பட்டிருக்கின்ற நிதியில் தூர் எடுப்பதற்கு ரூ. 11 லட்சத்து 63 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1979—80 ஆம் ஆண்டிற்கு 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பாசன வசதியைப் பெருக்குவதற்காக 1978—79-ல் மேற்கொண்ட சிறுபாசனத் திட்டங்களின் மூலம் 5,000 ஏக்கர் புதிய பாசன வசதி பெற்றிருக்கிறது. இந்த ஆண்டு தூர் எடுத்து சீரமைப்பு செய்ததின் காரணமாக 200 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைத்திருக்கிறது. மேலும் இதை விரிவுபடுத்துகின்ற வகையில் இந்த ஆண்டில் நீர்ப்பாசனத்துறையின் கீழ் உள்ள நீர்நிலைகளுக்கு ரூ. 75 இலட்சமும், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள நீர் நிலைகளுக்கு ரூ. 50 இலட்சமும், முன்னாள் ஜமீன் நீர்நிலைகளுக்கு ரூ. 10 லட்சமும் ஒதுக்கப்பட்டது. 1979—80 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற அளவுக்கு குறியிட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[பிற்பகல் 12-30]

ஏரி, குளங்களை நவீனப்படுத்தும் திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. மொத்த பாசன பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியை இந்த ஏரி, குளங்கள் மூலம் பாசனம் பெறுகிறது என்கின்றநிலைமை இருந்து வருகிறது தமிழ்நாட்டிலே மொத்தம் 37,974 ஏரிகள் உள்ளன; . .

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா): என் அனுமதியைப் பெற்றுதான் தாங்கள் பேச வேண்டும். என்ன கேட்கிறீர்கள்? பாயின்ட் ஆப் ஆர்டரா அல்லது விளக்கமா?

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், கரும்பு ஒரு முக்கியமான பயிர். எனவே, கரும்பு, நெல், போன்ற முக்கியமான பயிர்களைப் பற்றியும் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே கரும்பு இனிக்கின்ற ஒரு பயிர் என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆகவே, முதலிலே பாசனத்தை எடுத்துக் கொண்டு, பின்னாலே இனிக்கின்ற கரும்பின் விளைச்சலுக்கு வருகின்றேன். இப்போது கரும்புக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு.)

தமிழகத்திலே மொத்தம் இருக்கக்கூடிய ஏரி, குளங்களின் எண்ணிக்கை 37,974. ஒவ்வொன்றும் 500 ஏக்கரும் அதற்கு அதிகமாகவும் உள்ள ஆயக்கட்டு கொண்ட 500 ஏரிகளை நவீனப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக உலக வங்கியிடம் கடன் கேட்டிருக்கிறோம். முதற்கட்டமாக 111 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். இதனால், மேலும் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கர்களுக்குக் கூடுதலாக பாசன வசதி கிடைக்க இருக்கிறது. தற்போது பாசனம் பெறுகின்ற பரப்பு 5 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர்களுக்கும் உறுதியான பாசன வசதி கிடைக்கும். அதே நேரத்தில், பயிர்த் தொழில் நடைபெறாத காலங்களில், அடுத்த 8 ஆண்டு காலத்தில் நாள் ஒன்றுக்கு 50,000 பேர்களுக்கு வேலை கொடுக்கும் ஒரு திட்டமும் இருக்கிறது. இங்கே பல உறுப்பினர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ''புட் பார் ஒர்க் புரோகிராம்'' என்பதை இந்தத் திட்டத்தின் மூலம் செய்ய முடியும் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் இந்த அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும். . .

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இப்படி அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் இந்த ஆண்டு அமுலில் எடுத்துக் கொள்ளப்படுமா? அல்லது எந்த ஆண்டு அமுல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதைத்தான் நான் சொல்லவந்தேன். அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிக்கிட்டார்கள். இந்த முன்னோடித் திட்டத்தின் திட்டமாக இந்த ஆண்டில் 1979-80 லே, எட்டு முன்னோடித் திட்டங்களை இந்த ஆண்டுக்கு எடுத்துக்கொள்ள இதற்கு ரூ. 1·9 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த எட்டு முன்னோடித் திட்டங்கள் நடைபெற இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

அதோடு, முக்கியமான பிரச்சினை நிலநீர் ஆய்வைப்பற்றியது. இதிலே நாம் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். உங்களுக்கு கெல்லாம் நன்றாகத் தெரியும். நில நீர் குறைந்து கொண்டே போகிறது. அதற்காக நாம் ஒரு சட்டம் இயற்றினோம். அந்தச் சட்டத்தை இன்றைக்கு 'செலக்ட் கமிட்டிக்கு' அனுப்பியிருக்கிறார்கள். அதை 'செலக்ட் கமிட்டி' பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, நில நீர் ஆய்வுத் திட்டம் மேலும் தொடர்ந்து நடைபெறுகிறது. மாநிலத்திலுள்ள 374 வட்டங்களில், 174 வட்டங்களில் நில நீர் ஆய்வு செய்யப்பட்டு, அதிகமாக எடுத்துக் கொண்டிருப்பது தெரிய வருகிறது. இப்படி குறைந்து வருவது அரசுக்குப் பெருத்த கவலையைத் தருகிறது. அதற்காகத் தான் சரியான முறையிலே பயன்படுத்தக்கூடிய அளவிற்கு ஒரு மசோதாவை நாம் ஏற்கனவே கொண்டு வந்தோம். அது, இப்போது 'செலக்ட் கமிட்டி'க்கு அனுப்பப்பட்டு, பரிசிலனையில் இருக்கிறது.

மேலும், இன்று வெள்ள நிவாரணப் பணியினால் 1978–79 லே கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையினால் சுமார் 2,000 நீர்நிலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அதனை நிறைவேற்றுவதற்கு 325 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டு இந்த ஆண்டில் 250 லட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

செம்பரம்பாக்கம் ஏரி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 79·45 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ராஜரத்தினம் அவர்கள் செம்பரம்பாக்கம் தண்ணீர் படிநீருக்காக உபயோகப்படுத்தப்படுமோ என்ற ஐயப்பாட்டைச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பாசனத்தைப் பாதிக்கக்கூடிய அளவில் எந்தவிதமான திட்டமும் வராது என்பதை உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரிலுள்ள ஓட்டேரி வடிகாலைச் சீரமைக்க 12·30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊட்டி ஏரியை மேமபடுத்த 30 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சென்னைக்கு வீராணத்திலிருந்து குடிப்பதற்கு தண்ணீர் வரும் என்று சென்னை நகர மக்கள் நஏங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த ஏக்கத்தைப் போக்க வேறு ஏதாவது தண்ணீர் கிடைக்காதா என்று பார்த்து இந்த அரசு பொறுப்

பேற்ற பிறகு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வந்து அதன் மூலம் சென்னை நகர மக்களுக்குப் போதுமான அளவு தண்ணீரைக் கொடுப்போம் என்ற உறுதியைப் புரட்சித் தலைவர் அவர்கள் வைத்தார்கள். ஆந்திரப்பிரதேச முதல்வருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, ஆய்வுப் பணிகள் நடந்த கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்ய இரு மாநில அலுவலர்களும் கொண்ட தொடர்புக் குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

'இன்லன்ட் வாட்டர் டிரான்ஸ்போர்ட்' மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்—வட பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்க மத்திய அரசுக்கு 'மாஸ்டர் பிளான்' அனுப்பி யிருக்கிறோம். இந்த வட பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்திற்காக 310 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

1979–80-ம் ஆண்டுக்கான திட்டங்களின் பெரிய நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு 22 கோடி 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 25 சிறு பாசனத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. மொத்த மதிப்பீடு ரூ. 1,80,96,800 ரூபாய். பாசனக் கொள்கையில் நாம் இன்று ஒரு புதிய கண்ணோட்டத்தைச் செலுத்திக் கொண்டி ருக்கிறோம்.

முன்னாலே இருந்த அரசுகள் எல்லாம் திட்டங்களைப் போடுவது என்று சொன்னாலும், திட்டங்களை எடுத்துக் கொள்வது என்று சொன்னாலும் 'பெனிபிட் காஸ்ட் ரேஷியோ' என்ற அடிப்படையில்தான் பார்த்து எடுத்துக்கொண்டிருந்தார்கள். 'பெனிபிட் காஸ்ட் ரேஷியோ' என்ற கணக்கில் அவர்கள் எடுத்துக் கொண்டது உணவுப் பொருள் எவ்வளவு கிடைக் குமோ அந்த உணவுப் பொருள்களைக் கணக்கில் வைத்துக் கொண்டுதான் இந்த மதிப்பிட்டு வந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 'பெனிபிட் காஸ்ட் ரேஷயோ' என்பதில் உணவுப் பொருளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. 'காஷ் கிராப்ஸ்' எனப்படும் பணப்பயிரையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று புதிய கண் ணோட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதன் மூலமாக எந்தெந்தத் திட்டங்கள் 'அன்-எகனாமிக்கல்', 'நாட் ஃபீசிபிள்' 'நாட் பாசிபிள்' என்று சொல்லப்பட்டதோ அந்தத் திட்டங்களில் ஒரு சிலவற்றை இன்று எடுத்துக் கொள்ளக்கூடிய அளவில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலம், பல் வேறு மாவட்டங்களில் கேட்பாரற்றுக் கிடந்த திட்டங்கள்—

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

எடுக்கப்படாத திட்டங்கள்—ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த திட்டங்கள்—ஆகியவற்றுக்கு இனிமேல் கண்டிப்பாக புத்துயிர் ஏற்பட்டு அந்தத் திட்டங்களை எடுக்கக்கூடிய சூழ்நிலை வரும் எறுன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமான பிரச்சினை—பாசனத்தைப் பொறுத்த அளவில் தமிழகத்தின் உயிர்நாடியாக, ஜீவநாடியாக இருப்பது காவிரி நீர்ப் பிர்ச்னை, அந்த பிரச்சினையில் முடிவு காண வேண்டுமென்பதற்காக நாமெல்லாம் உன்னிப்பாக இருந்து கொண்டிருக்கிறோம். கடந்த ஒன்றேமுக்கால் ஆண்டாக இந்த அரசைப் பொறுத்த அளவில், மூன்று முறை முதலமைச்சர்கள் எல்லாம் கூடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகப் பேச்சு வார்த்தை நடத்தியும் அந்த பிரச்சினையிலே ஒரு முடிவு காணமுடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனாலும், இன்று அந்தப் பிரச்சினையிலே ஒரு முடிவு ஏற்படும் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறோம். இருக்கக்கூடிய சுமுகமான ஒரு சூழ்நிலையில், அண்டை மாநிலங்களான, பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளாவும், அதே போன்று கர்நாடக மாநிலமும் இன்று இருக்கக்கூடிய உறவின் அடிப்படையில் கண்டிப்பாக இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு முடிவு சீக்கிரமாகக் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு கர்நாடக மாநிலமும், கேரள மாநிலமும் மற்றும் இருக்கக்கூடியவர்களும் ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

[பிற்பகல் 12–40]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் புள்ளிவிவரங்களை கணக்கிலே வைத்துக் கொண்டு, உணவுப் பிரச்சனையிலே பேச வேண்டிய கருத்துக்களை இங்கே விவசாயத்துறையிலே பேசி இருக்கிறார்கள், ஆனாலும் அவர் ஒரு விவசாயி என்ற முறையிலே நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். நான் அவைகளுக்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் கண்டிப்பாக இன்னும் ஒரு மணி நேரம் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன், அவர்கள் கோடிட்டுக் குறிப்பிட்டுக் காட்டிய ஒரு சில கருத்துக்களைப் பற்றி மட்டும் நான் என்னுடைய பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் கூறிய கருத்துக்கள், முக்கியமாக பருத்தியை வாங்குவதற்கு 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா' மூலமாக அவர்கள் பருத்தியை அதிகமாகக் கொள்முதல் செய்கின்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். கடந்த ஆண்டிலே 'காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா' மூலமாக திருப்பூரிலும் மற்றும் உள்ள இடங்களிலேயும் கொள் முதல் செய்திருக்கிறார்கள். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு

அதிகமாகக் கொள்முதல் செய்வதற்கு அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். பருத்தி சாகுபடி செய்யக்கூடிய விவசயாப் பெருமக்களுக்குக் கண்டிப்பாக நல்ல விலை கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வரிகொடா இயக்கத்தைப்பற்றி புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். இன்னும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வரிகொடா இயக்கத்தைப் பற்றியும் விவசாயிகள் விளைவிக்கின்ற விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்ற எண்ணத்தையும் இங்கே பரவலாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரிகொடா இயக்கம் என்று சொல்லப்படுவதே உண்மையிலேயே ஒரு குற்றம், என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரிகொடா இயக்கம் என்று பெயர் வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறார்கள். பெயர் தான் அப்படி இருக்கிறது. இருக்கின்ற நேரத்திலே அவர்கள் கொடுக்க மாட்டேன் என்று சொல்வது தான் வரி கொடா இயக்கம் என்பது சரியல்ல; இல்லாத நேரத்திலே கொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது தள்ளிவிடுங்கள் என்று சொல்வது ஒரு கோரிக்கைதான். ஆகவே வரிகொடா இயக்கம் வரி கொடா இயக்கம் என்று தவறாக முறையிலே பொருள் கொள்ளக்கூடாது. இல்லாத நேரத்திலே தள்ளிவிடுங்கள் என்று கேட்பது கோரிக்கை, இருக்கிறது. ஆனால், கொடுக்கமாட்டோம் என்று வெள்ளைக்காரன் காலத்திலே வெள்ளையனே வெளியே போ என்று சொன்னது போன்ற முறையிலே அவர்கள் சொல்லவில்லை. இப்பொழுது இல்லை, ஆகவே தள்ளுபடி செய்யுங்கள் என்று சொல்வது தான் அது. ஆகவே, திருப்பித் திருப்பி தவறான ஒரு கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து அதற்கு தீர்வு காணாமல் இருக்கிறது. அவர்கள் நீண்ட நெடுங்காலமாக கோரிக்கைகளை வலியுறுத்தியும்கூட தீர்க்கப்படாமல் இருந்தால் வேறு தொழில் சாலையிலே செய்வதைப் போல் அவர்கள் ஸ்ட்ரைக் பண்ண முடியாது, அவர்களுக்கு வேறு எந்தவிதமான போராட்ட முறையும் கிடையாது என்கின்றபோது காந்தியடிகள் போன்ற சாத்வீகமான முறையிலே அவர்கள் காலத்திலேயும் இப்படி விவசாயிகள் பிரச்சினைக்காகத்தான் கடன் பிரச்சினைக் காகத்தான் ஆங்கிலேயனை எதிர்ப்பதற்காக அல்ல, செய்யப்பட்டது. பரோடா இயக்கம் அப்போதும் நடத்தப்பட்டது, அந்த முறையிலேதான் இப்போதும் அவர்கள் நடத்துகிறார்கள், இந்த அரசு அந்தப் பிரச்சினையைக் கவனிக்கவில்லை என்பதால் விவசாயிகள் அப்படி நடத்துவதில் தவறு இல்லை என்பது தான் என்னுடைய கருத்து.

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வரிகொடா இயக்கம் எந்த ரூபத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் எதிராக சொல்கிறேன் என்று தயவுசெய்து எண்ணக்கூடாது. மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவித்து கொள்கிறேன். இன்றைய வரிகொடா இயக்கம் என்பது வரிகொடா இயக்கம் என்ற அளவிலே இல்லை. வரி கொடுக்க மாட்டோம் என்று சொல்கின்ற கோரிக்கையைத்தான் வைத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதைப் பல்வேறு இடங்களிலே நான் பார்த்தேன். வரி கொடுக்கக்கூடாது என்று சொல்வதே குற்றம். ஒரு அரசை எதிர்த்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை எதிர்த்து வரி கொடுக்காதே என்று சொல்வதே குற்றம் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்று சொன்னால் எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. சமீபத்திலே ஒரு வாரத்திற்கு முன்பு வரி கொடுக்காதே என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஒரு கட்சியின் கொடியை அகற்றிவிட்டு அவர்களுடைய கொடியை ஏற்றியிருக்கிறார்கள். இதை எதிர்க் கட்சி வரிசையிலே உட்கார்ந்திருக்கிற நீங்கள் ஆதரிக்கப் போகிறீர்களா என்பது தான் என்னுடைய கேள்வி. பழனிக்குப் பக்கத்தில் நடந்திருக்கிறது. (குறுக்கீடு) எந்தக் கட்சி என்பது உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். எனவே அதைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டிய தேவையில்லை, பழனிக்குப் பக்கத்தில் பத்து கிளைக் கழகங்களின் கொடிகளைக் கீழே இறக்கிவிட்டு, வரிகொடா இயக்கம் என்னும் அவர்கள் கொடியாகிய பச்சை வெள்ளை கலந்த அந்தக் கொடியை ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்றால் இதை நீங்கள் ஆதரிக்கப் போகிறீர்களா ? இப்படியே விட்டுவிட்டுக் கொண்டே போனால் இங்கேயுள்ள அரசியல் கட்சிகளையெல்லாம் ஒழித்துவிட்டு, வரிகொடா இயக்கம் என்ற ஒரே கட்சிதான் ஒரே இயக்கம்தான் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை தமிழகத்திலே வித்தூன்றி வருகிறார்கள் என்றால் அதற்கு நாம் உடந்தையாக இருக்கப் போகிறோமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அந்தக் கேள்வியைத் தான் நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

மேலும், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையை இந்த அரசு புரிந்து கொள்ளாமல், அறிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ளாமல் இருந்திருந்தால் உண்மையிலேயே எங்களுக்குப் புரிய வைக்க வேண்டியது உங்களுடைய கடமையாகும். ஆனால் விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தர வேண்டுமென்பதற்காக, உற்பத்திச் செலவிற்கு ஏற்ற விலை கிடைக்க வேண்டுமென்பதைத்தான் இந்த அரசில் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் தஞ்சாவூரிலே

நடை பெற்ற விவசாயிகள் கருத்தரங்கிலே பேசுகின்ற நேரத்தில் இங்கேயிருக்கும் அமைச்சர்களும்கூட உண்ணாவிரதம் இருக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதை நான் சொன்னேன். அதை இல்லையென்று நான் சொல்லவில்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் நம்முடைய உள்ளத்திலே இருப்பதை, விவசாயப் பெருங்குடி மக்களின் உள்ளத்திலே இருப்பதை நான் பிரதிபலித்துக் காட்டினேன். அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதே நேரத்திலே அவர்களும் கூடக் கேட்டார்கள். இங்கேயிருந்து தமிழ்நாடு எக்ஸ்பிரசிலே 235 டிக்கெட்டுகளை ரிசர்வ் செய்து எங்களையும் சேர்த்து அங்கே கூட்டிப் போகலாம் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு சொல்லிக் கொள்வேன், டெல்லிக்குச் சென்றுதான் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்ற சூழ்நிலை இல்லை, இங்கேகூட இருக்கலாம். ஆனாலும்...........

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் டெல்லிக்குச் செல்லத் தேவையில்லை என்று சொன்னார்கள். இங்கேயே இருந்து குரல் எழுப்பினால்கூட டெல்லிக்குச் செல்லும். நான் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், அவ்வளவு கடுமையான நிகழ்ச்சியாக ஆகியிருக்கிறது. அமைச்சர் மட்டும், தான் மட்டும் அல்லாமல், அமைச்சரவையே உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் விவசாயிகளின் நிலையைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயிகள் கூட வேலை நிறுத்தம் செய்யலாம். வள்ளுவர் சொல்லியிருக்கிறார், "உழவினார் கைம் மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கு நிலை" என்று அவரை கூட வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக உழவன் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையை போக்க உண்ணாவிரதத்தை இங்கேயே இருக்கலாம், சட்டமன்றம் நடக்கும் சமயத்திலேயே இருக்கலாம். என்னறக்கு என்று நாள் குறித்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். உண்ணாவிரதத்தில் இன்னறக்கிருக்கிற பால்கோவாவும் அடங்குகிறதா இல்லையா என்பது.

திரு. க. சுப்பு : பால்கோவா வழங்கப்படவில்லை, அமைச்சரவர்கள் தவறான தகவலைத் தரலாமா ? (சிரிப்பு)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, உண்ணாவிரதம் தொடர் உண்ணாவிரதமா ? அல்லது 'இன்டெஃபனெட்' என்ற வகையில், இந்தப் பிரச்சினை தீரும் வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்களா ?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும் இதிலே கலந்து கொள்வார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நியாயமான கோரிக்கை என்றால் நானும் கலந்துகொள்வேன். ஆனால் இந்த பிரச்னையில் ஏதோ அரசியல் நோக்கத்தோடு எழுப்பப்படுகின்ற பிரச்சினை என்பதால் நான் இதிலே கலந்து கொள்வதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இருக்கக்கூடிய பிரச்சினையெல்லாம், நெல்லுக்கும், கரும்புக்கும் விளைக்கின்ற விளைபொருட்களுக்கும் நியாயமான விலையைக் குறிப்பிட்டு, நமக்கு உற்பத்திச் செலவிற்கேற்றவாறு கொடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அங்கிருக்கும் 'அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷனின்' கடமை. இதை நாம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அரியானா மாநிலத்திலே இருப்பவர்கள் கோதுமைக்கு உற்பத்திச் செலவைக் கணக்கிட்டுக் காட்டுகிறார்கள். அந்த உற்பத்திச் செலவு கணக்கைக் காட்டியதற்குப் பிறகு, கோதுமையின் விலை 112½ ரூபாய் என்று இருந்ததை 115 ரூபாய் என்று ஆக்கினார்கள். ஆனால் நாம் நெல்லுக்கு உற்பத்திச் செலவு 117 ரூபாய் 92 காசு ஆகிறது என்று கணக்குக் கொடுத்தோம். அதற்குப் பின்னால் 77 ரூபாய் என்று கொள்முதல் விலை இருந்ததை 8 ரூபாய் அதிகமாக்கி 85 ரூபாய் என்று கொடுத்தார்களே தவிர, உற்பத்திச் செலவுக்கேற்றவாறு, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவிற்கு அவர்கள் இந்த விலையைக் கூட்டவில்லை என்பதைத்தான் நாம் அடிக்கடி மத்திய அரசினிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மைய அரசு சீக்கிரத்திலே நமக்குப் பச்சைக் கொடி காட்டி, ஏற்ற விலையைக் கொடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறோம். அப்படிக் கொடுக்கவில்லை என்றால், எப்படி, எந்த சூழ்நிலையில், என்னென்ன செய்ய வேண்டுமோ அதைக் காலத்திற்கேற்றவாறு கண்டிப்பாக இந்த அரசு செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12–50]

மேலும் ஒரு சில கருத்துக்களை மட்டும் விவசாயத் துறையின் சார்பாகவும், நான் இங்கே முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 1978–79லே நாம் பல சாதனைகளை—சாதனைகள் இல்லையென்று சொன்னாலும், கடமைகளை—செய்திருக்கிறோம். 1976–77லே, அரிசியினுடைய உற்பத்தி இந்த மாநிலத்தில் 53 இலட்சம் டன்தான் இருந்தது. ஆனால்,

அதற்குப் பின்னாடி, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே, 1977–78லே, 53 இலட்சம் டன் என்று இருந்தது மாறி, 62 இலட்சம் டன் என்று ஆகியிருக்கிறது. அதற்குப் பின்னாடி, 1978–79-லே, 62 இலட்சம் டன் என்று இருந்தது மாறி, 64 இலட்சம் டன் ஆகியிருக்கிறது. அடுத்து வருகின்ற ஆண்டிலே, 1979–80லே 65 இலட்சம் டன் என்ற குறியீடு இருக்கிறது. அதைக் கண்டிப்பாக அடைவோம் என்ற சூழ்நிலை இருக்கிறது.

உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், உற்பத்தி செய்யக்கூடிய நெல்லினுடைய அளவு குறைந்திருக்கிறது என்பதை, 50,000 ஏக்கர் குறைந்திருக்கிறது என்பதைச் சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படிக் குறைந்திருப்பதற்குக் காரணம், நெல்லை மட்டுமே சாகுபடி செய்து கொண்டிருந்தார்களே அங்கே பணப்பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, இன்று விவசாயிகளுக்கு, அதுபோல் ‘கிராப் ரொட்டேஷன்’ எனப்படும் பயிர்ச் சுழற்சியின் மூலமாக இதையெல்லாம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக, 50,000 ஏக்கர் குறைந்திருக்கிறது என்று சொன்னாலும் இந்த ஆண்டு, 1978–79 ல் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தைக் காட்டிலும்கூட இன்று தமிழகத்திலே உற்பத்தியை அதிகமாக ஆக்கியிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாப் மாநிலம்தான் இந்தியாவிலேயே அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய முதல் இடம் என்று சொல்வார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், 1978–79-லே, ‘பெர்’ ஏக்கர் உற்பத்தியில் பஞ்சாப் மாநிலத்தைக் காட்டிலும் நாம் அதிகமாக இருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே இடக்கூடிய ரசாயன உரத்திற்கும் இங்கே இடக்கூடிய ரசாயன உரத்திற்கும், மாறுபாடிருக்கிறது. அங்கே, உரத்தை அதிகமாக இட்டு விளைச்சலை அதிகப்படுத்துகிறார்கள். நாம், உரத்தைக் குறைவாக இட்டு விளைச்சலை அதிகப்படுத்துகிறோம். ஆகவே, அந்தக் கணக்கில், பஞ்சாபைக் காட்டிலும் நாம் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் அரிசி உற்பத்தி அதிகம் ஆகிஇருக்கிறது என்பதற்கான ஒரு சில காரணங்களைக் கூற விரும்புகிறேன்.

ஆராய்ச்சியின் அடிப்படையில் நெற்பயிர் சாகுபடிசெலவைக் குறைத்து உற்பத்தி திறனைப் பெருக்க குறைந்த செலவுள்ள அதிக திறன் வாய்ந்த தொழில் நுட்பம் ஒன்றை இந்த அரசு முதன் முதலாக புகுத்தியுள்ளது. இப்புதியதொழில் நுட்பத்தில் அடங்கிய சிறப்பு அம்சங்களாவன: வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல், ‘பாய்’ நாற்றங்காலை உபயோகப்படுத்துதல், “நீல பச்சை பாசி”யைக் கொண்டு உரமிடுதல், ‘சிங் சல்பேட்’

இடுதல், உரங்களைப் பயிருக்கு அருகாமையில் இடுதல், பூச்சி மருந்து குருணைகளை பயிருக்கு அருகாமையில் இடுதல், இதுபோன்ற முயற்சிகளால் அதிகமான உற்பத்தியை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

மேலும் கடந்த 1978—79லே ஆராய்ச்சிப் பணிகளின் மூலமாக, பல்வேறு புதிய ரகங்களை நாம் உற்பத்தி செய்திருக்கிறோம். வேளாண்மைத் துறையிலே 1977—78-ல் 16 புதிய ரகங்களை நாம் வெளியிட்டோம். நடப்பு ஆண்டிலே 12 புதிய ரகங்களை நாம் வெளியிட்டோம். கடந்த 21 மாத காலத்தில் வேளாண்மைத் துறையின் மூலமாக மொத்தம் 28 புதிய ரகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. புதிதாக வெளியிடப்பட்டுள்ள ரகங்களில் விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பல பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று துவக்கப்பட்டுள்ளது. நூற் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக திருச்சியில் ஒரு ஆய்வுக்கூடமும், தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஆய்வுக்கூடமும் புதிதாக துவக்கப்பட்டுள்ளன.

உழவர் பயிற்சிக்காக, எல்லா மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி நிலையுங்களை ஏற்படுத்துவதற்காக, நடப்பு ஆண்டில் உதகமண்டலம், ராமநாதபுரம், சேலம் ஆகிய இடங்களில் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது சென்னை தவிர்த்த மற்ற எல்லா மாவட்டங் களிலும், மாவட்டத்திற்கு ஒரு உழவர் பயிற்சி நிலையம் வீதம் அமைந்துள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் உழவர்களுக்கும், உழவர் குடியைச் சார்ந்த பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் பயிற்சி அளித்துக் கொண்டு இருக்கின்றது.

இன்று வருமானம் வரும் ஒரே தொழில்—தென்னை சாகுபடி செய்வது, தென்னை உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றஎண்ணத்தில் நடப்பு ஆண்டில் சனவரி 79 முடிய 12·44 லட் சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கன்னியா குமரி, கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் தென்னை அபிவிருத்தித் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பழ அபிவிருத்தி செய்வது நல்லது. நேற்றுகூட 'ப்ரூட் சாலட்' கொடுக்கிறீர்களே எதற்காக என்று திரு. கோவிந்தராசன் அவர்கள் கேட்டார்கள். இனிப்பாக பேச வேண்டும் என்பதற் காகக் கொடுக்கப்படுகிறதா என்றும் கேட்டார்கள். நான் அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஆசியாவிலேயே பெரிய பண்ணையாக முதன் முதலாக தமிழகத்தில் தான் பெரிய பழத் தோட்டம் ஒன்று ஆரம்பித்து

இருக்கிறோம். அதுவும் புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்தராயன்கோட்டையில் ஆயிரம் ஏக்கரில் அந்தப் பண்ணையைத் தொடங்கி, இன்று பழச் செடிகள் மேலே வந்து கொண்டு இருக்கின்றன. அதற்காகத்தான் நேற்று 'ப்ரூட் சாலட்' கொடுக்கப்பட்டது. இதைத்தான் நெற்று 'சஸ்பென்சு' என்று சொல்விக் கொண்டு இருந்தேன். இன்று அந்த 'சஸ்பென்சு'க்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. அந்த மாதிரி பழத் தோட்டம் ஒன்று மாவட்டம் தோறும் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசு திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 10 மாதிரி பழத் தோட்டங்களில் 8 லட்சம் பழமரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு இந்த ஆண்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

சின்னக்கல்ராயன் மலைப்பகுதி வாழ் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்க ரூ. 52·56 லட்சம் மதிப்பில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பெரிய பழத் தோட்டம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு பழத் தோட்டங்களின் மூலம் 600 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும்.

சாகுபடிச் செலவைக் குறைப்பதற்காக புதிய முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். இரசாயன உரச் செலவைக் குறைப்பதற்காக 'நீலப்பச்சைப் பாசி', 'அசோலா' ஆகியவைகளை வளர்க்கும் திட்டத்தை.........................

<u>திரு. வி. கொ. சின்னசாமி :</u> தலைவர் அவர்களே, நான் நேற்று பேசிக் கொண்டு இருக்கிறபோது மணி அடித்து உட்கார வைத்து விட்டீர்கள். தென்னை நாற்றங்கால் பயிரிடுவது கோயம்புத்தூர், பொள்ளாச்சியில் பயிரிடுவதாக அறிவிக்கப்பட்டது. பவானிசாகரில் ஆயிரக்கணக்கான தென்னை பயிரிடும் வகையில் பண்ணை இருக்கிறது. அந்த இடத்திற்குக் கூட கோயம்புத்தூரில் இருந்து நாற்றங்கால் கொண்டு வரப்படுகிறது. ஆகவே, பவானிசாகரில் ஒரு தென்னை நாற்றங்கால் பயிரிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> தலைவர் அவர்களே பவானிசாகர் பகுதியிலும் கொடுக்கப்படும்.

இரசாயன உரச் செலவை குறைப்பதற்காக 'நீலப்பச்சைபாசி' 'அசோலா' ஆகியவைகளை வளர்க்கும் திட்டத்தை இந்த அரசு முதன் முதலாக புகுத்தி இருக்கிறது. 'கிராவிட்டர் அப்ளிகேட்டர்' என்ற புதிய கருவியை கண்டுபிடித்து நெல்லுக்கு உரமிடுவதிலும், குருணை மருந்துகளை இடுவதிலும் செலவைக் குறைத்து நெல் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த அரசு தான் முதல் முதலாக முயற்சித்துள்ளது.

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

புஞ்செய் நில உழவர்களின் சாகுபடிச் செலவைக் குறைத்து அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதற்காக இந்த அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, 'மல்டி பர்பஸ் இம்ப்ளிமெண்ட்' என்னும் பலநோக்கு கருவியை உருவாக்கியுள்ளது. 'ஏழைகளின் டிராக்டர்' எனப்படும் பலநோக்கு கருவியையும், 'கிராவிட்டர் அப்ளிகேட்டர்' கருவியையும் பெருமளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க அடுத்த ஆண்டில் (1979–80) முயற்சிக்கப்படும்.

அடுத்ததாக, வேளாண்மை பொறியியல் பணிகள் பற்றிய வகையில் இந்த அரசு முன்னணியில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறையில் 177 டிராக்டர்களும், 152 புல்டோசர்களும், 815 பலதரப்பட்ட துளைக்கருவிகளும் உள்ளன. சனவரி 1979 முடிய 5,043 பரப்பளவில் நிலம் சமப்படுத்தும் பணியும், 15,090 ஹெக்டேர் பரப்பளவில் நிலத்தை உழும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சனவரி 1979 முடிய 40,491 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. சிறுபாசனத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறை மூலம் சனவரி 1979 முடிய 3,715 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன; 2,245 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன; 2,196 கிணறுகளில் துளையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; 59 சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

[பிற்பகல் 1—00]

அடுத்தபடியாக வெள்ள நிவாரணப் பணிகள். கடந்த இரண்டு ஆண்டுகளிலும் ஏற்பட்ட பெரு வெள்ளங்களினால் மண்மேடிட்ட விளை நிலங்களை சீர்திருத்துவதற்கு இந்தத் துறை போர்க்கால பணிகளைப்போல் பணியாற்றியுள்ளது.

மண்மேடிட்ட நிலங்களைச் சீர்திருத்துவதற்கு சிறு உழவர்களுக்கும், மிகச் சிறு உழவர்களுக்கும் 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்துடனும் ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவு ரூபாய் ஆயிரத்துக்கு மேற்படாமல் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

1977–78 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக மண்மேடிட்ட நிலங்களைச் சீர்திருத்தும் பணி, 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள்வரை நடைபெற்று ரூ. 94 இலட்சம் செலவில் 5,700 ஹெக்டேர் பரப்பு சீர்திருத்தப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக, 1979–80 ஆம் ஆண்டில் துவக்கப்படவிருக்கும் புதிய திட்டங்களைப்பற்றி அறிவிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன், அடுத்த ஆண்டில் பல புதிய திட்டங்களைப் புரட்சித் தலைவர் அவர்களது அரசு துவக்கவிருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 31

'வித்தே விளைவுக்கு அடிப்படை' என்பதற்கேற்ப விதை உற்பத்தியில் தரக்கட்டுப்பாட்டினை தீவிரமாக அமுல்படுத்தி, உழவர்களுக்கு தரமான விதைகளை விநியோகம் செய்வதற்காக 1979–80 ஆம் ஆண்டில் தனியே ஒரு விதைச் சான்றிதழ் இயழககம் துவக்கப்பட விருக்கிறது.

தோட்டக் கலை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்காக தமிழகத்தில் பெரும் வாய்ப்பு உள்ளதால், 1979–80 ஆம் ஆண்டில் தோட்டக் கலை இயக்ககம் (டைரக்டரேட் ஆஃப் ஹார்ட்டி கல்ச்சர்) என்ற புதிய துறையை புரட்சித் தலைவர் அரசு துவக்க இருக்கிறது.

தருமபுரியில் ஒரு அனுசரணை ஆராய்ச்சி செயல்விளக்க மையம் துவக்கப்படவிருக்கிறது.

புரதச் சத்து மிகுந்த பருப்புகளின் உற்பத்தியைப் பெருக்கு வதற்காக சேலம் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் இரண்டு பயிறு வகைகள் செயல் விளக்கத் திட்டங்கள் துவக்கப்படும்.

கிருஷ்ணகிரியில் ஒரு உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

பயிர்களைத் தாக்கும் நூற்புழுக்களைப் பற்றிய ஆய்வுத் திட்டம் வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் துவக்கப்படும்.

கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதிதாக சாலைகள் போடுவதற்கு 150 இலட்சம் ரூபாயும், பழைய சாலைகளைப் பராமரிப்பதற்கு 15 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் ஒரு புதிய பகுதி மேம்பாடுத் திட்டத்தை மேற்கொள்வதென கொள்கை அளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

நிலநீரை வண்டல் மண் பகுதியிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு சுழல்வகை துளையிடும் கருவிகள் தேவைப்படுவதால் அவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ரூபாய் 10 இலட்சம் செலவில் புதிதாக ஒரு சுழல் வகைத் துளையிடும் கருவியை வாங்குவதற்குப் பதிலாக பர்குஸன் துளையிடும் கருவியை மாற்றி, சுழல்வகை துளையிடும் கருவியாக உருவாக்கினால் ஒவ்வொரு கருவியிலும் 7·5 இலட்சம் ரூபாய் மீதமாகும் என்பதைக் கண்டறிந்து, இவ்வகை புதிய முயற்சியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

சேலம் மாவட்டத்தில் சங்கங்கிரியிலும், மேட்டூரிலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவக்கோட்டையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலும் ஆக ஐந்து புதிய வேளாண்மைக் கோட்டங்கள் துவக்கப்படும்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி பல நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். தங்களுடைய தொகுதிகள் எல்லாம் சேர்க்கப்படவில்லையே என்றெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் ஒரு இனிப்பான செய்தியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம், இந்த ஆண்டோடு முடிவடைகிற திட்டம், 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிகிறது. ஆனால் இந்தத் திட்டம் மீண்டும் ஓராண்டுக்கு எக்ஸ்டன்ஷன் — நீட்டிக்கப்பட வேண்டுமென்று இடைவிடாது வற்புறுத்திக் கேட்டதன் பயனாக, அந்தக் கட்டளையை நேற்றைக்கு முன்தினம் மத்திய அரசிலிருந்து தந்தி மூலம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, 1979—80 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு ஜே. ஜேம்ஸ்: சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு சென்ற ஆண்டு மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவிடப்படவில்லையே; அதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 50 கோடி ரூபாயை 5 ஆண்டுகளில் செலவிட்டிருக்க வேண்டும். அது யாரால் செலவிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை எல்லாம் இப்போது (குறுக்கீடு) கூறிக்கொண்டிருக்க நேரம் இல்லை. வருகின்ற ஆண்டில் அந்த முழுத் தொகையும் செலவிடப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.....

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் இந்த ஆண்டு விஸ்தரிக்கப்பட இருக்கின்ற நேரத்தில் இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்படாமல்

இருக்கின்ற என்னுடைய தொகுதியிலுள்ள பகுதிகளையும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மத்திய அரசு சென்ற ஆண்டு 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு செலவு செய்தது 2 கோடியே 12 இலட்சம் ரூபாய்தான். மீதித் தொகையை ஏன் அவர்கள் செலவு செய்யவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் என்கின்ற இனிக்கின்ற செய்தியைச் சொல்வதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் கடன்கள் கொடுக்கப்படாததுதான். முழுமையான அளவிலே கடன்கள் கொடுக்கப்பட்டிருந்தால் இவ்வளவு தொகை மீதம் ஆகி இருக்காது. கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஒதுக்கிய பணம் பூரணமாக கடனாக வழங்கப்பட வேண்டும். ஆகவே மத்திய அரசு ஒதுக்கிய பணத்தை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்து அதனைச் செலவழிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, சிறிய விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் கடந்த ஆண்டு 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 2 கோடிக்குமேல் செலவழித்திருக்கிறோம். திடீரென்று ஒரு திட்டத்தில் நாம் செலவிட்டுவிட முடியாது. ஆனாலும் இந்த அரசு சிறப்பான முறையிலே பாடுபட்ட காரணத்தால்தான் ஏறத்தாழ 2 கோடி ரூபாய்க்கு மேல் நாம் செலவழித்திருக்கிறோம். ஆனால் இதற்கு முன்னால் இருந்த காலத்தில் உள்ள கணக்கைப் பார்த்தால், ஒரு கோடி ரூபாய் கூட செலவழிக்கப்படவில்லை என்பது தெரியவரும். ஆகவே அப்படிப்பட்ட குறைபாட்டைக் காட்டி இந்த அரசு இவ்வளவு செய்திருக்கிறது என்று நான் சொல்வதற்கு வரவில்லை. அதே நேரத்தில் உடனடியாக இவைகளை செலவு செய்வதற்கு ஆங்காங்கே இருக்கக்கூடிய வங்கிகளும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். வங்கிகள் ஒத்துழைப்பு கொடுத்தால் மட்டும் போதாது; முக்கியமாக அவர்கள் விவசாயிகளிடம் 'ரீபேயிங் கப்பாசிட்டி' இருக்கிறதா என்று எதிர்பார்க்கிறார்கள். அதாவது கொடுக்கப்படுகின்ற கடன் தொகை திரும்பி வருமா என்பதைத்தான் முக்கிய நோக்கமாகக் கொண்டு அதனை அவர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சிரமங்கள் இருப்பதன் காரணத்தால்தான் பணம் உடனடியாகச் செலவழிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல் இந்த ஆண்டிலே மீதித் தொகை எப்படி எப்படி செலவழிக்க வேண்டுமோ அப்படி அப்படி செலவீடுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1979 மார்ச் 31]

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் இன்னும் ஓராண்டுக் காலம் நீடிக்கும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தத் திட்டம் நாட்டிலே எல்லா ஒன்றியங்களிலேயும் இருக்கிறதா என்றால், 130, 160 ஒன்றியங்களிலேதான் இருக்கின்றது. ஆகவே மத்திய அரசு கொடுக்கின்ற பணத்தை, பயன்படுத்தி இப்படி 130, 160 ஒன்றியங்களிலே இதனை நிறைவேற்றுகிறபோது, தமிழக அரசே நிதி ஒதுக்கி மற்ற ஒன்றியங்களிலேயும் இந்தத் திட்டம் செயல்படுவதற்கு வழி செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்று சொல்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் உழவனுக்கு மாடு வாங்க, அதாவது கறவை மாடுகள் வாங்க ஆயிரம் ரூபாய் என்று கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதற்காக ஆணையர் சிபாரிசு செய்து வங்கிக்கு அனுப்புகிறார். அந்த வங்கியிலே இருக்கிறவர்கள் இவனுக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தால், இவனால் திருப்பிக் கொடுக்க முடியாது, ஆகவே குறைவாகத்தான் கொடுக்க முடியும் என்று சொல்லி 500 ரூபாய் அல்லது 200 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இப்படி 200 ரூபாய், 500 ரூபாய் என்று தந்தால் அந்த உழவன் எப்படி மாடு வாங்க முடியும்? ஆகவே எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறதோ அந்தத் தொகை அதாவது ஆயிரம் ரூபாய் என்றால் ஆயிரம் ரூபாயை அவர்களுக்கு முழுமையாகக் கொடுக்க வேண்டும். அதற்கு இந்த அரசு முன்வருமா? எல்லா ஒன்றியங்களுக்கும் இந்த திட்டம் வருவதற்கு உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் எல்லா யூனியன்களுக்கும் ஏற்பாடு செய்ய முடியுமா என்று நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது எங்கெங்கெ வறட்சிப் பகுதிகள் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு மட்டுமே என்பது.............

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தவறாக தகவல்களைத் தருகிறார்கள் வறட்சி மேம்பாட்டுத்திட்டம் என்பது வேறு. அது 30 ஒன்றியங்களிலே இருக்கின்றது. ஆனால் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 130 ஒன்றியங்களிலேதான் இருக்கிறது. ஆகவே தவறான தகவலை மாண்புமிகு அமைச்சரவர்கள் தருகிறார்கள். வறட்சி மேம்பாட்டுத்திட்டம் என்பது வறட்சிப் பகுதிகளுக்கு

மட்டுமல்ல. ராமநாதபுரம் மாவட்டத்தில் 30 ஒன்றியங்களிலே இருக்கின்றது. ஆனால் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 15 மாவட்டங்களில்தான் இருக்கிறது. எல்லா ஒன்றியங்களிலும் இல்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, வறட்சிப் பகுதிக்கு என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தில் மிக அதிக வறட்சியான பகுதி என்று கூறப்படுவது என்னுடைய பகுதியாகும். ஆகவே அங்கே இருக்கின்ற இரண்டு யூனியன்களும் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 374 யூனியன்கள் இருக்கின்றன. அந்த 374 யூனியன்களில் ஏறத்தாழ 160-க்கு மேற்பட்ட யூனியன்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வறட்சி பகுதி என்று சொல்கிற போது நீங்கள் ராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களை மட்டும் குறிப்பிடக்கூடாது. பாக்கி இருக்கக்கூடிய மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகள் இருக்கின்றன. கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பல்லடம், அவநாசி தாலூகாக்கள் இருக்கின்றன. அதுபோல இன்னும் திருச்சி மாவட்டத்தில் கரூர் பகுதியும் இருக்கிறது. இன்னும் பல மாவட்டங்களில் இதே போன்ற நிலைமை இருக்கிறது. ஆகவே நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் தவறாகப் புரிந்து கொண்டதாகச் சொல்கிறார்கள். நான் தவறாகப் புரிந்துகொள்ளவில்லை. வறட்சிப், பகுதி என்பது—வறட்சி மேம்பாட்டுத் திட்டம் என்பது வேறு. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது வேறு. இப்போது ஒருங்கிணைந்த திட்டம் வந்திருக்கிறது. அதாவது இன்டக்ரேட்டெட் ரூரல் டிவெலப்மெண்ட் ப்ரோகிராம் என்று சொல்லுகிறபோது இந்த ஆண்டுதான் துவக்கப்பட்டது. வறட்சி பகுதி திட்டம் 30 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகின்றன. சிறிய விவசாய மேம்பாட்டுத் திட்டம் 12 மாவட்டங்களில் 130 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இன்னும் அந்தத் திட்டத்தை எந்தெந்த பகுதியில் எடுதுக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டு, ஒரு மாவட்டத்தில், 5, 6 ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கும்போது எல்லா ஒன்றியங்களிலும் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சிறு விவசாய மேம்பாட்டு திட்டத்தைத் நம்முடைய மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் சொல்வதைப் போல எல்லா யூனியன்களுக்கும் நாம் விரிவுபடுத்த முடியாது. ஆனால் அதே நேரத்தில் ஒருங்கிணைந்த கிராமப்புற திட்டத்தை விரிவுபடுத்த லாம். எங்கெங்கே சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்தவில்லையோ அதேப் பகுதிகளில் எல்லாம் இதைப் போன்ற திட்டத்தை நாம் விரிவு படுத்த முடியும். இன்னும் சிறு விவசாயிகளுக்கு, விவசாய கூலிகளுக்கு இது போன்ற சலுகைகள், ஐ. ஆர். டி. பி. மூலமாக கிடைக்கும். சிறு விவசாய மேம் பாட்டுத் திட்டத்தை 374 யூனியன்களுக்கும் கண்டிப்பாக கொண்டு வரமுடியுமா என்பது பரிசிலிக்கப்படும் என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(புலவர் கா. கோவிந்தன் குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. டிமாண்ட் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, தயவுசெய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் 161 வட்டாரங்களிலே செயல்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டிலே 1979–80-லே இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

வறட்சிக்கு இலக்காகும் மேம்பாட்டுத் திட்டம், இராமநாத புரம், தர்மபுரி மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டு வரு கிறது 1979–80-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட் டத்தை இவ்விரு மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதற்கு 1979–80-ல் 4·64 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத் தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் 175 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை நிறுவும் திட்டம் இந்த அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழக திட்டங் களின் மூலம் பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதி மேம்பாட்டுக் கழக நிதி உதவியுடன் ரூ. 12 கோடியே 42 இலட்சம் செலவில் நீர்ப்பாசனம் இல்லாத 36 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களின்கிழ் தென்னை, ரப்பர், கோக்கோ, தேயிலை, திராட்சை, இலவங்கம், காப்பி முதலியவை பயிரிடப்படுகின்றன. ரூபாய் 7·65 கோடி செலவில் இந்தத் திட்டத்தின்கீழ் மேலும் 34 திட்டங்கள் 1979–80-ல் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் நீண்டகால கடன்கள் வழங்க ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1979–80 ஆம் ஆண்டில் இது விநியோகிக்கப்படும்.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 31

கழிவுநீரை உபயோகப்படுத்தும் முறையில் கம்போஸ்டு உரம் தயாரிப்பதற்காக 26 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த மான்யம் பல்வேறு நகராட்சிகளுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 1977-78 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அனைத்து இந்தியா கம்போஸ்டு தயாரிப்பு போட்டியில் திருச்சி நகராட்சிக்கு முதல் பரிசு கிடைத்திருக் கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக திருச்சி நகராட்சிக்கு கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்று விவசாயத்துறையில் பெரும்பாலான உறுப் பினர்களும் கோடிட்டு குறிப்பிட்டு காட்டியதைப் போல் வேளாண் மைப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் இன்று விவசாயத் துறையில் வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறையை ஏற்படுத்தியுள்ளோம். கடந்த 1933 ஆம் ஆண்டிலிருந்து இந்த தமிழகத்தில் வேளாண்மை விற்பனைக் குழு இருந்து வந்தி ருக்கிறது. இந்த 45 ஆண்டுகளாக இந்தத் துறையில் என்ன சாதித்தார்களோ அதை இந்த 21 மாத காலத்திற்குள் இந்த அரசு சாதித்திருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக தனி இயக்கு நரகம் கடந்த 14—10—1977-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு முன்பு வரை இதுவரை, 11 மாவட்ட விற்பனைக் குழுக்களும், 140 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களும் நடைபெற்று வந்தன. பின்னால் கடந்த 17 மாதங்களில், இரண்டு மாவட்ட விற்பனைக் குழுக்களும், 35 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களும் துவக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 22 துணை விற்பனைக் கூடங்களும் துவக்கப்பட்டுள்ளன. இந்த அரசு வந்தபோது 52 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் சொந்தக் கட்டிடங்களில் இருந்து வந்தன. 77-78 ஆம் ஆண்டு மட்டும் 38 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இடங்கள் வாங்கப்பட்டு கட்டிடங்களும் கட்டப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 30 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலங்கள் வாங்கப்பட்டு, கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது வரை தமிழ்நாட்டில் 13 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் இருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு திருச்சி, பண்ருட்டி ஆகிய இடங் களில் 2 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் துவக்கப்பட்டுள்ளன. தற் போதுள்ள 220 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களிலும் கட்டு மானப் பணிகளுக்காக உலக வங்கியின் கடன் உதவிபெற 70 கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கிறது. இந்த 220 விற்பனைக் கூடங்களையும் நவீனப்படுத்தி புதிய கட்டிடங் கள் கட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலும்.......

1979 மார்ச் 31]

திரு. க. சுப்பு : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வ தெல்லாம் இங்கே தரப்பட்ட குறிப்பில் இருக்கிறது இவைகள் எல்லாம் அவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறும். ஆகவே மீண்டும் இதையெல்லாம் சொல்வது தேவையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் இதைச் சொல் வேண்டும் என்று இருந்தேன். குறிப்பில் இருப்பதை எல்லா அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய தேவையில்லை. உறு பினர்கள் கேட்கின்ற சந்தேகங்களுக்கு மட்டும் பதில் சொன்னா போதும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் சொல்வதெல் லாம் ஏற்கனவே கொடுக்கப்பட்ட குறிப்புகளில் இருக்கின்றன. என்றாலும் சில விளக்கங்களை கொடுக்க நான் கடமைப்பட்ட வனாக இருக்கிறேன். அதற்காகத்தான் சில விளக்கங்களை கொடுக்க வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் இன்று, வேளாண்மை விளை பொருட்களுக்கு விலை கிடைப்பதில், விற் பனைகூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் போது இடைத்தரகர் களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இத் திட்டம் அமல்நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக இன்று எங் கெங்கு விற்பனைக் கூடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங் களில் எல்லாம் வேளாண்மை தொழில் கழகத்தின் மூலம் 'அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் காம்ப்ளக்ஸ்' என்ற திட்டத்தின் மூலமாக தொழிற் சாலைகளை ஏற்படுத்தி, விற்பனைக் கூடங்களுக்கு வருகின்ற பொருட்களை அப்படியே, வேண்டுமென்றால் விற்பனை செய்ய லாம் அல்லது அங்கிருக்கின்ற தொழிற்சாலையில் கொடுத்து வேறு பொருளாக மாற்றி விற்பனை செய்வதின் மூலமாக போதிய விலை கிடைக்கக் கூடிய திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இன்று தமிழ்நாடு பொறியியல் கூட்டுறவு இணையத்தின் கீழ் 220 மையங்கள் இருக்கின்றன. இவற்றில் 40 மையங்கள் இலாபகரமாகவும், 80 ஓரளவு இலபகரமாகவும் இயங்கி வரு கின்றன.

அரசு பண்ணைக் கழகங்கள் மூலமாக இன்று வரையிலும் 39 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது. மேலும் 36 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிலப் பயிர்களில் இருந்து வருகின்றன. மேலும் அரசு பண்ணைக் கழகத்தின் மூலம் சிலோனிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று முக்கிய நோக்கத்தோடு இந்தப் பண்ணைக் கழகங்கள் செய லாற்றி வருகின்றன.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 31

[பிற்பகல் 1-20.]

மேலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய மாவட்டங்களிலே எல்லாம் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் ஏறத்தாழ 400 விவசாயப் பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருந்தார்கள். இன்றைக்கு அந்த 400 பேர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, இப்போது இன்னும் 50 பட்டதாரிகள் தேவை என்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். ஆனாலும், புதிதாக விவசாயக் கல்லூரியை நடப்பு ஆண்டில் 1979-80-ல் தொடங்குவதற்கான எந்த விதமான பரிசீலனையும் இந்த அரசிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இப்போது இருக்கக் கூடிய சீட்டுகளை அதிகப்படுத்துவதற்கான குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. இதுவரையில் 220 இடங்களை விவசாயப் பட்டதாரிகளுக்கு கொடுத்துக் கொண்டிருந்தோம். இதை வருகின்ற 1979-80 ஆம் ஆண்டிலே 220-க்குப் பதில் 250 இடங்களாக மாற்ற இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசினுடைய புதிய முடிவுகள் ஒருசிலவற்றை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த 'பயிர் இன்சூரன்சு' திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். பயிர்க்காப்புறுதித் திட்டத்தைப் பற்றி, கொள்கை விளக்கத்திலே இல்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு சுப்பு அவர்கள் இதுவும் அதிலே இருக்கின்றது என்று சொல்ல மாட்டார்கள் என்று

திரு. க. சுப்பு : இதை உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதை நான் ஒத்துக் கொள்கிறேன் ; வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆனால் நான் அதை விடப் போவதில்லை. அதைப்பற்றிச் சொல்லப் போகிறேன். பயிர்க் காப்புறுதித் திட்டத்திலே பங்கு கொள்வதற்கு இந்திய அரசு மறுத்துவிட்டது. ஆனாலும், இந்த அரசைப் பொறுத்த அளவிலே அதைக் கைவிடுவதில்லை. அதற்கு முன்னோடி திட்டமாக ஒரு திட்டத்தை தொடங்க இருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மண் பரிசோதனை செய்வதற்காக மேலும் புதிதாக மூன்று நடமாடும் பரிசோதனைக் கூடங்களைத் துவக்குவதற்காக திட்டமிட்டிருக்கிறோம்...........

திரு. க. சுப்பு : இந்த பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்சு திட்டத்தைப் பற்றி விளக்கினால், எந்த அடிப்படையிலே செய்ய இருக்கிறீர்கள் என்பதைச் சொன்னால், விவசாயிகளுக்கு ஆறுதலாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு சப் அவர்களுக்கு ஆறுதலாக இருக்குமா, அவர்களுக்கு ஆறுதலாக இருக்குமா என்பது தெரியவில்லை. ஆனாலும், இந்தத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக இந்த அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்று நான் ஏற்கனவே சொன்னேன். ஆகவே, விளக்கமாக இன்னொரு தடவை இதைப்பற்றிச் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு : தேர்தல் அறிக்கையிலே இதைப்பற்றிச் சொல்லியபோது பரிசீலிக்காமல், சிந்திக்காமல் சொல்லி விட்டீர்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சிந்தித்துப் பார்த்து தான் இதைச் சொல்லி இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். சிந்திக்காமல் யாரையோ போல் சொல்லமாட்டோம். சிந்தித்துப் பார்த்து மிகுந்த கவனத்தோடு தான் இந்தத் திட்டத்தை இந்த அரசு அளித்திருக்கிறது.

மாநிலத்தின் தலைநகரிலேயே எல்லாத் துறைகளின் தலைமை அலுவலகங்களும் இருப்பதை தவிட, அவைகளை மாவட்டங்களின் தலைநகரிலே துவக்குவதன் மூலம் சிறப்பாக பணியாற்றிட முடியும் என்ற நோக்கத்துடனும், அரசின் திட்டங்கள் கிராமங்களை நோக்கிச் செல்ல உதவ வேண்டுமென்ற இலட்சியத்துடனும், புதிதாக துவக்கப்பட்டுள்ள வேளாண்மை விளைபொருள் விற்பனை துறையின் தலைமை அலுவலகத்தை திருச்சியிலும், 1979-80 ஆம் ஆண்டில் துவக்கப்பட இருக்கும் விதை சான்றிதழ் இயக்ககத்தையும், தோட்டக் கலை இயக்ககத்தையும் மாவட்டங்களில் துவக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது எனபதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில் ஒழுங்கீனங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கவும், ஒழுங்கீனங்கள் மீது நடவடிக் எடுக்கவும், கண்காணிப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த இந்த அரசு ஆலோசித்து வருகிறது.

[திரு .ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 31

பருப்பு வகைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவ இருக்கிறோம். இந்தமாதிரி நிலையத்தை இந்தியாவில் 3 இடங்களில் தான் வைக்க இருக்கிறார்கள். அந்த 3 இடங்களில் ஒன்று தமிழகத்தில் உள்ளது என்கிற சிறப்பை அது பெற இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் புற நகர்ப்பகுதியில் உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருவாயைப் பெருக்கும் வகையில் ரூ. 84 லட்சம் செலவில் காய்கறி மற்றும் காளான் உற்பத்தியைப் பெருக்க இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். 1979-80-ம் ஆண்டில் சென்னை புறநகர் பகுதியில் 80 கிலோ மீட்டர் சுற்றியுள்ள பகுதிகளில் இது போன்ற திட்டத்தை ஏற்படுத்த இருக்கிறோம்.

அறுவடைக்குப் பின் மேற்கொள்ளும் தொழில் நுட்பம் பற்றி ஆராய்வதற்காக தற்போது திருவாரூரில் உள்ள ஆராய்ச்சி மையத்தை ஒரு ஆராய்ச்சிநிலையமாக உயர்த்த வேண்டும் என்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் வற்புறுத்தி வருகிறோம். அதையும்செயல்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வேளாண்மை பெருங்குடி மக்களுக்கு பயிர் விளைச்சல் போட்டி ஆரம்பித்து, 'வெளாண்மைச் செம்மல்' என்ற பட்டத்தை அளித்து வந்தார்கள். அதை 1975-ம் ஆண்டில் நிறுத்தி வைத்து இருந்தார்கள். ஆனால் இந்த அரசு அந்தப் போட்டியை மறுபடியும் அரம்பித்து, அவர்களுக்கு அந்தப் பட்டத்தை அளிப்பது என்றும், மேலும், மாநில மட்டத்தில் மட்டும் அல்லாது, மாவட்ட அளவிலும் இதுபோன்ற போட்டிகள் வைக்கப்பட்டு, எல்லோரும் அதில் கலந்துகொண்டு பரிசு பெறவேண்டும் என்ற முறையில் 1979-80-ஆம்ஆண்டில் இருந்து ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு பால் வள நிறுவனம் அமைந்துள்ள அடிப்படையில், தமிழ்நாடு எண்ணெய் வித்து மேம்பாட்டு கழகத்தை ரூ. 15 கோடி செலவில் அமைப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

நீர்ப்பாசன திட்டங்களில் அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக 20

1979 மார்ச் 31] [திரு. ப. குழந்தைவேலு]

சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சிறப்பு சிறு பாசன திட்டத்தின்கீழ் மீதியுள்ள 70 லட்சம். ரூபாய்க்குள்ள திட்டங்களை உடனடியாக அனுமதிப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கும் திட்டங்களைப் பற்றி எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சதாசிவம் அவர்கள் கேட்டுக்சொண்டார்கள். நொய்யலாறு திட்டம் செயல்படுத்தப்படுமா ? என்று கேட்டார்கள். நான் தெரிவித்தேன், நொய்யலாறு திட்டத்திற்கு ஆய்வு நடத்தப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 5 நிமிடம் வேண்டும். அதற்கு ஆய்வு நடத்தி 9,600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் அளவில் அந்தத் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அரசைப் பொறுத்த வரையில் பாசன வசதி இருக்கிற இடங்களில் எல்லாம் இன்று நஞ்சைப் பயிர்களை நாம் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் புஞ்சை பூமிகளை நாம் கவனிக்காமல் இருக்கும் சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கிறது. அதற்காக இந்த ஆண்டில் இருந்து இந்த மண் வளப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வளம் அற்ற நிலங்களையும் வளம் உள்ள நிலங்களாக ஆக்கும் திட்டங்களை நாம் தொடங்கியிருக்கிறோம். அதற்கு கடந்த மாதத்தில் கூட நான் ஹைதராபாத் சென்று விட்டு வந்தேன். இக்ரிசாட், International Crop research institute for semi-arid tropics என்று சொல்லக் கூடிய அந்த ஸ்தாபனத்திலே எப்படி புஞ்சைப் பயிர்கள் விளைவிக்கிறார்கள் என்பதை எல்லாம் பார்த்துக்கொண்டு வந்தேன். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் புஞ்சை வேளாண்மைக்கு, புஞ்சை பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்

[திரு.ப.குழந்தைவேலு] [1979 மார்ச் 31

அளவிலே அடுத்த ஆண்டிலேயே அதற்கான தனி திட்டங்களை தயாரித்து செயல்படுத்த உள்ளோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1–30.]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கன்னியாகுமரி மாவட்டத்தில் அனந்தலாறு கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்காக 240 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 240 லட்சம் ரூபாய் செலவழித்தால், 12,000 டன் அதிக உணவு உற்பத்தி கிடைக்கும் என்ற மதிப்பீட்டின்கீழ் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அனந்தலாறு திட்டம் மட்டுமல்லாது கோதையாறு திட்டமும் இருக்கிறது. பார்லிமென்டரி செகரடரி மாண்புமிகு திரு. வின்சென்ட் அவர்களுடைய தொகுதியில் போகிற அனந்தலாறு திட்டம் மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று கோதையாறு திட்டத்தை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முக்கியமான திட்டங்களைப் பற்றி இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய திட்டமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். சோத்துப்பாறைத் திட்டம்—பெயரே சோத்துப் பாறை—உண்மையிலேயே சோறு கொடுக்கிற நல்ல திட்டத்தை இது நாள் வரை கவனிக்காமல் விட்டிருந்தார்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் மறு பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதை மதுரை மாவட்ட உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் மேலரசம்பட்டு அணைக்கட்டுத் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படும்.

பல்வேறு திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அரசு பாடுபடும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு நீங்கள், கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

1979 மார்ச் 31]

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை எதிர்க்கட்சியினருக்கு விட்டுக் கொடுக்கும் வகையில் நிறைவேற்றியதாகச் சொன்னார்கள். அந்த உறுதியைப் பாராட்டுகிறேன். நெல்லுக்கு விலை கொடுப்பது பற்றி மத்திய அரசு பச்சைக் கொடியை விரைவில் காட்டும், காட்டவில்லை என்றால் என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரிவிக்கிறேன் என்று சொன்னார். பச்சைக் கொடியை எந்த நேரத்தில் காட்டுவார்கள் என்பதற்கு ஒரு நாளைக் குறிப்பிடுவார்களா? அந்த நாளுக்குள் பச்சைக் கொடி காட்டப்படவில்லையென்று சொன்னால் அதற்கு நாம் மேற்கொண்டு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா? இதற்கிடையில் நவரை அறுவடையாகி நெல் மார்க்கெட்டுக்கு வர இருக்கிறது. மின்சார அமைச்சரின் கருணையினால் மின்சாரம் சரியாகத் தராததன் காரணமாக பாதிதான் அறுவடை கிடைக்கும். அப்படி வருகிற நெல்லை நல்ல விலை கொடுத்து வாங்க பச்சைக் கொடி அவர்கள் காட்டவில்லையென்றாலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு 15 ரூபாய் போனஸ் 10 ரூபாய் வண்டிச் சத்தம் என்று கொடுத்தது போல் 85 ரூபாய்க்கு பதிலாக 104 ரூபாய் கொடுத்து வாங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு பச்சைக் கொடி காட்டுமென்று நான் சொன்னேன். எப்போது பச்சைக் கொடி காட்டுவார்கள்? அப்படிக் காட்டாமல் விட்டுவிட்டால் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் இப்போதே யோசித்து விடுவது என்பது சரியல்ல. அவர்கள் முடிவெடுப்பதற்கு முன்னால் நாம் ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக அவற்றை எல்லாம் கொஞ்சம் தள்ளி வைத்து, அவர்களுடைய யோசனைக்கு முதலிடம் கொடுத்து அவர்களுடைய முடிவை எதிர்பார்ப்போம் என்று மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாளர்கள் சு. பாலன், வி. கே. கோதண்டராமன், ஜே. ஜேம்ஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், சேலம் மு. ஆறுமுகம், ப. சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

[1979 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,04,65,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று' நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 36—பாசனம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ப. சந்திரன் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் சி. பழனிமுத்து, ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, அ. சுவாமிதாஸ், சேலம் மு. ஆறுமுகம்ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாககருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—.

'மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,56,83,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ரெ.வீ. சவுந்திரராசன், சி. கோவிந்தராசன், பொ. விஜயராகவன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி. 'மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,12,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.'

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.)

திருவாளர்கள் என். கிட்டப்பா, பழனிமுத்து, ஜேம்ஸ், சேலம் மு. ஆறுமுகம் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி-

மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,46,20,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

'மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(அ) உறுப்பினர் திரு. கிட்டப்பா வீட்டில் கோவில் சிலை இருந்ததாக அவர் கைது செய்யப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா கூறிய ஒழுங்குப் பிரச்சினையிலிருந்து சிலவற்றை நீக்க வேண்டுமென்று உத்திரவிட்டேன். இப்போது அதைத் தெளிவாக சுருக்கமாகச் சொல்கிறேன். திரு. சாதிக் பாட்சா அவர்கள் கூறிய * * * என்பதும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய * * * என்பதும் மறுமுறையும் விவாதத்தில் எங்கு கூறப்பட்டிருந்தாலும் அந்த இடங்களிலும் நீக்கப்படுகின்றன.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

6. அறிக்கை அளித்தல் — தொடர்ச்சி.

(இ) விவசாயிகளுக்கான மின் இணைப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 82ன் கீழ் மாண்புமிகு மின்சாரததுறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 13—3—79 அன்று இந்த மாமன்றத்தில் விவசாய மின் இணைப்புக்கள் துண்டிப்பது 3—4—79 வரை ஒத்திப் போடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

இந்த அறிவிப்பினை ஒட்டி விவசாய பெருங்குடி மக்கள் அரசின் வேண்டுகோளை ஏற்று பெருமளவில் மின்கட்டணத்தை செலுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது; மகிழ்ச்சிக்குரியது.

இதுவரையில் சுமார் 34,000 விவசாயிகள் மின் கட்டணத்தை நிலுவைதாரர்களாயிருந்தும் கட்டியுள்ளனர். விவசாயிகளின் இந்த நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் கருத்தில் கொண்டும், மேலும் அவர்கள் மின் கட்டணத்தை செலுத்துவதற்கேற்ற வாய்ப்பை அதிகரிக்கவும் விவசாயப் பயிருக்கு எவ்வகையிலும் குந்தகம் ஏற்படாது இருக்கவும், விவசாய மின் துண்டிப்பை மேலும் 4-4-79லிருந்து 30-4-79 வரை தள்ளிப்போட அரசு தீர்மானித்துள்ளது.

சேலம் மாவட்டத்தில் மின் துண்டிப்பு சம்பந்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட வன்முறையில் சம்பந்தப்படாத அனைத்து விவசாயிகளையும் விடுதலை செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் இந்த நல்ல அறிவிப்பை விவசாய பெருங்குடி மக்கள் பயன்படுத்தி கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-40 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

1979 மார்ச் 31]

மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(6) அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஈ) வழக்கறிஞர்கள் போராட்டம் — நீதிபதி நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82 இன் கீழ் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் வழக்கறிஞர்களின் போராட்டம் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்ற பேரவாவின் அடிப்படையிலும் நீதி கோரி வழக்குமன்றம் சென்ற மக்கள் வேதனையும் விரக்தியும் அடைவதுமான சூழ்நிலையை உடனடியாக போக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாகவும், 27-3-79 அன்று நீதி விசாரணை நடத்த முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில் ஓய்வு பெற்ற மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்களை நியமித்தது குறித்தும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் முன்னாள் நீதிபதி திரு. டி. எஸ். அனவரதன் அவர்கள், தன் நியமனத்தின் மீது எழுந்துள்ள பல்வேறு விதமான கருத்துக்களின் காரணமாக, இப்பிரச்சினையில் தான் நீதிபதியாக இருந்து நீதி விசாரணை செய்யும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள இயலாது என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

எனவே, அவரது இந்த கருத்தினை ஏற்றுக் கொண்டு, அவருக்கு பதிலாக இது சம்பந்தமாக நீதி விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களை நியமிப்பது என இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த முடிவினை ஒருமனதாக ஏற்றுக் கொண்டு வழக்கறிஞர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(7) அரசினர் தீர்மானம் தொடர்ச்சி.

விதி 2—உள்விதி (3)இன்கீழ்—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம்—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, பேரவையின் விதி 21 உள் விதி (3)-ன்கீழ், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5-ன்கீழ் கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள் என்றுள்ளதை கோரிக்கை எண் 26-கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்றுள்ளதற்கு முன்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. வரவு செலவு திட்டம் 1979-80—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(உ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1979-80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 95,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, சென்னையில் அரிசன காலனிகளில் குழந்தைகளுக்கு குறைந்த விலையில் பால்வழங்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,36,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலூகாவில் கமுதி பகுதியில் அருப்புக்கோட்டையில் இருந்து நீராவி வழியாக கமுதி மண்டலமாணிக்கம் வரை பால் எடுக்கும் வண்டி தடம் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 95,36,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, அம்பை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள பல கிராமங்களில் பால் பண்ணை சொசைட்டி அமைக்காததைப் பற்றி விவாதிக்க.—

''மானியக் கோரிக்கை எண்.10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 95,36,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru P. VIJAYARAGAVAN : Mr. Speaker, Sir, to discuse the need to absorb the temporary workers in the T.N.D.D,C. as permanent workers - I move :

''That the allotment of Rs. 95,36,000 under Demand No. 10-Milk Supply Schemes be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. சிவசாமி, திரு சேலம் மு. ஆறுமுகம் ஆகிய இருவரும் இருக்கையில் இல்லை—முன்மொழியப்படவில்லை.

மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

[1979 மார்ச் 31

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பால் வழங்கு திட்டங்கள் பற்றிய கொள்கை *விளக்கம் அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேரவையிலே அந்தக் கொள்கை விளக்கத்தை நான் வாசித்ததாக ஏற்றுக்கொண்டு, அவைக் குறிப்பிலே அவைகளை இடம் பெறச் செய்ய வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களுக்குப் பிறகு இறுதியில் என்னுடைய விளக்கத்தைச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பினைப் பெற முடியும் என்று நம்பி அமர்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தப் பால் உற்பத்தித் தொழில் ஒரு சிறந்த துணைத் தொழிலாகும். அமைச்சர்களிலேயிருந்து சாதாரண ஏழை எளிய மக்கள் வரை உள்ள ஒவ்வொருவரும் பால் மாடுகளைத் தங்களுடைய இல்லங்களிலே வளர்த்து அதன் மூலம் துணைத் தொழிலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் தேசிய அளவில் பாலை உற்பத்தி செய்து அதிகப்படுத்துவதற்கும் அதனை ஒரு சிறந்த கருவியாகவும் இன்று நாட்டு மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். நம்முடைய அரசாங்கமும் அந்தத் தொழிலினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நாட்டில் இப்பொழுது இந்தப் பால் உற்பத்தி செய்கின்ற மாடுகளுக்கு ஒரு பேராபத்து வந்திருக்கிறது. கேரளாவிலிருந்தும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அரேபியா நாடுகளுக்கு நம்முடைய மாடுகள் சென்று கொண்டிருக்கின்றன. அங்கேயிருந்து கோடி, கோடியாக, பணம் மாடு வாங்குவதற்காக, இங்கே மிகச் சாதாரணமாக நாட்டிலே புழங்கிக்கொண்டிருக்கிறது. சந்தைகள்தோறும் இன்று மாடுகளை வாங்கி, கேரளாவிற்கு அனுப்புகிற ஒரு காட்சி, கண்காட்சியாகத் தமிழகம் முழுவதும் விளங்கிக் கொண்டிருக்கிறது. வடக்குப் பகுதியில் எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால், தமிழகத்தில், தென் மாவட்டங்களில், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, போன்ற மாவட்டங்களிலிருந்து மாடுகளைக் கூட்டங்கூட்டமாகக் கேராளவுக்கு அனுப்புகிறார்கள். அதன் காரணமாக, மாடுகளின் விலை கொஞ்சங் கொஞ்சமாக ஏறிக்கொண்டு போவதோடு, தமிழகத்தின் எதிர்காலம் ஒரு பால் காடாக இருக்குமா என்ற ஐயப்பாடு எழும் அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நிலையில்

* 223-254ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

1979 மார்ச் 31] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

போய்க் கொண்டிருந்தால் எதிர்காலத்தில் மாடுகளே இல்லை யென்ற சூழ்நிலை உருவாகலாம். வேறு எல்லா திட்டங்களுக்கும் செயற்கையான முறையில் உற்பத்தியாக்க முடியும். ஆனால், பாலை மாடுகளிலேயிருந்து உற்பத்தி செய்வதைத் தவிர, செயற்கை முறையில் உற்பத்தியாக்க முடியாது என்ற காரணத்தால், அதைப் பாதுகாத்து பக்குவப்படுத்துகிற முறையை அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4—10]

இன்று நம்முடைய தமிழகத்தில் பல அரிய திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். வறட்சிப் பகுதிக்கு இலக்கான பகுதிகளில் பால் மாடு வளர்க்க பல திட்டங்களை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். பரமக்குடியில் இருக்கும் பால் குளிர் பதன நிலையத்தில் 2,000 லிட்டர் பால் பதப்படுத்தும் முறையில் அமைத்து இருக்கிறார்கள். ஆனால், அங்கே வருகிற பால் 200 முதல் 300 லிட்டர் வரைதான் வருகிறது. இதற்குக் காரணம் அதிகமான பால் வருகிற அளவிற்கு அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் மாடுகள் அதிகம் இல்லை. மாடுகளை வாங்க கிராம ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் ஏராளமான மானியம் தர வாய்ப்பு இருந்தாலும், வங்கிகளிடமிருந்து கடன் தொகைகள் பெற முடியாத காரணத்தால், மானியம் பெற்றாலும் கடன் வாங்கி மாடுகள் வாங்க முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய பால் வள நிறுவனத்தின் மூலம் விவசாயிகளுக்கு அரசு கொடுக்கும் மானியப் பணத்தையும் சேர்த்து, வங்கிகளிடமிருந்து கடன் பெற்று மாடுகளை வாங்கி, அந்த வகையில் அதை அபிவிருத்தி செய்ய முடியும். அவ்வாறு செய்யாவிட்டால், கிராமப்புறங்களில் ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் மானியத்தையும் பெற முடியாது, லட்ச லட்சமாகப் பணம் செலவு செய்து அமைக்கப்பட்டுள்ள குளிர் சாதன நிலையமும் பயன் அற்றுப்போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று கன்று வளர்ப்புத் திட்டத்திற்காக பாதி மானியம் அளிக்கும் திட்டம் பல மாவட்டங்களிலும் இருக்கிறது. அதிலே, பல மாவட்டங்கள் சேர்க்கப்பட்டு இருந்தும், இராமநாதபுரம் மாவட்டம் விடுபட்டுப்போய் இருக்கிறது. அது ஏன் என்று தெரியவில்லை. வறட்சிப் பகுதியாக உள்ள எங்கள் மாவட்டத்தையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன்.

இன்றைக்கு கேரளாவிற்கு மாடுகள் போய்க்கொண்டு இருக்கின்றன என்று ஏற்கனவே சொன்னேன். விவசாயிகளுக்கு நாம் கடன் கொடுக்கிறோம். அவர்கள் மாடுகள் கிடைக்காததால்

TRUTH ALONE TRIUMPHS

புரோக்கர்களிடத்தில் மாட்டிக்கொண்டு தவிக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட தட்டுப்பாட்டைப் போக்க ஆங்காங்கு உள்ள தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப மாட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தி, நல்ல ஜாதி பால் மாடுகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் வாழ்க்கையில் நல்ல சூழ்நிலை ஏற்படும் வாய்ப்பு ஏற்படும். நம்முடைய தமிழ் நாட்டில் கடந்த 7—8 ஆண்டு காலமாக கிராமப்புறங்களில் பால் பண்ணை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பால் பண்ணையில் வாங்கிய கடனை விவசாயி திருப்பித் தர முடியாமலும், பலர் மாடுகளை வாங்க முடியாமலும், இந்தப் புதிய திட்டத்தின் மூல மாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாலையே விற்கும் படியான சூழ்நிலை இருந்தது. அதன் காரணமாக ஆயிரக்கணக் கான சங்கங்கள் ஓராண்டு காலத்திற்கும் மேலாக செயல்படாது இருக்கின்றன. உதாரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 100-க்கு மேற்பட்ட சங்கங்கள் செயல் படாமல் இருக்கின்றன. அவ்வாறு சங்கங்களில் உள்ள கடன் களை எல்லாம் நீண்டகாலக் கடனாகவும், வட்டியில்லாமல் இருக் கும் கடன்களாகவும் மாற்றி வசூல் செய்யும் சூழ்நிலையை ஏற் படுத்தி, அங்கே செயல்படாமல் இருக்கும் சங்கங்களுக்கு உயிர் கொடுத்து, அவற்றை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாகத் திருத்தி அமைத்து, புதிய ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் அவர்களுக்கு கடன் கொடுத்து, அந்த விவசாயிகள் பயன் அடையும் வகையில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் செயற்கை கருத்தரிக்கும் முறையை பல்வேறு வகையில் இன்று நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், எந்த விவசாயியும் அதனால் பயன் அடைந்ததாகத் தெரியவில்லை. இந்த செயற்கை முறையால் பல மாடுகள் மலட்டு மாடாகப் போய்விட்டன. இது எதனால் ஏற்படுகிறது? அந்த முறையில் கோளாறா, அல்லது அத்தகைய அதிகாரிகள் கவனக்குறைவால் ஏற்பட்டவையா என்பதை கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டில் போதுமான கால்நடைகள் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் நம்முடைய பால் வழங்குத்துறை மூலமாக இதை கவனித்து, அந்த மாடுகள் கருத்தரிக்கும் சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரில் இருக்கிற பால் வியாபாரிகள் பால் உற்பத்தியாளர்கள் பல குறைபாடுகளை என்னிடம் எடுத்துச் சொன்னார்கள். பரம்பரை, பரம்பரையாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து இந்த சென்னை மாநகரில் பால் தொழில் செய்து வருகின்றவர்களுக்கு இன்று கடன் கொடுக் காமல் அவர்களை வேறு இடங்களுக்குச் செல்லுங்கள் என்று உத்தரவு போடுகிறார்கள்.

1979 மார்ச் 31] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

நம்முடைய சென்னை மாநகர் நல்ல தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் குஜராத் மாநிலத்திற்குச் சென்று பார்த்திருக்கிறேன். அகமதாபாத் முன்னால் தலைநகராக இருந்தது. அங்கே பால்காரர்கள் அதிகமாக இருந்ததால் இப்போது புதிதாக, காந்தி நகர் என்று ஒரு புதிய நகரையே உருவாக்கி, அதை தலைநகராக மாற்றியிருக்கிறார்கள். டெல்லி கூட பால்காரர்கள் அதிகமாக இருக்கும் ஒரு நகராகத் தான் இருந்தது. அகவே, அதைவிட்டுவிட்டு இன்றைக்கு புதிதாக ஒரு நகரை உருவாக்கியிருக்கிறார்கள். அதைப்போலவே சென்னை மாநகரில் இருக்கிற பால்காரர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இங்கேயும் புதிதாக ஒரு தலைநகரை அமைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆயிரம் ஆயிரம், ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களை வேறு பகுதிகளுக்கு மாற்ற வேண்டுமென்று சொல்வது ஒரு பெரிய கொடிய செயல் என்று நான் கருதுகிறேன். அவர்களுக்கு பால் மாடு வாங்க கடன் கொடுத்து, அவர்களுடைய தொழிலை வேண்டுமென்றால் விஞ்ஞான ரீதியில் நாற்றம் அடிக்காத அளவுக்கு செய்து கொள்ளத் திட்டம் வகுக்க வேண்டும். அல்லது சென்னை மாநகரில் சில சில பகுதிகளில் மட்டும் மாடுகளை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லலாமே தவிர, அவர்களை ஊரை விட்டுப் போகச் சொல்வது ஒரு நல்ல செயல் அல்ல.

சென்னை மாநகரில் மட்டும் 20,000 குடும்பங்கள் இந்த பால் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு மற்றவர்களைப்போல தங்களுக்கும் ஒரு சங்கம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல கோட்டைக்கு முன்னால் வந்து உண்ணாவிரதம் தொடங்கலாமா என்ற சிந்தனையில் இன்றைக்கு அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களும் உண்ணாவிரதப் பேராட்டத்தை நடத்துவதற்கு இடம் கொடுக்காமல் நாமாகவே அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் கருத்தை கேட்டறிந்து, உரிய பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கிராமப்புறங்களில் கிடைக்கின்ற பாலுக்கு மிகக் குறைந்த விலைதான் கொடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். மாடுகள் வாங்குவதற்கும் குறைந்த தொகைதான் கடன் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். நம்முடைய அரசு அந்தக் குறையை கவனித்து இப்போது தீவனத்திலிருந்து அத்தனைப் பொருட்களுக்கும் இருக்கின்ற விலையேற்றத்தைக் கருத்திற் கொண்டு கொள்முதல் செய்கின்ற பாலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும். அதாவது பால் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு உரிய வகையில் விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பால்பெருக்குத் திட்டத்தின் மீதான மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

பால் உணவு சத்தான உணவு என்கின்ற நிலை ஏற்பட்டு, இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கும் அது எளிதாக கிடைக்கின்ற ஒரு நிலை இந்த பால்பெருக்குத் திட்டங்கள் மூலம் அமைந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பால் சாப்பிட வேண்டுமென்றால் அது பூணக்காரர்களால் தான் முடியும், அவர்களுக்கே உரிய ஒன்று அது என்றிருந்த நிலை மாறி, இன்றைக்கு 'காஸ்ட்லி ப்ரோடக்ஷன்' என்று சொல்லுகின்ற அந்த பால் உணவு ஏழை எளிய மக்களுக்கும் கிட்டுகின்ற நிலை ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. காலம் மாறி, கருத்துகளும் மாறி, இன்றைக்கு தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் பால் கிடைக் கின்ற வசதி கிராமப்புரங்களிலும் எளிதாகக் காணப் படுகிறது.

இந்தத் திட்டத்தின் மேம்பாட்டுக்காக, முன்னோடியாக கூட்டுறவுத்துறை அமைப்பு இருந்தும் இந்த கூட்டுறவுத் துறை அமைப்புக்கு நல்லதொரு முக்கியத்துவம் தந்து, கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களின் மூலம் இன்றைக்கு கூட்டுறவுத்துறை சிறப்பு எய்துகிறது என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் கிராமப்புறங்களில் கடன் வழங்கும் சங்கங்கள் இருக்கின்றன. அங்கே பல சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களையும், கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களின் சட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அல்லது உற்பத்தி சங்கங்கள் எந்த அளவுக்கு தமிழ்நாட்டில் கூட்டுறவு ஒன்றியத்தில் பெரும் பங்கு வகிக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு மாநில பிரதம நிதிபதி அல்லது ஐ. ஜி. க்கு இல்லாத அதிகாரம் கூட்டுறவுத் துறையில் இருக்கிற துணைப்பதிவாளர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அந்த அளவிலே இன்றைக்கு அவர் கள் எல்லாம் கிராமப் புறங்களில் வருகை தந்து பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் சங்கங்களை அமைத்து, அந்தச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்பட நல்லமுறையில் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்து, உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று அவர்களை இந்த நேரத் தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

[மாலை 4-20.]

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அதாவது இன்றைக்கு நாட்டிலே பல கறவை மாடுகள் இல்லாத காரணத்தாலே அந்தத் துறை வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் கேரள மாநிலத்திற்கு அனுப்பப்படுவதால் இங்கே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

கறவை மாடுகள் இந்த நாட்டிலே அதிகமாக உற்பத்தி செய்யகூடிய அளவுக்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன என்றாலும் என்னுடைய சிற்றறிவுக்கு எட்டியவரையிலே நான் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திட்டக்குழு உறுப்பினர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்தபோது குறிப்பாக ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகை தந்தபோது கூறிய சில கருத்துகளை இங்கே ஒருமுகப்படுத்தி நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

'Dr. Sivaraman, Member of the Planning Commission, said that the distribution of milch cows and buffaloes are old programme. The National Commission on Agriculture has recommended as far back as 1972 in its Report on Small and Marginal farmers that the livestock are only a limited stock of buffaloes and cows in the country and that if a large scale programme for giving milch cattle to poor families is developed, it will only create a competition for the new animals available, either poor quality animals will be distributed or the price of the good quality animals will be beyond the reach of the poor families' என்று சொல்லிவிட்டு அங்கே,

'The local M.L.A— that is myself—who was also present agreed and said that the only answer was quick introduction of the frozen semen technology under the Integrated Rural Development. He had also mentioned that the Tamil Nadu Government was planning for building up infrastructure facilities.' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அளவிற்கு இன்றைய அரசும் முழுமூச்சாக இந்த அமைச்சரவையும் அதிலும் குறிப்பாக இந்தத் துறையைப் பொறுப்பேற்றுக் கொண்ட அமைச்சரவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அது முன்னோடியாக இருக்கிறது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண கறவை மாடுகளைக் கொண்டே ஜெர்சி போன்ற உயர்தர மாடுகளையும் உருவாக்கு கின்ற நிலை விரைவிலே செயல்பட முடியும் என்று நான் கருதுகிறேன்.

முன்பு இன்செமினேஷன் சென்டர்ஸ் என்று இருந்தது. அதாவது 30 மையங்களாக இருந்தது. இப்போது 110 மையங்களாக சிறிது சிறிதாக விருத்தியாகி இருக்கிறது. அது இன்னும் 3 அல்லது 4 மாத காலத்திற்குள் 850 கிராமங்கள் இநத வாய்ப்பைப் பெறுகின்ற அளவுக்கு இன்றையதினம் நமது மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சரவையும் இந்த பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைசரவர்களும் நமது பாராட்டுக்குரியவர்கள். அதேநேரத்தில் இதற்குத் துணையாக நின்ற அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண மாடுகள் எல்லாம் அதாவது நம்முடைய கறவை மாடுகள் எல்லாம் நல்ல மேல்தரமான மாடுகளாகிய ஜெர்சி போன்ற கன்றுகளை ஈன்றுதரக்கூடிய தன்மை உள்ளவை என்று பலரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நேரத்திலே நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். சினைக்காகப் போடப்படுகின்ற ஊசிகளை, நல்ல தரமானவைகளாகப் போடுகின்ற ஒரு தன்மை ஒவ்வோரு கிராமத்திலேயும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நிரம்ப முயற்சி எடுத்துக்கொண்டால் நிச்சயமாக நல்ல தரமான மாடுகளை இங்கே உருவாக்க முடியும் என்று நான் கருதுகிறேன். அடுத்து நண்பர் திரு. ராமசாமி அவர்கள் மாடுகள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் நான் போதிய கறவை மாடுகள் இல்லை என்று சொல்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

லிக்விட் நைட்ரஜன் கன்டெய்னர்களிலே அந்த ஊசி மருந்துகளை வைத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட நடவடிக் கைகளை எல்லாம் இந்த அரசு எடுக்கவேண்டும். இப்போது இருக்கின்ற திட்டங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு பகுதி பகுதியாக உருவாக்க முயன்று கொண்டிருக்கிறது. அதாவது 100 மாடுகள், 100 கிராமங்கள் என்ற தன்மையில் இப்போது நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வரப்படுகிறது. அதனைப் பத்தாயிரம் என்ற அளவிலே ஆக்குவதற்கு முற்படுவார்களேயானால் அந்தத் துறையிலே ஈடுபடுபவர் களுக்கு வேண்டிய தேவையையும் கறவை மாடுகளுக்கு வேண்டிய தேவையையும் ஈடுசெய்கின்ற அளவிலே கிராமத் திலே இருக்கின்ற ஏறத்தாழ 1,500-க்கு மேற்பட்ட விவசாயிகள்

பயனடைகின்ற அளவிலே 3 கோடி ரூபாய் திட்டத்திலே இந்த சிறு சிறு திட்டங்களை வகுக்க இந்த அரசு முனைந்து கொண்டால் நல்லது. இதற்கு உறுதுணையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கடைசியாக, நான் எவ்வளவோ இது குறித்து பேசவேண்டி இருக்கிறது. மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதற்கு அனுமதி அளிக்காத காரணத்தால்

அடுத்து, ஃபாடர் கல்டிவேஷன் என்பதற்கு நாம் முக்கியத் துவம் தரவேண்டும். கறவை மாடுகள் அதிகமாக இருக்க வேண்டுமென்றால் அவற்றிற்குரிய அந்த ஃபாடர் மிக முக்கியமானது. சாதாரணமாக கரும்பு பயிரிடுகின்ற விவசாயிக்கு, அந்தக் கரும்புகளை கரும்பாலை எடுத்துக் கொண்டு அதற்குரிய விலையினை அங்கே தருகிறார்களே, அதைப் போன்று தமிழ்நாடு பால்வள நிறுவனமாக இருந்தாலும் அல்லது ஒன்றியங்களாக இருந்தாலும் அந்தப் பசும்புல்லை அந்த விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து அதன் மூலமாக ஃபாடர் கல்டிவேஷன் என்கின்ற அந்த புல் பயிர்களை வெகுவாக உற்பத்தி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருவொற்றியூரிலே ஒரு சந்தை இருக்கிறது. அந்தச் சந்தையை ரெகுலேடர் மார்க்கெட்டாக மாற்ற வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதே போன்று ஏலத்தூர், செட்டிப்பாளை யத்தில் கூட்டுறவு பால் சொசைடி ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதே போன்று திருக்கழுக் குன்றத்தில் குளிர் பதன திட்டத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. இந்த அளவிலே இந்த கிராமப் பொருளாதார திட்டத்தை மேம்பாடு அடையச் செய்கின்ற அளவில் இந்தத் துறை இருக்கின்ற காரணத்தால் அதற்கு இந்த அரசு ஊக்கமும், ஆக்கமும் அளித்து, பல்வேறு திட்டங்களை வகுத்து, அதன் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லாத அளவுக்கு தமிழ் மாநிலத்தில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்திலிருந்தும் வெளிநாட்டவர்கள் வந்து நமது மாடுகளை வாங்குகின்ற நிலையை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மான்யம் சாதாரண மக்களுக்கும், அரசாங்கத்தினுடைய

நேரிடையான பலன் கிடைக்கின்ற வகையில் இந்தப் பால் நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது பாராட்டக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. அதை மேலும் விரிவாக்கவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த மாடுகளும், பசு மாடுகளும், கறவை மாடுகளும் தருவதிலே குறிப்பாக விதவைகளுக்கும், டிபென்டன்டுகளுக்கும் அதாவது மற்றவர்களை அண்டி இருக்கின்றவர்களுக்கும் முன்னுரிமை தருகின்ற வகையில் அரசாங்கத்தில் பலவிதமான சலுகைகளை தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது குறிப்பாக, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சொசைடி வேண்டுமென்றால், அதற்கு இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டு வைக்கிறார்கள். அங்கே போய் அது பயன்படக்கூடியதா என்று பார்த்து, சில இடங்களில் வைக்கலாம், சில இடங்களில் தேவையில்லை என்று அறிவிப்பு செய்வதனால், இந்தப் பால் நிறுவனங்கள் அங்கங்கே நடைபெறாமல் இருக்கின்றன. அவைகளை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எல்லாக் கிராமங்களிலும் அந்தப் பால் நிறுவனங்களை எங்கெங்கு ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த இடங்களில் நீங்கள் தாராளமாக தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், வட ஆற்காடு ஜில்லாவிலே அதிகமாக பால் உற்பத்தி ஆகிறது என்று உங்கள் கொள்கை விளக்கத்திலேயே தந்திருக்கிறீர்கள். ஆகையால்தான், வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பால் பவுடர் பிளாண்டை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே பெரிய தொழிற்சாலை என்று சொல்லக்கூடிய ஒரு தொழிற்சாலையும் இல்லை. ஆகவே, இந்த முறையிலாவது எங்கள் மாவட்டம் பால் உற்பத்தி அதிகமாக செய்கின்ற காரணத்தினாலே, நீங்கள் அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக மூன்று இடங்களிலே கால்நடை மருத்துவ மனைகள் இருக்கின்றன. அதாவது தஞ்சை, திருச்சி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்த மருத்துவ மனைகள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்ற அதே நேரத்தில், எங்கெல்லாம் இந்தக் கால்நடை மருத்துவ மனைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் சரியாக லைவ்ஸ்டாக் அசிஸ்டெண்டுகள் நிரந்தரமாக இருப்பதில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன. அதையெல்லாம் நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. ரா. மார்க்கபந்து]

[மாலை 4-30]

இப்போது ஃபர்ஸ்ட் ஃபேஸ் புரோகிராம் முடிந்து செக்கண்ட் ஆப்ரேஷன் ப்ளட் ஸ்கீம் அமல்படுத்தப் போவதாகத் தெரிகிறது. இந்த சமயத்தில் ஸ்டேட் லெவல் பெடரேஷன், டிஸ்ட்ரிக்ட் லெவல் யூனியன் என்று ஆரம்பிக்கப் போவதாக கேள்விப்படு கிறேன். இவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஜெனரல் மானேஜர் போடுகின்றபோது, டெக்னிக்கல் எஜுக்கேஷன் உள்ளவர்களை—டெக்னிக்கல் நோ—ஹௌ உள்ளவர்களை—டெக்னிக்கல் விஷயங்களை தெரிந்தவர்களை போடவேண்டும். அப்படியில்லாமல் கூட்டுறவு துறையிலுள்ள டெப்டி ரெஜிஸ் டிரார்களை போடும்போது, டெக்னிக்கல் விஷயங்களைப் பார்க்க முடியாது. ஆகவே, கூட்டுறவு டெப்டி ரெஜிஸ்டிரார்களுக்குப் பதிலாக பயிற்சி பெற்ற டாக்டர்களை போடுங்கள். டாக்டர் குரியன் போன்றவர்கள் நல்ல முறையில் நமது திட்டத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது ஆபரேஷன் ப்ளட் ஸ்கீம் ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்தில் ஒரு அச்சம் இருக்கிறது. இத்திட்டத்திற்கு டி.என்.டி.டி.சி. மூலமாக அலுவலாளர்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்த இரண்டாவது ஸ்டேஜ் துவக்கப்படும்போது, வீட்டுக்கு அனுப்பி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இப்போது இந்நிறு வனத்தில் பல ஜூனியர் என்சினியர்கள், சூப்பிரென்டெண் டென்ட்டுகள், வெட்டர்னரி அஸிஸ்டன்ட்ஸ், டெக்னிக்கல் ஸ்டாப் இப்படி பல கேட்டகரியாக இருக்கிறார்கள். இவர்களுக்கு ஜாப் செக்யூரிட்டி இருக்கவேண்டும். மேலும் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் என்று சொல்லப்பட்டுவிட்டால், இன்னும் பல சிரமங்கள் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்ட நேரம் எவ்வளவு? இப்போது எடுத்துக் கொள்கின்ற நேரம் எவ்வளவு? சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: இப்போது வேலையில் இருப்பவர் களை எந்தவிதத்திலும் வேலையை விட்டு நீக்கிவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். தகுதி என்ற அடிப்படையில் எடுக்க ஆரம்பித்தால் பலவிதமான சங்கடங்கள் ஏற்படும். அத்துடன் டிஸ்க்ரீஷன் என்று வைத்துவிட்டால் இன்னும் பல தொல்லைகள் எல்லாம் ஏற்படும். அப்படியெல்லாம் ஏற்பட்டுவிடாமல், ஆப்ஷன் கொடுக்கக்கூடியவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. பாக்கூர் சுப்பிரமணியம் அவர்கள் கோபிச்செட்டிப் பாளையத்தில் சொஸைட்டி ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது, எலத்தூர், செட்டிப் பாளையத்தில் சொஸைட்டியில்லாத காரணத்தால்— அங்கு சொஸைட்டி வைக்கவேண்டும் என்று கேட்டிருந்தேன். அது டிலேயாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்த வாரத்திற்குள் சொஸைட்டி அமைக்கப்படும் என்று தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 10 பால்வள நிறுவனத்தின் மீது, மார்க்ஸிஸ்ட்டு கம்யூனிஸ்டு கட்சியின் நிலை என்ன என்பதை தெளிவுபடுத்துவதற்காக நான் பேச விரும்புகிறேன். ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் அந்த நிறுவனத் தைப் பற்றி பேசி விட்டார்கள். நீங்கள் தந்திருக்கின்ற அவகாசம் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அதிகமாக பிரச்னைக்குள் போகவில்லை. குறிப்பாக சில விஷயங்களை மட்டும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பால்வள நிறுவனம் ஏற் பட்ட பிறகு, ஓரளவு பால் தட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பால் மாடுகளின் எண்ணிக்கை வர வர குறைந்து வரு கிறது. அதை ஈடு செய்கின்ற வகையில், ஜனங்களுக்கு இன்னும் அதிகமான பாலை வழங்குவதற்குத் தகுந்த வகையில் பால்வள நிறுவனத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய வாய்ப்பு வசதி களை செய்து கொடுக்க வேண்டும். எனவே, பால்வள நிறுவனத் தின் அபிவிருத்தியில் இன்னும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையில் அதிகமான அளவில் பதிவு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவு சங்கங் களை அமைப்பதற்கு அதிகாரிகள் செல்லும்போது, சில ஊர்களில் போய் பார்த்துவிட்டு, இந்த ஊர் லாயக்கில்லை, அந்த ஊர் லாயக்கில்லை என்று சொல்லி தட்டிக்கழித்துவிட்டு சென்று விடு கின்றார்கள். குறிப்பாக, அம்பாசமுத்திரம், சேர்மாதேவி தொகுதி களைச் சேர்ந்த இடங்களில் நிறைய இவ்வாறு நடைபெற்றிருக் கிறது. இந்த வட்டாரங்களுக்கு எல்லாம் சேர்ந்து விருதுநகரில் ஒரே ஒரு ரெஜிஸ்டிரார் இருக்கிறார். நான்கு ஜில்லாக்களுக்கும் சேர்ந்து ஒருவர் இருக்கிறார். இதை மாற்றி மாவட்டங்களுக்கு ஒரு ரெஜிஸ்டிரார் என்ற அளவில் நியமித்து, எந்தெந்த கிராமங் களுக்கெல்லாம் சொஸைட்டி தேவையோ அங்கெல்லாம் சங்கங்கள் அமைப்பதற்கு தாராளமாக ஏற்பாடு செய்யவேண்டும். அத் துடன் வேண்டிய அளவிற்கு பாங்குகளிலிருந்து கடன் கொடுப்ப தற்கும் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதற்கு வேண்டிய உதவிகளை செய்ய பால்வள நிறுவனம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 31] *[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]*

தொழிலாளர் நலன் பற்றி சொல்லும்போது, இந்த நிறுனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, சென்னையிலே கிட்டத்தட்ட 2,000 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். ஒரு தொழிலாளிக்கு ரூபாய் 5 தான் ஒரு நாளைக்கு கூலி கிடைக்கிறது. சாதாரணமாக அன்ஸ்கில்டு லேபர், விவசாயிகளுக்கு ரூ. 6 கொடுக்க வேண்டுமென்று அரசு இந்த மன்றத்திலே சொல்லியுள்ளது. பால்வளத் தொழிலாளிக்கு ரூ. 5 கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு ரூ. 120 கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி உத்தரவாதம் அளிக்கின்ற முறையிலே அரசு அவர்களுடைய கூலியை உயர்த்துவதற்கு முன்வர வேண்டும். அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பால்வள நிறுவனத்திலே வேன் மஸ்தூர்கள் இருக்கிறார்கள். வானுடன் அவர்கள் பால் விநியோகிப்பதற்காக அனுப்பப்படுகிறார்கள். அன்றைய தினமே அந்தக் கணக்குகள் எல்லாம் ஒப்படைக்கப்பட்டும், பிறகு ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் ஆயிரத்திலிருந்து 8,000 ரூபாய் வரை பாக்கி என்று கேட்கிறார்கள். இதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். தினசரி கூலி ரூ. 5 வாங்கக்கூடிய அந்தத் தொழிலாளி திடீரென்று எப்படி இந்தத் தொகையைக் கொடுக்க முடியும்? இப்படி கேட்பது நல்லதல்ல. ஆகவே, ஊழல் எங்கே நடைபெற்று இருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே கவனித்திருக்க வேண்டும். தொழிலாளியினுடைய நலனைப் பாதுகாக்கின்ற முறையில், அவர்கள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கின்ற முறையில், நல்ல சம்பளமும் போனசும் கொடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நேரமில்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பால் நிறுவன மானி க் கோரிக்கையின் பேரில் என்னுடைய யோசனைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புத்தகத்திலே சில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மொத்தம் 5,233 சங்கங்கள். இதிலே கலைக்கப்பட்ட சங்கங்கள் 1,022. செயற்படாத சங்கங்கள் 1,359. வழக்கமான சங்கங்கள் 147. 1,805 செயல்படாமல், கலைக்கப்பட்ட சங்கங்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு இதைக் கவலையோடு பரிசீலிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், நமது அரசு சொல்கிறது, தமிழகத்தில் இருக்கக்கூடிய புள்ளிவிவரப்படி ஒரு நபருக்கு தினமும்

[திரு. பொ. உத்திராபதி] [1979 மார்ச் 31

300 கிராம் பால் தேவைப்படுகிறது என்று. ஆனால், அவ்வாறு கிடைக்கிறதா என்று பார்த்தால் 63 கிராம்தான் கிடைக்கிறது. அதாவது, ஐந்தில் ஒரு பங்குதான் கிடைக்கின்றது. சங்கங்கள் செயல்படாமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. அப்படி கலைக்கப்பட்ட அந்த சங்கங்களுக்கு தேர்தல் இதுவரை 7 ஆண்டுகளாக நடைபெறவில்லை. எனவே, உடனடியாக தேர்தல் நடத்தி இந்த சங்கங்கள் எல்லாம் நடப்பதற்கு ஊக்கம் அளித்து இந்த 5,233 சங்கங்களும் செயல்பட துவங்கிவிட்டால் தமிழகத்தில் 300 கிராம் மாத்திரமல்ல, அதற்கு மேலும் கொடுப்பதற்கு பால் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கலாம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகமாக பால் உற்பத்தி செய்யவேண்டும். இப்போது என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தொகுதி ஆகிய இடங்களில் 2 பேர்கள் தனியார் கூட்டுறவு சங்கங்களை வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே நிறைய கூட்டுறவு சங்கங்கள் இருந்தாலும், பெரும் பகுதி சாதாரண கிராமத்தில் இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் 1 ஏக்கர், 2, 3 ஏக்கர்கள் வைத்திருக்கக்கூடியவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு வருஷத்திலே 4 மாதங்கள் தான் வேலையிருக்கிறது. பாக்கி மாதங்களுக்கு வேலை கிடையாது. அவர்களுக்கெல்லாம் நிரந்தரமாக ஒரு வீட்டுக்கு 2 கறவை மாடுகளை மானியமாகவோ அல்லது கடனாகவோ, அல்லது இரண்டும் சேர்த்தோ கொடுக்க இந்த அரசு தீவிர கவனம் செலுத்தினால், ஒரு அளவுக்கு இந்த வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்.

[மாலை 4–40]

பால் உற்பத்தியைப் பெருக்க முடியும்; எல்லோருக்கும் பால் கிடைக்கும் என்ற ஆலோசனையை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போல, அரிசனங்களுக்கு 1,500 ரூபாய் கடனும், 500 ரூபாய் மானியமும் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, வேதாரணியம், கோட்டூர், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளில் மிகவும் பின்தங்கிய மக்கள், அரிசனங்கள், ஏழை எளிய மக்கள், விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்கள் எல்லாம் இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. திருத்துறைப்பூண்டிக்கு மட்டும் வந்திருக்கிறது. 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதை எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் பிரித்துக்கொடுத்து,

1979 மார்ச் 31] [திரு. பொ. உத்திராபதி]

அதிலிருந்து 3 பேர் அரிசன், 2 பேர் ஜாதி இந்துக்கள் என்ற முறையிலே கோட்டா ஒதுக்கீடு செய்து, அதற்கு அப்ளிகேஷன் எல்லாம் போட்டார்கள். கடைசியில் பணம் கொடுக்கும்போது ஊரில் இருக்கிற பிரசிடென்ட் என் பெயரை எழுதிக் கொடுக்க வில்லை, கிராம சேவக் எழுதிக் கொடுக்கவில்லை, வேண்டியவர் களுக்குக் கொடுத்தார்கள் என்றெல்லாம் குறைபாடு வந்தது. அப்படி இல்லாமல் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாதாரண மக்களுக்கெல்லாம் மானியமும் கடனும் கிடைக்க வேண்டும். அதற்கு வசதி செய்து கொடுத்து, மாடு வைத்துக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதில் வேலை செய்கிற தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு விதமான கூலி கொடுக்கிறார்கல். ஒரு சங்கத்தில் ஒரு நாளைக்கு $3\frac{1}{2}$ ரூபாய், இன்னொரு சங்கத்தில் 5 ரூபாய், வேறொரு சங்கத்தில் 6 ரூபாய் — இப்படி கூலி கொடுக்கிறார்கள். ஆனால், எல்லோரும் ராத்திரி போய் படுத்தால் இரண்டு மணிக்கு சைக்கிள் எடுக்கிறார்கள். 4 மணி நேரம் ஓட்டுகிறார்கள். வீட்டுக்கு வருகிறார்கள். பின்னர் 12 மணிக்குப் போகிறார்கள். பால் எடுக்கிறார்கள். இப்படி டிராக்டர் ஓட்டுவது மாதிரி பால் தொழிலாளர்கள் சைக்கிள் மிதிக்கிறார்கள். அவர்களுக்கும் நிரந்தரமாக அரசாங்க உதவி கிடைக்க வேண்டும். அவர்கள் இறந்து போகும் நேரத்தில் அரசாங்க சிப்பந்திகளின் குடும்பத் திற்கு 10,000 ரூபாய் வழங்கப் படுவதைப்போல அவர்களுக்கும் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விலையைப்பற்றிச் சொல்வதாக இருந்தால், ஒவ்வொரு சங் கத்திற்கும் ஒரு விலை கொடுக்கிறார்கள். பிண்ணாக்கு விலை, புல் விலை எல்லாம் இன்றைக்கு ஏறிவிட்டது. எங்கு போனாலும் புல் அறுக்க முடியாது. ஏனென்றால் விவசாய காலங்களில் உரம் விடுகிறார்கள். இந்தக் கஷ்டங்களைப் பார்த்து பால் விலையை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது கருத்து சொல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல இன்றைக்கு பால் உற்பத்தி செய்வதற்கு உதவி செய்யபடபடுகிறது; கூட்டுறவுச் சங்க அமைப்பு மூலம் பால் வாங்கப்படுகிறது. ஆனால், கூட்டுறவுச் சங்கம் கொடுக்கின்ற விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1-40லிருந்து 1-50 தான். ஆனால், சென்னையில் விற்கப்படும் பாலின் விலை 3 ரூபாயிலிருந்து 3½ ரூபாய் வரையில் இருக்கிறது. இந்த அளவுக்கு சங்கத்திலிருந்து உற்பத்தியாளர்களுக்குக்கொடுக்க வேண்டும். இந்த விலை பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ண யிக்கப்பட்டது. தவிடு, ஓ.கே. தீவனம் போன்ற மாட்டுத் தீவனம் எல்லாம் விலை ஏறிவிட்டது. அதனால், பால் கொள் முதல் விலையையும் அந்த அளவுக்கு உயர்த்த வேண்டும்.

கறவை மாடுகளை வாங்குவதற்குக் கடனும், மானியமும் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கின்ற மானியம் பிற் பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது அரிசனங்களுக்கு எப்படி மாடு வாங்க மானியம் கொடுக்கப் படுகிறதோ அந்த முறையில் பிற்பட்டமக்களுக்கும் மானியம் வழங்கவேண்டும். குறிப்பாக, இன்றைக்கு மாடு வளர்ப்பவர்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலையைக் கருதி அவர்களுக்கும் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் சொன்னதைப்போல கூட்டுறவு சொசைட்டிகளுக்கு எல்லாம் உடனடியாக எலக்ஷென் நடத்த வேண்டும். இன்ஸ் பெக்டர், கோவாபரேடிவ் சப்-ரெஜிஸ்டிரார், டெபுடி ரெஜிஸ்டிரார் இவர்கள் இருப்பதனால் குறைபாடு இல்லை என்று வெளியே சொல்ல முடியாது. இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பால் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு உடனடியாக எலக்ஷென் நடத்த வேண்டுமென்ற கருத்தை நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் விநியோகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சென்னை மாநகரில் குறைபாடு இருக்கிறது. ஒருநாள் காலை யில் சீக்கிரம் பால் வந்துவிடுகிறது; ஒரு நாள் பிந்தி வருகிறது. அதனால் ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் காப்பி, டீ அருந்துவது கஷ்டமாக இருக்கிறது. காப்பி, டீ அருந்துகிற வர்களுக்கு இந்தக் கஷடம் நன்றாகத் தெரியும். ஆகையால், ஒவ்வொரு நாளும் காலாகாலத்தில் பால் விநியோகம் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரிடம் தெரிவிக்க விரும்பு கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கடைசியாக ஒரே ஒரு பிரச்சனையை பேசுவதற்காகத்தான் நான் முன்வந்தேன். தொழிலாளர்களுடைய ஒரு பிரச்சனையைப் பற்றி நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பால்வள நிறுவனம் தொழிலாளர் விரோதக் கொள்கையை மேற்கொள்கிறதோ என்ற அச்சம் தொழிலாளர்கள் மத்தியிலே இன்றைக்கு இருக்கிறது. முன்பு தனியார் லாரிகளிலே பால் கொடுத்து வந்தார்கள். பிறகு வேகன் மஸ்தூர் என்ற முறையிலே 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாள் முதல் 110 பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு 1978 ஆம் வருடம் செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் வரையில் 'பிக்ஸட் பே' என்ற முறையிலே கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பாலையெல்லாம் விநியோகித்து விட்டு கணக்கு கொடுத்து விட்ட பிறகுதான் வீட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், திடீரென்று 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாள் அன்று அவர்கள் ஒரு ஆயிரம் முதல் 8 ஆயிரம் ரூபாய் வரை கட்டவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, ஏதோ அங்கே ஏற்பட்டுவிட்ட ஒருதவறு காரணமாக 7 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், அதற்காக சம்பந்தப்பட்டவர்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்த 7 இலட்சம் ரூபாயை தொழிலாளர்களிடமிருந்து வாங்குகிற முறையிலே லாரி ஓனர்களுக்கும் நிறுவனத்திற்கும் உடன்பாட்டை மறுப்பதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, இப்படி 240 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களிடமிருந்து 110 ரூபாய் டிடக்ஷன் செய்வது என்ன நியாயம்? அவர்கள் எல்லாம் லாஸ்ட் கிரேட் சர்வன்ட்ஸ், அவர்களை மாற்றுவது சரியல்ல. இப்போது பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறபோது அந்த நிறுவனம் செய்திருக்கிற நல்ல காரியம் இப்போது அந்த வேகன் மஸ்தூர்கள் பதவிகளை ஒழித்து விட்டார்கள். அந்தத்தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக இந்தப் பிரச்சனைக்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த சங்க நிர்வாகிகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு அப்படி மாற்றக்கூடாது. வேகன் மஸ்தூர் பதவிகளை எடுத்துவிட்டாலும்கூட அந்தத் தொழிலாளர்களுக்கு அங்கேயே வேலை கொடுக்க வேண்டும். 240 ரூபாய் தான் சம்பளம் வாங்கும் அந்தத் தொழிலாளர்களை மதுரைக்கோ அல்லது வேறு ஊருக்கோ மாற்றக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், என்னுடைய மாவட்டத்தில் ஆனைமலை இருக்கிறது அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அங்கே நல்ல விளைச்சல் ஆகும் பூமிகள் இருக்கின்றன. மாடுகளுக்குத் தேவையான தீவனங்கள் இருக்கின்றன. டயரி டெவலப்மெண்ட் கார்பரேஷின் மூலமாக ஒரு பண்ணை அமைத்து அந்த சுற்றுவட்டார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இந்த தொழிலாளர்கள் விஷயத்திலே விக்ஷ்ச

கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறி, எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து வார்த்தைகளை முடித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு. பாக்கூர்சுப்பிரமணியம் அவர்களும், திரு. மார்க்க பந்து அவர்களும், திரு. சொரணம் அவர்களும், திரு. உத்திரா பதி அவர்களும், இறுதியிலே மாண்புமிகு உறுபபினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் இந்தப் பால்வழங்குத துறை சம்பந்தமாக இங்கே சுருக்கமாக பயனுள்ள பல்வேறு கருத்துக்களைச் எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படி சுருக் கமாகப் பேசினார்களோ அதைப்போலவே நானும் மிகச் சுருக்க மாக என்னுடைய பதிலை அமைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

காரணம், இந்தத் துறையைப் பொறுத்த வரையிலே, பேச் சுக்கே இடம் இல்லை, 'லெஸ் டாக், மோர் ஓர்க்,' என்பதைப் போல் நாம் அதிகமாகச் செயல்பட வேண்டிய கட்டாயம் இருப்பதால் அதிக நேரம் பேசி நேரத்தை எடுத்துக் கொள்வதை விட முனைந்து செயல்பட்டு, தமிழகத்தின் சமூகப் பொருளாதார அந்தஸ்தை உயர்த்துவதற்கு நாம் அனைவரும் பாடுபடவேண்டு மென்பதுதான் என்னுடைய நோக்கமாக அமைந்திருக்கிறது, நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த நாட்டிலே வறுமையின் எல்லைக் கோட்டிற்கு கீழே 50 சதவீதத்திற்கு மேலே உள்ள மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரப்படி நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த மக்களுடைய பொருளாதார வசதியைப் பெருக்குவதற்கும், அதன் மூலமாக சமூக அந்தஸ்தை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங் களை நாம் தீட்டி வருகிறோம். அதிலும் குறிப்பாக, நம் முடைய முதல்வர் புரட்சித் தலைவருடைய ஆட்சி அமைந்த தற்குப் பிறகு கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை மைய மாகக் கொண்டு இன்றைக்குப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்படு கின்றன.

[மாலை 4-50]

ஆனால், இந்தத் துறையிலே அந்த நோக்கங்கள் எப்படி நிறை வேற்றப் படுகின்றன என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால், எந்த அளவிற்கு இந்தத் துறையிலே மிக வேகமாகச் செயல் பட வேண்டுமென்பதை உணர முடியும். சிறு தொழில் வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும், குடிசைத் தொழில் வளர்ச்சித் திட்ட மாக இருந்தாலும், கிராம தொழில் வளர்ச்சித் திட்டமாக இருந் தாலும், நடுத்தர தொழில் வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் இப்படிப் பல்வேறு திட்டங்களைப் போட்டாலும், அடிப்படை யிலே கிராமப் பொருளாதார நியதிகளை மாற்றக் கூடிய பெரும்

சக்தி பால் வளத் துறையிடம்தான் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 3 கோடி ரூபாய் செலவு செய்து ஒரு மாவட்டத்திலே மையமான பகுதியிலே பால் பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்துகிறோம் என்றால், ஒரு நாளைக்கு 1 இலட்சத்து 50,000 லிட்டர் பாலை அந்தத் தொழிற்சாலை பவுடராக ஆக்குகிறது என்றால், அதன் மூலம் எத்தனை ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 3 கோடி ரூபாய் செலவு செய்தால் கிட்டத்தட்ட 30,000 குடும்பங்கள் இதன் மூலம் பலன் பெற முடிகிறது. இப்படி 3 கோடி ரூபாய் செலவு செய்து 30,000 குடும்பங்கள் பலன் பெறக் கூடிய ஒரு தொழில் உலகத்திலே வேறு ஏதாவது இருக்கிறதா என்றால, இல்லை. எனவே, வளர்ந்த நாடுகள் எப்படி வளர்ந்தன என்று பார்க்கின்றபொழுது, அடிப்படையிலே கிராமப் பொருளாதாரத்தை அவர்கள் உயர்த்தும் நோக்கத்தோடு, பால் வளத் துறையிலே அவர்கள் வெற்றி பெற்றதற்குப் பிறகுதான் மற்ற துறைகளிலே அவர்கள் தங்கள் சாதனைகளைக் குவிக்க முடிந்திருக்கிறதே தவிர, பால் வளத் துறையிலே வெற்றி பெறாத எந்த ஒரு நாடும் பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைந்து விட முடியாது என்று பல நாடுகளின் வரலாறுகள் நமக்குச் சொல்லிக் கொண்டிருககின்றன.

எனவேதான், தமிழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி பால் பெருக்கு இரண்டாவது திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இன்றைக்கு இருக்கிறது. அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்ற கொள்கை ரீதியான பிரச்சனை எழுப்பப்பட்ட பொழுது கொள்கை ரீதியாக பல்வேறு பிரச்னைகள் இருந்தாலும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பல இலட்சக் கணக்கான குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு—குறிப்பாக கிராமங்களிலே வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலைமைகள் தோன்றியதற்குப் பிறகு, அதற்காகச் சில கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் கொண்டாவது இந்த பால்பெருக்கு இரண்டாவது திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை எண் 1,000 மூலமாக, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகப் பெரிய வேகமும், கட்டுப்பாடும் கூடிய முன்னேற்றம் இருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வேகம் இன்னும் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு இதே கதியிலே இயங்கிச் சென்றால், நிச்சயமாக நாம் இன்னும் மிகப் பெரிய அளவிற்கு இந்தத் துறையிலே சாதனைகளைச் செய்ய முடியும்.

[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 31

முன்னுரையாகச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நாட்டின் பெருமை அல்லது வலிமை எதை வைத்து அமைந்திருக்கிறது என்று பார்க்கிறபொழுது ஜனத்தொகையை வைத்து அது அமையவில்லை. மக்கள் பெருக்கத்தை வைத்து மரியாதை இப்பொழுது கிடைப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் அந்த நாட்டிலுள்ள இயற்கை வளங்கள், குறிப்பாக நில வளம், நீர் வளம், காட்டு வளம் அத்துடன் கால்நடைச் செல்வம் அந்த நாட்டில் எவ்வளவு முறையாக இருந்து பயன்படுத்தப் படுகிறதோ அதை வைத்துத்தான் பெருமை, வலிமை கூட இன்றைக்கு நிர்ணயிக்கப்படுகிறது. அப்படிப் பார்க்கின்ற பொழுது, கால்நடைச் செல்வம் நமக்கு இன்றியமையாத ஒன்றாக இன்றைக்கு ஏற்பட்டது அல்ல, மனித இனம் தோன்றி சமுதாய அமைப்பிற்குள் வந்து அவர்கள் வாழத் தொடங்கிய காலத்திலே யிருந்து கால்நடைச் செல்வங்கள் அவர்களுடைய பொருளாதாரத்தைக் கணக்கிடக் கூடிய அளவுகோலாக இருந்திருக்கிறது. இன்றைக்கும் நவீன காலத்திலும் பார்க்கிறோம். ஒருவருடைய வீட்டிலே கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அதை வைத்துத்தான் அவருடைய பொருளாதார அந்தஸ்து இன்றைக்கும் நிர்ணயிக்கப்படுகிறது. கால்நடைச் செல்வங்களை வைத்து, பால் பெருக்கு வளத்தை அதிகரித்து, அதன் மூலமாக வேலை வாய்ப்பு அளித்து, பொருளாதாரத்தைப் பெருக்கிய நாடுகள் இன்றைக்கு நிமிர்ந்து நிற்கின்ற நிலைமையைக் காண்கிறோம். டென்மார்க் நாடு இந்தத் துறையை வைத்துத்தான் முன்னேறிச் சென்று இருக்கிறது.

இந்தத் துறையின் மூலமாக இயற்கையாக அதிகக் கால்நடைகளை வளர்க்க வேண்டும். மக்கள் செல்வம் குறைந்து, கால்நடைச் செல்வம் வீட்டிலே அதிகமானால் நிச்சயமாக இந்த நாட்டின் பெருமை உயரும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லும் பொழுது மிகச் சிறந்த சில கருத்துக்களைச் சொன்னார்கள். முதலாவதாக, மாடுகளைக் கேரளாவிற்கு அனுப்புகிறார்கள், அராபிய நாடுகளின் பணம் இங்கே உள்ள சந்தைக்கு வந்து மாடுகளைக் கூடுதலான விலைக்குக் கேட்பதால் ஏழை விவசாயிகள் அதை வாங்க முடியவில்லை என்று சொன்னார்கள். இந்தக் கருத்தை அரசு நிச்சயமாகப் பரிசீலித்தாக வேண்டும், பரிசீலிக்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கால்நடைச் செல்வத்தின் தரத்தை உயர்த்தி, இந்தக் கால்நடைச் செல்வத்தைப் பயன்படுத்தி, அதிகமான அளவிற்கு பால் பெருக்குத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகிறேன். நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 40 இலட்சம்

கறவை இனம் இருக்கிறது. இவ்வாறு கறவை மாடுகள் 40 இலட்சம் என்றால் 17 இலட்சம் மாடுகள்தான் இன்றைக்குப் பால் உற்பத்தியிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. மீதமிருக்கிற மாடுகள் பால் உற்பத்தியிலே ஈடுபடுத்தப்படவில்லை. அதற்குக் காரணம் சில இடங்களிலே பால் கட்டுப்படியாக வில்லை. பால் உற்பத்தி செய்கின்ற முயற்சியிலே ஈடுபடுகிற பொழுது எங்களுக்கு விலை கட்டுப்படியாகவில்லை. ஆகவே, அதற்காக சாணத்திற்காகவும் உழவுக்காகவும் வேறு பணிக் காகவும் கறவை மாடுகளைப் பயன்படுத்துகிற நிலைமையைப் பார்க்கிறோம். அதோடு, முறைப்படி தீவனங்கள் கொடுக்கக் கூடிய வசதியில்லாத காரணத்தாலே மாடுகள் கறவைக்காகப் பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. மூன்றாவதாக செயற்கை கருவூட்டல் முறைகள் அந்த மாடுகளிலே வெற்றி கரமாக அமையவில்லையென்று சொல்லப்படுகிறது. அதற்குப் பல நிலைகள் காரணமாக இருக்கலாம். உதாரணமாக, மாண்புமிகு பாலகிருஷ்ணன் அவர்கள் செயற்கைக் கருவூட்டல் மூலமாக, மாடுகளுக்கு 'ஆர்ட்டிஃபிஷியல் இன்செமினேஷன்' செய்கிறார்கள். அதனால் பெரிய பலன் கிடைத்ததாகத் தெரிய வில்லை. எல்லா மாடுகளுமே மலட்டுத் தன்மையிலே இருக் கின்றன என்று சொன்னார்கள். இந்தச் செயற்கைக் கருவூட்டல் முறையிலே மாடுகளுக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதா என்றால், நிச்சயமாக இருக்க முடியாது. காரணம், செயற்கை முறைமூலம் கருவூட்டுகின்ற முயற்சியை மேற்கொள்கின்ற பொழுது, இயற்கைத் தன்மை கெட்டுவிடாத அளவுக்கு, மாடு களுடைய உணர்வுகள் பாதிக்காத அளவுதான் விஞ்ஞான முறை களைக் கையாளுகிறோம். ஆனால், நம்முடைய ஒருசில கவனக் குறைவுகள் காரணமாகவும், அல்லது பருவ காலத்தை உணர்ந்து இந்த செயற்கைக் கருவூட்டல் முறையைக் கையாளவேண்டு மென்பதைக் கற்றுக்கொள்ளாத காரணத்தாலும் சில நேரங்களிலே, இதிலே தோல்விகள் ஏற்படலாம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், ஹீட் பீரியட்'— மாடு குறிப்பிட்ட காலத்திலே சினைப்படுவதற்கு தயாராக இருப்பதை முன் கூட்டியே அறிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பசு மாடு என்று சொன்னால், வெளியே தன் குரலை உயர்த்திக் காட்டுவதன் மூலமாக தான் அந்த நிலைக்குத் தயாராக இருப்ப தாகச் சொல்லப்படுகிறது. ஆனால், எருமை மாட்டைப் பொறுத்த வரையில் அது குரல் கொடுப்பதில்லை. பசு மாட்டை விட எருமை மாட்டுக்கு நாணம் கொஞ்சம் அதிகம் என்று சொல்கிறார்கள். ஒருவேளை அதனால் குரல் கொடுக்காமல் இருக்கலாம். (குறுக்கீடு.) எருமை மாடும் கத்தும் என்று சொல் கிறார்கள். ஒருவேளை, மெல்லிய குரலில் கத்தினாலும் கத்தலாம். அந்தக் காலத்தைக் கணக்கிடவேண்டும். காலத்தை முறையாகக் கணக்கிட்டு, 6 மணி நேரத்திற் குள்ளாக செயற்கைக் கருவூட்டல் முறையை ஏற்றினால், அந்த மாடுகள் நிச்சயமாக இந்தப் புதிய செயற்கைக் கருவூட்டல் முறை மூலமாக நல்ல தக்க பலன் பெறும்.

[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 31

பாக்கூர் சுப்பிரமணியம் அவர்கள் ஃப்ரோசன் செமன் டெக்னாலஜி' மிகப் பெரிய சாதனையை ஆற்றி வருவதாகச் சொன்னார்கள். உண்மையிலே, இந்தியாவிலே பெருமை படத்தக்க அளவுக்கு இந்தத் துறையிலே, இந்தச் செயற்கைக் கருவூட்டலிலே வெற்றி பெற்று வருகிறோம்.

தர்மபுரி மாவட்டத்திலே இந்த உரை விந்துத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். மற்ற மாவட்டங்களிலும் இதனை அமுல்படுத்தி வருகிறோம். இந்த உரை விந்துத் திட்டத்தினால் ஏற்படும் நன்மையை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த உரை விந்துத் திட்டம் என்பது மிக உயர்ந்த காளையிடமிருந்து பெறப்பட்ட அந்த விந்துவைப் பாதுகாப்பாக வைத்து, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கூடப் பாதுகாப்பாக வைத்து விடலாம். அது கெட்டுவிடாது. ஒரு மாட்டிலே இருந்து எடுக்கக்கூடிய விந்தை வைத்து 40,000 மாடுகளை செயற்கை முறை மூலமாகக் கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆக, நாட்டு மாடுகளுக்குக் கூட நாம் செயற்கை முறையில் கருத்தரிக்க நடவடிக்கை எடுக்கிறோம். அதன் மூலமாக, இந்த நாட்டுக்குக் கிடைக்கின்ற கன்று, பெரிதாகி அதுவே ஒரு கன்றை ஈன்று பால் கொடுக்கும்போது, முதலாவதாக அந்தக் கன்றின் தாய் 3 லிட்டர் பால் கொடுக்கும் என்று சொன்னால், இந்த உரை விந்துத் திட்டத்தின் மூலமாகப் பயன்பெற்ற மாடுகள், 6 லிட்டர் பால் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. புதிதாக, மாடுகளை எங்கோயிருந்து கொண்டு வந்து குவிக்க வேண்டுமென்பதை விட, இருக்கிற 40 இலட்சம் மாடுகளின் தரத்தை உயர்த்த நாம் முன்னெச்சரிக்கையாக பல நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும். கால்நடைப் பராமரிப்புத் துறையும், பால் வளத் துறையும் இரண்டு முனைகளிலே இதற்குத் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் மூலமாக, நாட்டு மாடுகளுடைய தரம் உயர்த்தப்பட்டு அதனுடைய உற்பத்தித் திறன் அதிகமாக்கப் படுகிறது. அதன் மூலமாக, பால் பெருக்கு அதிகமாக வர வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே திரு. பாலகிருஷ்ணன் குறிப்பிட்ட பல கருத்துக்களை ஒட்டியே மற்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருக்கிற காரணத்தாலே அவருக்குப் பதில் சொல்வதன்மூலமாக மாண்பு மிகு உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் பதில் சொன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5-00]

செயல்படாத சங்கங்கள் நிரம்ப கிராமங்களில் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதை நான் மறுப்பதற்கு இல்லை. சங்கங்களில் பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. பல்வேறு

1979 மார்ச் 31] [திரு. கே. இராஜா முகமது]

காரணங்களுக்காக அவைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே ஒன்று, மான்யம் கிடைக்கிறது, நிதி உதவி கிடைக்கிறது. எனவே, அந்த நிதி உதவி அனுபவித்துக்கொள்கிற வரையில் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அவைகள் வந்து இருக்கலாம். குறிப்பாக, பால் வழங்கும் சங்கங்கள் என்று அமைத்து இருந்தார்கள். அந்தச் சங்கங்களில் பால் உற்பத்தியில் ஈடுபடாதவர்கள், இன்னும் சொல்லப்போனால், பால் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் கூட உறுப்பினர்களாக இருந்து பணியாற்றி வரும் சூழ்நிலை இருந்தது. அதனால்தான் நாம் இன்று புதிய முறையை உருவாக்கியிருக்கிறோம். அவைகள் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் என்று இருக்க வேண்டும். உண்மையில் பால் உற்பத்தியில் ஈடுபட்டு இருப்பவர்களே அந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அந்த உற்பத்தியில் ஈடுபடாத, அந்தத் தொழில் சம்பந்தம் இல்லாத, அந்தத் தொழிலைப் பற்றி தெரிந்து கொள்ளாது அல்லது 10 ரூபாய் 11 ரூபாய் செலுத்தி உறுப்பினர்களாக ஆவதற்கு மட்டும் கட்டிவிட்டு, அந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள், அந்தச் சங்கங்களை தங்களுடைய நோக்கங்களுக்காக செயல்படுத்தவேண்டும் என்ற நிலையில் உள்ளவர்கள் அதிலே இருக்கக்கூடாது என்று அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையில் தான் மிகப்பெரிய மாறுதல் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உத்தராபதி அவர்கள் சொன்னார்கள். 5,000-க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருந்தன. இன்று கலைக்கப்பட்ட சங்கங்கள், செயல்படாத நிலையில் உள்ள சங்கங்கள் என்பதை நீக்கிவிட்டுப் பார்த்தால் 1,800 சங்கங்கள் தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொண்டு தான் இங்கே இந்த புள்ளி விவரத்தைக் கொடுத்து இருக்கிறோம். அதை எப்படி மாற்றி அமைப்பது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். தற்போது 1,805 பிரைமரி பால் உற்பத்திச் சங்கங்கள் 'ஆனந்த' பாணியில் நிறுவப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில் 587 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 'ஆனந்த' பாணி சங்கங்கள் என்றால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் என்று பொருள். அந்த வகையில் மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி 78 சங்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. 1979—80ஆம் ஆண்டில் 250 சங்கங்களை மாற்றியமைக்கவும், சுமார் 500 ஆனந்த் பாணி சங்கங்களைப் புதிதாக அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. செயல்படாத நிலையில் உள்ள 45 சங்கங்கள் நடப்பாண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 1979—80ஆம் ஆண்டில் இந்த நிலையில் இருக்கும் 100 சங்கங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று செயல்படவேண்டும் என்று இன்றைக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதோடு மட்டுமல்லாமல், இப்படி அந்தந்த மாவட்டங்களில் உள்ள சங்கங்களின்

[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 31

பிரச்னைகள் அங்கே இருக்கக்கூடிய விவசாயக் கூலிகள், ஏழைகள் விதவைகள், மற்றவர்களுக்கு எல்லாம் பல்வேறு மாநில மத்திய அரசின் திட்டங்கள் மூலம் ஊக்கம் அளிக்கும் வகையில் பால் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தி, அங்கே சரியான நிலைமை ஏற்படவேண்டும் என்று இந்த அரசு பால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் என்றும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என்றும், மாநில அளவிலே அந்த ஒன்றியங்களின் இணைப்பு மையமாக—பெடரேஷன்—அமைக்க வேண்டும் என்று முடிவு செய்து இருக்கிறோம். இதன் மூலமாக ஏற்படும் நன்மை என்னவென்று சொன்னால், விவசாயிக்குக் கல்வி அறிவு இருக்கிறதோ இல்லையோ அவர் வீட்டிலே இருக்கிற நேரத்திலே சங்கத்திலே தன்னை உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்வதன் மூலம், அவன் உற்பத்தி செய்யும் பாலை அங்கே நியாயமான விலை கொடுத்து கொள்முதல் செய்வதற்கும், அந்தக் கொள் முதல் செய்யும் பாலை அந்த ஒன்றியத்தின் மூலமாக பல்வேறு பால் பவுடர் தொழிற்சாலை, பால் பதப்படுத்தும் தொழிற் சாலை வைத்து, அதிலே வரும் லாபம் அந்த விவசாய பெருமக்களைச் சென்று அடையும் என்பதையும், மாநில அளவில் அதை இணைத்து இருக்கிறோம் என்றால், உற்பத்தியாகும் பால் சில நேரங்களில் அதிகமாக உற்பத்தியாகும். அதாவது ஒரு 6 மாத காலத்திற்கு அதிகமாக பால் கிடைக்கிறது; 6 மாதத்திற்குக் குறைவாகக் கிடைக்கிறது. அதிகமாகக் கிடைக்கும் பாலை நாம் பிற பொருள்களாக மாற்றி அமைத்து மாநில அளவில் இல்லாமல், மற்ற மாநிலங்களில் விற்பதற்கும் முயற்சி எடுத்து இருக்கிறோம். குஜராத்தில் இருப்பதைப் போல்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—அமைச்சர் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வார் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். இன்னும் இரண்டு மானியக்கோரிக்கைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:—இன்னும் 10 நிமிடத்தில் முடித்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—குறைவாகப் பேசி நிறைவாகச் சொல்லப்போவதாகச் சொன்னீர்கள். அதனால் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:—25 நிமிடம் என்பது மிகக் குறைவான நேரம் தான். நான் இந்தத் திட்டங்களை அப்படியே வாசித்து விடுகிறேன். அது தான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1979 மார்ச் 31] [திரு. கே. இராஜா முகமது]

பால் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை—1977–78–ல் 2,273, நடப்பு ஆண்டில் 2,852 என்று இருக்கிறது. இந்தச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 6.77 லட்சத்திலிருந்து 7.95 லட்சமாக உயர்ந்துள்ளது. இச்சங்கங்களில் உள்ள பங்கு மூலதனம் 1.6 கோடியில் இருந்து 1.8 கோடியாக அதிகரித்து இருக்கிறது. சங்கங்கள் வளர்ச்சி அடைந்துகொண்டு இருக்கின்றன.

நடப்பு ஆண்டில் திருச்சி, ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு ரூ. 6.50 லட்சமும், சேலம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு ரூ. 10 லட்சமும், பால் கையாளும், பால் பதனிடும் திறனை அதிகரிக்க நிதி உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் பால் வழங்கும் ஒன்றியங்களில் பால் கையாளும், பால் பதனிடும் வசதிகளை அதிகரிக்க ரூ. 19 லட்சம் 1979–80ஆம் ஆண்டுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

1979–80-ல் கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய மாவட்டப் பகுதிகளில் மேலும் ஐந்து பால் கொள்முதல் குழுக்களை அமைத்து மேலும் பல பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கும் பணிக்காக ரூ. 11.76 லட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் தஞ்சை, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மூன்றுமாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

நடப்பு ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க கடனாக ரூ. 20 லட்சம் வழங்கப்படுகிறது. 1977–78ஆம் ஆண்டில் 43 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 2 லட்சம் அரசின் பங்கு மூலதனமாக அளிக்கப்பட்டது. நடப்பாண்டில் குறைந்தது 50 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ. 3.10 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கப்படும். 1979–80ஆம் ஆண்டில் சுமார் 100 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 3 லட்சம் பங்கு மூலதனமாக அளிக்கப்படும்.

கிராமிய பால் பண்ணை விரிவாக்க சேவைத் திட்டத்தின் கீழ் பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் பாத்திரங்கள், சோதனைக் கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள் ஆகியவைகளை வாங்க 1979–80ஆம் ஆண்டில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் வரும் வருஷத்திற்கு எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கோவை நகரம் 5 லட்சம் மக்களுக்கு மேல் இருக்கக்கூடிய இடம். அது கார்ப்பரேஷனாகி 8 லட்சம் மக்களுக்கு மேல் ஆகப் போகிறது. நல்ல பால் வழங்கக்கூடிய திட்டத்தை அமுலாக்கக்கூடிய திறமையான ஒரு அமைப்பு அங்கு இல்லை. இருக்கிற யூனியனில் பல பிரச்சினைகள். நகரத்தில் இருக்கும் 5 லட்சம் மக்களுக்கும் முறையாக பால் வழங்க பால் வழங்கும் யூனியனை விஸ்தரித்து பரிபூரணமாக அரசாங்கத்தின் மேற்பார்வையில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்லிக் கொண்டே வந்து கொண்டிருந்தேன். கோவைக்கு வருவதற்கு முன்னால் உறுப்பினர் அவர்கள் முந்திக் கொண்டுவிட்டார்கள்.

முதலாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட திட்டங்களை ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் செயல்படுத்த இருக்கிறோம்.

அம்மாதிரி இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் வேலூர் , கோவை, ஊட்டி ஆகிய இடங்களில் புதிய பால் வழங்கு சங்கங்கள் அமைக்கப்பட்டு பால் உற்பத்தி அதிகரிக்கப்படும். அதற்கு மேல் பால் உற்பத்தியாளர் ஒன்றியமும், பால் வழங்கும் ஒன்றியமும் இணைக்கப்பட்டு ஒரே ஒன்றியமாக அமைக்கப்பட்டு மேலும் கூடுதலாக கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி ஆங்காங்குள்ள கிராமங்களும் பயன்படக்கூடிய வகையிலும், நகரத்திலுள்ளவர்களுக்கும் பால் கிடைக்கக் கூடிய வகையிலும் ஆன முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு பால் தட்டுப்பாடு இல்லாமல் கோவை போன்ற பெரிய நகரங்களுக்குக் கிடைக்கும்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 84 லட்சம் ரூபாய் செலவில் நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்திக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் மாவட்டத்திலுள்ள 10 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற வழிவகை செய்யப்படும்.

சிறபபுக் கால்நடை கன்று வளர்ப்புத் திட்டம் தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இதற்காக மொத்தம் ரூ. 237 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1979 மார்ச் 31] [திரு. கே. இராஜா முகமது]

நான்கு மாத கிடாரி கன்றுகளை 28 மாதங்கள் வரை பராமரித்து நல்ல கலப்பினப் பசுவாக உருவாக்கும் வகையில் கன்றுகளுக்கான தீவனத்தை கடனாகவும், மானியமாகவும் அளிக்கிறோம். இத் திட்டத்தில் இதுவரை சுமார் 8,000 கன்றுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வரட்சிக்கு இலக்காகும் பகுதி என்ற அடிப்படையில் 1977–78 ஆம் ஆண்டில் 16.27 லட்சம் ரூபாயும், 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 32·87 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதே திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரியில் ரூ. 175 லட்சம் செலவில் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு முழுத் தொகையும் மானியமாக உதவும். ரூ. 48.92 லட்சம் தருமபுரி மாவட்டத்தின் பால் வள மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அளிக்கப்படுகிறது.

[மாலை 5–10.]

இத் திட்டத்தின் கீழ் உறைவிந்து முறை தருமபுரி மாவட்டத்தில் உள்ள எல்லா பால் கூட்டுறவுச் சங்கங்களிலும் தீவிரமாகச் செயல் படுத்தப்படும். குறிப்பாக மேற்கு மலைத் தொடர்ச்சி வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூபாய் 12 இலட்சம் செலவில பாலடைக் கட்டி தொழிற் கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

இப்படி பல்வேறு திட்டங்களின் மூலமாக பால் உற்பத்தியை அதிகப்படுத்தி அதன் விநியோக முறையை ஒழுங்குபடுத்தி உபரி காலங்களிலே கிடைக்கக் கூடிய பாலையும் மற்ற துணைப் பொருட்களையும் நல்ல விலைக்கு விற்பனைக்குக் கொடுத்து கிடைக்கக்கூடிய லாபத்தை வைத்து உறுப்பினர்களுக்கு லாபத்திலே பங்கு கொடுப்பதாகிய ஒரு முற்போக்கான திட்டத்தை இந்தத் துறை இன்றைக்கு விரிவாக்கி வருகிறது.

பால் அதிகமாகக் கிடைக்கின்ற காலங்களில் அதாவது சீசன் காலத்தில் கொழுப்பு சத்துக் கொண்ட பால் ஒரு கிலோ 22 ரூபாயும் பால் குறைவாகக் கிடைக்கின்ற காலங்களில 24 ரூபாயும் என்ற அளவில் இருந்தது. நாங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்திலேயே முதன் முறையாக, ஏன் இந்தியாவிலேயே என்று கூடச் சொல்லலாம், அதாவது பால் அதிகமாகக் கிடைக்கின்ற காலங்களிலே கிலோ 24 ரூபாயாகவும் பால் குறைவாகக் கிடைக்கின்ற காலத்தில் 26 ரூபாயாகவும் உயர்த்தி இருக்கிறோம். இது என்ன கொள்கை என்று நீங்கள் கேட்கலாம்.

[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 31

பசும்பால் என்று சொன்னால் குறைந்த பட்சம் 4.5 சதவீதம் கொழுப்பு சத்து இருக்க வேண்டும். 8.5 சதவீதம் பிற சத்துப் பொருட்கள்இருக்க வேண்டும்.இந்த அடிப்படையிலே தான் நாம் இன்றைக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த பால் விலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு சாதிக்பாட்சா அவர்கள் ஒன்று கேட்டார்கள். அதாவது ஒரு லிட்டர் பால் ஒரு ரூபாய் 40 காசு என்றும், ஒரு ரூபாய் 50 காசு என்று பால் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்படுவதாகச் சொன்னார் கள. அது சரியான கணக்கல்ல.

சாதாரணமாக எருமைப்பாலில் 7 சதவீதத்திற்கு மேல் கொழுப்புச் சத்தும் மற்ற வேறு பொருட்கள் கிட்டத்தட்ட 9 சதவீதமும் கிடைக்கின்றன. நாம் குறைந்த பட்சம் கொழுப்புச் சத்து 4 சதவீதமும் பிற சத்துக்கள் 8.5 சதவீதமும் இருக்க வேண்டும் என்ற கணக்குப் போட்டு விலை நிர்ணயிக் கிறோம். சாதாரணமாக 7 சதவீதம் கொழுப்பு சத்தும் 8.5 சதவீதம் பிற சத்துக்களும் இருந்தால் எருமைப்பால் லிட்டர் ரூ. 2 என்ற அளவில் வாங்குகிறார்கள். அதே போல் பசும்பால் லிட்டர் ஒரு ரூபாய் 65 காசு என்ற அளவில வாங்குகிறார்கள். இவ்வாறு உயர்த்த வேண்டும் என்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவு அனுப்பி அதன் மூலமாக விவசாயிகளுக்கு ஒரு கட்டுப்படியான விலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி விவசாயிகள் உயர் ரக புல் வகைகளைத் தயாரித்து அவர்கள் வீண் செலவைக் குறைப்பதற்கு முயற்சித்து அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகமாக்க முயற்சித்தால் அது உப தொழில் என்றிருப்பது நேரடித் தொழில் என்ற அளவுக்கு மாறும். அந்த அளவுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய ஒரு சூழ் நிலை உருவாகும். எனவே அதற்காக நாம் அனைவரும் விவ சாயிகளுக்கு இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த வகைகளில் அவர்களை ஈடு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது தொழி லாளர்கள் பிரச்சினை. இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் மிகப் பணிவோடு அரசின் சார்பிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பால் சங்கங்களிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் ஒரு அவசியமான பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். நாங்கள் இப்போதைய பொறுப்புக்கு வந்த பிறகு தொழிலாளர்களின் கோரிக்கைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை மட்டும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

பால் விற்பனை மையங்களிலே பணியாற்றுகிறவர்கள் தினக் கூலி அடிப்படையில் பகுதி நேர ஊழியர்களாகப் பணியாற்றுகிறார்கள். ஆனால் பி. டி. எஸ். போன்ற நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு எவ்வாறு போனஸ் கொடுக்கிறார்களோ அதே போல் தர வேண்டும் என்று கோருகிறார்கள். ஆனால் இவர்கள் தொழிலாளர்களே அல்ல. அவர்கள் ஒப்பந்த அடிப்படையிலே காலையிலும் மாலையிலும் பாலை விநியோகம் செய்வதற்காக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

பம்பாயிலே பால் விற்பனையில் ஈடுபடுகிறவர்களுக்கு தினக் கூலியாக 5 ரூபாய்தான் தரப்படுகிறது. அங்கே பணியாற்றுகிறவர்களில் கல்லூரி மாணவர்கள், விதவைப் பெண்கள் மற்றும் வேலை வாய்ப்பில்லாத சிலர் போன்ற எல்லோருமே இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நமது மாநிலத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு 175 ரூபாய் மாதத்திற்கு சம்பளமாகக் கொடுக்கிறோம். இது பம்பாயிலே கொடுப்பதைவிட கூடுதலாக ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் இவர்கள் தங்களையும் தொழிலாளர்களாக ஏற்றுக் கொண்டு எங்களுக்கு ஒரு டைம் ஸ்கேல் பிக்ஸ் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். நிர்வாகத்தின் அன்றாடப் பணிகளுக்கு தேவையானவர்கள் அல்ல என்பது மட்டுமல்ல. அதனால் ஏற்படுகின்ற செலவும் மிக அதிகமாகும். அப்படி இருந்தும் கூட அந்தப் பகுதி நேர ஊழியர்களாக இருந்தவர்களை, அதாவது தினக் கூலிகளாக இருந்தவர்களை அங்கங்கே வேலை காலி ஏற்படுகின்ற போது அந்த வாய்ப்புகளை நாம் அவர்களுக்கு கொடுத்திருக்கிகிறோம்.

3 ஆண்டுகளாக பணி புரிந்த 45 தற்காலிக தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 253 என்ற அளவிலே இளநிலை பணியாளர்களாக, ஜூனியர் அசிஸ்டெண்டுகளாக 6–12–78 அன்று நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் 27 பிராசஸ் ஹெல்பர் தொழிலாளர்கள் ரூ. 265—5—325—10—425 என்ற சம்பள விகிதத்தில் கிரேடு-2 ஆபரேட்டர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது பணி பாதுகாப்பு என்ற முறையிலே தற்காலிகமாக உள்ளவர்களை நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசு முடிவெடுத்து, இன்றைக்கு அதை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். எதை எதை ஏற்றுக்

கொள்ள முடியுமோ, அதை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் அவர்கள் நிறைவேற்ற முடியாத இரண்டு கோரிக்கைகளை வைத்து அவர்கள் இந்தப் பிரச்னையை உருவாக்கியிருக்கிறார்கள். ஒன்று பி.டி.எஸ். அதாவது பார்ட் டைம் சர்வீஸ் அதாவது காலை 4 மணியிலிருந்து 7 மணி வரையிலும், மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் பகுதி நேர ஊழியர்களாக பணி செய்யக்கூடியவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் பின்பற்ற முடியாத ஒன்று என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிற மாநிலங்கள் கொடுக்காத அளவுக்கு, இந்த ஆட்சி வந்த பிறகு அவர்களுக்கு 175 ரூபாய் கிடைக்கின்ற அளவுக்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. 3 ஆண்டுகள் நிரம்பப் பெற்ற தினக் கூலி பெறும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கவும் உத்தரவு போட்டிருக்கிறோம். அவையெல்லாம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், எந்த எண்ணத்தோடு செயல்படுகிறார்கள் என்றால், சமூக விரோதச் செயல்களை வர்க்கப் போராட்டம் என்று கூறிக்கொண்டு நம்முடைய சித்தாந்தங்களை முடமாக்குகின்ற வகையிலே செயல்படுகின்றார்கள்.

பால் என்பது ஏழைகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் தேவையான ஒன்று. அதிலே கலப்படம் செய்து விட்டு, வேலையிலிருந்து திடீரென்று நின்று விடுகிறார்கள். இன்னொரு இடத்தில், ஒரு பாதியை ஒரு பார்ட் டைம் சர்வீஸ் செய்யக் கூடியவர் தன்னுடைய பங்கிற்கு பக்கத்தில் இருக்கக் கூடிய டீக் கடைக்காரருக்கு விற்று, அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடியிருக்கிறார். இப்படிப்பட்ட சமூக விரோதிகளை ஆதரிக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தயவுசெய்து பிரச்னைகள் எதுவாக இருந்தாலும், என்னிடம் வந்து விவாதிக்கலாம். அவர்கள் தங்களிடம் சொல்லுகின்றபோது, வேறு விதமாகவும் சொல்லியிருக்கலாம். ஆனால், நாம் எல்லாம் இது பற்றி உட்கார்ந்து பேசுவோமேயானால், என்ன செய்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இந்தக் குறைகளையெல்லாம் சொல்லும் போது, கொஞ்சம் பொறுப்புணர்ச்சியோடு நீங்கள் அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். இது வரை நீங்கள் சொல்லி வந்த ஆலோசனைகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவில், இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுகிறேன்.

திரு. கு. ரமணி : தொழிலாளர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்ததை நாங்கள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். சமூக விரோத சக்திகள் கட்டுப்பாடு இல்லாமல், அராஜகத்தில் இறங்கும் எந்தத் தொழிலாளியாக இருந்தாலும், அவர்களை நாங்கள் தொழிற் சங்கத்தில்

1979 மார்ச் 31] [திரு. கு. ரமணி]

அங்கத்தினர்களாக ஏற்பதில்லை. அது தவறு. இந்தப் பிரச்னை 110 வேன் மஸ்தூர்களைப் பற்றியது. அந்த வேன் பிரைவேட் ஓனர்களுடையது. ஆனால், தொழிலாளர்கள் உங்களுக்காக ஊழியம் செய்கிறார்கள் என்பது உண்மையா ? இல்லையா ? அந்தத் தொழிலாளர்கள் இப்போது ரூபாய் ஆயிரம் முதல், எட்டாயிரம் வரையில் கொடுக்க வேண்டுமென்று சொல்வது தப்பு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே கேட்டுக் கொண்டிருந்தால் நேரம் இல்லை. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கு. ரமணி : அந்த 110 வேன் மஸ்தூர்களுக்கு தொழில் பாதுகாப்பு இல்லை. அந்தத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபாயிலிருந்து எட்டாயிரம் ரூபாய் வரையில் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு விசாரணை வைத்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொன்னதையே தாங்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள், அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்குப் பிறகும்.

[மாலை 5-20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேன் மஸ்தூர்களைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறார்கள். அவர்களுக்கு எந்த வகையான பணி இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது, முன்னால் என்ன பணி கொடுக்கப்பட்டிருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாதவரம் பண்ணையிலிருந்து பாலை லாரியில் கொண்டு போகும்போது, அதை பாதுகாக்கக் கூடியவர்களால் இந்த வேன் மஸ்தூர்கள் பணியாற்றி வந்தார்கள். லாரியில கொண்டு வரப்படுகின்ற பாலை எந்தெந்த மையங்களில் கொடுக்க வேண்டுமோ அந்தந்த மையங்களில் கொடுத்துவிட்டு, அங்கிருந்து எழுதி வாங்கிக் கொண்டு பாலை சேர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களிடம் இருந்தது. இவ்வாறு பொறுப்பு ஒப்படைத்திருக்கும் போது, பாலதீன் பைகள் உடைந்து விட்டது என்றும், பாட்டில்கள் உடைந்து விட்டது என்றும், பால் சிதறி விட்டது என்றும் கணக்கு எழுதி விடுகிறார்கள், பால் ஒழுகிப் போய் விட்டது என்றால், அவற்றை சேகரித்து பிளாஸ்டிக் பையிலும் வைத்திருப்பதில்லை, திருட்டுப் போய்விட்டது, அல்லது ஒழுகிப் போய் விட்டது என்று ஏதாவது காரணங்களை சொல்லி, பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதின் காரணமாக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களை திரும்

[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 31

பவும் வேலைக்கு எடுக்காமல் இவர்களை பழி வாங்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக புதிய லாரி ஒப்பந்தக்காரர்களிடம் இப்படிப்பட்ட வேலைக்கு அவர்களுடைய ஆட்களையே போட்டுக்கொள்ள வேண்டும் என்றும், லாரியில் பால் போகும்போது, குறைந்தாலும், உடைந்து போனாலும் அவர்களே அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வேன் மஸ்தூர்களை வேறு பணிகளில் அமர்த்திக் கொள்கின்ற சூழ்நிலையில் அவர்கள் மனிதாபிமான உணர்வோடு அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வேண்டுமென்றால் அவர்களை வீட்டுக்குப் போக சொல்லியிருக்கலாம். அப்படி செய்யவில்லை. அவர்கள் செய்த தவறுகளுக்கு முறையான பதிலை சொல்லியிருக்கிறார்களா என்றால் அப்படியும் செய்ய வில்லை. என்னை வந்து சந்தித்தபோது, ஒவ்வொருவரும் துறையிலிருந்து அளிக்கப்பட்ட நோட்டீசுக்கு பதில் அனுப்பு கிறோம் என்று சொன்னார்கள். அதன் படி பதில் கூட அனுப் பாமல் இருந்தார்கள். அத்துடன் நோட்டீசை வாங்கவும் மறுத்திருக்கிறார்கள். இது எப்படி நியாயமாக இருக்க முடியும் மேலும் இப்போது எந்த வித தொழிலாளர் விரோதப் போக்கும் பால்வள நிறுவன அலுவலாளர்களிடம் இல்லை. சொல்லப் போனால், ஒரு முன் மாதிரியாக பால் வள நிறுவனம் தொழி லாளர் ஆதரவு நிறுவனமாக பணியாற்றி வருகிறது என்று சொல்லி இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மான்யத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாளர்கள் சு. பாலன், திரு. சோ. பாலகிருஷ்ணன் ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. விஜயராகவன் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 95,36,000-க்கு மேற்படாததொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

1979 மார்ச் 31]

(ஊ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத்தொழிலும்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ''ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 5,13,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கென தனி வீடுகள் வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டித்தர இதுவரை நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,13,53,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ராஜா சுப்பிரமணியம் கமிட்டி சிபாரிசை சட்டசபையில் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

யானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத்தொழி லும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 5,13,53,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''. என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU P. VIJAYARAGHAVAN : Sir, to discuse the need to establish a new spinning Mill in Vilavancode taluk in Kanyakumari district, I mcre:—

"That the allotment of Rs. 5,13,53,000 under Demand No.26 Handlooms and Textiles be reduced by Rs. 100"

(எ) கோரிக்கை எண் 27—கதர்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,52,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, கதர் ஆடையின் விலையைக் குறைத்து ஏழை எளிய மக்கள் உபயோகிக் கும் முறையில் திட்டம் எடுக்காதது பற்றி விவாதிக்க—

'' மான்யக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,52,51,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து கதர் துணியையும் விற்பனை செய்ய அரசே விற்பனை நிலையம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க :—

'' மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 1,52,51,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. VIJAYARAGHAVAN : Sir, to discuss the need to establish a Khadi Weaving Industry at Palapallam in Vilavancode taluk, Kanyakumari district, I move:

"That the allotment of Rs. 1.52,51,000 under Demand No. 27-Khadi be reduced by Rs. 100/-"

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும், மற்றும் நெசவுத் தொழிலும் என்பது பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பும், கதர் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பும் *அச்சிடப்பட்டு, அவையின் முன்பு வைக்கப்பட்டிருக்கின்றன. அக்குறிப்பேடுகளை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு, அவைகள் அவையின் குறிப்பேட்டிலே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும், அவைகள் பற்றிய

* 254-292....ம் பக்கங்களில் இணைப்புகள் II, III, ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறி, நான் கொண்டு வந்த இந்தத் திர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

*திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உழவுத் தொழிலை அடுத்து, மிகப் பெரிய தொழிலாக நாட்டிலே விளங்குவது நெசவுத் தொழில்தான் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. உழவுத் தொழிலும், நெசவுத் தொழிலும் இரண்டு கண்களைப் போல் உள்ளன என்பதைப் பெரியவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். '' நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை '' என்றும சொல்லியிருக்கிறார்கள். கைத்தறியைப் பற்றி சொல்லுகின்ற போது, '' சின்னச் சின்ன இழை, பின்னிப் பின்னிவரும் சித்திரக் கைத்தறி '' என்று அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி இந்தத் தொழிலைப் பற்றி மிகவும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல இலட்சக் கணக்கான பேர்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்தத் தொழிலில், இன்றையத் தினம் எந்த அளவுக்கு அது சீரழிந்து கிடக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு ஒரு காலத்தில் நம்முடைய கைத்தறித் துணியை ரோம் போன்ற நாடுகளுக்கு வெளிநாடுகளுக்கு நம்முடைய மூதாதையர்கள் ஏற்றுமதி செய்து, வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் நாம் படித்திருக்கிறோம். அத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தத் தொழில் இன்றையத் தினம், அந்த அளவுக்கு நாம் கொண்டு செல்லாவிட்டாலும், இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு உள்ளபடியே நாம் அந்தத் தொழிலை நம்பி வாழ முடியும் என்ற நிலைமையை யாவது உண்டாக்க வேண்டும்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா தலைமை]

இந்தத் தொழில் சிறப்பாக இயங்குவததற்கு நாம் இரண்டே இரண்டுத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்று, நாம் இங்கே உற்பத்தி செய்கின்ற அந்தத் துணிகளை ஏற்றுமதி செய்ய வேண்டும், மற்றொன்று உள்நாட்டு விற்பனை நம்முடைய துணிகளுக்கு வெளிநாடுகளிலே அதிகமாக விற்பனை செய்கின்ற வாய்ப்பை விரிவாக்க வேண்டும். இப்போது நம்முடைய ஹாண்ட்லூம் துறை, கோ—ஆப்டெக்ஸ் துறை வெளிநாடுகளுக்கு துணிகளை ஏற்றுமதி செய்கிறது. இந்த ஆண்டு அதாவது 1978-லே அவர்கள் தந்திருக்கின்ற குறிப்பைப் பார்க்கும்போது 76·15 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்துள்ளதாக இருக்கிறது. அதே நேரத்தில் இந்த முக்கால் கோடி ரூபாய்க்கான துணியை ஏற்றுமதி செய்வதற்காக நம்முடைய அரசு அதிகாரிகள் பல பேர்கள் பல நேரங்களிலே வெளிநாடுகளுக்கு, ஏற்றுமதியை அதிகரிக்க வேண்மென்ற எண்ணத்தோயடு

சென்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டாலும், அதிலே 10 சதவீதம் கூட அவர்கள் ஏற்றுமதி செய்யவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், தனியார் நிறுவனங்கள் எப்படி செயல்படுகின்றார்கள் என்று பார்த்தால், அவர்கள் நம்முடைய கைத்தறித் துணிகளை கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதை எப்படிச் செய்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலே நம்முடைய அரசின் நிர்வாகக் கோளாறா அல்லது இந்த நிறுவனங்களிலே உள்ள அதிகாரிகளின் கோளாறா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தனியார்கள், அதுவும் குறிப்பாக வடநாட்டைச் சேர்ந்த பல நிறுவனங்கள் நம்முடைய கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திலுள்ள துணிகளை வாங்கி அவர்கள் ஏற்றுமதி செய்து வருகிறார்கள். இந்த நிலை மாறவேண்டுமென்று நான் இங்கே மெத்தப் பணிவோடு அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

[மாலை 5-30]

அதைப்போல் ஏற்றுமதி செய்கிறவர்கள் சில கச்சாப் பொருள்களையும், இந்தத் துறைக்கு வேண்டிய சாயம், ரசாயனப் பொருள்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதும் அதற்கு முன்பும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனமே இப்படிப்பட்ட சாயம், கச்சாப் பொருள்களை எல்லாம் இறக்குமதி செய்து உற்பத்தியாளருக்குக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. இடையில், என்ன காரணத்தாலோ அது நிறுத்தப்பட்டு தனியார் கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் ஏற்றுமதி மூலம் கோடிக் கணக்கான ரூபாயை பெறுவதோடு வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்ற ரசாயனப் பொருள்கள் மூலமும் லாபம் பெறுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் துறையை விசாலமாக அமைத்து விட்டால் மட்டும் போதாது. தனியார் துறைக்குப் போட்டியாக இந்தத் துறை ஏற்றுமதி செய்யவில்லை என்றால் இந்தத் துறைக்கு விமோசனமே இல்லையென்ற நிலை வந்துவிடும். ஆகவே, இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்காக பயிற்சி பெற வெளிநாடு செல்கிறார்கள். பல்வேறு துறைகளிலிருந்து இவ்வாறு பயிற்சிக்காக மேல் நாட்டுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் பயிற்சி பெற்று திரும்பி வந்த பிறகு அந்தத் துறையில் அவர்களை வைக்காமல் வேறு துறைக்கு மாற்றுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குச் செலவிடப்படுகின்ற பணம் பாழாவதோடு அந்தத் துறை சீர்கேடு அடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1979 மார்ச் 31] [திரு. து. புருஷோத்தமன்]

அதைப்போல் விற்பனை செய்கிற முறையில் நம்முடைய கைத்தறித் துணிகள் கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும். மக்களை ஈர்க்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்ற நிலையில் இப்போது குறிப்பில் எடுத்துச் சொன்னதுபோல் நவீன வடிவமைப்பு, வண்ண வண்ண டிசைன்களில் கைத்தறித் துணிகளை அமைக்கவேண்டுமென்று முயற்சிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முயற்சி நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அண்மையில் பாலிஸ்டர் துணி கைத்தறியில் வருகிறது என்று சொன்னார்கள். அதற்கு மக்கள் ஆதரவு இருப்பதாக நினைக்கிறேன். அதை மேலும் விரிவாக்கப் போவதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது 550 தறிகள் பாலிஸ்டர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இன்னும் இரண்டாண்டுகளில் 3,000 தறிகள் இதிலே ஈடுபடச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

சைதாப்பேட்டையில் பெருவாரியாக கைத்தறி நெசவாளர்கள் இருக்கும் பகுதியிலே பாலிஸ்டர் துணி நெய்வதற்கு ஒரு தொழில் நுட்ப நிலையமொன்றை ஏற்படுத்தி பாலிஸ்டர் துணி உற்பத்தி செய்வதற்கான பயிற்சி அளித்து, கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி பாலிஸ்டர் துணிகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

கைத்தறி விற்பனையைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது மாநில அரசு அலுவலகங்கள், மருத்துவ மனைகள், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் வாங்கப்படுகிற துணிகள் அத்தனையும் கைத்தறித் துணிகளாக இருக்கவேண்டுமென்று உத்தரவிட்டதன் மூலம் பல கோடி ரூபாய்க்குக் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். இடையில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்தபோது மாநில சர்க்கார் அலுவலகங்களிலே உபயோகப்படுத்தக்கூடிய துணிகள் 50 சதவிகிதம் கதர் என்றும், 50 சதவிகிதம் கைத்தறி துணி உபயோகிக்க வேண்டுமென்றும் உத்தரவு வந்தது. இந்த ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி என்றாலும் கைத்தறித் துணிக்காக நாங்கள் அதிகமாகப் போராடுவோம், வாதாடுவோம், இத்துறை மேம்பாடு அடைய திட்டம் தீட்டி நிறைவேற்றுவோம் என்று சொல்லுகிற நிலையிலும் அந்த நிலை மாற்றியமைக்கப் படவில்லை. உள்ளபடியே கைத்தறித் துறையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால் நம்முடைய மாநில சர்க்கார் அலுவலகங்களிலும், போக்குவரத்துக் கழகங்களிலும், மருத்துவ மனைகளிலும் மற்ற இன்னபிற அலுவலகங்களிலும் நூற்றுக்கு நூறு கைத்தறித்

திரு. து.புருஷோத்தமன் [1979 மார்ச் 31

துணிகளையே வாங்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வேன்.

அதே நேரத்திலே நம்முடைய மாநிலததிலே இருக்கின்ற மத்திய சர்க்கார் அலுவலகங்கள், ரயில்வே போன்ற அலுவலகங் களில் கைத்தறித் துணிகளை உபயோகிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்திலே, வாதாடி அந்த உரிமையை நாம் பெற்றாக வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல்வேறு மாநில சர்க்கார் அலுவலகங்கள் நம்முடைய கைத்தறித் துணிகளை வாங்காமல் மில் துணிகளை வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், சேரன் போக்குவரத்துக் கழகத்திலே மில் துணிகளைத்தான் வாங்குகிறார்கள் என்றும் கைத்தறித்துணி களை வாங்குவதில்லை என்றும் தெரிகிறது. அதைக் கவனித்து அந்த போக்குவரத்துக் கழகத்திலேயும் கைத்தறித் துணியை வாங்குவதற்கு வழி காணவேண்டும்.

மத்திய சர்க்கார் அலுவலகங்களிலே 50 சதவீதம் கைத்தறி துணியை உபயோகப்படுத்த வேண்டும். இதைச் சொல்கிற போது நாங்கள் கதருக்கு எதிரிகள் என்று கருதிவிடக் கூடாது. கதர் இந்திய உபகண்டம் முழுவதும் வியாபித்து இருக்கிறது. ஆகவே கதர்துறை பாதிக்காது. ஆகவே நம்முடைய மாநில சர்க்கார் அலுவலகத்திலேகூட் கைத்தறி துணிகளை வாங்கு வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

டைரக்டர் ஆப் சப்ளைஸ் அண்ட் டிஸ்போஸல்ஸ் என்ற மத்திய அரசின் அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்திலே இந்தி யத் துணைக் கண்டத்திலே உள்ள அரசு அலுவலர்களுக்கு அந்தத் துணியை வாங்கி விநியோகம் செய்து வியாபாரம் செய்கிறார்கள். அதிலேயும் கைத்தறி துணியை விற்கின்ற உரிமையை நாம் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றாக வேண்டும். அதனால் நாம் கோடிக் கணக்கான ரூபாய் வருவாயைப் பெறமுடியும்.

இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களிலே கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையங்கள் 150 இருக்கின்றன. அங்கெல்லாம் நம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற சிறு சிறு உற்பத்திச் சங்கங்கள் நேரடியாக அந்த விற்டனை நிலையங்களுக்கு துணி களை அனுப்புகின்றனர். அப்படி அனுப்புகிறபோது அங்கே அது போய் சேருவதற்கு பல நாட்கள் ஆகின்றன. அதைச் சரி

1979 மார்ச் 31] [திரு. து. புருஷோத்தமன்]

பார்த்து சிறு சிறு சங்கங்களுக்கு அவர்கள் அதற்குண்டான பணத்தை அனுப்புவதற்கு பல மாதங்கள் ஆகின்றன. அதனால் அந்த சொஸைடிகள் பண நெருக்கடிக்கு ஆளாகின்றன. ஆகவே நம்முடைய சென்னை நகரத்திலேயே கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்தை வைத்து நேரடியாக அவர்கள், கோடவுன் மூலம், நேரடிப் பார்வையில் வெளியே அந்த விற்பனை நிலையத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தால் அந்தச் சிறு குறைகூட இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனை அதிகரிப்பதற்காக ரிபேட் தருகிறார்கள். வருடத்திற்கு ரிபேட் கொடுப்பதற்காக இந்தத் துறைக்கு 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. பண்டிகை காலத்திற்கு மட்டும் ரிபேட் கொடுப்பதற்குப் பதில் வருடம் முழுவதும் கைத்தறி துணிகளை வாங்கினால் ரிபேட் கொடுக்க வேண்டும். அப்போது இந்த 75 லட்சம் ரூபாய் என்ற வரையறை இருப்பதை அதிகப்படுத்த வேண்டும். விற்பனை அளவிற்குத் தகுந்தாற்போல் அந்த ரிபேட் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில அரசு நிறுவனங்களில் கூட கைத்தறித் துணியை வாங்குகிறபோது ரிபேட் கேட்கிறார்கள். அவர்களுக்கு ரிபேட் கொடுக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விற்பனையை அதிகரிப்பதற்கு விளம்பரம் நாம் அதிகமாகச் செய்கிறோம். கைத்தறி விளம்பரத்திற்கு சினிமா படம் கூட எடுக்கிறோம். இந்த அவையிலே சென்ற முறை எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் எஸ். கணேசன் பேசும்போது சினிமா விளம்பரப் படம் எடுப்பது பற்றிப் பேசுகின்றபோது தனக்கு வேண்டியவருக்கு சினிமா படம் எடுக்க உரிமம் தந்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இப்போதுகூட தனியாருக்கே உரிமம் வழங்கப்படுகிறது, தனியாரே விளம்பரப் படம் எடுத்து விநியோகிக்கும் நிலை இருக்கிறது.

[மாலை 5-40]

நம்முடைய அரசுக்குச் சொந்தமான ஸ்டுடியோ இருக்கிறது, அதை நிர்வகிப்பதற்கு டெக்னிஷியன்கள் அடங்கிய துறை இருக்கிறது. இந்தச் சர்க்கார், அதிகமான அளவில் சினிமாத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் நிறைந்திருக்கின்ற சர்க்காராக இருப்பதால், நாமே, நம்முடைய சர்க்காரே அரசு ஸ்டுடியோவிலே இப்படிப்பட்ட விளம்பரப் படங்களை எடுத்து விநியோகம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் வருகின்ற பொருட்காட்சியிலே பிரம்மாண்டமான அரங்குகளை அமைத்து அதிகமான அளவில் விளம்பரத்தைத் தேடிக் கொடுக்கின்ற தனியார் நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் அவர்களுடைய அரங்குகளை அமைக்கின்ற முறை இருந்து வந்தது. ஆனால் சென்ற ஆண்டிலிருந்து இப்படிப்பட்ட பெரிய நிறுவனங்கள், சங்கு மார்க் நிறுவனம், கிப்ஸ் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் அரங்குகளை அமைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் அமைக்கின்ற அரங்குகளைப்போல் நம்முடைய அரசு சார்பில் அமைக்கப்படுகின்ற அரங்குகள்கூட இல்லாத அளவிற்கு மிகப் பிரம்மாண்டமான அளவிற்கு அரங்குகள் அமைத்தார்கள். அதனால் கைத்தறித் துணிக்குப் பெரிய விளம்பரம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக அதை மாற்றியமைத்திருக்கிறார்கள். இது அரசியல் காழ்ப்புணர்ச்சியா என்று அறிய நான் விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலையை மாற்றி தனியார் நிறுவனங்களுக்குப் போட்டியாக ஏற்றுமதியில் நாம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). நான் ஒருவன்தான் பேசுகிறேன்.

அடுத்தபடியாக, சரக்குகளின் தரத்தையும் நாம் உயர்த்தியாக வேண்டும். சென்ற பொங்கலன்று நான்கூட ஒரு வேட்டி வாங்கினேன். அகலமான கரை உள்ள வேட்டி, சரிகை அமைந்த வேட்டி, அது ஒரே சலவையில் கரை வேறு, வேட்டி வேறு என்று வரும் அளவில் தரம் குறைந்திருந்தது. ஆகவே, இந்த நிலையிலே இல்லாமல் தரம் உள்ளதாகக் கைத்தறித் துணியை ஆக்கினால் உள்ளபடியே நாட்டு மக்களுக்குக் கைத்தறியின் மீது நல்ல நம்பிக்கை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நூல் விலை ஏற்றம் இருக்கிறது என்று எங்கள் சைதாப்பேட்டையிலே இருக்கின்ற பல்வேறு சங்கங்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றன. 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலே 80 ஆம் நெம்பர் நூலின் விலையைப் பார்த்தால் 1978 –லே 102 ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு 118 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போல 60 ஆம் நெம்பர் நூலின் விலையைப் பார்த்தால் 1978 லே 147 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 170 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப்போல, 40 ஆம் நெம்பர் நூலின் விலை 1978 ஆம் ஆண்டிலே 97 ரூபாயாக இருந்தது. இன்றைக்கு 101 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்.

ஆகவே, அவர்களின் சங்கத்தின் காகிதத்திலே அச்சிட்டு மாதந் தோறும் எப்படி ஏறியிருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் கள். பேரவைத் தலைவரின் அனுமதியை நான் பெற்றிருக் கிறேன். இதை அமைச்சரவர்களுக்குத் தர இருக்கிறேன் என் பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இப்படிப்பட்ட விலையேற்றம் வருகின்றபொழுது நூல் தட்டுப்பாடு ஏற்றமும் வருகின்றது. திராவிட முன்னேற் றக் கழக அரசு இருந்த காலத்தில் எந்த அளவிற்குத் தரத்தைக் காத்து, சீரான அளவில், நியாயமான விலையில் சொசைட்டி களுக்கும், தனியார்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த நிலை இன்றைய தினம் ஏற்பட்டு, சொசைட்டிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலையிலே, தரமான நூல் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்தால் உள்ளபடியே உற்பத்தியும் அதிகமாகும் சூழ்நிலை இருக்கும். ஆகவே, இதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்தத் தொழிலாளர்களின் நலன் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். காரணம், எங்களு டைய தொகுதியிலே ஏறக்குறைய ஆண்களும், பெண் களும் 12,000 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களின் நிலை மைகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கொள்கை குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியார் ஏறக்குறைய 5,000 பேர் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக் கிறார்கள். எந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலேயும் ஈடுபடாமல் அவர்கள் நலிந்த நிலையிலே இருக்கிறார்கள். பல்வேறு முறை அமைச்சரவர்களை நான் நேரடியாகச் சந்தித்து இந்தக் குறை களைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்தக் குறைகளை நீக்கி அவர்களுக்குச் சேமிப்புத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், சுகாதாரத் திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மழையின்போது பெருவாரியாக, சைதாப்பேட்டை நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே தண்ணீர் தேங்கி ஏறக்குறைய 1 மாத காலமாக வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே போன்ற நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்பொழுது வந்த நேரத் திலே, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அன்றைய தினம்

[திரு. து. புருஷோத்தமன்] [1979 மார்ச் 31

ரூ. 100 கடனாகவும் அதற்குப் பிறகு ஏழை எளியவர்கள் என்று கருதி, ரூ. 100 மானியமாகவும் தந்ததை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, அந்த ஏழை நெசவாளர்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று கூறி.....(மணியடிக்கப்பெற்றது) இந்தச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன்.

திரு. க. பாலாஜி . மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவ ரவர்களே, கைத்தறி மானியக் கோரிக்கையின் மீது என்னு டைய கருத்துக்களை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற இந்தத் தமிழகத்தில், மாண்புமிகு புரட் சித் தலைவர் அவர்கள் நெசவாளர்களுடைய வாழ்க்கையில், அவர்கள் நல்லமுறையில் பயன் பெறுகின்ற வகையில் பல நல்ல திட்டங்களை இம்மானியக் கோரிக்கையில் எடுத்துவைத் திருப்பதை நான் மனதார பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபாடு கொண் டுள்ள நெசவாளர்களுக்குப் பலன் கிடைக்கும் விதத்தில் இடைத் தரகர்கள் இன்றியும் சுரண்டுகின்ற தன்மையைப் போக்குகின்ற வகையில் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கோராப் பட்டு மற்றும் சரிகை போன்ற இதற்குத் தேவையான மூலப் பொருள்களை வாங்குவதற்காக தமிழக சர்க்கார், ஒழுங்கான முறையில் வாங்கப்படுகின்ற அந்தப் பொருள், அந்தக் கூட்டுறவு சங்கங்களுக்குப் போய்ச் சேருவதற்குண்டான வழிவகையில் இன்றைக்கு ஒரு குழுவை ஏற்படுத்தி அந்தக் குழுவின் மூலமாக இடைத்தரகர்கள் பெற்று வந்த பல இலட்சம் ரூபாயை தடுத்து, அந்த ரூபாய்களை எல்லாம் நெசவாளர் பெருங்குடி மக்களுக்குச் சேருகின்ற வகையில் 1979 ஆம் ஆண்டில் இந்த நல்ல திட்டத்தை ஏற்படுத்தி இந்தக் குழுவை உருவாக்கியிருக்கிறார்கள். பரீட் சார்த்தமாக அந்தக் குழு காஞ்சீபுரத்திலும், ஆரணியிலும் இப்பொழுது செயல்பட்டுக்கொண்டு வருகிறது, அந்தக் குழு நல்ல முறையில் செயல் படுகின்ற காரணத்தால், அந்தக் குழுவை இந்த ஆண்டில் கும்பகோணம், பரமக்குடி போன்ற இடங் களில் விரிவுபடுத்த ஆவன செய்யப்படுகிறது என்பதை நான் சுட்டிக் காட்டுகிற நேரத்தில், நான் அதை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாதத்தில் நடைபெற்ற சட்டப் பேரவை கூட்டத்தில் நான் கைத்தறி மானியத்தின் மீது பேசியபோது சுட்டிக்காட்டிய சில திட்டங்களை இம்மானியக் கோரிக்கையில், குறிப்பாக கைத்தறி நெசவாளர் சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் — வீட்டு வசதி திட்டம்— சட்டப்

1979 மார்ச் 31] [திரு. க. பாலாஜி]

பாதுகாப்பு—போன்ற பல நல்லதிட்டங்களை நம்முடைய மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்கள் இந்த மானியக் கோரிக்கையில் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வரசுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா பிறந்த மாநகரில் நெசவாளிகள் பெரும்பகுதி வாழ்கிறார்கள். பட்டுத் தொழிலும் நூல் சம்பந்தப்பட்ட தொழிலும் உடையவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட யாவருக்கும் பொதுவாக காச நோய், குடல் வாதம், இயற்கையாகவே ஏற்படக்கூடிய சூழ்நிலை உண்டு. ஆகவே, அவர்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி ஏற்படக் கூடிய நடமாடும் மருத்துவ பரிசோதனை பேருந்து வண்டியொன்றை அமைத்துக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்கள் முன் முயற்சி எடுத்து செயல்படுவார் என்ற நம்பிக்கையில் இந்தக் கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

காஞ்சி மாநகரில் வாழ்கின்ற வீடு இல்லா நெசவாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ அல்லது கைத்தறி துறையினர் மூலமாகவோ ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் தமிழகத்திலே, ஒரு சில மாவட்டங்களில், சென்னை மாவட்டத்தில், குறிப்பாக, காஞ்சீபுரம், கும்மிடிபூண்டி, அதனை அடுத்த உத்திரமேரூர் பகுதியில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற அந்தப் பகுதியில் முதன்மையாக, அங்கே நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை இந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 5-50]

காஞ்சிமாநகரத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பல யாத்திரீகர்கள் சுற்றுலா செய்வதால் நெசவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இந்நகரில் ஒருங்கிணைந்த நெசவு உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றினை ஏற்படுத்தி, அந்நிலையத்தில் பட்டு, நூல் தொழில் சம்பந்தப்பட்ட உற்பத்தித் திறனைக் காட்டும் வகையில் விற்பனை நிலயம் ஏற்படுத்தித் தரும்படி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு. க. பாலாஜி] [1979 மார்ச் 31

அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சி மாநகரில் இருக்கும் சரிகை தொழிற்சாலையினை, செம்மையாகவும், தொடர்ச்சியாகவும் உற்பத்தித் திறனை ஒழுங்குபடுத்தும் வகையில் இது காறும் இல்லாத வகையில் தொழில் நுட்ப வல்லுநர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப் பட்டிருப்பது குறித்து இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சீபுரத்திலே சரிகைத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலதனத்தை அதிகரிக்கும் வகையில் ஒரு ஏற்பாட்டினை செய்ய மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சி மாநகரில் நூல் சம்பந்தப்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ரசாயனப் பொருள்கள் ஒருங்கிணைந்த சாயத் தொழிற்சாலை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள 'டிசைனர் சென்டர்' சிறிய அளவில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து காஞ்சி மாநகரில் தனியாக பட்டு, நூல் இருவகைகளுக்கும் குறைந்த பட்சம் 200 படித்த நெசவாளர் மாணவர்களுக்குப் போதிக்கும் வகையில் ''டிசைன் சென்டர்'' ஒன்றை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சி மாநகரில், நெசவாளிகள் பெரும்பகுதி வாழ்கின்ற இப்பகுதியில் பட்டு, நூல் கைத்தறி சம்பந்தப்பட்ட தொழில் பயிற்சிக் கல்லூரி ஒன்றினை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தில் குறிப்பாக 15 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. மழை பெய்கின்ற நேரத்தில் அந்த 1 மாத காலமும் அல்லது 20 தினங்களுக்கு பிழைக்க வேறு வழியின்றி இருக்கின்ற நெசவாளர்களுக்கு இந்த சங்கங்கள் கூலி கொடுக்க இயலுவதில்லை. இன்றைக்கு, கிராமப் பகுதிகளிலே வேலை இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அளிக்க இருக்கும் ரூ. 3, அல்லது ரூ. 3-க்குரிய அரிசியோ அல்லது கோதுமையோ, அல்லது ரூபாய் ஒன்று கொடுக்கின்ற வகையில் இந்த நெசவாளர்களுக்கும் அதே போல அந்த ஒரு மாதத்திற்கோ அல்லது 20 நாட்களுக்கோ அளிக்க கைத்தறித்துறை அமைச்சர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

1979 மார்ச் 31] [திரு. க. பாலாஜி]

அடுத்தபடியாக காஞ்சிபுரத்தில், நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற அந்த பகுதியில் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று நான் சென்ற முறையே இங்கே பேசுகின்ற நேரத்திலே எடுத்து வைத்தேன். அதனுடைய வளர்ச்சியில் ஒரு பகுதியாக 300 நெசவாளர்களுக்கு பிள்ளையார்பாளையம் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று எனது ஒரு கோரிக்கையை இன்றைக்கு நான் முதலமைச்சர் அவர்களிடத்தி லேயும் அமைச்சர் அவர்களிடத்திலேயும் எடுத்து வைக்கிறேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் குழுவின் மூலமாகத்தான் தேவையான மூலப் பொருட்களை வாங்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டிருந்த போதிலும் ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள் இதற்கு மாறுபட்ட எண்ணம் படைத்தவைகளாக இருப்பதால் அவர்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மாற்றுச் சங் கத்தில் இருக்கின்ற நெசவாளர்களை வீட்டைவிட்டு வெளியேற்று கின்ற நிலைமையும், சில நேரத்திலே அவர்களை உறுப்பினர் களாகக்கூட வைத்துக் கொள்ளாத நிலைமையில் அவர்கள் தறியே கூட கிடைக்காமல் இருக்கிற சூழ்நிலை காஞ்சீபுரத்தில் ஒரு பட்டு கூட்டுறவுச் சங்கத்திலே இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாட்டினை போக்க வேண்டு மென்று மாண்புமிகு கைத்தறி அமைச்சரைக் கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல் இன்றைக்கு காஞ்சிபுரத்தில் பட்டு கூட்டுறவு சங்கங்களில் தலைவர்களாக இருந்தவர்கள் பலரும் பல தவறுகள் புரிந்த காரணத்தால் அவசர கால நிலைமையில் அந்தக் குற்றச்சாட்டுக்களை அவர்கள் மீது உண்மை என்று நிரூபித்து நடவடிக்கை எடுத்த காரணத்தால், நம்முடைய அரசு பொறுப் பேற்றவுடன் அப்படிப்பட்ட தலைவர்கள் மீது இந்த அரசு கறா ராக நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அப்படிப்பட்ட சங்கங் களின் தலைவர்கள இன்றைக்கு இந்தக் குழுவில் நிர்வாகம் செய் கின்றவர்களுக்குப் பல நேரத்திலே ஆலோசனை கூறுவார் களேயானால் அவர்களது ஆலோசனையை எப்படி வரவேற்க முடியும்.

ஆனால் அவர்கள் ஒரு தவறான பிரச்சாரங்களை அரசின் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் இந்தக் குழு கொள்முதல் செய்கிறது அந்தச் செய்கையிலே மொத்த 2—3 லட்சம் ரூபாய் அளவிற்குத் தவறு நடைபெறுகிறது என்று கூட மேலவையில் பேசியதாக நான் அறிந்தேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால் நான் அங்கே பேசியவர்களுக்கும், அமைச்சரின் கவனத்திற்கும் நான் எடுத்துக் கொண்டு வரக் கடமைப் பட்டு

இருக்கிறேன். அந்தக் குழு தவறு செய்து இருக்கும் மொத்தம் 2 லட்சம் ரூபாய் அளவில் அங்கே லஞ்சம் பெற்று இருக்கிறார்கள், தவறு செய்து இருக்கிறார்கள் என்று யார் சொன்னாலும், எந்த நீதிபதி வைத்து விசாரணை செய்தாலும், அவர்கள் தவறு செய்தது உண்மை என்று சொன்னால், அந்தக் குழுவில் இருக்கிற பதவியை மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர் பதவியை கூட துறக்கத் தயாராக இருக்கிறோம். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கத் தவறினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கியவர்கள் மீது நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, குறிப்பாக, கும்மிடிப்பூண்டி பகுதியில் வாழும் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*THIRU A. EKAMBARA REDDY :Mr. Temporary Speaker, Sir, I rise to speak on Demand No. 26, Handlooms and Textiles which has an outlay of Rs. 5,13,53,000. This is too meagre.

Handlooms provide the biggest employment next to Agriculture. There are 10 lakhs of handloom weavers with 5,56,000 looms depending on this profession to save 3 lakhs of weavers, population for their livelihood. The weaving community produce nearly one-fourth of the total production of the entire State, worth about of Rs. 150 crores. I may not be at fault if I say that it is the moral responsibility of the Government to help this industry.

Out of 5,56,000 handlooms in our State, only 2,07,000 handlooms were registered in 950 Primary Weavers Societies. It works out to only 37 per cent. The intention of the Government is to cover 60 percent of the entire weavers of our State and for this, they have to enrol nearly 1,25,000 handlooms weavers into the co-operative fold. They have chalked out a programme to enrol 1,25,000 handloom weavers to achieve the targets by 1982–83 within the 5 years by incurring an expenditure of of Rs. 16 crores. Even then there is a balance of nearly 2 lakhs weavers left over at the mercy of the master weavers. In this connection, I have to ask what is the programme of the Government, to save those 2 lakhs and odd weavers who are placed at the clutches of the master weavers without any protection, I request the Government kindly to see that some protection also is given to the weavers outside. the co-operative fold to take out their livelihood.

1979 மார்ச் 31] (Thiru. A. Ekambara Reddy)

Share capital loan is given to the weavers by the Central Banks as well as nationalised banks at Rs. 100 each. The nationalised banks are not liberally coming forward to give loans liberally at concessional rate of interest i.e. 4 percent interest. Nationalised banks should come foward with a, liberal portion of grants to weavers societies, so as to enrol weavers from outside the co-operative fold to the co-operative fold and also to strengthen the co-operative societies as well as to repay the dues to master weavers, so as to enable them to come to co-operative societies for enrolling themselves as members.

At present working capital loan is given by the co-operative Central Banks at Rs. 500 per loom. This is to meagre to run the societies. I request that this amount should at least be enhanced to Rs. 1,000 so as to have the working capital to produce sufficient goods. At the same time, most of the weavers' societies require 40 counts of yarn. I do not know why the price of yarn is increased day by day. At present it has been increased to 5 per cent of the original rate. At times even the State Societies are not in a position to supply the required quantities of 40 counts of yarn to weavers' societies. I request the Government to move the Central Government to reduce the price of yarn and also to have sufficient quantity of stock to supply to weaver's societies.

[மாலை 6-00]

Most of the weavers use 40 counts variety yarn. As such, I request the Government to see that sufficient quantity of 40 counts yarn is available in our State Societies so as to distribute them to the weavers in time so that they could have work through out the year.

The Handloom Industry essentially requires chemicals and dyes which are not at all sufficiently available in our State. We have to depend for our requirements on other States. I request the Government to see that the Tamil Nadu Industrial Development Corporation expedite the starting of one vanavil Chemicals Centre immediately. At the same time, the sizing is also essential. The weavers require sizing. The sizing should be made readily available to the weavers. There is no such unit. Atleast one unit should be located for each and every centre which has more than 10,000 looms, so that sufficient quantity of sized yarn, will be available. It would also save the poor weavers from labour and also to improve economic condition. Therefore, I request that such a Unit should be started in my Constituency, where there are more than 25,000 weavers.

There should be reservation of certain variety for the handloom sector This is a most important thing for the handlooms. I request the Government to move the Central Government for its approval to bring in a separate legislation to get statutory power to reserve certain variety for handloom sector because there is keen and unequal competition from the powerlooms. This could not be done unless a legislation forward by the Govenment for this purpose. I once again plead the Government to get necessasy concurrence from the Central Government to bring in a legislation in this regard.

With regard to rebate on handloom cloth, I would like to say a few words. The rebate scheme is essential for the handloom industry. Now at the rate of 5 paise for every rupee as an incentive to the buyers is given . It is not given even for two months but it is given only for 55 days in a year to clear off the accumulated goods. 20 per cent rebate is given at certain times, which covers 50 per cent assistance from the Central Government, for clearing of the goods. This 50 per cent is sanctioned by the Central Government periodically to clear off the accumulated stocks. I would like to suggest that there should always be a rebate of 20 per cent with 50 per cent Central assistance. A special rebate with 10 per cent more on festive occasions should be given to clear of the accumulated stocks. If it was given, the accumulated stocks would go like a 'hot cake' and also the handloom industry could survive and revive.

At present, on the whole, there are four Intensive Development Projects and two Export Projects in our State. Each Development Project is expected to cover 5,000 looms and each Export Project is expected to cover 1,000 looms each year. So far no Development Project has reached its targets except in Kancheeppuram Unit. There also it is only 3,066. I request the Government to take special efforts to enrol the handloom weavers, as contemplated under the scheme at the end of each year also as to give sufficient labour tothe poor weavers. I also request theGovernment to see that the target set is achieved, other wise the essence and object of the scheme would be defeated.

There is a scheme under the Welfare Scheme for the handloom weavers what is called the Co-operative Handloom Weavers Savings and Secuity Scheme, Under the scheme, only a nominee of the deceased member will get a minimum of Rs. 500 only. This sum is very meagre and it should be raised to Rs. 5,000 . It coverage I mean the insurance coverage should be increased to 5,000 so as to save the family of the deceased weaver from this distress strain, and sufferings.

About the construction of houses for the poor weavers, I am happy to see that the Housing Scheme for the weavers is going to be revived and it is proposed that 10,000 houses are going to be constructed in select societies in our state during the VI Plan period. For this scheme, I understand that a sum of Rs. 3,500 is going to be received from the Housing and Urban Development Corporation as loan and a sum of Rs. 1,500 is going to be given as subsidy per house by the Government of India, and that the interest accrued on the amount would be subsidised by the State. I would lie to suggest, in this connection, that for the construction of these houses, the State Government should subsidised at least one thousand rupees of the loan portion of Rs. 3,500 at least and thus reduce the loan amount from 3,500 to Rs. 2,500. Why not the State Government give this amount? It would become 50 per cent loan and 50 per cent subsidy. Thus 50 per cent can be received from the weaver and 50 per cent from the Government. I request the Govenment to give thought to this measures to improve the poor conditions of the weavers.

Lastly I would like to say a few words on the Committee constituted by the State Government to go into the working conditions of the Weavers, security of employments, provision of legal protection etc. It has submitted its report long ago. Why not the Govrnment implement the recommendations of the Committee? I suggest for the kind consideation of the Government to bring in a legislation quickly to provide a minimum wage to the weavers, as it was done in the case of agricultural labourers and beedi workers. The beedi workers are governed by the 1936 Act. In regard to handloom weavers also the Committee has submitted its report and the same has been received by the Government. I request the Government to be kind enough to see that the recommendations are considered effectively and legislation is brought immediately.

About Khadi industry, I am sorry to note that a meagre provision of Rs. 1·52 crores, just a token provision has been made. I may not be at fault, if I point out that much encouragement was not given for the industry. Khadi is not the entire and sole thing of the Congress people. It gives protection and labour to many people. It is a pride thing. I request the Government to see that khadi is given its proper place. In this connection, I would make an appeal and request all the Members and Ministers to wear khadi. I am wearing khadi for the past 40 years. I request everyone to wear khadi so as to encourage that cottage industry which is giving livelihood to many poor people.

I conclude with this and resume my seat.

[1979 மார்ச் 31

*திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கைத்தறி மானியத்தின் மீது மார்க்கிஸ்ட் கட்சியினுடைய நிலையை தெளிவாக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இதைப்பற்றிய கொள்கை அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியை அவர்களுடைய கவனத்திற்குச் சுட்டிக் காட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். பல்வேறு இடங்களிலே கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்தாலும் ஒரு இடத்திலே வரும்போது கைத்தறி திட்டங்களுக்கு சென்ற வருடம் ஒதுக்கிய தொகையை அதாவது சொல்லப்போனால் திருந்திய மதிப்பீடு 78·3 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருந்திருக்கிறது. ஆனால் 1979—80 ஆம் ஆண்டிலே இந்த கைத்தறி வளர்ச்சி திட்டங்களுக்கு 33·87 இலட்சம் ரூபாய் அதாவது கிட்டதட்ட 45 இலட்ச ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலே மாநில அரசினுடைய உதவி 25 சதவீதம்தான், ஆனால் மத்திய அரசு 75 சதவீதம் உதவி செய்கிறது. ஆகவே இதிலே இவ்வளவு தூரம் குறுக்குவது சரீயல்ல என்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதை விட அதிகமாக துக்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் இந்த நரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது கைத்தறியைப் பொறுத்தமட்டில் பல பிரச்சினைகள் இருப்பதாக அரசுக் குறிப்பிலேயே சொல்லி இருக்கிறார்கள். அதற்குள் எல்லாம் போய் நான நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

இந்த கைத்தறி மற்ற பவர்லூம்களோடும், மற்ற மில்களோடும் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாக இதை விசேஷமாகப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்ற முறையிலே இதற்கென்று பல ரகங்களை விசேஷமாக ஒதுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். அதற்காக அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கையைப் உயர்நீதிமன்றத் தீர்ப்பும் கூட ஊர்ஜிதம் செய்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே பார்த்தால் ஆஸ்பத்திரிக்குத் தேவையான துணிகள் பூராவையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்பது ஊர்ஜிதம் ஆகிறது. அந்தத் தீர்ப்பிலே கூட அவர்கள் அவ்வாறுதான் சொல்லி இருக்கிறார்கள்.

1979 மார்ச் 31[[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]

[மாலை 6-10]

ஆகவே, எந்த அளவுக்கு அதிகப்படியான கைத்தறி ரகத்தை விரும்புகிறார்களோ, அந்த அடிப்படையிலே ஒரு சில குறிப்பிட்ட ரகங்களை இந்த கைத்தறிக்கு ஒதுக்கி, அந்த ரகங்களை விசைத்தறிகளோ, மற்றவர்களோ உற்பத்தி செய்தால், அதைத் தடுக்கின்ற நிலை மாத்திரமல்ல, அந்த விசைத் தறிகளை பறிமுதல் செய்கின்ற ஏற்பாட்டை மாநில அரசு செய்ய வேண்டும்.

அடுத்தாற்போல், கச்சாப் பொருள் வழங்குவதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 12 கூட்டுறவு நூற்பாலைகள் நம்முடைய மேற்பார்வையில் இருக்கின்றன. இந்த 12 நூற்பாலைகள் இப்போது படிப்படியாக வளர்ந்து, இன்றைக்கு 8,500 பேல்பருத்தி நூலை கைத்தறிக்காக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. 19 நூல் டிப்போக்களில் 946 கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கேள்வி நேரத்தில் சில இடங்களில் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் கிடைக்கவில்லை என்று சில மெம்பர்கள் சுட்டிக்காட்டியதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, நாங்கள் சொல்வது என்னவென்றால், ஏற்கெனவே இந்த மாதிரியான முறையில் 19 நூல் டிப்போக்களில் வழங்கப்படுகின்ற நிலைமைக்கு மாறாக, ஒரு மாற்று ஆலோசனையை கோ ஆப்டெக்ஸ் மூலமாக அந்தப் பகுதியிலே வாழ்கின்ற நெசவாளர்களுக்கு கைத்தறி கூட்டுறவுச் சங்கம் மூலமாக அந்த நூலை விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மாத்திரமல்ல. இதர மில்களிலே உள்ள நூல்களின் விலையை விட, இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளின் கைத்தறி நூல்விலை சுமார் 30 சதவீதம் அல்லது 35 சதவீதம் அதிகமாக உள்ளது. அதைக் குறைப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த ஜனதா துணி உற்பத்திக்கு இன்றைக்கு பெருத்த வரவேற்பு இருக்கிறது. ஜனதா துணி உற்பத்திக்கு மாநில, மத்திய அரசு கணிசமான நிதி உதவி இன்றைக்குகொடுத்து வருகிறார்கள். 1977—78ல் உற்பத்தி 19.46 மில்லியன் மீட்டர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1978—79-ல் 20 மில்லியன் மீட்டர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது 1979-80-ல் அதே நிலையில்தான் இருக்கும். அதைப் பற்றிய இலக்கு இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி, இந்த ஜனதா துணிக்கு எவ்வளவு அதிகமான மானியம் பெற முடியுமோ அந்த அளவுக்கு........

[1979 மார்ச் 31

திரு. சு. பாலன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கு கோரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா): இருக்கிறது, பேசுங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஆகவே ஜனதா துணி உற்பத்திக்கு மானியம் கொடுப்பதாக இருந்தாலும் கிட்டத்தட்ட ஏற்கெனவே அடக்கவிலையில் பாதி விலையில்தான் கோ—ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனை செய்கிறோம். ஆகவே, இந்த வேஷ்டிகள், சேலைகள், லுங்கிகள் அனைத்தும் நல்லமுறையிலே விற்பனை ஆகின்றன. அதன் மூலம் ஏழை எளிய மக்கள் குறைந்த விலையில் வாங்கக் கூடிய வசதி ஏற்படுகிறது. இங்கே இதை அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலமாக கைத்தறியாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. எனவே, இந்த ஜனதா துணி உற்பத்தியை அதிகமாகச் செய்வதற்கு இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக 1978-1979ல் 3 கோடி ரூபாய் ரிபேட் கொடுப்பதாக சொல்லப்பட்டிருந்தது. இப்போது தந்திருக்கின்ற கொள்கை அறிக்கையில் 1979—1980-ம் ஆண்டில் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் ரிபேட் கொடுக்கப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்று காலையில் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது மந்திரி அவர்கள், ரிபேட் தொகை கொடுக்க வேண்டியது தேவைதானா, துணி தேக்கம் இல்லாதபோது ரிபேட் தேவையில்லை என்று சொன்னார்கள். ரிபேட் கொடுப்பதின் மூலமாக அதிகமான அளவில் துணி விற்பனையாகிறது. விலையும் குறைகிறது, அதன் காரணமாக விற்பனையும் அதிகமாகிறது. ஆகவே இதை மறந்துவிடக் கூடாது. அப்படியில்லாமல், துணி தேக்கம் இல்லை ஆகவே ரிபேட் இல்லை என்று சொல்வது நல்லதல்ல. எல்லா காலங்களிலும் 20 சதவீதம் ரிபேட் கொடுப்பதற்கு முன் வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கூட்டுறவு கைத்தறி சங்கங்களுக்கு தாராளமாக கடன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சென்ற கூட்டத்திலும் இது பற்றி வற்புறுத்தப்பட்டது. சேலம் மத்திய கூட்டுறவு சங்கத்தில் வழங்கப்படும் கடன் வசதி போல் எல்லா இடங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், 'கட்டுமாறி' துணிக்கு 30 சதவீதம் ஊக்க போனஸ் கொடுத்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

தொழிலாளர்களைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இவர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, இவர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை உடனடியாக இந்த அரசு கொண்டு வரும் என்று 6—9—78ல் பழைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது, இருக்கின்ற அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற கொள்கை அறிக்கையில் "கீழே குறிப்பிட்டுள்ள நோக்கங்களைக் கொண்ட பல்வேறு திட்டங்களைச் செயலாக்கி வருகின்றது" என்று சொல்லி விட்டு சில குறிப்புகளை சொல்லும்போது, "இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் பரிந்துரைகளை செயலாக்கும் விதத்தில் பொதுவாக கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், பணி நிலைமை, இதர வசதிகள் குறித்து சட்ட பாதுகாப்பு ஏற்படுத்துதல்" என்று சொல்லியிருக்கிறார்கள். ராஜா சுப்பிரமணியம் அறிக்கையினுடைய பரிந்துரைகளை தெரிவிக்க வேண்டும் என்று எல்லா கட்சிகளும் வற்புறுத்தி வருகிறார்கள். இந்த கமிட்டியினுடைய அறிக்கையில் என்னதான் இருக்கிறது என்று இன்னும் தெரியவில்லை. இதுவரை அதை சட்ட மன்றத்தில் வைக்க முடியாத நிலையில் இருப்பதற்கு என்ன காரணம். அதை வைப்பதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எப்போது இந்த கமிட்டியினுடைய ரிப்போர்டை வைக்கப் போகிறார்கள் என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கொள்கை அறிக்கையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பற்றிசொல்லப் பட்டிருக்கிறது. இதன் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 ஆயிரம் வீடுகள் கட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் 5,000 ரூபாய் என்ற முறையில் திட்டமிட்டிருப்பதாகவும், இதற்காக ஹட்கோவிலிருந்து கடனாக 3,500 ரூபாயும் மத்திய அரசின் மானியமாக 1,500 ரூபாயும்— ஹட்கோ கொடுக்கும் கடனுக்குள்ள வட்டியை மாநில அரசு மானியமாக ஏற்றுக் கொள்வது என்றும் — இதன அடிப்படையில் வீடுகள் கட்டி கொடுக்கப்போவதாக சொல்லப் பட்டிருக்கிறது. இதற்கு முன்னால், மாநில அரசே இவர்களுக்கு முழுவதுமாக செலவை ஏற்றுக் கொண்டு வீடுகள் கட்டிக் கொடுப்பதாக இருந்தது, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த கொள்கை அறிக்கையில் சொல்லியிருக்கின்றபடி பார்த்தால் இந்த நாட்டிலுள்ள ஆறு லட்சம் நெசவுத் தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போவதாகவும், அதிலும் ஒரு ஆண்டுக்கு 2,000 வீடுகள் வீதம் கட்டிக் கொடுக்கப்போவதாகவும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், எல்லோருக்கும் வீடுகள் கிடைக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்பதைப் எண்ணிப் பார்த்து, இன்னும் அதிகப்படியான வீடுகளை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1979 மார்ச் 31

மேலும் தாழ்த்தப்பட்ட வகுப்பிலுள்ள குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் எல்லாம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விசைத் தறிகளைப் பொறுத்தவரையில், இது வரையில் அனுமதிக்கப்பட்டவை 28,043 என்றும், இதற்கு மேலும் அனுமதிக்கப்படாதவை 30 ஆயிரம் அளவுக்கு இருக்கும் என்றும் வகையில் விசைத் தறிகள் நாட்டில் உள்ளது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அனுமதிக்கப்பட்ட விசைத் தறிகளோடு எந்த அளவுக்கு கைத்தறி போட்டி போட முடியும் என்பதை கவனித்துப் பார்த்து, அனுமதிக்கப்படாமல் இருக்கும் அத்தனையும் சேர்த்து ஒழுங்குமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு பஞ்சாலைத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், 3 லட்சம் கதிர்கள் இதன் கீழ் வந்திருக்கிறது என்றும், 31—12—77 முடிய 114 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்பட்டிருந்தது. அதே நேரத்தில் 31—12—78-ல் 200 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கின்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல இடங்களில் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொண்டு அவைகளை எல்லாம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கும் பதிவுச் செய்து இதர பஞ்சாலை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், போனஸ் போன்றவை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 6—20]

கடைசியாக, கதரைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து கதரையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த கதர்த் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலை பாதுகாப்பு தர வேண்டும். குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, 30 ஆண்டு காலமாக நெசவாளர்கள் கண்ட கனவு நினைவாகின்ற வண்ணம் இன்று நமது அரசு செயல்பட்டு வருவதைக் கண்டு நான் 1978-79 ஆம் ஆண்டு மானியக்கோரிக்கையை முதலில் வரவேற்கிறேன். அதாவது ராஜா சுப்பிரமணியம் கமிட்டி பரிந்துரை செய்ததை, நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகளை இந்த 1978-79 ஆம் ஆண்டு அறிக்கையிலே கூறியிருப்பதால், அதை நான் வரவேற்கிறேன்.

1979 மார்ச் 31] *[திரு. இரா. தாமரைக்கனி]*

அடுத்து, கடந்த 4,5 வருஷங்களாக இந்த நெசவாளர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். மாதத்திலே 10 நாட்களுக்குத் தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும். ஆனால், இந்த அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, அதுவும் நமது மாண்புமிகு அமைச்சர் திருமதி சுப்பு லட்சுமி ஜெகதீசன் அவர்கள் அமைச்சராக வந்த பிறகு, அவர் களுக்கு மாதம் முழுவதும் வேலை கிடைக்கின்றது. எனவே, இந்த நேரத்தில் நான் இந்த மானியக் கோரிக்கையை வரவேற் கிறேன்.

எங்கள் பகுதியில் எக்ஸ்போர்ட் ரகம் நல்ல முறையிலே நெய் கிறார்கள். அந்த எக்ஸ்போர்ட் ரகத்தை அரசே நேரடியாக ஆர்டர் வாங்கி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் கொடுப் பதால், இந்த மானிய கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, 1962ஆம் ஆண்டு நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இருந்தது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கைவிடப் பட்டது. ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, அந்தத் திட்டத்தைப் புதுப்பிக்கும் வண் ணம் செய்திருக்கிறார்கள், 1978–79ஆம் நிதி ஆண்டில் சுமார் 2,000 நெசவாளர்களுக்கான குடியிருப்புக்களை இந்த அரசு கட்ட முன்வந்தது. அதற்காக இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

திருவில்லிபுத்தூரிலும், சுந்தரபாண்டியிலும் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கு முன் வந்திருக் கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தவிர, 1962ம் ஆண்டு எங்கள் பகுதியில் இவர்களுக்கு வீடுகள் நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூலம் வீடுகள் கட்டப்பட்டு, அதற்கான அசலை அவர்கள் கட்டி விட்டார்கள். இப்போது, அதற்கான வட்டி, அசலைக் காட் டிலும் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதைக் கட்டிக்கொண்டு வருகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த வட்டியை வஜா செய்ய வேண்டும் என்று, அவர்கள் அசலைக் கட்டி விட்டதால் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 6,000 தறி இல்லாத நெசவாளர்களுக்காக சுமார் 30 கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப் போவதாக மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். எங்கள் பகுதியில் தறி இல்லாத நெசவாளர்கள் நிறைய பேர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் இந்த கூட்டுறவு தொழிற் சங்கத்தை ஆரம்பிக்க முன் வந்தபடியால் அதற்காக நான் இந்த மானியத்தை வரவேற்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் சேமிப்புத் திட்டத்திற்காக அதாவது ரூபாய் 500 லிருந்து ரூபாய் 3,000 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கின்ற செயற் குறிப்பு இருப்பதாலே, நான் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

திருவில்லிபுத்தூரிலே கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. அங்கே வேஸ்டேஜ் காட்டன் மில்லைக் கொண்டு 25,000 கதிர் களை கொண்டு அடிஷனலாக ஒருமில் 10லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். அதற்காகவும் நான் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

எங்கள் பகுதியில், சுந்தரபாண்டி என்ற ஓர் ஊர் இருக்கிறது. அங்கே முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய துணியை நெய்துகொண்டிருக்கிறார்கள். அது ஒரு எக்ஸ் போர்ட் ரகம். தனியார் வியாபார போர்டை பார்க்க முடியாது. ஆகவே, அந்த முறையில் அந்த ஊரை ஒரு மாதிரிக் கிராமமாக இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கரை போடும் ரகத்தை கைத்தறிக்குக் கொடுக்கவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்களும், மூதறிஞர் ராஜாஜி அவர்களும் தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி எங்கள் புரட்சித் தலைவர் அவர்களும், மத்திய அரசுக்கு கரை போட்ட ரகங்களை கைத்தறி வேட்டிகளுக்கும், சேலைகளுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதால், நான் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

பருத்தி பொதி 450ல் இருந்து 500 ரூபாய்தான் விற்கிறது. ஆனால் நூல் விலை அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. இதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. மத்திய சர்க் கார்தான் அடித்துச் சொல்ல வேண்டும். ஜனதா வேட்டி, சேலை துண்டு தயாரிப்புகள் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிறது. நூல் விலையைக் குறைக்க மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

எழுபத்தைந்து சதவிகித கைத்தறி நெசவாளர்கள் தென் னாட்டில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். 25 சதவிகிதம் தான் மகாராஷ்டிரம், வங்காளம், குஜராத் போன்ற இடங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். தென்னாட்டில் இருந்து கைத் தறி துணிகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலவாணி அதிக அளவில் கிடைக்கிறது. மகாராஷ்டிரம் போன்ற இடங்களில் மில், பவர்லூம் துணிகளை கைத்தறித் துணிகள் என்று சொல்லி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார் கள். அவர்கள் தயாரிக்கும் துணிகளைத் தடை செய்ய வேண்டு மென்று நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட் டுக்கொள்ள வேண்டும்.

1979 மார்ச் 31] [திரு. இரா. தாமரைக்கனி]

சில ரகங்களுக்கு ஊக்க போனஸ் கொடுத்தார்கள். இப்போது நின்று விட்டது. மீண்டும் ஊக்க போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெக்ஸ்டைல் ஹாண்ட்லூம் சென்டர் பம்பாயில் இருக்கிறது. தென்னாட்டில் 75 சதவிகிதம் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வதால் அதனுடைய பிராஞ்சு ஒன்றை சென்னையில் நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும். அது பம்பாயில் இருப்பதால் வட நாட்டு சேட்டுகள் எக்ஸ்போர்ட் ரகங்களை அவர்கள் வெளியிலிருந்து வாங்கி சென்று ஏற்றுமதி செய்து விடுகிறார்கள். ஆகவே, அதனுடைய பிராஞ்சை இங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஹாண்ட்லூம் போர்டு என்று இருக்கிறது. அதிலே தமிழர்களுக்கு ஒரே ஒரு பிரதிநிதிதான் இருக்கிறார். தமிழகத்திலே 5 இலட்சம் தறிகள் இருக்கின்றன. மகாராஷ்டிரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் குறைந்த தறிகள்தான் இருக்கின்றன. அவர்களுக்குப் பிரதிநிதிகள் இரண்டு மூன்றுபேர்கள் இருக்கிறார்கள். தமிழர்களுடைய பிரதிநிதி அதிகமாக இருந்தால்தான் பிரச்சினைகள் வரும்போது தீர்க்க முடியும். அதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கைத்தறி வார விழாவின்போது ரிபேட் கொடுக்கப்படுகிறது. சேலை, பெட்ஷீட் போன்றவைகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமாக கூலி தரப்படுகிறது. அரசாங்கத்திலிருந்து அந்த ரகங்களுக்கு அதிக ரிபேட் கொடுக்கிறார்கள். வேட்டி, கைலி, துண்டு போன்றவைகளுக்கு குறைந்த கூலிதான் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுக்கிறார்கள். அதற்கு ஒருவிதமான பேட் கொடுக்கப்படுகிறது. கைத்தறித் துணி என்றால் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து அமைச்சர் அவர்கள் எல்லாக் கைத்தறித் துணிகளுக்கும் ஒரே அளவில் ரிபேட் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலையில் டி.சி. 3 என்ற தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை பர்மனென்ட் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும். அவர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கவேண்டுமென்று கூட்டுறவு நூற்பாலை தீர்மானம்போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அங்கே இவர்களுக்குப் பிறகு சேர்ந்த பர்மா, சிலோன் அகதிகள் வேலை செய்தால் அவர்களுக்கு $13\frac{1}{2}$ ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். இவர்களுக்கு மட்டும் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கும் அதிக கூலி கொடுத்து நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

கோ ஆப்டெக்ஸ் அதிகாரிகள் கூட்டுறவு நூற்பாலைபிகளில் கொள்முதல் செய்ய வருகிறார்கள். எந்த சொசைடி பிரசிடென்ட் அப்படி வருகிறவர்களுக்கு நல்ல சகாயங்கள் செய்து, வசதிகள் செய்து, அதிகாரிகளுடைய சம்சாரத்திற்கெல்லாம் துணிமணிகள் எல்லாம் கொடுக்கிறார்களோ அப்படிக் கொடுக்கிறவர்களின் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்கிறார்கள். இந்தக் குறையைப் போக்கும் அளவில் எல்லாச் சங்கங்களில் இருந்தும் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் எல்லா ரகங்களையும் நெய்கிறார்கள். ஆகவே அங்கு வடிவமைப்பு பணி நிலையம் ஒன்றினை அங்கு நிறுவ வேண்டும்.

சில கோரிக்கைகளை விடுத்து முடித்துக் கொள்கிறேன். கோ ஆப்டெக்ஸ் வியாபார ரீதியாக இயங்க வேண்டும். பாம்பே டையிங், செல்லாராம்ஸ் நிறுவனங்கள் போன்று இயங்கவேண்டும். அதிகாரிகள் பொறுப்பாக கவனிக்க வேண்டும். வருஷா வருஷம் நஷ்டக் கணக்கு வந்தால் கோ ஆப்டெக்ஸ் அதிகாரி பொறுப்பேற்க வேண்டும். கோ ஆப்டெக்ஸ் சேல்ஸ் டெப்போ தனியார் டெப்போ மாதிரி காலை 9 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இயங்க வேண்டும். கூட்டுறவு நூற்பாலைகள் தரமான நூலை உற்பத்தி செய்ய வேண்டும். கூட்டுறவு ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டால் மானேஜ்மென்ட் பொறுப்பேற்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எங்கள் பகுதியில் சுமார் நாலைந்து கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கலைக்கப்பட்டன. எதற்காகக் கலைக்கப்பட்டது என்றால், பொதுநல நிதியில் மோசடி, கோ-ஆப்டெக்ஸ் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வெளியாரிடம் பில் அதிகமாகப் போட்டு வாங்கியதால் சுமார் 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்ததன் காரணமாக நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டன.

[மாலை 6—30]

அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டன. விருதுநகரிலே உள்ள போலீஸ்தான் விசாரணை அதற்கு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விசாரணை நடத்துவதைப் போல அங்கே வந்து அந்தச் சங்கத் தலைவர்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்தார்கள். ஆனால், எல்லாம் அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். ரொம்ப அநியாயமாக இருக்கிறது, ஆகவே, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகாவது அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஆணை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31]

*திரு. வீ. அர்ச்சுனன் : தலைவர் அவர்களே, இன்று இந்த கைத்தறி மானியக் கோரிக்கையின் பேரில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய தொகுதியின் சார்பிலே நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே ஏறத்தாழ 6 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதிலே ஏறத்தாழ $4\frac{1}{2}$ இலட்சம் பேர்கள் அன்றாடம் வாழ்க்கைக்குக்கூட ஜீவனம் செய்வதற்குக்கூட வழியில்லாமல் இருக்கிறார்கள். அதே நேரத்திலே கைத்தறி நெசவாளர்கள் துறையினுடைய அமைச்சர் அவர்கள் அந்த அந்த ஊர்களுக்குச்சென்று ஆங்காங்கே உள்ள சொஸைட்டிகள் எப்படிச் செயல்படுகின்றன என்றும் அந்தந்த அதிகாரிகள் அந்தந்த சொஸைட்டிகளுக்கு எப்படி ஊக்கம் அளிக்கிறார்கள் என்பதையும் பார்த்து வருகிறார்கள். அந்த ஏழை எளியக் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தருவதற்காக நகரங்களிலேயும் தொகுதிகளிலேயும் சிறு சிறு கிராமங்களிலேயும் கைத்தறி கூடங்கள் அமைத்து அந்தக் கூடங்களின் மூலமாக கைத்தறியை அமைத்து அவர்களுக்கு நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பல தொகுதிகளிலே கைத்தறி நெசவாளர்கள் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். குறிப்பாக ஆரணி, காஞ்சிபுரம், செங்கற்பட்டு குடியாத்தம, சேலம், திண்டுக்கல், இராமநாதபுரம் போன்ற இடங்களிலே அந்த ஏழை எளிய மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்த அரசு இங்கே கொடுத்து உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கான ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் வீடுகள் 5 ஆண்டுக் காலத்திலே கட்டித்தர வேண்டுமென்று சொல்லப்படக்கூடிய திட்டம் போதாது, ஆகவே, 2, 3 இலட்சம் வீடுகளாவது அவர்களுக்ுக்குக்கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற முறை கைத்தறி மானியத்தின் கோரிக்கையிலே வட ஆற்காடு மாவட்டத்திற்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் ஒரு ஏ.டி. ஆபீஸ் தான் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு ஏ.டி. ஆபீஸ் ஆரம்பித்து அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள், அங்கே இருக்கின்ற நிர்வாகிகள் அணுகிச் செயலாற்றுகின்ற முறையிலே அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டகப்பட்டது. அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பட்டு கைத்தறி நூல் முறுக்கு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு அங்கே முறுக்கேற்றும் தொழிலாளர்கள் ஏறத்தாழ 1,500 பேர்கள் இருக்கிறார்கள். அதே போன்று விசைத்தறியில் 1,300 பேர்கள் இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கே நார்பட்டு என்று சொல்லக்கூடிய சேலையை

விசைத்தறியிலே விட்டு செயல்பட்டார்கள். ஆனால், நார்ப்பட்டின் விலையேற்றத்தின் காரணமாக அந்தத் தொழில் இன்றைக்கு முடக்கப்பட்டு அந்தத் தொழிலாளர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்தத் தொழிலாளர்களுக்கும், நார்ப்பட்டு தொழிலை அவர்கள் ஆரம்பிப்பதற்கும் அவர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே ஒரு தொழிற்கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கைத்தறி நெசவாளர்கள் மழைகாலத்திலே அவர்களுடைய கைத்தறி குழியிலே தண்ணீர் தேங்கிக் கொண்டு விடுவதால் அவர்கள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டு அங்கே தொழில் செய்யமுடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த மழைகால நேரத்திலே எந்தவிதமான மானியமாவது கொடுத்து, ஒன்றிரண்டு மாதக் காலத்திற்குப் பண உதவி கொடுத்து வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய துயரைப் போக்க வேண்டும். இந்த நாட்டிலே, இந்த உலகத்திலே உருவாக்கக் கூடியது ஒன்றே ஒன்றுதான். இவ்வுடலை வாட்டி விழுங்கும் உடுக்க உடையும் உணவும் பொருளும் படுக்க இடமும் பிறவாக் கொடையாய் வழங்கும் நிலமே, ஒருநாள் உடுக்க உடையும், உண்ண உணவும், வழங்கும் நிலைமைகளை விரும்பி வழங்கும் இந்த உலகம் அனைத்தையும் நமக்கு கொடுத்து ஆளாக்கியும்கூட, இந்த மனித சமுதாயத்திலே பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டும்கூட அந்தத் தொழிலாளர்கள் வேதனைப்பட்டு கண்ணீர் சிந்தி வாழ வழியின்றி இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு நமது அரசாங்கம் நல்லதொரு உதவியைப் புரிந்து அவர்களது வாழ்கையை வளம்பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்; நன்றி. வணக்கம்.

*திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டுக்கான கைத்தறியும், நெசவுத் தொழிலும், கதர் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகப்படியான மக்கள் எந்தவொரு தொழிலிலேயாவது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அது நிச்சயமாக கைத்தறித் தொழிலும், நெசவுத் தொழிலும் தான் என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளைப் பொருத்தவரையில் அவர்கள் எந்த அளவிலே தங்கள் வாழ்கையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது அன்றைய தினம் கைத்தறித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு இராஜா முகமது அவர்கள் சொல்லிய கருத்துக்களை நான் மேற்கோளாகக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'' இன்றைக்கு காசநோயால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள், பெரும் பகுதியினர் 70 சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்கள் நெசவுத்தொழிலிலே ஈடுபட்டவர்கள் என்பதை புள்ளிவிவரங்களிடையே கண்டறிந்து........'' என்று கூறியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னைகளைக் குறித்து, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணுகின்ற வகையிலே அவர்களுடைய வாழ்விற்கு வளம் தேடத்தக்க வகையிலே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் அரசின் கவனத்திற்கு வந்து அவைகள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவா வரப்படுமா என்றால் வெறுமைதான் மிஞ்சுகிறது.

இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் அறிக்கை ஒன்று இந்த அரசுக்கு அளிக்கப்பட்டு ஏறக்குறைய இரண்டு வருஷங்களுக்கு மேலாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

1977–78 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கையின்போது '' நெசவாளர்களின் பணிநிலை, அவர்களது ஊதியம் ஆகியவற்றை ஆய்தல், பணிப் பாதுகாப்பு, ஊதியம், ஊதிய கொடை, வருங்கால வைப்பு நிதி, மற்ற வசதிகள் ஆகியன தொடர்பாக அவர்களது நலன்களை பாதுகாக்க பரிந்துரை செய்தல் ஆகிய பணிகளுக்காக, மாநில அரசு, ஒரு குழுவை அமைத்துள்ளது. இக் குழு அளித்துள்ள அறிக்கை பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். இரண்டாண்டுகள் ஆகின்றன, இன்னும் பரிசீலனை முடியவில்லை என்றால் அது வியப்பாக இருக்கிறது. இரண்டாண்டுகளாகப் பரிசீலிக்கப்பட்ட பிறகும்கூட இன்றைக்கும்கூட இந்தச் சட்டசபையில் அந்த அறிக்கை வைக்கப்பட்டதா என்றால் வைக்கப்படவில்லை. அதில் என்ன இருக்கிறது என்று யாருக்காவது தெரியுமா என்றால் இல்லை. ஆகவே, அந்த அறிக்கையை உடனடியாக இந்த அவையிலே வைப்பது மட்டுமல்லாமல், அதன் மீது அரசு என்னென்ன கொள்கைகளை, கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது, செயல்முறைக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பதையும் இந்த அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

[திரு. பொ. விஜயராகவன்] [1979 மார்ச் 31

இதற்கு முன்னாலேகூட ஒரு அறிக்கை— ஒரு நிபுணரின் அறிக்கை பெறப்பட்டது. சந்தானம் குழு அறிக்கை என்று 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை. அந்த அறிக்கையின் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால், அந்த அறிக்கையில் சொல்லப்பட்டவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை ஆகவே, அறிக்கைகளை அளிப்பதற்காகக் குழுக்களை நியமித்துவிட்டு, அந்த அறிக்கைகள் வந்தவுடன் வாங்கி வைத்துக்கொண்டு, அதை அப்படியே குப்பைத் தொட்டிக்குள் போடும் நிலைமையிருந்தால் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களை எப்படி வாழ்விக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

சந்தானம் குழு அறிக்கையிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் At least 1000 houses, divided in o suitable colonies may be built every year.

1973 ஆம் ஆண்டிலேயே அந்த சந்தானம் கமிட்டியிலே இது போன்ற பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

Loans given to existing housing colonies may be treated as free of interest from the beginning and all the interest so far collected may be adjusted towards principal due. In future only instalments to principal should be recovered,

[மாலை 6–40]

ஆனால், இன்றைக்கு பார்த்தோமானால் வட்டிக்கு மேல் வட்டி. அது கூடிப் போய்க் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அந்தத் தொழிலாளர்களுக்கு வட்டியைக் கூடக் கட்ட முடியாத நிலைமை உருவாகியிருப்பதை நான் எடுத்துச் சொல்ல முடியும்.

இன்னொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பொருத்தவரையில், 1978–79 லே சொன்னார்கள். "........... நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம் 1962 ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அத்திட்டத்தை தகுந்த முறையில் மாற்றியமைத்தும், கிராம வீட்டு வசதி திட்டதை அதனுடன் இணைததும் அத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வீட்டு வசதித் திட்டம் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து

1979 மார்ச் 31] [திரு. பொ. விஜயராகவன்]

செயல்படுத்தப்படும்........'' என்று 1978–79-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி குறிப்பிட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அன்றைக்குத் தொடங்கப்பட இருப்பதாகச் சொல்லப்பட்டது. இன்றைக்கு இதுவரையில் எந்த முறையிலே முன்னேறி இருக்கிறது, எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் இன்றைக்கு மீண்டும் சொல்கிறார்கள். ''........ 1962 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயலில் இருந்து அதன் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது; நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தை திரும்பவும் போதிய வகையில் திருத்தங்கள் செய்தும், இந்திய அரசு வீட்டு வசதி நகர்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் நிதி உதவி பெற்றும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது'' என்று மீண்டும் சொல்கிறார்கள். 1978லே ஒன்று, 1978–79-லே ஒன்று, இன்றைக்கு, 1979–80லே ஒன்று. இப்படி சொல்லிக்கொண்டே போனால் பிரச்சினைகள் எப்பொழுது முடியுமென்று நான் கேட்க விரும்புகிறேன். வெறுமனே சொல்லி முடித்துவிட்டு, அதற்குப் பின்னால் நடவடிக்கைகள் எடுக்கவில்லை இந்தச் சர்க்கார் என்று நான் குற்றம் சுமத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்னும் சந்தானம் கமிட்டியினுடைய அறிக்கையிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

Special investigation to find out the incidence of diseases special to the weavers and their families and arrangements should be made to prevent such diseases

என்று சொல்லியிருக்கிறார்கள். ஏதோ இங்கே நடமாடுகின்ற மருத்துவ வசதி செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று எங்களுக்கு புரியவில்லை.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

Annually 100 scholarships may be offered to the bright boys and girls belonging to the families of professional weavers to prosecute collegiate education in Pre-University and Degree and Professional Courses.

என்று சந்தானம் கமிட்டி அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த சந்தானம் கமிட்டியினுடைய அறிக்கையிலுள்ள கருத்துக்களை இதுவரை எந்த அளவு அமுல்படுத்தியிருக்கிறார்களென்று சொன்னால், கொஞ்சமும் இல்லை என்றுதான் சொல்லமுடியும்.

நெசவாளர்கள் வறுமையிலே வாழ்கின்றவர்கள். அவர்களுடைய பிள்ளைச் செல்வங்கள் வாழ்க்கையில் முன்னேற சந்தானம் கமிட்டி அறிக்கையிலே வழிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதைக் கூட இன்றைக்கு

கிடப்பிலே போட்டிருக்கிறார்கள் என்றுதான் எங்களைப் போன்றவர்களுக்கு தெரியவருகிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு அறிக்கைகளைப் பெற்றுவிட்டால் போதாது, அந்த அறிக்கையிலே உள்ளவைகளை நடைமுறைப் படுத்த சர்க்கார் முன்வரவேண்டும். இல்லையென்றால், இப்படி அறிக்கைகளைப் பெறுவதற்காக குழுக்களை நியமித்து.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள். 7 மணிக்குள் முடிக்கவேண்டும், தயவுசெய்து முடித்து விடுங்கள்.

திரு. பொ. விஜயராகவன் : இன்னும் கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் அந்த நூற்பாலைகளிலே இருக்கிற கழிவு நூலை முழுமையாகப் பயன்படுத்தி மீண்டும் அதைப் புதுப்பித்து பயன்படுத்துகின்ற திட்டம் சந்தானம் அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்தும் இன்னும் அது முழுமையாக செயல்படவில்லை. அதையும் இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

கதர் துறையைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு கருத்துக்களை நான் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். கதர் துறையினர் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை வெகு விரைவாக செயலாக்க முடியும். அந்த முறையில் ஏறத்தாழ 10,000 கைவினைஞர்களுக்குத்தான் கிராம நூற்பு நிலையங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அந்த நிலையை மாற்றி, இலட்சக்கணக்கில் வேலை வாய்ப்பு அளிக்க, கிராம நூற்பு நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டும். குமரி மாவட்டத்தில் சொல்லப்போனால், வேலையில்லாமல் படித்திருக்கிற படிக்காத இளைஞர்களும் பெண்மணிகளும் அதிகமாக இருக்கிற காரணத்தால் அங்கே அதிகமாக அளவு கிராம நூற்பு நிலையங்கள் தொடங்கப் படவேண்டும். குமரி மாவட்டத்தில் பாலப்பள்ளம், புதுக்கடை, அம்சி மற்றும் பல பகுதிகளிலும் நெசவுநூற்பு நிலையங்கள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பனைவெல்லத் தொழிற்சாலை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். பனை வெல்லத் தொழிலாளர் 2.5 இலட்சம் பேர் இருக்கிறார்கள். கைத்தறி நெசவுத் துறையைப் பொறுத்த வரையில் அவர்கள் எவ்வாறு வளம் பெற முடியாமல் இருக்கிறார்களோ, அதை விட மோசமான நிலைமையில் 2.5 இலட்சம் பேர், பனை வெல்லத் தொழிலாளர்கள், வாழ்க்கையில் வளம் பெற முடியாமல் இருக்கிறார்கள். அவர்களது உற்பத்திப் பொருளான கருப்புக் கட்டிற்கு கட்டுப்படியான விலையில்லை. பனைபடு பொருள்களுக்கு நல்ல விலை இல்லை. அவைகளை நல்ல முறையில்

பயன்படுத்துகின்ற வகையில் '' பாம் கோலா '' போன்ற பானங்களைத் தயாரிக்கின்ற நிறுவனங்களை கன்னியாகுமரி மாவட்டத்திலே நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பனை சக்கரை எடுக்கின்ற நிறுவனங்களை அங்கே நிறுவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பனைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தையும் இந்த அரசு அறிவித்தால் அது அவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். பல்வேறு திட்டங்களைப் போல இந்தத் திட்டமும் ஆகிவிடக்கூடாது. இதை விரைவிலே நிறைவேற்றிதரக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், அந்தத் தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு, உண்மையிலேயே ஏழைப்பட்ட அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்காவது வருடம்தோறும் '' ஸ்காலர்ஷிப் '' அளிக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நுங்கினைப் பாதுகாப்பதற்கென ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கப் போவதாக இந்த அரசு அறிவித்துள்ளது. அத்தகைய ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த ரூ. 30,000 இந்த பட்ஜெட்டில் அனுமதித்து இருக்கிறார்கள். அதை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாம் என்றுகூட சொல்லுகிறார்கள். அத்தகைய ஒரு நிலையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கெ. சொக்கலிங்கம், திரு. வி. கொ. சின்னசாமி ஆகியோர் இந்த மானியத்தின் மீது தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லப் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தால் அடுத்து மாண்புமிகு, கைத்தறி, பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : எங்கள் கட்சியிலிருந்து யாருமே பேசவில்லை. எனவே எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : நாங்கள் பேசுவதற்கு நேரம் இல்லை என்று சொன்னீர்களே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சொக்கலிங்கம் அவர்கள் சார்ந்த தி.மு.க. கட்சியின் சார்பில் ஏற்கனவே ஒருவர் பேசியாகிவிட்டது. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் யாரும் பேசவில்லை என்ற காரணத்தினால் திரு. அழகர்சாமி அவர்களைப் பேச அழைக்கின்றேன். திரு. அழகர்சாமி.

[1979 மார்ச் 31

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகம் இல்லை. ஆகவே சுருக்கமாக ஒன்றிரண்டு விவரங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி, கதர் சம்பந்தமாகப் பல உதவிகளைச் செய்வோம் என்று சொல்லி வந்தாலும் கூட இந்தத் துறையிலே, குறிப்பாக சென்னிமலை போன்ற இடங்களிலே கைத்தறி தொழிலாளர்கள் 10,000 பேர் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் ஒரு பொதுவான குறைபாடு நிலவுகிறது. அது, குறைந்த பட்சக் கூலி கூட அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமை. தொழிலாளர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை; போதுமான வேலை வாய்ப்பு இல்லை; குறைந்த பட்சக் கூலி கூடக் கிடைப்பதில்லை. இந்த நிலையைப் போக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நூல் விலை உயர்வதன் காரணமாக, துணி விலையை உயர்த்தலாம். துணி விலையை உயர்த்தினால் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறையும் என்ற காரணத்தினால் தொழிலாளர்களுடைய கூலியைக் குறைக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க திரு. சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசுகளை அமல்படுத்த உரிய நடவடிக்கைகளை உடனடியாக இந்த அரசு எடுக்கவேண்டும். அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளான தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி கொடுத்தல், வேலைக்கு உத்தரவாதம் அளித்தல், வீட்டுவசதி செய்து கொடுத்தல் போன்றவற்றை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 6-50]

இந்தக் கமிட்டியின் சிபார்சு உடனடியாக அமலுக்குக்கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூலி வேலை செய்யும் அத்தனை கைத்தறி நெசவாளர் தொழிலாளர்களுக்கும் சொந்தமாக வீடுகள் கூட்டுறவு முறையில் கட்டிக்கொடுக்க விசேஷ முயற்சி செய்ய வேண்டும். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவின் கீழே இந்தத் திட்டத்தை கொண்டு வர திட்டமிட்டு இருக்கிறார்கள். அது போதாது. சீக்கிரமாக ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு அடுத்தபடியாக இன்று கூட்டுறவு மில்கள் 12 இருக்கின்றன. அதே மாதிரி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் கீழே 2 மில்கள் இருக்கின்றன. அவற்றிற்கு வேண்டிய பஞ்சு வருஷா வருஷம் கொள்முதல் செய்கிறோம். கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடி; கூட்டுறவு விற்பனை சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்கின்றன. அவர்கள் விவசாயிகளிடத்தில் வாங்காமல் தனியார் இடத்தில் வாங்

1979 மார்ச் 31] **[திரு. சோ. அழகர்சாமி]**

முயற்சிக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமும், விவசாயிகளிடத்தில் நேரடியாக வாங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு கூட்டுறவு சங்கத்தில் ஜனநாயகம் இல்லை. கூட்டுறவு சங்கம் என்று வைத்து இருக்கிறார்களே தவிர ஸ்பெஷல் ஆபீசர் வைத்து இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் ஏன் தேர்தல் வைக்கக்கூடாது. மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எத்தனை சதம், வெளியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை சதம் என்பதெல்லாம் வைத்து, தேர்தலை நடத்தி, ஜனநாயக முறையில் அந்த ஆலைகளை நடத்த ஏன் திட்டமிடவில்லை. அது மட்டுமல்ல, போன ஆண்டு 114 லட்சம் நஷ்டமடைந்திருக்கிறது; 12 கூட்டுறவு மில்களில் இந்த ஆண்டு அவர்களுடைய லாபம் 200 லட்ச ரூபாய் கிடைத்து இருக்கிறது. இந்த லாபம் எப்படிக் கிடைத்தது என்பதைப் பற்றி நான் அதிகமாக உள்ளே போக விரும்பவில்லை. இந்தக் காலத்தில் பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு குறைந்த விலையைக் கொடுத்து, நூல் விலையை அதிகமாக உயர்த்தி இருப்பதன் காரணத்தால்தான், நியாயமான விலையில், மலிவான வலையில் கிடைக்க ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது. அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி பஞ்சு கொள்முதலையும் மார்க்கெட்டிங் சொசைடி மூலமாகவும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவும் செய்யவேண்டும். அதே மாதிரி பான்டேஜ் துணி கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்கிறார்கள். அந்தத் துணியை மருத்துவ மனைகள் வாங்குவது கிடையாது. சர்க்காரில் இருந்து ஜி. ஓ. போட்டு இருக்கிறார்கள்; கூட்டுறவுத் துறையில் இருந்து வாங்கவேண்டும் என்று. அப்படிப் போட்டாலும் அவர்கள் வாங்குவது தனியாரிடத்தில் இருந்து தான். கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வாங்குவதே கிடையாது. உற்பத்தி செய்வது அத்தனையும் முடங்கிக் கிடக்கிறது. ஆகவே, அரசாங்கம் உத்தரவைக் கறாராகப் போடவேண்டும்.

இன்றைக்கு நம்முடைய கைத்தறி சம்பந்தப்பட்ட மட்டில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு எல்லாம் இல்லை. அவர்களுக்கு இது தான் நியாயமான கூலி என்று நிர்ணயம் செய்யப்படவில்லை. என்னைப் பொறுத்தவரையில் 10 வருஷமாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். அவர்களுக்கு அதைச் செய்ய வேண்டிய முயற்சியை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர் நலத் துறை பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கிடைக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கதர், கிராமத் தொழில் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. கதர், கிராமத் தொழில் என்பது இங்கே பிரிக்கப்படவில்லை. மாவட்டத்தில் இருக்கும் அசிஸ்டென்ட் டைரக்டர்கள்

முன்பு இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் ஆளுக்கு ஒரு இரண்டு மூன்று தாலுக்கா எடுத்துக் கொண்டு அந்தப் பணிகளைச் சேர்ந்து செய்து வந்தார்கள். அந்த மாவட்டம் முழுவதற்கும் ஒருவரே என்றால் அவர் சுற்றுப்பயணம் செய்வதற்கு தான் மாதம் பூராவும் இருக்கும். ஆகவே, முன்புபோல பிரிக்காமல் ஒன்றாகவே இருக்கலாம் ஒருவர் கதர் துறைக்கு என்றும், மற்றவர் கிராமத் கைத்தொழில் துறைக்கு என்றும் இருந்தால் வேறு வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவும், அதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு கொஞ்சம் ஊதியமும் கிடைக்கும். அம்பர் ராட்டை கொண்டு வந்ததால் கொஞ்சம் வருமானம் வந்தது. எண்ணெய்ச் செக்கு டான்சி மூலமாக வாங்கிக் கொடுக்கிறார்கள். அந்த எண்ணெய்யை விற்றுக்கொடுக்க கூட்டுறவு சங்கம் அமைத்தோ, அல்லது அந்தப் பண்டகசாலைகளில் மூலம் விற்றோ, அல்லது சிறைச்சாலைகள், அல்லது அரசாங்கத்தின் மூலமோ அந்த எண்ணெய்யை விற்றுக் கொடுத்தால், அவர்களுக்கு வருமானம் கிடைக்கும். அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது தேங்கியுள்ளவைகள் விற்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் கைத்தறி சிறுதொழில் பாதுகாக்கப் படவேண்டும். அதை நம்பி செய்ய போதிய வருமானம் வரும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக இன்றைக்கு நம்முடைய மின்விசைச் செக்கு இருக்கிறது. அதற்கு மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கிறது. வேறு தொழில்களுக்கு விதிப்பது போல இந்த மின் விசைச் செக்குக்கும் 40 பைசா, 50 பைசா என்று கட்டணம் இருக்கிறது. அப்படி விதிப்பது சரியல்ல. அதையும் ஒரு கிராமக் கைத்தொழிலாகக் கருதி, கதர்-கிராமத் தொழில்களுக்கு கிடைக்கும் உதவிகள் அதற்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பனைமரம் உற்பத்தி பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. இன்றைக்கு பனை மரம் எல்லாம் பட்டுப் போச்சு. பனை மரத்தை வளர்ப்பதற்கு 94,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது போதாது. பனைச் செல்வம் நமக்கு பலவகைகளிலும் தேவைப்படுகின்ற முக்கியமான செல்வம்; சகல பொருட்களும் அதிலிருந்து கிடைக்கின்றன. சாதாரண மக்களுக்கு அதனால் வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. ஆகவே, பனைமரங்களை பெருமளவுக்கு நாம் வளர்க்கவேண்டும்; இப்போது இரண்டு இலட்சம் பனை மரங்களை வளர்க்க 94,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இது போதாது. எங்கள் பகுதி வறண்ட பகுதி. அங்கும் அதைப்போன்ற மற்ற வறண்ட பகுதிகளிலும் பனைமரங்களை ஏராளமாக வளர்க்கலாம். 2 அல்லது . ஆண்டுகளுக்கு அது வறட்சியைத் தாங்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திரு. சோ. அழகர்சாமி]

அடுத்தபடியாக தொழிலியல் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம் இருக்கிறது. கோவில்பட்டி, சங்கரன்கோவல் வட்டாரங்களில் கைத்தறி சொந்தமாக இல்லாமல் கூலிக்கு போகக்கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு தொழிலியல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அம்பர்சர்க்கா நூற்பு பயிற்சி அளிக்க கட்டடம் கட்டப் படுகிறது. கட்டடத்தை கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது, ஆனால் அதற்குறிய இடத்தை வாங்க எந்த வழியும் இல்லை. யானையை வாங்கிக் கொடுத்துவிட்டு, துரட்டியை வாங்கிக் கொள் என்பதைப்போல இருக்கிறது. அவ்வளவு செலவு செய்து கட்டடத்தைக் கட்டிக்கொடுக்கும்போது அந்த கட்டடம் இருக்கக்கூடிய இடத்தையும் சேர்த்து வாங்கிக்கொடுத்தால் என்ன குடி முழுகிப்போகிறது. ஆகவே, அம்பர்சர்க்கா தொழில் பயிற்சிக் கூடம் கட்டும் இடத்தையும் வாங்குவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கும் இரண்டுக்கும் சேர்த்து நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல விவரங் களைச் சொல்ல வேண்டியிருந்தாலும் நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: துணைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவுத் தொழில் கொள்கை விளக்கக் குறிப்பின்மீதும், கதர் கிராமத் தொழில் கொள்கை விளக்கக் குறிப்பின்மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதில் கூற நேரம் இல்லா விட்டாலும் கூட கைத்தறித் துறையையும் கதர் கிராமத் தொழில் துறையையும் நல்ல முறையில் சீரமைக்கவும், நல்ல முறையில் இந்தத் தொழில்களை ஊக்குவிக்கவும் அரசாங்கம் என்னென்னத் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பதில் கூறும் வகையில் சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டில் நாம் முக்கிய மாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் நான்கு. தனியார் துறையிலே வேலை செய்துகொண்டிருக்கிறவர்களை 60 சத வீதம் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவருவது ; அவ்வாறு கூட்டுறவுத் துறையில் கொண்டுவந்த நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுப்பது ; நல்ல வசதிகளைத் தேடிக்கொடுப்பது ; அவ்வாறு உற்பத்திச் செய்யப்பட்ட துணி களை நல்ல முறையில் கொள்முதல் செய்து விற்பனை அதிகரிப்பது

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] [1979 மார்ச் 31

போன்ற நான்கு திட்டங்களை இந்த அரசு நல்ல முறையிலே இப்போது நிறைவேற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையின்கீழ் தனியார் துறையில் வேலை செய்கிறவர்களைக் கொண்டுவர மூன்று வழிகளை நாங்கள் பின்பற்றிவருகிறோம். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அதில் தனியார் துறையிலே வேலை செய்கின்றவர்களை அங்கத்தினர்களாக்குதல் ; ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் மேலும் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளினால் நெசவாளர்களை இந்தக் கூட்டுறவுத் துறையின்கீழ் இப்போது கொண்டு வருகிறோம்.

அதுமட்டுமல்ல. தீவிர வளர்ச்சி கைத்தறித் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில் 5 மத்திய அரசின் உதவியோடு 5 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 22,000 நெசவாளர்களை அந்த கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இந்த 22,000 நெசவாளர்கள் 1980-81ஆம் ஆண்டுக்குள் தீவிர வளர்ச்சி கைத்தறிச் திட்டத்தின்கீழ் அடிப்படையிலே கூட்டுறவுத் துறைக்கு கொண்டுவரப்பட இருக்கிறார்கள்.

இந்த இரண்டுத் திட்டங்களைத் தவிர மூன்றாவதாக தமிழ்நாட்டில் தறியற்ற நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாக சுமார் 200 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க அரசு திட்டங்களை வகுத்திருக்கிறது. இதுவரையில் 49 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அடிப்படையில் அமைக்கப்பட்டு, சுமார் 8,468 நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். மீதம் இருக்கிற தொழிலியல் கூட்டுறவுச்சங்கங்களையும் நல்லமுறையில் உருவாக்குவதன் மூலம் சுமார் 40,000 தறியற்ற நெசவாளர் பயன்பெற இருக்கிறார்கள்.

[இரவு 7-00]

இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் 746 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. கடந்த இரண்டாண்டுகளுக்குள்ளாக இந்த சங்கங்களுடைய எண்ணிக்கையை 946 ஆக இந்த அரசு உயர்த்தி இருக்கிறது. நெசவாளர்களுடைய எண்ணிக்கையும் சுமார் 40 ஆயிரம் பேர் அதிகப்படியாக கூட்டுறவுத்துறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு 20 ஆயிரம் நெசவாளர்கள்

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

என்ற வகையில் இரண்டாண்டுகளில் 40 ஆயிரம் நெசவாளர்கள் கூட்டுறவுத்துறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள் என்று நான் கூறுகின்ற நேரத்தில் 1974ஆம் ஆண்டு, 1975ஆம் ஆண்டுகளில் எந்த அளவிற்கு நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டார்கள் என்ற கணக்கை இங்கே நான் தெரிவித்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அதனை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 1974–75ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 85 ஆயிரம் நெசவாளர்கள் கூட்டுறவுத்துறையிலே இருந்தார்கள். அப்படி 1 இலட்சத்து 85 ஆயிரம் என்ற அளவிலே இருந்தது 1975–76ல் 1 இலட்சத்து 92 ஆயிரம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டது. 1976–77-ல் இது இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு ஆண்டு ஒன்றுக்கு 8 ஆயிரம், 5 ஆயிரம் என்ற அளவிலேதான் கடந்த ஆண்டுகளில் நெசவளார்களின் எண்ணிக்கை கூட்டுறவுத் துறையின்கீழ் வந்தது. ஆனால் இந்த அரசு ஏற்பட்டு இப்படி இரண்டாண்டுகளுக்குள்ளாக சுமார் 40 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து இந்த அரசு நெசவாளர்களைப் பொறுத்த அளவில் எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறு பல்வேறு திட்டங்களின் மூலமாக தனியார் துறையிலே வேலை செய்த நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவருகிற நேரத்தில் அவ்வாறே அதிகப்படியான எண்ணிக்கையுள்ள நெசவாளர் சங்கங்களையும் நல்ல முறையிலே இயக்குவதற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கி இருக்கிறது.

கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்ட நெசவாளர்களுக்கு தொடர்ந்து நல்ல வாய்ப்புகள் கிடைப்பதற்கும் தேவையான உதவிகளைச் செய்து தருவதற்கும் இந்த அரசு பல திட்டங்களை உருவாக்கி இருக்கிறது.

முதலாவதாக மூலப்பொருள் விநியோகம் பிரச்சினையை இந்த அரசு சீராக்கி இருக்கிறது. இந்த கூட்டுறவுச் சங்கங்களின் இன்றியமையாத தேவை நூல் வினியோகம். முன்பு மதுரை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பிராந்திய கமிட்டிகள் பஞ்சைக் கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கொடுத்து அங்கு உற்பத்தி செய்யப்படுகிற நூலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து வந்தது. அந்த இரண்டு பிராந்திய கமிட்டிகளும் பஞ்சைக் கொள்முதல் செய்வதில் சில முறைகேடுகள் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக 1–8–1977 முதல் கோவையில் திருத்தியமைக்கப்பட்ட கமிட்டி

தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்டரேஷனுடைய தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25 கோடி அளவிற்கு பஞ்சைக் கொள்முதல் செய்து 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் கீழ் இயங்குகின்ற மற்றும் இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, 14 நூற்பாலைகளுக்கு நல்ல தரம் உள்ள பஞ்சைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்கிறது.

இவ்வாறு ரூ. 25 கோடி அளவிற்கு கொள்முதல் செய்யப்படுகிற பஞ்சு தரமுள்ள பஞ்சாகவும் நல்ல பஞ்சாகவும் இருக்கின்றதா என்று சோதனையிட ரூபாய் 8.25 இலட்சம் செலவில் பஞ்சின் தரத்தைச் சோதனையிடும் ஆய்வுக்கூடம் ஒன்று கோவையிலே அமைத்துச் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு12 கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்கிற நூலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 19 நூல் விநியோகம் செய்கிற நிலையங்களின் மூலமாக தமிழகத்திலே உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இந்த நூலை விநியோகம் செய்துவருகிறது.

இதுவரை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நூலைக் கொள்முதல் செய்து சங்கங்களுக்குக் கொடுத்து வந்தது. ஆனால் சென்ற ஆண்டு பட்டு, ஜரிகை போன்றவைகளையும் கொள்முதல் செய்து சரியான விலையில் சமமான விலையில் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பட்டு, ஜரிகை கொள்முதல் கமிட்டி உருவாக்கப் பட்டு அந்தக் கமிட்டி இப்போது நல்ல முறையிலே பட்டையும், ஜரிகையையும் எல்லா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரே சீரான விலையில் தரமுள்ள மூலப்பொருள்களை வாங்கி கொடுத்து வருகிறது.

தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சாயப் பொருள்களும், ரசாயனப் பொருள்களும் கிடைப்பதில் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விலையேற்றத்தின் காரணமாகவும் இந்தச் சங்கடங்கள் அடிக்கடி ஏற்பட்டுவிடுகிறது என்பதை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருப்பவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததின் விளைவாக இந்த அரசு கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாக எவ்வாறு நூலைக் கொள்முதல் செய்து விநியோகிக்கிறோமோ அதைப் போலவே தொடர்ந்து இதுபோன்ற சாயப் பொருள்களையும், ரசாயனப் பொருள்களையும் கொள்முதல் செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த சாயப்பொருள்களையும், ரசாயனப்பொருள்களையும் அண்டை மாநிலங்களிலே இருந்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் விலையேற்றத்தை நம்மால் தவிர்க்க முடியவில்லை. ஆகவே தமிழகத்திலேயே இவற்றை உற்பத்தி செய்கின்ற வகையில் 1980 ஆம் ஆண்டிற்குள்ளாக இரண்டு சாயப் பொருள் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு ஆல்கலிங் அன்ட் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் தூத்துக்குடியிலும், வானவில் டைஸ் அன்ட் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் கடலூரிலும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிறுவப்படுகின்ற ஆலைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சாயப்பொருள்களை உற்பத்தி செய்கின்றவரை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சாயப்பொருள்களையும் ரசாயனப்பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் தொடர்ந்து அதிகம் விற்பனையாகக்கூடிய ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்கி, அதன் மூலமாக பாலிஸ்டர் போன்ற புது ரகங்களை கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு அளிப்பதன் மூலம் நல்லமுறையில் அவர்கள் வேலைவாய்ப்பு பெற்று, கூலி உயர்வையும் பெறுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கைத்தறியில் உற்பத்தி செய்கின்ற துணிகளுக்கு நல்ல முறையிலே பலவிதமான வண்ணச்சாயங்களும், அச்சிட்டும் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஈரோட்டிலே துணி பதப்படுத்தும் தொழிற்சாலை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த சாயச்சாலை லாபத்திலே இயங்கி வருகிறது என்பதையும், அந்தச் சாயச்சாலை மேலும் பிரிண்ட் செய்யும் தேவைக்கு ஏற்றபடி சுமார் 22 லட்சம் ரூபாய் செலவில் விஸ்தரிக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறித் துணியிலே பாலிஸ்டரைப் புகுத்திய பிறகு, அந்த பாலிஸ்டர் துணிக்கு சாயம் போடுவதற்கும், அச்சடிப்பதற்கும் அவைகளை பம்பாய்க்கும், வேறு மாநிலங்களுக்கும் அனுப்பும் சூழ்நிலை உள்ளது. அதன் காரணமாக அதிகப்படியான செலவு ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்காக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மத்திய அரசிடம் இந்த பாலிஸ்டர் துணிக்கு சாயம் போட, பதப்படுத்த அச்சடிப்பதற்கு இங்கே ஒரு தொழிற்

கூடத்தை அமைக்க வேண்டுமென்று அனுமதி கோரியிருந்தது. இந்த மானியக் கோரிக்கை நிறைவேறுகின்ற நேரத்திலே, அந்த பாலிஸ்டர் துணிக்கான சாயச்சாலைக்கு மத்திய அரசு அனுமதியளித்து, சுமார் 31 லட்சம் ரூபாய் அனுமதித்திருப்பதாக செய்தி இப்போது கிடைத்திருக்கிறது. இந்த 31 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கின்ற இந்தத் தொழிற்சாலையை ஈரோட்டிலேயே தொடர்ந்து விரிவுபடுத்த இருக்கின்றது என்பதையும் அதன்மூலம் இந்த கைத்தறி பாலிஸ்டர் துணி அதிகம் உற்பத்தி செய்ய முடியும், அதிகப்படியான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சைசிங் பிளாண்டைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். இது வரை இந்தக் கைத்தறித் துறைக்கு கஞ்சி போடுகின்ற இந்தத் தொழிற்சாலை தமிழகத்திலே இல்லை. இந்த ஆண்டு சேலத்தில் சுமார் 21 லட்சம் ரூபாய் செலவில் சேலம் கூட்டுறவு நூற்பாலை கட்டிடத்திற்குள்ளேயே இந்த கைத்தறி சைசிங் பிளாண்டை நிறுவ மத்திய அரசு 21 லட்சம் ரூபாய் இன்றைக்குத்தான் அனுமதி தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மானியக் கோரிக்கை நிறைவேறுகின்ற இந்த நேரத்தில் ரூ. 31 லட்சம் பாலிஸ்டரைப் பதப்படுத்துவதற்கும், 21 லட்சம் ரூபாய் சைசிங் பிளாண்ட் நிறுவுவதற்கும் ஆக 52 லட்சம் ரூபாய் மத்திய அரசு நமக்கு வழங்க இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினரவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறித் துறையில் உற்பத்தி செய்யப்படும் துணிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும கெட்டிச் சாயம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியோடு இந்த ஈரோடு சாயச்சாலை அல்லாமல், இன்னும் 5 மாவட்டங்களில் சாயச் சாலைகள் உருவாக இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இன்னும் இப்படிப் பட்ட சங்கங்களுக்கு நாம் நூல் விநியோகம் செய்ய முடியும் என்ற திட்டத்தையும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு மேலும் உதவி செய்யக்கூடிய வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஒரு நெசவாளருக்கு ரூ. 200 முதல் ரூ. 1000 வரை கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அடிக்கடி டிசைன்களை மாற்றுவதாலும், அடிக்கடி ஜக்காடு போன்ற கருவிகளைப் பொருத்துவதன் காரணமாகவும் நெசவாளர்களுக்கு அதிகப்படி

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

யான செலவினங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து, நீண்டகால கடனை கோ-ஆப்டெக்ஸ் நிறுவன வங்கிகளில் இருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுத் தருவதற்கு வாய்ப்பு இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது.

[இரவு 7–10]

ரிசர்வ் வங்கியும் நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் அதாவது $7\frac{1}{2}$ சதவீத வட்டியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வசதி செய்து வந்தார்கள். இப்போது முன்னால் $7\frac{1}{2}$ சதவீத வட்டியிருந்ததை இன்னும் குறைத்து $6\frac{1}{2}$ சதவீதமாகக் குறைத்து அதிக அளவில் கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் கொடுக்க முன் வந்திருப்பது உண்மையிலேயே இந்தத் துறை வளர்ச்சி பெற்றிருப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இவ்வாறு இந்தத் துறையில் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தியிருப்பதோடு, உற்பத்தியை பெருக்கியதன் மூலம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக இன்றைக்கு 2 கோடி ரூபாய் அளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆர்டர்களைப் பெற்றிருக்கிறது. இதில் 75 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நம்முடைய அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததின் காரணமாக மேலும் ஏற்றுமதி செய்வதற்காக ஐந்து கோடி ரூபாய் அளவுக்கு ஆர்டர்களைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இவ்வாறு அதிகாரிகளைக் கொண்ட குழு அயல்நாடுகளுக்குச் சென்று வந்ததால் அரசாங்கத்திற்கு எந்தவகையிலும் அதிகச் செலவை தேடித்தந்து விடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயத்த ஆடைகளை நல்ல முறையில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இங்கு தயாரிக்கப்படுகின்ற ஆயத்த ஆடைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நல்ல வரவேற்பு இருக்கின்றது. ஆகவே இந்த ஆயத்த ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இந்த அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்முதலைப் பொறுத்தவரையில் ஒரு சரியான திட்டத்தை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பின்பற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதுவரை பண்டிகை காலங்களில் மட்டும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்தது. பண்டிகை காலங்களில் மட்டும் துணிகளை கொள்முதல் செய்து வந்ததால் பல்வேறு சங்கங்களில் துணி தேக்கம் ஏற்பட்டது. இதன் காரண

மாக நெசவாளர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி வறுமையில் வாடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு தெளிவான கொள்முதல் திட்டத்தை அறிவித்த தன் விளைவாகவும், எல்லா காலங்களிலும் துணிகள் கொள் முதல் செய்து வருவதால் எந்தச் சங்கத்திலும் இப்போது துணித் தேக்கம் இல்லை என்பதோடு, கொள்முதல் செய்கின்ற துணிகளை எல்லாம் நல்ல முறையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனை செய்வதற்கு முன்வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கொள்முதல் செய்வதோடு, அவ்வப்போது புதிய டிசைன் சென்டர்களிலிருந்து உருவாக்கப் படுகின்ற டிசைனில் இவ்வளவு ரகங்கள் வேண்டும் என்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொல்லிவிடு வதால், முறையாகக் கொள்முதல் செய்வதால், தொடர்ந்து நெசவாளர்களுக்கு வேலையிருந்துவருவதால், நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பை பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருக் கின்ற நெசவாளர்கள், பல்வேறு வசதிகளைப்பெற்று வருகிறார்கள். வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மத்திய அரசு 1,500 ரூபாய் மானியமாக கொடுக்க வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வற் புறுத்தி வந்தும், மத்திய அரசு இன்னும் அனுமதி அளிக்க வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறேன். மேலும் இந்த 1,500 ரூபாய் மானியம் தர வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு 1,500 ரூபாய் கொடுப்பதற்கு இசைவு தெரிவித்தவுடன் இத்திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 2,000 வீடுகள் வீதம் ஐந்து ஆண்டுகளில் 10 ஆயிரம் வீடுகள் கட்டப் படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல லட்சக்கணக்கான நெசவாளர்கள் நம் நாட்டில் இருக்கும்போது, இந்த 10 ஆயிரம் வீடுகள் எம்மாத்திரம் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்டார்கள். இத்திட்டம் முதன்முதலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் எந்த முறையில் வெற்றி பெறுகிறது என்பதை அறிந்து மேற்கொண்டு இதை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டம் அரசாங்கத்தினிடம் இருக் கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ வசதியைப் பொறுத்த வரையில், மூன்று நடமாடும் மருந்தகங்களும், நவீன வசதிகள் கொண்டதாக—அதாவது எக்ஸ்ரே எடுத்தல், மருந்துகள் கொடுத்தல், இந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறி வித்திருக்கிறோம். இப்போது மருத்துவத் துறையின் பரிசிலனையில்

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

இந்தத் திட்டம் இருக்கிறது. விரைவில், உடனடியாக, இரண்டு மருந்தகங்களைக் கொடுப்பதற்கு மருத்துவத் துறை முன் வந்திருக்கிறது. அது வந்தவுடன் மருத்துவ வசதிகள் நிச்சய மாகக் கிட்டும என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய நெசவாளர்கள் இறந்துவிடுகின்ற நேரத்தில், ஆயுள் காப்பீட்டு நிதியாக 500 ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தை மாற்றியமைத்து 500 ரூபாயை 3,000 ரூபாய் அளவிற்கு உயர்த்தும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

இவ்வாறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்து வதன் மூலமாகவும், அதிகப்படியான நெசவாளர்களை கூட்டு றவுத் துறையின் கீழ் கொண்டு வருவதன் விளைவாகவும், புதிய புதிய ரகங்களை கைத்தறித் துணிக்கு அறிமுகம் செய்ததாலும், உற்பத்தி அதிகப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளை விற்பனை செய்வதற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் திலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 250 புதிய விற்பனை நிலையங் களையும், ஏற்கனவே இயங்கி வருகின்ற விற்பனை நிலையங்களில் 150-ஐ நவீனப்படுத்தவும் திட்டத்தை அறிவித்திருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு ரிபேட் கொடுத்து, கடன் வழங்கியும், பரிசுத் திட்டங்களை அறிவித்ததன் மூலமாகவும், தமிழகத்திலே இப்போது கைத்தறித் துணிகளின் விற்பனை அளவு உயர்ந் திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கடந்த தீபாவளியின்போது 12 கோடி ரூபாய் குறியீட்டை மீறி 13 கோடியாக விற்பனை உயர்ந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

ஏழை எளிய மக்கள் கைத்தறித் துணிகளை நல்ல முறையிலே விரும்பி வாங்க வேண்டுமென்ற அடிப்படையிலே மிகக் குறைந்த விலையில் ஜனதா ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசுகின்றபோது, விசைத் தறி களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விசைத் தறிகளின் எண் ணிக்கைகளையும், ரகக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் மீறி இருக்கிறார்கள் என்பது இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதுபற்றி இந்த அரசு கவனம் செலுத்தி வரு கிறது. அப்படிப்பட்ட விசைத் தறிகளுக்கு அனுமதி கொடுப் பதும், அதை மறுப்பதும் மத்திய அரசினுடைய அதிகாரத்திலே இருக்கக்கூடிய காரணத்தினால், அவர்கள் ரகக் கட்டுப்

பாட்டைமீறி, கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட துணிரகங்களை,விசைத் தறிகளில் உற்பத்தி செய்கிறார்கள். அந்தத் துணிகளை பறிமுதல் செய்வதோ அல்லது அவர்கள் மீது நடவடிக்கை எடுப் பதோ மத்திய அரசின் அதிகாரத்தில் இருக்கிறது. அதை மீறி நீதி மன்றங்களுக்குச் சென்றாலும், அந்த வழக்குகள் அங்கே நிற்பதில்லை. பல்வேறு காரணங்களால் அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இந்தப் பிரச்னைகளையெல் லாம் மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, இதற்கு உடனடியாக ஒரு முடிவு வழங்கக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழக அரசைப் பொறுத்த அளவில், நெசவாளர்களுடைய மாத வருமானம் குறைந்தது ரூபாய் 200-லிருந்து 250 வரை இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு மாதத்தில் 22 முதல் 25 நாட்களுக்கு ஒரு நெசவாளி வேலைவாய்ப்பு பெற வேண்டு மென்ற கொள்கையை இந்த தமிழக அரசு மேற்கொண்டிருக் கிறது. அதற்கான முழு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசுகின்ற நேரத்தில், கைத் தறி, கதர் துணிகளை அரசாங்க நிறுவனங்களும், தேவைப் படுகின்ற நிறுவனங்களும் வாங்க வேண்டுமென்று குறிப்பிட்டார் கள். மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் கூறு கிறபோது, 50 சதவீதம் கைத்தறியும், 50 சதவீதம் கதரும் என மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், தற் போது அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எல்லா அரசு நிறுவனங்களும், மாநகராட்சி நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான துணிகளை கைத்தறியும், கதருமாகப் பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். கதர் துறையை ஏன் அவர்கள் இந்த அளவிற்குக் குறிப்பிடுகின்றார்கள் என்று தெரிய வில்லை. தமிழகத்தில் உற்பத்தியாகின்ற கதர் துணி உற்பத்தி யில், தமிழக மக்களே ஈடுபட்டிருக்கிறார்கள். அதுவும், குறிப் பாக மிகப் பின்தங்கிய கிராமங்களிலே வாழக்கூடிய ஏழை எளிய மக்கள்தான் இந்த நூலைப் பெற்று, கதரை உற்பத்தி செய்கிறார்கள். அதிகப்படியான வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற இந்த கதர்த் துணி உற்பத்தி மானியத்தை ஏற்க மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு என்ன தயக்கம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

[இரவு 7-20]

மத்திய அரசின் அதிகாரத்தின்கீழ் இருக்கும் அலுவல கங்கள், தபால் தந்தி அலுவலகங்கள், ரயில்வே அலுவலகங்கள் மற்றும் ராணுவம் போன்றவற்றிலே பயன்படுத்துகிற துணிகளைக்

கூட கைத்தறித் துணிகளைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே மாநில அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசு அதைப்பற்றிக் கவனிக்கவில்லை என்று ஆதங்கப்படத் தேவையில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஏகாம்பர ரெட்டியார் பேசுகிற நேரத்தில் இப்போது போட்டிருக்கும் திட்டத்தின் அடிப்படையில் தனியார் துறையில் இருக்கும் நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வந்தது போக மீதம் உள்ள இரண்டு லட்சம் மக்களை என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டார்கள். படிப்படியாக அவர்களைக் கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவர இந்த அரசு முயற்சி செய்யும். தனியார் நெசவாளர்களே இல்லை, எல்லோரும் கூட்டுறவுத் துறைக்குச் சென்றுவிடுவார்கள் என்ற காரணத்தால் மாஸ்டர் வீவர்கள் அதிகமாகக் கூலி கொடுத்து அவர்களைத் தங்களிடம் வைத்துக் கொள்ள முன்வருவார்கள் என்று கருதுகிறேன்.

நூல் விலையேற்றம் பற்றிப் பொதுவாக எல்லோரும் குறிப்பிட்டார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு என்று குறிப்பிட்டிருக்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களிலும் நூல் ஒரே விலைக்கு விற்க வேண்டுமென்று மத்திய அரசு விரும்புகிற காரணத்தால் மாநில அரசு நூல் விலையைக் கட்டுப்படுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பீகார், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் நூல் விலையேற்றத்தினால் நூல் தட்டுப்பாடே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை நூல் தட்டுப்பாடு நிச்சயமாகக் கிடையாது. கோ-ஆப்டெக்ஸ், கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலை தேவையான அளவுக்கு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுத்து வருகிறது. விலையேற்றம் ஒன்றுதான் நம்முடைய பிரச்சினை. மற்ற மாநிலங்களில் நூல் கட்டுப்பாடு, விலையேற்றம் ஆகிய இரண்டு பெரிய பிரச்சினைகளை அந்த மாநில கைத்தறி நெசவாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழக நெசவாளப் பெருங்குடி மக்கள் அந்த வகையில் அதிருஷ்டசாலிகள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பாண்டேஜ் கிளாத்தை கைத்தறித் துறைக்கே ஒதுக்க வேண்டுமென்றும், மருத்துவத் துறை கைத்தறித் துறையில் உற்பத்தி செய்யப்படுகிற துணியைத்தான் வாங்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. முன்பு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் காரண

மாக சில பிரச்னைகள் உருவானதைத் தொடர்ந்து இன்று தமிழகத்தில் உற்பத்தியாகிற, கைத்தறியில் உற்பத்தியாகிற அனைத்து பாண்டேஜ் கிளாத்தையும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து அவர்கள் மூலம் மருத்துவத் துறைக்குக் கொடுப்பது என்று புதிதாக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. கைத்தறித் துறையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற பாண்டேஜ் கிளாத் முழுவதும் அரசாங்கத்தின மூலம் கொள்முதல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ராஜா சுப்பிரமணியம் கமிட்டி அறிக்கையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் இங்கு ஒரு மசோதாவை அரசு கொண்டு வர இருக்கும் காரணத்தால் அதை மாண்புமிகு அங்கத்தினர்கள் பார்வைக்கு வைக்கவேண்டியதில்லை என்று அரசு முடிவு செய்திருப்பதன் காரணமாகத்தான் இங்கே வைக்கவில்லை. இதிலே எந்தவிதமான ரகசியமும், இதை வைக்கக் கூடாது என்ற எண்ணமும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த வாரம் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நான் பதிலளிக்கின்ற நேரத்தில் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக அந்த மசோதாவைக் கொண்டுவர அரசு தீவிர முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது என்றுஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

ப்ளீடிங் மெட்ராஸ் என்ற கைத்தறித் துணிக்கு 30 சதவிகிதம் ஊக்க போனஸ் கொடுத்து வந்தார்கள். இப்போது அதை நிறுத்தி விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். நைஜீரிய அரசாங்கம் அப்படிப்பட்ட துணி வகைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய தடை செய்திருக்கிறார்கள். இப்போது அந்த வகைத் துணிகள் ஏற்றுமதி செய்யப்படாததால் ஊக்க போனஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசுகிறபோது ஆல் இந்தியா ஹாண்ட்லூம் போர்டில் தமிழ்நாட்டில் இருந்து ஒருவரைத்தான் நியமனம் செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக ஆல் இந்தியா ஹாண்ட்லூம் போர்டுக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்கிற நேரத்தில் மத்திய அரசு மாநில அரசிடம் யோசனை கேட்பார்கள். இங்கிருந்து பரிந்துரை செய்கிற பட்டியலில் இருந்து அதற்கு அங்கத்தினர்களை நியமிப்பார்கள். இந்த ஆண்டு அவ்வாறு பட்டியல் கேட்காமல் அவர்களாகவே சென்ற ஆண்டு இருந்த ஒருவரை நியமித்திருக்கிறார்கள். மேலும் இருவரை அதற்கு நியமிக்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறது.

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

மாண்புமிகு அர்ஜுனன் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு தனி உதவி இயக்குநர் அலுவலகம் தேவை என்று குறிப்பிட்டார்கள். அப்படி தனியாக உதவி இயக்குநரை நியமிப்பது பற்றி அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வீடுகட்டும் திட்டத்தைப் பற்றி எல்லோரும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குத் தேவையான பதிலை அளித்திருக்கிறேன் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் பேசும்போது சந்தானம் கமிட்டி அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நெசவாளர் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்கிற வகையில் அரசாங்கம் உதவி செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டார்கள். ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலேயும் பொது நல நிதி என்று வைத்து அதிலே ஒரு தொகையை ஆண்டுதோறும் போட்டு, நிதி சேர்க்கப்பட்டு வருகிறது. அந்த நிதியை நெசவாளர்கள் குடும்பங்களின் குழந்தைகளுடைய படிப்பிற்காகவும், மருத்துவச் செலவுக்காகவும் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறது. ஆகவே, நல்ல லாபத்திலே இயங்குகிற அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலேயும் 4 ஆயிரம் முதல் 8 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் வரை தொகையைச் சேர்த்து வைத்து, அந்த நிதியிலிருந்து நெசவாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுடைய படிப்பிற்காகவும், மருத்துவ வசதிக்காகவும் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கைத்தறித் துறையைப்பற்றித் தெரிவித்த அனைத்துக் கருத்துக்களையும் மேலான ஆலோசனைகளையும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர்—கிராமத் தொழில் பற்றி ஒரு சில கருத்துக்களைப் பற்றி மட்டும் எடுத்துரைக்க விரும்புகிறேன். கதர் துறையின் மூலம் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்கும் திட்டம் மிகப் பின்தங்கிய கிராமங்களிலே, குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. 1979—80 ஆம் ஆண்டில் ஏற்கனவே இயங்கி வருகின்ற 328 நூற்பு நிலையங்களைத் தவிர 280 நூற்பு நிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. கதர்—கிராமத் தொழில் மத்திய ஆணைக் குழு அதற்கான அனுமதியை

அளித்திருக்கிறது. ஒவ்வொரு கிராம நூற்பு நிலையத்திலேயும் 33 அங்கத்தினர் வீதம் 280 நூற்பு நிலையங்கள் தமிழகத்திலே உருவாக்கப்படுவதன் மூலமாக ஏறத்தாழ 10 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க முடியும். இது தவிர நிலையங்களிலே ஆயிரம் தறிகளையும், 10 மஸ்லின் சர்க்காக்களையும் அமைப்பதற்கும் கதர் கிராமத் தொழில் மத்திய ஆணைக் குழு அனுமதியளித்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கிற நேரத்திலே நூற்பு நிலையங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கொடுத்து இருக்கிறார்கள். அதே நேரத்திலே கதர் ஆடையின் விலை அதிகமாக இருக்கிறது என்றும் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு முன்னுக்குப் பின் முரணான வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. கதர் ஆடைகளைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களின் விலையையும் அதைத் தயாரிப்பதற்கு ஏற்படும் செலவையும் சேர்த்துத்தான் அதனுடைய விலையை நிர்ணயிக்கிறோம். அப்படியிருக்கிற போது நூற்பவர்களுடைய கூலியை அதிகப்படுத்த வேண்டுமென்றால் கதர் ஆடையின் விலையை அதிகப் படுத்துவதன் மூலமாகத்தான் அதைச் செய்யமுடியும். பொங்கல் பண்டிகையை முன்னிட்டுத் தமிழகத்திலே சிட்டம் ஒன்றுக்கு 4 பைசா வீதம் கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரசு அறிவிப்புச் செய்தது. அதன் மூலமாக வாரியத்திற்கு 14 இலட்சம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படுகிறது. இப்படி 14 இலட்ச ரூபாய் அதிகச் செலவு ஏற்படுகிறது என்பதற்காக கதர் ஆடையின் விலையைக் கூட்டவில்லை, அப்படிக் கூட்டாமல் வேறு வகையிலே அதைச் சரிக்கட்டுவதற்கு வாரியம் இப்போது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

கிராமத் தொழில்களைப் பொறுத்த வரையில் எல்லாத் துறைகளையும்விட கிராமத் தொழில்கள் மூலமாக கிராமங்களில், பொருளாதாரத்தில் மிகப் பின்தங்கிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும் என்று அரசு நம்புகிறது. அரசு சமீபத்திலே ஒரு ஆணை பிறப்பித்தது. அதன்படி அரசு நிறுவனங்கள், மாநகராட்சி நிறுவனங்கள், அரசுத் தொடர்புடைய மற்ற நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கிராமக் கைத்தொழில்கள் துறையின் மூலமாக வாங்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்ததன் விளைவாக கிராமத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. அப்படி உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக பல்வேறு சிறு தொழில்கள் உருவாவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 31] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

[இரவு 7—30]

சமீபத்தில் கதர்-கிராமத் தொழில்கள் மத்திய ஆணைக் குழுவின் தலைவர் அவர்களைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் இந்த அரசாணையை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். அவர்கள், நான் மற்ற மாநிலங்களுக்குச் செல்லும் நேரத்தில் எல்லாம் அந்த மாநில அரசை, தமிழ்நாடு அரசு அறிவித்திருப்பதைப்போன்ற ஒரு அரசாணையை நீங்களும் அறிவிக்க வேண்டும், அதன்மூலம் அரசாங்கத்திற்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும் கிராமத் தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களையே வாங்கத் தொடங்கினால் நிச்சயமாக இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பூர்த்தி செய்து விட முடியும் என்று மற்ற மாநிலங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்று மகிழ்ச்சியோடு கூறுகின்ற நேரத்தில், எந்த அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்திற்கு தமிழ்நாடு அரசு வழிகாட்டியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமத் தொழில்கள் மூலம் என்னென்ன தொழில்களைச் செய்ய முடியும், அந்தத் தொழில்களுக்குக் கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழு எந்த அளவிற்கு மானியமும், கடனும் வழங்குகிறது என்பதைப் பற்றியெல்லாம் கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தனை தொழில்கள் இருப்பினும், இரண்டே இரண்டு தொழில்களைப் பற்றி மட்டும் நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பனைத் தொழிலைப்பற்றி இங்கே எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் கிராமப் பகுதிகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரும் தொழிலாகவும், நல்ல வருவாய் தேடித் தரும் தொழிலாகவும் இந்தப் பனைத் தொழில் இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. பனை மரத்தைக் கற்பகத்தரு என்று நாம் கூறுகிறோம். பனை மரத்தில் ஒவ்வொரு பாகமும் நல்லமுறையிலே பயன்படுத்தப்படுகிறது, அதிகமாக வேலைவாய்ப்பைத் தேடித் தருகிறது, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது, அந்தப் பனைத் தொழில் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. நம்முடைய நாட்டில் சுமார் 4 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. அவற்றில் 60 இலட்சம் பனை மரங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. இதிலே 2,50,000 மக்கள் பல்வேறு தொழிலிலேயும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டங்களைப் பற்றியும் இதனால் வேலை வாய்ப்பு கிடைத்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றியும் கூற விரும்புகிறேன்.

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] [1979 மார்ச் 31

வறட்சிப் பணி நிவாரணத் திட்டத்தின் அடிப்படையில் 1977-78 ஆம் ஆண்டு இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் 13·82 இலட்சம் ரூபாய் செலவில் 4,840 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1978-79 ஆம் ஆண்டில் அதே இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்கு 19·06 இலட்சம் ரூபாய் செலவில் 5,900 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மீதம் இருக்கின்ற இன்னும் 2 கோடி பனை மரங்களை நல்ல முறையில் பயன்படுத்தி அதிகமான அளவிற்கு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்காக ஒரு பெரிய திட்டத்தை இந்த அரசு தீட்டி மத்திய ஆணைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறது. அதன் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சுமார் 22·26 இலட்சம் ரூபாய் செலவில் 8,448 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலும், மாரியூர் பனை பொருள் திட்டத்தின் மூலம்—முகவை மாவட்டத்தில்—சுமார் 77·03 இலட்சம் ரூபாய் செலவில் 7,518 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலும், தமிழகம் தழுவிய அளவில் இருக்கும் பனைமரங்கள் பயன்படும் வகையில் சுமார் 62·92 கோடி ரூபாய் அளவில் சுமார் 5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் அளவிலும் ஒரு திட்டத்தை உருவாக்கி இந்த அரசு மத்திய ஆணைக் குழுவிற்கு அனுப்பி இருக்கிறது. நிச்சயமாக அந்தக் குழு இந்தத் திட்டத்தைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை இந்த மாநில அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமீய எண்ணெய்த் தொழிலைப் பொறுத்த வரையில் மிக அதிகமான அளவிற்கு படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் பேருதவி புரிகிறது. ஆலைகளில் தயாரிக்கும் எண்ணெயில் அதிக அளவு உஷ்ணத்தில் வைட்டமின் சத்து நசித்து விடுகிறது. ஆனால் செக்குகள் மூலம் தயாரிக்கப்படும் எண்ணெயில் அந்தச் சத்து நசுக்கப்படுவதில்லை என்பதைக் கருத்திற் கொண்டு இந்தத் தொழிலை நல்ல முறையிலே இனிமேல் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய ஆணைக்குழு முடிவெடுத்ததன் விளைவாக 1971-72 ஆம் ஆண்டிலேயிருந்து இந்தத் திட்டம் அமல் படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் தமிழகத்திலே 778 விசைச் செக்குகள் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமும், தனிப்பட்டவர்கள் மூலமும் வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட அரசாணையின்படி இவ்வகை செக்குகளில் தயாரிக்கப்படும் எண்ணெயைத்தான் அரசின் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஓராண்டில் நிலக்கடலையினுடைய உற்பத்தி—12 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலே 2 இலட்சம் டன் வித்துக்கள் விதைக்கும் மற்றத்

தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பாக்கி 10 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் எண்ணெய்த் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதில் சுமார் 5 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களைப் பிழிகின்ற நாட்டுச் செக்குகள் மற்றும் விசைச் செக்குகள், போக மீதியுள்ள எண்ணெய் வித்துக்கள் வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு எண்ணெயாகப் பிழியப்பட்டு மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இந்த முறையை மாற்றி நம்மிடம் இருக்கின்ற எண்ணெய் வித்துக்களைக் கொண்டு நாமே எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழகத்தில் 1979-80 ஆம் ஆண்டு சுமார் 500 விசைச் செக்குகளை தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் மானியம் மற்றும் கடன் உதவியோடு வழங்க வேண்டுமென்றும் இன்னும் வருகின்ற ஆண்டுக் காலங்களில் சுமார் 10,000 விசைச் செக்குகளைத் தமிழகத்திலே நிறுவி அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராமப்பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்கும் படித்தவர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் மிகப் பெரிய திட்டம் ஒன்றைக் கிராமத் தொழில் மூலமாக அரசு உருவாக்கி இருக்கிறது. என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்த அளவிற்குத் கைத்தறி கதர்—கிராமத் தொழிலின் மூலமாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு பரிசீலித்து நடைமுறைப்படுத்த இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்புகளில், 1978-79-வது ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களும் 1979-80 ஆம் ஆண்டிலே நடைமுறைப்படுத்தப்பட இருக்கிற திட்டங்களையும் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய மேலான ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவக்கின்ற பொழுது..........(மணியடிக்கப்பெற்றது)......எப்பொழுது தேர்தல் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவ்ப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 26—க்கு திருவாளர்கள் சு. பாலன், பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 5,13,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 27-க்கு திருவாளர்கள் சு. பாலன், பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,52,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2-4-1979 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-40 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

133. வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையில் — 26—7—1978 ஆம் தேதியன்று வெளியாகி, 6—9—1978 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II—பிரிவு I, பக்கம் 104-ல் வெளியான அறிவிப்பு எண். II (1)/வ. வ. அ. க./105/78-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 19—2—1979 ஆம் தேதியிடப் பெற்ற 67275–II (2)/78-2 ஆம் எண் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றன.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*109. கோரிக்கை எண் 27—தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றிய தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில்கள் வாரியத்தின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

*110. கோரிக்கை எண் 26—தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றிய கைத்தறி பஞ்சாலை—கொள்கை விளக்கக் குறிப்பு, 1979-80 (தமிழ், ஆங்கிலம்).

*111. 1979-80 ஆம் ஆண்டின் கைத்தறி துணி நூல் துறைக்கான செயலாக்கத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

**112. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 19/1979).

*113. 27—8—1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31—3—1978-ம் தேதியன்று உள்ளவாறு, கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப் பெற்றன.—

1. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

2. திரு. மு. சிவபெருமாள்.

*29—3—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

**30—3—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

இணைப்பு I.

[134ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]
கோரிக்கை எண். 10

பால் வழங்குத் திட்டம்.

கொள்கை விளக்கம்.

1. மனித உணவில் பால் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. மனித உடல் நலமுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருக்கத் தேவையான எல்லா வகைச் சத்துப் பொருட்களும் இதன் கண் உள. கிராமத்தில் பெரும்பாலோர் சிறிய அளவில் பால் உற்பத்தியை முக்கியமாகக் கொண்டுள்ளனர். மேலும் பலர் துணைத் தொழிலாகக் கருதுகின்றனர். தமிழ் நாட்டில் நபர் வாரியாகக் கிடைக்கும் பால் அளவு 63 கிராம் ஆகும். ஆனால், நபர் ஒருவருக்கு நாளென்றுக்கு 300 கிராம் பால் தேவைப்படுகிறது. கறவை மாடுகளின் கறவை அளவு குறைவாக உள்ளது. உணவுச் சத்து குறைவாலும் இனவிருத்தி குறைபாடுகளாலும் அவைகளின் உற்பத்தி குறைந்த அளவில் உள்ளது. எனவே, உழவர்களுக்கு உகந்த வகையில் தனித்துச் செயல்படக்கூடிய ஒரு தொழிலாக பால் பண்ணையை உருவாக்குவதற்கும் மக்களின் உணவில் சத்துக் குறைவை ஈடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2. மாதவரத்தில் உள்ள கால்நடை குடியிருப்பு மற்றும் பால் பண்ணைக்கு பால்வளத்துறை பொறுப்பேற்றுள்ளது. இம் மாநிலத்தில் தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏனைய பால் பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. இம் மாவட்டங்கள் "பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ்" அடங்கா. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் பால் பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளை தமிழ்நாடு பால்வள நிறுவனம் பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் செயல்படுத்தி வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள எல்லா கூட்டுறவுப் பால் வழங்கு உற்பத்திச் சங்கங்கள் ஒன்றியங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை மேற் பார்வையிடுவதும் இத்துறையின் பொறுப்பாகும்.

[1979 மார்ச் 31

3. கால்நடைக் குடியிருப்பு மற்றும் அரசு பால் பண்ணை.

3.1. மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்பு 840 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. கால்நடை மருத்துவம், இன விருத்தி வசதிகள், நியாயவிலையில் கால்நடைத் தீவனம் வழங்குதல், பால் வற்றிய மாடுகளைப் பாராமரித்தல், அவர்களுக்கு நிதி வசதி அளித்தல் போன்ற வசதிகளை அளிப்பதுடன் பால் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான கால்நடைகளுக்கு இடவசதியும் இவ்விடத்தில் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது 31 உரிமக்காரர்கள் உள்ளனர் (பட்டதாரிகள்/மெட்ரிகுலெஷன்கள் உட்பட). இவர்கள் மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு பால் வள நிறுவன மத்தியப் பால் பண்ணைக்கு நாள்தோறும் சுமார் 1,000 லிட்டர் பால் வழங்குகின்றனர்.

3.2. மாதவரத்தில் உள்ள அரசுப் பால் பண்ணை, பால்வளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. இப்பண்ணையில் கலப்பினப் பசுக்களும் உயரினகாளைகளும் பராமரிக்கப் படுகின்றன. இம் மாநிலத்தில் செயற்கை முறை இன விருத்தி வசதிகள் இல்லாத இடங்களில் கலப்பினத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக இப்பண்ணையில் அயல் நாட்டு இன உயர்ரகக் காளைகள், பசுக்கள் பராமரிக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகின்றன. இது முன் மாதிரியான பிரிவாகச் செயல்படுகிறது. தற்போது இப் பண்ணையில் 237 கன்றுகளையும் சேர்த்து மொத்தம் 527 கால்நடைகள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப் பண்ணை நாள் ஒன்றுக்குச் சுமார் 750 லிட்டர் பாலை உற்பத்தி செய்து மாதவரத்திலுள்ள மத்திய பால் பண்ணைக்கு வழங்குகிறது. இப் பண்ணையில் ஒரு ஆய்வுக் கூடம் நிறுவப்பட்டுள்ளது. அங்கு கலப்பினப் பசுக்களின் இரத்தத்திலுள்ள சிவப் பணுக்கள் அளவை பரிசோதித்து அது குறைந்த அளவில் காணும் பசுக்களுக்குச் சம அளவில் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் இரத்தம், சாணம் ஆகியவைகள் பரிசோதித்துப் பார்க்கப்படுகின்றன.

3.3. மாதவரம் பால் பண்ணையில் உள்ள உரிமக்காரர்களின் பிரச்சினைகளைத்தீர்வுசெய்வதற்கும், மாதவரம் பால் பண்ணையின்செயல்முறைகளை ஆய்வு செய்து அதன் எதிர்காலம் பற்றிய அறிவுறைகள் வழங்கவும், வல்லுநர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. அக்குழு மாதவரம் பால் பண்ணை மற்றும் காலனி ஆகியவற்றின் செயல் முறைகளை ஆய்வு செய்து வருங் காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஓர்

1979 மார்ச் 31]

அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்துள்ளது வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆழ்ந்து ஆய்வு செய்து அரசு கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளது:—

(அ) மாவதரத்திலுள்ள அரசு குடியிருப்பில் தற்போதுள்ள உரிமதாரர்களும், பட்டதாரி/மெட்ரிகுலேஷன் பால் உற்பத்தியாளர்களும், தொடர்ந்து அங்கு இருக்க அனுமதிக்கலாம். இந்தக் கட்டிடத் தொகுதியில் புதிய உரிமக்காரர்கள், பட்டதாரி மெர்ட்ரிகுலேஷன் படித்த பால் உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஆ) அரசு பால் பண்ணையும், வேளாண்மைப் பண்ணையின் தீவனப் பண்ணையும், அதனுடன் தொடர்புடைய பணியாளர்களும், பால்வளத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டும்.

(இ) மாதவரம் பாற்பண்ணைத் தொகுதியில் உள்ள மற்ற நிலங்களிலிருக்கும் அரசுக் குடியிருப்பு இல்லங்களும் கட்டிடங்களும், பால்வளத்துறை நிர்வகிக்க வேண்டும்.

(ஈ) பால்வளத் துறையின் கூட்டுறவுப் பிரிவும், பால்வளத்துறை ஆணையரின் அலுவலகமும் மாதவரத்திலேயே தொடர்ந்து செயல்படவேண்டும்.

4. பால் கூட்டுறவுகள்.

4.1. தொடக்கக் கூட்டுறவு பால் வழங்குச் சங்கங்கள், ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு 1965 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் நாள் முதல் கூட்டுறவுத் துறையிலிருந்து பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டது. துணைப் பதிவாளர்கள் (பால் பதம்) நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஏழு வட்டார அலுவலகங்கள் உள்ளன. அவைகள் காஞ்சீபுரம், வேலூர், ஈரோடு, விருதுநகர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பால் கூட்டுறவுகள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நல்ல விலை கிடைக்கச் செய்ய உருவாக்கப்பட்டிருக்கின்றன. உழவர்கள் மீது தனிப்பட்ட வியாபாரிகளின் ஆதிக்கத்தை தவிர்க்கவும் செய்கிறது. உழவர்கள் பால் பண்ணை அபிவிருத்தியில் ஈடு படுவதால் வேலைவாய்ப்புகள் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது கிராமப்புறத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு அதிகப்படியான வருமானம் கிடைக்க வழி செய்கிறது.

4.2. தமிழ்நாட்டில் பால் அபிவிருத்தித் திட்டத்திற்காக 1978 ஆம் ஆண்டு சூன் திங்களில் அரசு கொள்கை ஒன்றை வகுத்துள்ளது. இனிமேல் அமைக்கப்படவிருக்கும் பால் கூட்டுறவு சங்கங்கள் '' ஆனந்த் '' பாணியில் (அதாவது கிராமத்தில்

பால் உற்பத்தியாளர்கள் சங்கமும், மாவட்ட அளவில் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமும், மாநில அளவில் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் இணையம் அமைப்பதாகும்) இருக்க வேண்டுமென அரசு உத்திரவிட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள சங்கங்களையும் ஒன்றியங்களையும் உற்பத்தியாளர் சங்கங்கள் அல்லது ஒன்றியங்களாக மாற்றுவதையும் முடிந்த அளவில் வழங்கல் ஒன்றியங்களை நுகர்வோர் சங்கங்களாக மாற்றுவதையும் அரசு தன் தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது.

4.3. புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் நிறுவுவது சம்பந்தமாக அரசு முடிவு எடுத்ததினால் வழக்கமான சங்கங்கள் புதிதாக ஆரம்பிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. ''ஆனந்த்'' பாணியில் இதுவரை 1,805 உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1978–79 ஆம் ஆண்டில் 587 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

4. 4. ''ஆனந்த்'' பாணியில் அமைக்கப்படும் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:—

(அ) முன்பு அமைக்கப்பட்ட பழைய சங்கங்களின் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டு வந்ததற்கு மாறாக, தற்போது அமைக்கப்படும் புதிய சங்கங்களில் உற்பத்தியாகும் பாலை அந்த இடத்திலேயே ஒவ்வொரு அங்கத்தினரும் சங்கத்திற்கு தரும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் பாலுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள் கடனை மையமாக கொண்டதல்ல.

(இ) இச்சங்கம் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாகக் கொண்டதாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இது அதிக அளவில் ஈடுபடுவதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கால்நடை மருத்துவப்பணி. செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால்நடை, சமனீட்டுத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்களின் சங்கச் செயலாளர்கள் செயற்கை கருத்தரிப்பு பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

1979 மார்ச் 31]

(எ) உற்பத்தியாளர் சங்கங்களை அமைப்பதற்கும் பாரம்பரியமாக உள்ள சங்கங்களை "ஆனந்த்" பாணியில் மாற்றியமைப்பதற்கு முன் ஆய்வுப் பணியும் சிக்கன முறையில் பால் சேகரிப்பு மார்க்கங்களை நிர்ணயிப்பதும் அவசியமாகும்.

4, 5, வழக்கமான சங்கங்கள் "ஆனந்த்" திருத்த முறை சங்கங்கள் ஆகிய இருவகைக் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துணைப் பதிவாளர் (பால்பதம்) வட்டம்.	மாவட்டம்.	செயல்படும் சங்கங்கள்.		செயல் படாத நிலையில் உள்ள சங்கங்கள்.	கலைக்கப் பட்ட சங்கங்கள்.	மொத்தம்.
		திருத்த வகை (ஆனந்த் பாணி).	வழக்கமான சங்கங்கள்.			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
காஞ்சீபுரம் ..	சென்னை	1	3	3	2	9
	செங்கல்பட்டு ..	150	113	209	301	773
வேலூர்	வட ஆர்க்காடு ..	131	135	118	33	417
	தருமபுரி	190	15	13	11	229
கடலூர்	தென்னார்க்காடு ..	49	75	162	69	355
ஈரோடு	கோயம்புத்தூர் ..	385	32	94	88	599
	சேலம்	340	18	68	60	486
	நீலகிரி	66	18	7	3	94
திருச்சிராப்பள்ளி ..	திருச்சிராப்பள்ளி ..	36	91	111	84	322
	தஞ்சாவூர் ..	1	62	94	116	273
	புதுக்கோட்டை ..	..	22	31	26	79

மதுரை	மதுரை	315	242	200	96	853
	இராமநாதபுரம் (கிழக்கு.)	23	52	49	31	155
	கோயம்புத்தூர் .. (இரு பிர்க்காக்கள்.)	21	1	4	2	28
விருதுநகர்	இராமநாதபுரம் (மேற்கு.)	10	53	87	37	187
	திருநெல்வேலி ..	83	76	107	54	320
	கன்னியாகுமரி ..	4	39	2	9	54
	மொத்தம் ..	1,805	1,047	1,359	1,022	5,233

[1979 மார்ச் 31

4, 6. வழக்கமான தொடக்கச் சங்கங்கள் அனைத்தையும் ''ஆனந்'' பாணி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. அதன்படி 78 சங்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் 250 சங்கங்களை மாற்றியமைக்கவும், சுமார் 500 ஆனந்த் பாணி சங்கங்களைப் புதிதாக அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. பால் பொருள்கள், உற்பத்தி, கொள் முதல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒருங்கிணைக்க இயலும் வகையில் அத்தகைய தொடக்கச் சங்கங்களை மாவட்ட அளவில் ஒன்றியங்களாக மாற்றுவதே நீண்டகாலத் திட்டத்தின் நோக்கமாகும். ஏற்கனவே நான்கு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், உதகமண்டலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் ஒன்றியங்களை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செயல்படாத நிலையில் உள்ள 45 சங்கங்கள் நடப்பாண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் 100 சங்கங்கள் புதுப்பிக்கப்படும் எனக் கருதப்படுகிறது. தமிழ் நாட்டில் இத்திட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில், கூட்டுறவு நிர்வாக அமைப்பில் கூடுதல் பணியாளர்களை நியமித்து துறையை வலுப்படுத்த அரசு கருதியுள்ளது.

4.7 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள்,

1. இம்மாநிலத்தில் உள்ள செயல்படும் பால் வழங்கும் கூட்டுறவுகள் எண்ணிக்கை ..	2,852
2. பால் வழங்கு கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை	7,95,212
3. சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்.	ரூ. 180.35 இலட்சம்.

கூட்டுறவு பால் ஒன்றியங்கள்:

4. பால் வழங்கு ஒன்றியங்களின் எண்ணிக்கை ..	21
5. பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ..	4
6. பால் வழங்கு கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ..	16,570

1979 மார்ச் 31]

7. ஒன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 23.88 இலட்சம்.

8. (அ) நாள் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி (சங்கங்கள், ஒன்றியங்கள்) 4.50 இலட்சம் லிட்டர்.

(ஆ) நாள் ஒன்றுக்கு சராசரி விற்பனை—

(1) உள்ளூர் விற்பனை (சங்கங்கள், ஒன்றியங்கள்) 2.42 இலட்சம் லிட்டர்.

(2) தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் அளவு .. 2.08 இலட்சம் லிட்டர்.

5. திட்ட மதிப்பீடுகள்.

5·1. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி மூலமாக முதலீடுகள் :

1977—78 ஆம் ஆண்டில் ரூ. 2·00 இலட்சம் அளவில் 43 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதன உதவி ஒதுக்கப்பட்டுள்ளது. 1978—79 ஆம் ஆண்டில் 50 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், திருச்சி—ஸ்ரீரங்கம் கூட்டுறவு ஒன்றியத்திற்கும் ரூ. 3·10 இலட்சம் பங்கு மூலதனம் 1979 மார்ச் இறுதிக்குள் உதவ கருதப்பட்டு உள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ. 3 இலட்சம் அளவில் சுமார் 100 பால் வழங்கும் சங்கங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

5.2. பால் வழங்கும் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க உதவுதல் :

1978—79 ஆம் ஆண்டில் துணைப் பதிவாளர்கள், சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்குவதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் உதவித் தொகை ரூ. 1,000-லிருந்து ரூ. 2,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது. இதைத் தவிர

அவர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற வற்றின் மூலம் நிதி உதவி கிடைக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

5·3. பால் வழங்கு சங்கங்களுக்குப் பால் குவளைகள், பால் கருவிகள், குளிர் பதனங்கள், போக்குவரத்துக்கள், ஆய்வுக் கூடம், கிடங்குகள் முதலியன கட்ட கடனுதவி :

1979 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் ரூ. 2·50 இலட்சம் செலவழிக் கப்படும். 1979–80 ஆம் ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

5·4. பால் வழங்கு சங்கங்களுக்கு மானியம் :

கீழ்க்கண்ட காரியங்களுக்காக 1979 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் ரூ. 2·93 இலட்சம் செலவழிக்கப்படும்:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
(அ) நிர்வாக உதவித் தொகை	0·73
(ஆ) தீவனப் பண்ணைகள் பராமரிப்பு	0·10
(இ) பால் சோதனைக் கருவிகள், குவளைகள், தொட்டிகள், இரசாயனங்கள் முதலியன வழங்க.	2·10

1979–80 ஆம் ஆண்டில், நிர்வாக உதவித் தொகைக்காக ரூ. 0·75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5·5. தமிழ்நாட்டில் பால் கொள்முதல் குழு ஏற்படுத்துவது :

" ஆனந்த் " பாணியில் தொடக்க உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பெரிய அளவில் உருவாக்க அரசு எடுத்த தீர்மானத்தைச் செயல்படுத்த 1977–78 ஆம் ஆண்டில், மேற்கு இராமநாதபுரத்தில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் மற்றொன்று மாக இரண்டு பால் கொள்முதல் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்

1979 மார்ச் 31]

ளன. 1979–80 ஆம் ஆண்டிலும் இவைகள், ஆனந்த் பாணி தொடக்க உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஆரம்பிக்கத் தொடர்ந்து செயல்படும். தமிழ்நாட்டில் ''பால் பெருக்குத் திட்டம்'' அமுலில் இல்லாத மாவட்டங்களான கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக் கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் (1979–80 ஆம் ஆண்டில்) ஐந்து பால் கொள்முதல் குழுக்கள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

5·6. நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல்.

பால் கூட்டுறவுகளில் சங்க உறுப்பினர்களின் இருப்பிடத்தி லேயே கால்நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்கும் வகையில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்ளில் மூன்று நடமாடும் கால்நடை மருத்துவ நிலை யங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு நிலையமும் ஒரு கால்நடை மருத்துவரோடு செயல்பட்டு வருகின்றது. அவருக்கு ஒரு ஊர்தி யும் கொடுக்கப்பட்டுள்ளது.

5·7. திருச்சிராப்பள்ளியில் செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம் :

திருச்சிராப்பள்ளியில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தேவைக்கேற்ப எல்லா வசதிகளும் அடங்கிய ஒரு செயற்கை கருத்தரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

5·8. பால் ஒன்றியங்களுக்கு நிதி உதவி.

1978–79 ஆம் ஆண்டில், திருச்சி–ஸ்ரீரங்கம் பால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு (ரூ. 1·60 இலட்சம் அரசு பங்குத் தொகையாக வும் ரூ. 4·90 இலட்சம் கடனாகவும்) மொத்தம் ரூ. 6·50 இலட்சம் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. சேலம் பால் கூட்டுறவு ஒன்றியத்திற்குப் பாலை எடுத்துச் செல்வதற்கும், விற்பனைக்கும் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 10 இலட்சம் கடனாக அரசு கொடுக்க அனுமதித்துள்ளது. இவ்விரு அமைப்பு களுக்கும் கொடுக்கப்படும் மேற்சொன்ன நிதியுதவி, 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

[1979 மார்ச் 31

1979–80 ஆம் ஆண்டில் கீழே காணும் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங்களின் வளர்ச்சிக்காகவும் விற்பனை வசதிகளுக்காகவும் 50 சதவீதம் கடனாகவும், 50 சதவீதம் பங்குத் தொகை உதவியாகவும் நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :

வரிசை எண்ணும் ஒன்றியத்தின் பெயரும்.	பங்குத் தொகை உதவி.	கடன்.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(1)	(2)	(3)	(4)
1 கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்.	3·50	3·50	7·00
2 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டு–றவு பால் உற்பத்தி விற்புனைக் கூட்டமைப்பு.	3·50	3·50	7·00
3 திருச்சி—ஸ்ரீரங்கம் மத்திய கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்.	2·50	2·50	5·00
மொத்தம் ..	9·50	9·50	19·00

5·9 (அ) திட்ட ஒதுக்கீடு :

1977–78-க்கான திட்டச் செலவு 1978–79, 1979–80-க்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரம் பின்வருமாறு :—

கோரிக்கை எண் 10—

	1977–78 கணக்குகள்.	1978–79 திருத்திய மதிப்பீடு.	1979–80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(1)	(2)	(3)	(4)
1 பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் வராத மாவட்டங்களில் பால் கொள்முதல் குழுக்கள் ஐந்தினை அமைப்பது.	0·65	1·80	13·47

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 31]

(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
2 அரசு பால் பண்ணைக்கு சாதனங்கள் வாங்குதல்.	0·15	0·12	0·01
3 பால் பண்ணைக் குடியிருப்பில் உள்ள ஆய்வுக் கூடத்திற்கு.	0·06	0·24	0·30
4 பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவிகள்—			
(i) நிர்வாகத் தொழில் நுட்பப் பணியாளர்கள்.	0·45	0·73	0·75
(ii) தீவனப் பண்ணை பராமரிப்பு.	0·10	0·10	0·10
(iii) பால் சோதனைக் கருவிகள், ரசாயனங்கள், குவளை வழங்குதல்கள் முதலியன.	..	0·10	2·10
மொத்தம்	1·41	5·09	16·73

5.9 (ஆ) கோரிக்கை எண் 57-ன் கீழ் திட்டப் பணிகள் :

(1)	1977–78 கணக்குகள். (2)	1978–79 திருத்திய மதிப்பீடு. (3)	1979–80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (4)
	(ரூபாய் இலட்சத்தில்).		
1 பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு.	2·00	3·10	12·50
2 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் பால் பண்ணை வளர்ச்சிக்காக தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்குத் தொகை அளித்தல்.	17·70	21·43	25·67

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 31

(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
3 J.A. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்குக் கடன் வசதி—18. முதலீடு.	..	0·01	..
4 அரசுப் பால் பண்ணைக்கு கால் நடைகள் வாங்குதல்.	..	..	0·01
5 மற்ற திட்டங்கள் ..	..	..	0·01
6 மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் பாலாடை, வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் கூட்டுறவுப் பால் வழங்கு ஒன்றியத்திற்கு பங்கு மூலதன உதவி.	..	3·45	0·01
மொத்தம் ..	19·70	27·99	37·53

5.9 (இ) கோரிக்கை எண் 58-ன் கீழ் திட்டப் பணிகள் :

	1977–78 கணக்குகள்.	1978–79 திருத்திய வரவு-மதிப்பீடு.	1979–80 செலவுத் திட்ட மதிப்பீடு.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்).		
பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விவசாய உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன் உதவி.	20·00	20·00	0·01

1979 மார்ச் 31]

1977–78, 1978–79 ஆம் ஆண்டுகளில் பருவ கால நிலை சாதகமான நிலையில் இல்லாததால் பால் உற்பத்தி குறைவாக இருந்தது. சென்னை, மதுரை பால் பண்ணைகள் 4·5 சதவீத கொழுப்பும், 8·5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் (S.N.F.) அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கின்றன. சென்னை நகரில் மட்டும் 3 சதவீத கொழுப்பும் 8·5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் (S.N.F.) அடங்கிய (toned) பால் குறைந்த அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விற்பனை விவரம் பின்வருமாறு :—

	1976–77	1977–78	1978–79 மதிப்பீடு.
			(அளவு இலட்சத்தில்.)
பால் (லிட்டரில்) ..	849·86	988·85	1,050·00
தினசரி சராசரி ..	2·33	2·71	2·88
வெண்ணெய் (கிலோ கிராமில்).	3·01	5·85	6·93
நெய் (கிலோ கிராமில்)	2·46	6·49	2·95
பால்பொடி (கிலோ கிராமில்).	4·42	11·35	5·00

1977–78 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் அளவில் சரிவு ஏற்பட்டதின் விளைவாக 628 டன் ஆடை நீக்கிய பால்பொடி தான் தயாரிக்கப்பட்டது.

6·2. சென்னை நகரத்தின் உபயோகத்திற்குப் பால் பெருக்குத் திட்டம் 1-ன்கீழ் மலிவு விலையில் குறைந்த அளவில் ஆடை நீக்கிய பால்பொடி மற்றும் வெண்ணெய்க் கொழுப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தை செயல்படுத்தும் இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் மலிவு விலையில் வழங்கும் ஆடை நீக்கிய பால் பொடி, வெண்ணெய்க் கொழுப்பு பொருட்களை 1978-ம் ஆண்டு வழங்கும் அளவை குறைத்து விட்டதாக அறிவித்துள்ளது. தற்போது இந்திய பால்பண்ணைக் கழகம் பால்வள நிறுவனத்தின் மொத்தத் தேவையில் ஆடை நீக்கிய பால் பொடியை மூன்றில் ஒரு பங்கு அல்லது அதற்கும் குறைவாக அளிக்கும் எனத் தெரிவித்துள்ளது. எஞ்சியுள்ள தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மலிவு விலையில் பெறும் கட்டணத்திற்கு மேலாக இரண்டு மடங்கு விலையில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வெளிச் சந்தையில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. பால் பெருக்குத் திட்டம் 1 முடியும் தருவாயில் உள்ளதால் 1979 ஆம் ஆண்டு சூன் திங்கள் வரை இந்த ஏற்பாடு செயல்படும் எனத் தெரிகிறது. பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வழங்கும் பொருட்களிலிருந்து வெண்ணெய்க் கொழுப்பு இது வரை பெற்ற தில் ஒரு இடர்பாடும் தெரியவில்லை. ஆனால் இத்திட்டம் 1979 சூன் திங்களில் முடிவுறுவதால் பால்வள நிறுவனம் வெண்ணெய்க் கொழுப்பிற்கு பதில் வெண்ணெயைப் பயன்படுத்த எண்ணியுள்ளது. இந்திய பால் பண்ணைக் கழகம் ரூ. 10,000-க்கு வழங்கிய ஒரு டன் வெண்ணெய்க் கொழுப்புக்குப் பதிலாக ரூ. 21,000 பெறுமான வெண்ணெய் பயன்படுத்த வேண்டியுள்ளது.

6.3 இந்நிறுவனத்தின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை 1976-77 ஆம் ஆண்டு ரூ. 20.78 கோடியாக இருந்தது. இது 1977–78–ல் ரூ. 26.05 கோடியாக உயர்ந்துள்ளது. 1978–79–ல் ரூ. 30 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது. முதல் மூன்று ஆண்டுகளில் (1972–73, 1973–74, 1974–75) ஏற்பட்ட நட்டத்திற்குப் பதிலாக இந் நிறுவனம் 1975–76 ஆம் ஆண்டு முதல் இலாபத்தில் நடக்கிறது. 1977–78 ஆம் ஆண்டு ரூ. 17 இலட்சம் இலாபமாகப் பெற்றுள்ளது. முன்னால் ஏற்பட்ட நட்டம் முழுவதும் 1977–78-ல் ஈடு செய்யப் பட்டு விட்டது. மலிவு விலையில் பெறப்பட்ட ஆடை நீக்கிய பால் பொடிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதின் விளைவாக வெளிச் சந்தையில் விலையுயர்ந்த ஆடை நீக்கிய பால் பொடி வாங்க வேண்டியதாலும், கொள்முதல் பாலுக்கு அதிக விலை கொடுக்க முற்பட்டிருப்பதாலும், 1978–79-ல் இந் நிறுவனத்திற்கு இலாபம் பெறுவது சிரமமாக இருக்கும்.

7. பால் பெருக்குத் திட்டம்.

7·1. ''பால் பெருக்குத் திட்டம் I'' 1979 ஆம் ஆண்டு சூன் திங்கள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினரால் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இது கிராமங்களில் உற்பத்தி செய்யும் பாலைக் கொள் முதல் செய்து அதன் உற்பத்தி, பதப்படுத்துதல் ஆகியவற்றைச் சீராக்கி, பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை ஆகிய நகரங்களில் விற்பனை செய்வதற்காக வகுக்கப்பட்ட ஒரு பால் பண்ணை வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமாகும். பால் வழங்குதலைப் பரவலாக விரிவுபடுத்தி மக்களின் வாங்கும் சக்திக்கு ஏற்ற விலையில் அதனை விற்பனை செய்வதற்காக உலக உணவு நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடியையும், வெண்ணெய்க் கொழுப்பையும் பயன்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். கொழுப்பைத் தரப்படுத்தி பால் பதப்படுத்தப்படுகிறது. பால் உள் பத்தியைப் பெருக்கும் பொருட்டு நான்கு பெருநகர் பால்

1979 மார்ச் 31]

(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
2 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் குவளைகள் வாங்க, குளிரூட்டும் சாதனங்கள், மற்றும் வாகனங்கள், ஆய்வுக்கூடம், கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்குக் கடன் உதவி.	2·00	2·50	5·00
3 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் பால்வளத் துறை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்டப் படிக்கான கூட்டுறவு வங்கி, அரசுக் கம்பெனிகள் ஆகியவற்றிற்குக் கடன்கள்.	17·70	21·43	25·00
4 மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் பாலாடை, வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்குக் கடன்.	..	3·45	0·01
5 பால் வளத் துறை ஆணையாளரின் கீழ் உள்ள ஏனையோருக்குக் கடன், 01. மாதவரம் குடியிருப்பில் உள்ள உரிமக்காரர்களுக்குக் கடன்.	..	..	0·01
6 பால் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கும் விற்பனை வசதிகளுக்காகவும் கடனுதவி.	..	14·90	9·50
மொத்தம் ..	39·70	62·28	39·53

5·9 (ஈ) மேலே குறிப்பிட்டுள்ளவற்றைக் தவிர, 1978–79 ஆம் ஆண்டில் கோரிக்கை எண்கள் 10, 57, 58-ன் கீழ் மொத்தம் ரூ. 76·51 இலட்சம் திட்டத்தில் சேராத பணிகளுக்காக செலவிடப்படும். இவை தவிர தமிழ்நாடு பால் வள நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் நிகர மதிப்புக்களை

ஈடு செய்ய வழங்கப்படும் பங்கு மூலதன உதவி, கடனுதவி, ரூ. 240·98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் ''திட்டத்தின் கீழ் வரும் டணி'' ''திட்டத்தின் கீழ் வராத பணி'' ஆகியவற்றின்கீழ் பால் வளத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 172·45 இலட்சம் ஆகும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

6. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பணிகள் :

6.1. தமிழ்நாடு பால்வள நிறுவனம் வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சென்னை, மதுரை நகரங்களில் பால் கொள் முதல் செய்தல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் அடங்கும். பால் பெருக்கு திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய எட்டு மாவட்டங்களில் பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பினையும் இந்நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் இந்நிறுவனம் பணிபுரிந்து வருகிறது. 1977–78-ல் தினசரி பால் கொள்முதல் சராசரி 2·03 இலட்சம் லிட்டராக இருந்தது. இது 1978–79 ஆம் ஆண்டில் சுமார் 2.08 இலட்சம் லிட்டராக உயரும்.

கொள்முதல் செய்யப்பட்ட பால், இதனால் பயனடையும் பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கை, பால் பண்ணையாளர் களுக்கு கொடுக்கப்பட்ட தொகை முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

	1976–77	1977–78	1978–79 மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்).	
கொள்முதல் செய்யப்பட்ட பால் (அளவு லிட்டரில்).	610·38	740·39	760·00
பயனடைவோரின் எண்ணிக்கை.	2·48	2·59	2·73
பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை.	1,072·80	1,221·64	1,330·00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 31]

(உ) தற்போதுள்ள 5 இலட்சம் அளவு லிட்டர் பாலைப் பொடியாக்கும் அளவுத் திறனை 1984-க்குள் சுமார் 10 இலட்சமாக உயர்த்துவது (பாலை உலர்ந்த பொடியாக்கும் திறன்) நாள் ஒன்றுக்கு 5·3 இலட்சம் லிட்டர் பாலை பொடியாக்குவதற்காக சேகரித்து வைப்பது.

(ஊ) ஒரு நாளைக்கு தற்போது 5·5 இலட்சம் லிட்டர் கையாளும் நிலையிலிருந்து 1984-க்குள் சுமார் 12 இலட்சம் லிட்டர்கள் ஒரு நாளைக்கு கையாள புதிய பால் பண்ணைகள் ஏற்படுத்துவது.

(எ) தேவையான அளவிற்கு பால் பதப்படுத்தும் வசதிகளையும் குளிரூட்டும் வசதிகளையும் அதிகரிப்பது.

தேசிய பால் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் பால்வள நிறுவனத்திற்காகப் பெருந்திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அது பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டில் பால்பண்ணை மேம்பாட்டுக் கொள்கையைச் செயல்படுத்த இயலச் செய்வதற்காக, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, ஆகிய எட்டு மாவட்டங்களில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சேலத்தில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், உதகமண்டலத்தில் ஒன்றுமாக நான்கு மாவட்ட உற்பத்தியாளர் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9. ஈரோட்டில் அமைந்திருக்கும் கூட்டமைப்பு விளக்க மாதிரி நிலையம்.

பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் பெரிய அளவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை சாதன வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தேசியப்பால் வளர்ச்சிக் கழகக் கூட்டமைப்பு விளக்க மாதிரி நிலையம் ஒன்றை ஈரோட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையம், பல்வேறு காரியங்களுக்குத் தேவைப்படக்கூடிய பணியாளர்களுக்கும், குடியானவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் மாதிரி நிலையம் கட்டுவதற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்க ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஏற்கனவே ஒத்துக் கொண்டுள்ளது. தேசிய பால் வளர்ச்சிக் கழகம் கட்டுமானப்பணிகளை விரைவில் எடுத்துக்கொள்ளும். பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் முன்னோடி நடவடிக்கையாக, இந்திய பால் பண்ணை நிறுவனம் இந்த மாதிரி நிலையத்தின் அமைப்புக்கும் நிர்வாகத்திற்கும் நேரடியாக நிதி உதவி செய்யும்.

[1979 மார்ச் 31

10. சிறப்புத் திட்டங்கள்.

10.1. கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம்.

25,000 சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள்/வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு 25,000 சிறந்த கலப்பினப் பசுக்களை நல்ல முறையில் வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி தேவையான சத்துணவும், மருத்துவ உதவியும் அளிக்கப்படும். கன்றுகள் வளர்க்கத் தேவையான மாட்டுத் தீவனம் மானியமாகவும் வழங்கப்படும். சொற்ப நில உழவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 66.2/3 சதவீத மானியமாகவும் அளிக்கப்படுகிறது. வடஆர்க்காடு, தென்னார்க்காடு சேலம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 5 மாவட்டங்களில் கன்று வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு 5 ஆண்டு கால அளவிற்கு ரூ. 237.97 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்ய இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் 4,312 கன்றுகள் 1977–78-ம் ஆண்டிலும், 3,429 கன்றுகள் (31—12—1978வரை) 1978–79-ம் ஆண்டிலும் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவரை மானியமாக ரூ. 70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண்டு முடிவுக்குள் மேலும் 7,000 கன்றுகளைச் சேர்க்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

10.2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் சுமார் 10,000 உழவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 84.00 இலட்சம் செலவில் பால் வளர்ச்சிக்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு நாள் பால் உற்பத்தி 15,000 லிட்டர் என்பதனை இன்னும் 5 ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 40,000 லிட்டராக அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 185.72 இலட்சத்திற்கு அதிகமாக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை எய்த, 100 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கவும், மாவட்டத்தில் குளிரூட்டும் நிலையங்களையும், பாலைப் பக்குவப்படுத்தும் வசதிகளையும் பெருக்கவும் சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதியளிக்கவும் இனப் பெருக்கம் செய்ய வசதி செய்து கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இதுவரை (31—12—1978) ரூ. 109.77 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு பால்வள நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. பால் குளிரவைக்கும் நிலையம் ஒன்று கோத்தகிரியில் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் ஒன்று கூடலூரில் நிறுவப்பட உள்ளது. இது வரை 71 உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1979 மார்ச் 31]

பண்ணைகளில் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பொருள்களின் விலை மதிப்பு பால் உற்பத்தியைப் பெருக்கவும் பால் பண்ணைகள் நிறுவவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1972 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இத்திட்டம் 1979 ஆம் ஆண்டு சூன் திங்களில் முடிவு பெறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. பாலை வேண்டிய அளவுக்குத் தொடர்ந்து அளிப்பதற்கு ஏற்ப, செய்முறை பதன வசதிகள் கூடுதலாகச் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி 70 சதவீதம் கடனாகவும் 30 சத வீதம் மானியமாகவும் கிடைக்கிறது. தமிழ்நாட்டிற்கு முதலில் ஒதுக்கப்பட்ட ரூ. 887 இலட்சம் பின்னர் ரூ. 1,082 இலட்சமாக திருத்தப்பட்டுள்ளது. இதில் ரூ. 684·61 இலட்சம் இது வரை கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 605·50 இலட்சம் இது வரை செலவிடப்பட்டுள்ளது.

7·2. ஒதுக்கீடு செய்யப்பட்டு பெறப்பட்டாததும். பயன்படுத்தப்படாததுமான மீதியுள்ள தொகை ரூ. 476·50 இலட்சத்திற்கு திட்டங்கள் உள்ளன. ரூ. 330 இலட்சம் அளவில் ஈரோடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ஒரு பால் சேகரித்து வழங்கும் பண்ணையும், மாட்டுத் தீவனத் தொழிற்சாலையும் நிறுவ இந்தியப் பால் பண்ணைச் கழகம் உதவுகிறது. இது வரை ரூ. 101·46 இலட்சம் நிதி உதவியாகப் பெறப்பட்டுள்ளது. சில குளிரூட்டும் நிலையங்களை விரிவுபடுத்தவும், வாகனங்கள் வாங்கவும் தமிழ்நாடு பால் வள நிறுவனத்திற்கு ரூ. 136 இலட்சம் உதவுவதற்கு இந்தியப் பால் பண்ணைக் கழகம் ஒப்புக் கொண்டு உள்ளது. அதேபோன்று இம் மாநிலத்தில் பால் பண்ணை வளர்ச்சியைக் கொண்டு இத் திட்டத்தின் மூலம் மதுரையில் உள்ள பால் பண்ணையையும் பால் பொடி தயார் செய்யும் தொழிற் சாலையையும், விரிவுபடுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் சேலத்தில் ரூ. 305 இலட்சம் செலவில் ஒரு பால் சேகரித்து வழங்கும் பண்ணையை அமைக்க நிதி உதவி வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவை எல்லாம் கொண்டு பால் பெருக்குத் திட்டம் 1-ன் திருத்தப்பட்ட ஒதுக்கீடு தொகை ரூ. 1,082 இலட்சத்திலிருந்து ரூ. 1,683 இலட்சமாக உயரும் தருவாயில் உள்ளது. இந்தத் திட்டங்கள் பல நிலைகளில் தொடர்பு கொள்ளப்பட்டு 1979-ம் ஆண்டு சூன் திங்களுக்குள் முடிவுறும் என எதிர் பார்க்கப்படுகிறது. பால் பெருக்குத் திட்டம் I-ன் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

8. பால்பெருக்குத் திட்டம் II.

8·1. பால் பெருக்குத் திட்டம் I-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் II துவக்கப்பட்டுள்ளது. நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதும், ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள மாநகர்களுக்குப் பால் தேவையை நிறைவு செய்வதும்

இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் அமைப்பு முறை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைக்கொண்டு மூன்று பிரிவுடையதாக இருக்கும் (கிராம அளவில் ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் உற்பத்தியாளர் சங்கங்களின்ஒன்றியங்களும், மாநில அளவில் மொத்தமாக ஒரு கூட்டமைப்பும் ஆகும்.) பால் பண்ணை வளர்ச்சியில் எதிர்காலத்தில் நிலைய அமைப்பு ஏற்படுத்த தமிழக அரசு கொள்கை முடிவு ஒன்றை எடுத்துள்ளது. பால் வளத்துறையின் ஒத்துழைப்புடன் கிராமங்களில் ஆனந்த் பாணி உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவுவது, மாவட்ட அளவில் உற்பத்தியாளர் ஒன்றியம் நிறுவுவது, பால்வள நிறுவனத்தின் பொறுப்பாகும். உற்பத்தியாளர் ஒன்றியம் மாநிலத்திலும் வெளியிலும் பால், பொருள்களை விற்பனை செய்ய விற்பனைத் திறன் அடையும் வரை பால்வள நிறுவனம் இதற்கு உதவி புரியும்.

8·2. பால் பெருக்குத் திட்டம் II-க்கான உதவியினை ஐரோப்பிய பொருளாதாரக் குழுமமும், உலக வங்கியும், மத்திய அரசும் அளிக்கும், தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்திற்கான செலவு ரூ. 40 கோடியாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

8·3. தமிழ்நாட்டில் பால் பெருக்குத் திட்டம் II-ன் குறிக்கோள்கள் பின்வருமாறு :—

(அ) ஒரு நாளைக்கு தற்போது 2·5 இலட்சம் லிட்டர் அளவு இலக்காகக் கொண்ட பால் கொள்முதலை 1984-க்குள் ஒரு நாளைக்கு சுமார் 12 இலட்சம் லிட்டராக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட அமைப்புக்களின் பால் விற்பனை அளவாக உள்ள 2·8 இலட்சம் லிட்டரை 1984-ல் 12·00 இலட்சம் லிட்டராக உயர்த்துவது.

(இ) தற்போது 2·5 இலட்சமாக இருக்கும் கறவை மாடுகளின் எண்ணிக்கையை 1984-க்குள் சுமார் 12 இலட்சமாக அதிகரிக்கச் செய்வது.

(ஈ) இரண்டு இலட்சம் பயனடையும் உழவர்கள் எண்ணிக்கையை 1984-க்குள் சுமார் 8-லிருந்து 10 இலட்சம் பேர் நன்மையடையச் செய்வது.

1979 மார்ச் 31]

ஒரு நாளைக்கு 24,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. 6 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களும் 25 கால்நடை மருத்துவத் தடங்களும் இயங்கி வருகின்றன. இத்தொழில் நுட்ப வசதியில் 87 சங்கங்களும், 243 கிராமங்களும் அடங்குகின்றன. 14,064 உழவர்கள் பயனடைகின்றனர்.

10.3. வறட்சிப் பகுதிக்குட்பட்ட திட்டம்.

நாட்டில் வறட்சிப்பகுதிகளான மாவட்டங்கள் அனைத்திலும் பால் வளர்ச்சி ஒரு முக்கிய திட்டமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் இத்திட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் பால் வளர்ச்சிக்கு மிகவும் பெரிய வாய்ப்பு உள்ளதால் இத்திட்டத்தின் கீழ் அந்த மாவட்டத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்திற்கு 1977–78 ல் ரூ. 16.27 இலட்சம் பால் பண்ணை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக, 1978–79 ஆம் ஆண்டிற்கு ரூ. 32.87 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

ரூ. 1.75 கோடி செலவில் பால்பொடி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருட்டிணகிரியில் ஆரம்பிக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

10.4. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்சித் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசால் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் தருமபுரி மாவட்டம் ஒன்றாகும். இத்திட்டத்தில் 50 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கத் தேவையான மூலதனத்திற்காக ரூ. 48.925 இலட்சம் முழு அளவு மானியத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தவும் உறை விந்தைப் பயன்படுத்தி கருத்தரிப்பை அதிகப்படுத்தவும் வகை செய்கிறது. இத்திட்டம் தருமபுரியில் அமுலாக்கப்பட உள்ளது. இந்த மாவட்டத்தில், இத்திட்டத்தின்கீழ் 250 உறைவிந்து நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 30 இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு மற்ற இடங்களில் அமைக்கும் திட்டம் நடந்தேறி வருகிறது.

[1979 மார்ச் 31

10.5. மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் ரூ. 11.90 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பாலாடை, வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று பழனி மலைத்தொடரில் கொடைக்கானலில் நிறுவப்படுகிறது. கொடைக்கானல் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியத்தின்கீழ் இத் தொழிற் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதில் பாதித் தொகை, பங்குத்தொகை மானியமாகவும், மற்றொரு பாதி கடனாகவும் வழங்கப்படும். 1977 ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு விட்டது. மீதியுள்ள ரூ. 6.90 இலட்சம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வழங்கப்பட்டது. பணி நடந்தேறி வருகிறது.

10.6. அரிசன நலத் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ், அரிசனக் கூட்டுறவு பால்வழங்கு சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. அரிசன உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி மூலமாக ரூ. 1,500 கடன் வழங்கப்படும். ரூ. 500 மானியமாக வழங்கப்பட்டு அது வங்கியில் செலுத்தப்படுகிறது. இத்தொகை சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பெற்ற கடனுக்காகச் சரிக்கட்டப்படும் ஒவ்வொருவருக்கும் இத்தகைய கடன்கள் ஒவ்வொரு முறையும் ரூ. 1,500 வீதம் இரண்டு முறை ரூ. 3,000-க்கு வழங்கப்படும். 1978–79-ல் இத்திட்டத்திற்காக ரூ. 10.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979–80-க்கு ரூ. 10.55 இலட்சம் நிதி ஒதுக்கப்படத் திட்டமிடப்பட்டு உள்ளது.

11. கால்நடை பராமரிப்புத் துறை—இம்மாநிலத்தில் பால்பண்ணை வளர்ச்சிக்காக உதவும் பணிகள்.

பால்வளத் துறையும், பால்வள நிறுவனமும் எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் மாத்திரமின்றி கால்நடை பராமரிப்புத் துறையும் இம்மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. செயற்கை முறைக் கருத்தரிப்பு மூலமாகவும், அயல் இனக் காளைகள் முதலியன மூலம் இயற்கை இன விருத்தி செய்தும், கால்நடைகளின் தரத்தை உயர்த்தி

1979 மார்ச் 31]

அவைகளின் பால் உற்பத்தியைப் பெருக்க இம்மாநிலத்தில் கால் நடை பராமரிப்புத்துறை கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்களை செயல்படுத்துகிறது :—

(அ) கேந்திர கிராமத் திட்டம்.

(ஆ) தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம்.

(இ) ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம். ஒசூரில் வம்சாவழி ஆய்வுத் திட்டம்.

(ஈ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் முதலியவை.

12. பொது.

நம் மாநிலத்தில் சில பகுதிகளில் நவம்பர், 1977-ல் ஏற்பட்ட வெள்ளம், கடும் புயல் காரணமாக பால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், 1976–77-ல் பால் உற்பத்தி இருந்தது போல் 1977–78ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் இல்லாமற் போய்விட்டது. இந்த வருடமும் பால் அதிகமாககிடைக்கக் கூடிய காலங்களில் கூட (நவம்பர் 78 முதல்) பால் உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. பால்பண்ணைத் தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் பால்பொடி, கொழுப்பு ஆகியவற்றிற்குத் தட்டுப் பாடு ஏற்பட்ட போதிலும், இம்மாநிலத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் தேவைகளுக்கு ஏற்பவும், பால்பண்ணைத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய நெருக்கடியான நிலைமையை சமாளிப்பதற்கும் இம் மாநிலத்தின் ஊட்டச் சத்துக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பால் பெருக்குத்

வரிசை எண்ணும் திட்டத்தின் குறிப்பும்.	ஆரம்பத்தில் ஒதுக்கப் பட்டது.	இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ஒத்துக் கொண்ட திருத்திய ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
1 மாதவரம் பால்பண்ணை விரிவு படுத்துதல் இயந்திரத்தின் கொள் அளவை ஒரு நாளைக்கு 0.50 இலட்சம் லிட்டரிலிருந்து 1.25 இலட்சம் லிட்டராக உயர்த்துதல்.	27.00	20.6
2 நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தி தயார் செய்ய அம்பத்தூரில் இரண்டாவது பால் பண்ணை நிறுவப் பட்டுள்ளது. பால்பண்ணை 16—4—1976-ல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.	200.00	314.00
3 சேமித்து வைத்தல், மற்றும் தூர இடங்களுக்குச் செல்லும் வசதிகள்.		

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

979 மார்ச் 31]

திட்டம். I

(ரூபாய் இலட்சத்தில்.)

இதுவரை கொடுக்கப் பட்ட தொகை.	31–10–78 வரை செலவு செய்யப் பட்ட தொகை.	திருத்திய ஒதுக் கீட்டில் கிடைக்கும் மீதம்.	மீதமுள்ள தொகையை உபயோகிப்பதற்கான செயற் குறிப்புகள்.
(4)	(5)	(6)	(7)
23·30 (ரொக்கமாக ரூ. 12·41 பொருளாக ரூ. 10·89).	20·61	..	இத்திட்டம் முடிவுற்றது.
283·74	245·73	68·27	பாற்பண்ணையின் முழுத் திறனையும் பயன் படுத்துவதற்கு எஞ்சியுள்ள பாலை மொத்தமாக விற்பனை செய்யும் பிரிவுகள், குளிர்ச்சாதன வசதி, சேமிப்பு வசதிகள் அத்துடன் தொடர்புடைய கட்டுமானப் பணிகள் ஆகியவை செய்து தரப் பட வேண்டி உள்ளது.

இந்திய பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் (ஐ.டி.சி.) நேரிடை ஆளுகையில் உள்ளது. ஒவ்வொன்றும் 40,000 லிட்டர் கொள் அளவு கொண்ட இரண்டு இரயில் தொட்டிகளை வாடகைக்கு பெற்று ஈரோட்டில் இருந்து பாலை அனுப்ப வகை செய்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 31

வரிசை எண்ணும் திட்டத்தின் குறிப்பும்.	ஆரம்பத்தில் ஒதுக்கப் பட்டது.	இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ஒத்துக் கொண்ட திருத்திய ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
1 மற்றும் 5 பால் சேகரித்து வழங்கும் பண்ணை குளிரூட்டும் நிலையங்கள்.	213·00	454·39
6 நகர கால்நடைகளை மாற்று இடங்களில் குடியேற்றுதல்.	154·00	.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 31]

இதுவரை கொடுக்கப் பட்ட தொகை.	31—10—78 வரை செலவு செய்யப் பட்ட தொகை.	திருத்திய ஒதுக் கீட்டில் கிடைக்கும் மீதம்.	மீதமுள்ள தொகையை உபயோகிப்பதற்கான செயற்கு றிப்புகள்.
(4)	(5)	(6)	(7)
204·62 (ரொக்கமாக ரூ. 143·66 பொருளாக ரூ. 60·96).	199·37	255·02	1. சூரியன்பாளையம். சங்கரானம் பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு குளிரவைக் கும் நிலையங்களுடன் ஈரோடு பால் பண் ணைத் தொகுதியை அமைத்தல் (வேளாண் மைத் துறையின் 29—9—1977 ஆம் நாளிட்ட 1655ஆம் அரசு ஆணையைக் காண்க ரூ. 186·32 இலட்சம்). 2. ரூ. 305 இலட்சம் செலவில் சேலத்தில் பால் சேகரிப்புப் பண்ணை அமைப் பதற்கான செயற் குறிப்பு.
திட்டம் ஒன்றும் தீட்டப்பட வில்லை. இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்திலிருந்து நிதி ஒதுக்கீடு ஒன்றும் செய்யப்பட வில்லை. இந்த ஒதுக்கீடு மற்றப் பணிகளுக்காக செலவு செய்யப் படும்.			..

TAMIL NADU LEGISLATIVE
TRUTH ALONE TRIU

[1979 மார்ச் 31

வரிசை எண்ணும் திட்டத்தின் குறிப்பும்.	ஆரம்பத்தில் ஒதுக்கப் பட்டது.	இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் ஒத்துக் கொண்ட திருத்திய ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
7 பால் உற்பத்தியை அதிகரித்தல்	293·00	293·00
மாட்டுத் தீவன தொழிற்சாலை, தொழில் நுட்ப வசதித் திட்டம் ஆகியவற்றிற்காக ஈரோடு ஒன்றியத்திற்குத் தொகை கொடுக்கப்பட்டது.		
மொத்தம் ..	887.00	1,082·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 31]

இதுவரை கொடுக்கப் பட்ட தொகை.	31–10–78 வரை செலவு செய்யப் பட்ட தொகை.	திருத்திய மீட்டில் கிடைக்கும் மீதம்.	மீதமுள்ள தொகையை உபயோகிப்பதற்கான செயற்குறிப்புகள்.
(4)	(5)	(6)	(7)
137·66 (ரொக்கமாக ரூ. 122·35 பொருளாக ரூ. 15·31)	139·79	153·21	1. ஈரோடு ஒன்றியத்தின் கீழ் கால்நடைத் தீவனப் பகுதி ஒன்று ஈரோட்டில் அமைத்தல் ரூ. 24·71 இலட்சம்.
35·29 (ரொக்கமாக ரூ. 30·78 பொருளாக ரூ. 4·51).			2. அலுவலகக் கட்டிடம் கட்டுதல், உறைவிந்துக் கருவிகள் உட்பட, செயற்கை கருத்தரிப்பு நிலையத்திற்குக் கட்டிடங்கள் கட்டுதல், செலவு ரூ. 128·50 இலட்சம்.
			153·21
684·61	605·50	476·50	476·50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

[.. 167ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 26.

கைத்தறி பஞ்சாலைத் தொழில்.

1979–80-ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

I. முன்னுரை.

முறையான அடிப்படையில் அமையாத துறையில் மிகப் பெரிய தொழிலான கைத்தறி, சுமார் 5,56,000 கைத்தறிகளை, தன்னகத்தே கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள 10 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதோடு 30 இலட்சம் பேர்களுக்கு வாழ வகையும் செய்கிறது. தொழில் புரியும் மொத்த மக்கள் தொகையில் சுமார் 6 சதவீதத்தினர் கைத்தறி நெசவாளர்களாக உள்ளனர். நாட்டில் மொத்தத்தில் தயாரிக்கப்படும் 2,300 மில்லியன் மீட்டர் துணியில், அவர்கள் ரூ. 150 கோடி மதிப்புள்ள 600 மில்லியன் மீட்டர் துணியை தயாரித்து வருகின்றனர். கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று தற்போது 33 சதவீதம் நெசவாளர்களை இத்தொழில் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்திய அரசு அறிவித்துள்ள புதிய துணிக் கொள்கையின்படி, ஆலைகள், விசைத்தறிகளின் நெசவுத் திறன் தற்போதைய அளவிலேயே நிறுத்தப்பட்டு மேற்கொண்டு கூடுதலாகத் தேவைப்படும் உள்நாட்டு, வெளிநாட்டுத் துணித் தேவைகள் கைத்தறித் துறை மூலம் நிறைவு செய்யப்பட வேண்டும்.

கைத்தறித் தொழிலை வளர்ச்சியடையச் செய்யவும், மாநில நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும் மாநில அரசு தீவிர அக்கறையுடன் கீழே குறிப்பிட்டுள்ள நோக்கங்களைக்கொண்ட பல்வேறு திட்டங்களைச் செயலாக்கி வருகின்றது :—

(1) மிகப் பெரும்பான்மையான நெசவாளர்களைக் கூட்டுறவு இயக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து அவர்களுக்கு முழு நேர வேலை வாய்ப்புக்கும் நிரந்தரமான கூடுதல்பட்ச ஊதியத்திற்கும் வகை செய்தல்.

1979 மார்ச் 31]

(2) சரக்கு தேக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கைத்தறி துணிகளை மக்கள் விரும்பி வாங்கும் வண்ணம் புதியவண்ண வடிவமைப்புகளுடன் நவீன ரகத் துணிகளின் உற்பத்தியை மேற்கொண்டு உற்பத்தி அமைப்பை மாற்றியமைத்தல்.

(3) நெசவாளர் கூட்டுறவு அமைப்பின்கீழ் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கு ஒரு உறுதியான ஏற்றுமதி சந்தையை உருவாக்கும் நோக்குடன் உற்பத்தியைப் பெருக்கி, வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்தல்.

(4) சமுதாயத்தில் உள்ள ஏழை, எளியவர்களுக்கு குறைந்த விலையில் துணிகள் கிடைக்கும் பொருட்டு ஜனதா துணிகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(5) இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் பரிந்துரைகளை செயலாக்கும் விதத்தில் பொதுவாக கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், பணி நிலைமை, இதர வசதிகள் குறித்து சட்ட பாதுகாப்பு ஏற்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பற்றியும் 1978–79 மற்றும் 1979–80-க்கான திட்டங்களைப் பற்றியும் பின்வரும் பத்திகளில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

நம் மாநிலத்தில் 1977–78-ல் 81 புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 13 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் அமைக்கப்பட்டன. இச் சங்கங்களிலும், ஏற்கனவே உள்ள சங்கங்களிலும் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களில் 23,780 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். நம் மாநிலத்தில் இரண்டு ஏற்றுமதி உற்பத்தி கைத்தறி திட்டங்களும், நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களும் அமைக்கப்பட்டு முழு நேர வேலை வாய்ப்பு நல்கும் வகையில் 3,100 தனிப்பட்ட நெசவாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1978–79இல், புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பித்தும், ஏற்கனவே உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை புத்துயிரூட்டியும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 14,000 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டனர். இவ்வாண்டில், தறியில்லா நெசவாளர்களுக்கு வேலை தந்துதவிட 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டு, அவற்றில் 6 சங்கங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு, 15 சங்கங்களை நிறுவும் வேலை நடந்துகொண்டு வருகிறது. இதன் மூலம் 3,600 தறியில்லா நெசவாளர்கள் பயனடைவர். மாநிலத்தில் இயங்கி வரும் 6 திட்டங்கள்,

ஆண்டிறுதிக்குள் 10,000 நெசவாளர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும். 31—12—1978 வரை 6,887 நெசவாளர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். கைத்தறியில் புதிய வண்ணமிகு வடிவமைப்பு களை உருவாக்க, சேலத்திலும், கோயமுத்தூரிலும் இரண்டு வடிவமைபபு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

1979–80 ஆண்டில் 16,000 நெசவாளர்களை கூட்டுறவின்கீழ் கொணரும் திட்டத்தில் 70 புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங் களை அமைப்பதற்கும் 6,000 தறியில்லாத நெசவாளர்களுக்கு 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 35 நலிந்த சங்கங்களில் மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து புத்துயிர் ஊட்ட செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை ரூ. 246 இலட்சம் மதிப்பில் செயல் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆறு கைத்தறி வளர்ச்சி/ ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களின் குறியீடான 16,000-க்கு நெசவாளர்களை உயர்த்துவதற்காக இந்த ஆண்டில் 6,000 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கைத்தறி வளர்ச்சி/ ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களின்கீழ் சேர்க்கப்படுவார்கள். மேற்கண்ட முறைகள் இவ்வாண்டில் 15 மில்லியன் மீட்டர் அதிக உற்பத்திக்கு வழி வகுக்குமென திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் நவீன டிசைன்களில் புதிய ரகங்களை உற்பத்தி செய்யவும் கூட்டுறவில் உள்ள 2,500 தறிகள் இவ்வாண்டில் நவீன மயமாக்கப்படும். புதிய டிசைன்களை வகுத்து அவற்றை நெய்வதற்கு நெசவாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஏற்கனவே உள்ள 3 வடிவமைப்பு நிலையங்களை தவிர இவ்வாண்டில் மேலும் ஒரு வடிவமைப்பு நிலையம் அமைக்கப்படும். நவீன நெசவுக் கருவிகள் மூலமாக புதிய டிசைன்களில் புதிய ரகத் துணிகளை நெய்வதற்காக, கூட்டுறவு நிறுவனத்திலுள்ள சுமார் 4,920 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். துணிகளின் தரத்தையும், தோற்றத்தையும் மேம்படுத்த, இவ்வாண்டில் முக்கியமான இடங்களில் நான்கு நவீன சாயத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும். தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிக அளவில் வியாபாரத்தில் உதவி அளிக்கும் பொருட்டு கோ-ஆப்டெக்ஸ், நாட்டில் 40 புதிய விற்பனை நிலையங்களைத் திறந்து ஏற்கனவே உள்ள 25 விற்பனை நிலையங்களை நவீனமயமாக்கும். நெசவாளர் நலத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறையிலுள்ள சுமார் 20,000 நெசவாளர்கள் நெசவாளர் பாதுகாப்பு சேமிப்புத் திட்டத்தின்கீழ் கொணரப்படுவர்.

1979 மார்ச் 31]

II. கச்சாப் பொருட்களை வழங்குதல்.

(அ) பருத்தி நூல் :

2·94 இலட்சம் நூற்கதிர்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள், கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தேவைப்படும் பல நம்பர்கள் கொண்ட 8,500 பேல் பருத்தி நூலை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவு நூற்பு ஆலைகளிடமிருந்து நூலைக் கொள்முதல் செய்து, 19 நூல் டிப்போக்கள் வாயிலாக மாநிலம் முழுவதிலுமுள்ள 946 தொடக்க நெசவாளர் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்கிறது. 7—2—1979 அன்று மதுரையில் பொதுவான நூல் விற்பனை டிப்போ ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இது தவிர, கூட்டுறவின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு நெசவாளர் கழகத்தின் நூலை விற்பனை செய்ய சேலத்தில் இன்னொரு நூல் விற்பனை டிப்போ ஒன்று தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் கோ-ஆப்டெக்ஸின் நூல் டிப்போக்களின் மூலம் முறையாக நூலை வழங்குவதால் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நியாயமான விலையில் தரமான நூல் கிடைக்கின்றது.

(ஆ) சுத்தமான பட்டும் ஜரிகையும் :

தமிழ்நாட்டிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கச்சாப் பட்டு நூலை பெங்களூரிலுள்ள தனியார் வியாபாரிகளிடமிருந்தும், ஜரிகையை காஞ்சிபுரம், கும்பகோணத்திலுள்ள சூரத் உற்பத்தியாளர்களிடமிருந்தும் வாங்குகின்றன. ஒரே தரமான பட்டிற்கு அதிக அளவில் விலை வேறுபாடுகள் இருந்தன. பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பட்டு வாங்குவதிலும் சில முறைகேடுகள் இருந்தன. ஆகவே, நியாய விலையில் நல்ல தரமான பட்டு வாங்கும் பொருட்டு, பட்டு நெசவாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் "கச்சாப் பட்டு ஜரிகைக் கொள்முதல் மத்தியக் குழு" ஒன்று காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தற்போது பட்டு, ஜரிகை ஆகியவற்றை கொள்முதல் செய்து அவற்றை பட்டு நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. சூரத் உற்பத்தியாளர்களின் உள்ளூர் ஏஜெண்டுகளை நம்புவதற்குப் பதிலாக, பட்டு ஜரிகை சூரத்திலிருந்து நேரடியாக தற்போது பெறப்படுகிறது.

[1979 மார்ச் 31

(இ) செயற்கைப் பட்டு நூல் :

நூற்பவர்களுக்கும் நெசவாளர்களுக்கும் இடையே செயற்கை பட்டுநூல் பகிர்ந்தளிப்பதற்காக தாமே முன்வந்து செய்து கொண்ட ஒப்பந்தம் ஏதும் தற்போது செயலில் இல்லை. எனவே, செயற்கை பட்டு நூலை வழங்க வேண்டி, நூற்பவர்களுக்கு அறிவுரை நல்குவது சாத்தியமல்ல என்று இந்திய அரசு தெரிவித்தது. மேலும், "எல்லோருக்கும் உரிமம் வழங்கும் பொதுவான திட்டத்தின்கீழ்" தேவையான செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்ய, சங்கங்களுக்கு அறிவுரை நல்கியது. இதற்கிணங்க, இத்துறையின் வட்ட அதிகாரிகள் வழங்கிய பயன்படுத்துவோர் சான்றிதழ்களின் அடிப்படையில் "எல்லோருக்கும் உரிமம் வழங்கும் பொதுவான திட்டத்தின்" கீழ் சங்கங்கள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவன உறுப்பினர்களுக்கு தேவைப்படுகின்ற செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்வதற்கான உடனடி ஏற்பாடுகள் செய்வதற்கு சங்கங்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் அறிவுரை நல்கப்பட்டது. சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸும் அவைகளுக்குத் தேவையான செயற்கைப் பட்டு நூலை இறக்குமதி செய்தன. தாராளமாக இறக்குமதி செய்வதனால், செயற்கைப் பட்டு நூல் முறையாக வழங்குவது உறுதிப்படுத்தப்படுகிறது.

(ஈ) சாயங்களும், இரசாயனங்களும் :

இம்மாநிலத்திலுள்ள கைத்தறி துறைகளுக்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் சாயப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள் முறையே சுமார் 300 டன்னும், 370 டன்னும் ஆகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் "வானவில் சாயங்களும் ரசாயனங்களும்" என்ற ஒரு திட்டத்தை கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்துகிறது. கோ-ஆப்டெக்ஸ், அரசு நிதியுதவியுடன் இத்திட்டத்தில் ரூ. 10 இலட்சத்திற்கு பங்குத் தொகை எடுக்கும் என கருதப்படுகிறது.

(உ) நவீன சாயத் தொழிற்சாலைகள் :

நாளொன்றுக்குத் தேவையான 260 பேல்களுக்கு மாறாக, நாளொன்றுக்கு 60 பேல் சாயமிடும் திறன் உள்ள சுமார் 12 பெரிய சாயத் தொழிற்சாலைகளும், 180 சிறிய சாயத் தொழிற்சாலைகளும் கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ளன. இரண்டு நவீன சாயத் தொழிற்சாலைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு சங்கங்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 240 இலட்சம் மூலதனச் செலவில் நாளொன்றுக்கு 200 பேல்கள் சாயமிடும் திறனுள்ள 20 பெரிய நவீன சாயத் தொழிற்சாலைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1979 மார்ச் 31]

III. வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்கள்.

புதிய வடிவங்களை (டிசைன்) கைத்தறித் துணிகளில் புகுத்துவதற்கும் பல்வகைப்பட்ட புதிய துணி வகைகளை அறிமுகப்படுத்தவும் மதுரையில் ரூ. 3.50 லட்சம் செலவில் ஒரு புதிய வடிவமைப்பு பணி நிலையத்தை கோ-ஆப்—டெக்ஸ் நிறுவி உள்ளது. பயிற்சி பெற்ற தொழில் நுணுக்க நபர்களை வேலைக்கு அமர்த்தி அவர்கள் மூலம் புதிய வடிவமைப்பு (டிசைன்களை) உற்பத்தி செய்து கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு அந்த வடிவமைப்புகளை கொடுத்து உதவி புரிகிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இது போன்ற 5 நிலையங்களை பல்வேறு இடங்களில் மேலும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. 1979—80இல் சேலம் மற்றும் கோவையில் ரூ. 7 லட்சம் செலவில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

IV. கட்டுப்பாட்டு (ஜனதா துணி) திட்டம்.

1976 ஆம் ஆண்டு அக்டோபர், இரண்டில் சுமார் 1,000 தறிகளில் தயாரிக்கப்பட்ட ஜனதா வேஷ்டி மற்றும் புடவை ரகங்களை துணி கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது. ஜனதா வேஷ்டி, புடவைகள், லுங்கிகள் தயாரிப்பதற்காக தறிகளின் எண்ணிக்கையை மேன்மேலும் உயர்த்தி 15,000 தறிகள் தற்போது இயங்கி வருகிறது.

கீழ்க்கண்ட விபரங்கள் மூலம் ஜனதா துணி உற்பத்தித் திட்டத்தின் வேலை திறன்களை அறியலாம் :—

(1) உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தறிகளின் எண்ணிக்கை.	15,000
(2) இதுவரையிலான உற்பத்தி	19·46 (மில்லியன் மீட்டர்)
(3) அரசால் மானியமாக வழங்கப்பட்ட நிதியுதவி.	1,77·55 (ரூ. இலட்சம்)

1978—79 இல் ஜனதா துணி வகைகள் தயாரிக்க 20 மில்லியன் குறியீட்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குறியீட்டை அடைய தற்போதுள்ள இந்த திட்டத்தில் அடங்காத பலவித துணி வகைகளை உற்பத்தி செய்யும் யோசனைகளை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இவ்வகைத் துணிகளை குறைந்த விலைக்கு விற்பதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட இத்திட்டத்திற்காக மாநில அரசுக்கு கொடுக்கும் மானியம் மிகவும் குறைவு என்பதால், மானியத் தொகையை

[1979 மார்ச் 31

உயர்த்தும் யோசனை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த செயற்குறிப்புகளுக்கு இந்திய அரசு ஏற்பளித்தால் 1979-80 ஆம் ஆண்டில் மேம்பட்ட சாதனையைக் காட்ட முடியும்.

V. நலத் திட்டங்கள்.

1. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்பு திட்டங்கள் :

கூட்டுறவுப் பிரிவில் தற்போது நெசவாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட நெசவாளர்களின் சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களின் ஊதியத்திலிருந்து 6 சதவீதமும் அரசின் பங்காக 3 சதவீதமும் அளிக்கப்படுகிறது. இத்துடன் 7 சதவீதம் வட்டி சேர்த்து நெசவாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஆயுள் பாதுகாப்புக் குழுமத்தின் திட்டம் என்ற புதிய மற்றொரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நெசவாளர்கள் எவரேனும் இறக்க நேரிட்டால் சட்டப்படியான அவர் தம் வாரிசுக்கு, அவர் நிதியுடன் மேலும் ரூ. 500 ஆயுள் பாதுகாப்பு நிறுவனத்தால் (எல்.ஐ.சி.) வழங்கப்படுகிறது. இந்தத் தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 64,365 நெசவாளர்கள் இருக்கின்றனர். மேலும் இத்திட்டத்தை கவர்ச்சிகரமாக்கும் வகையில் ஆயுள் ஈட்டுறுதியை விரிவுபடுத்துதல் முதலியவை குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1979-80 இல் கூட்டுறவு நிறுவனங்களில் கூடுதலாக 20,000 நெசவாளர்களைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் உள்ளன.

2. நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டம் :

1962ஆம் ஆண்டுக்கு முன்னர் செயலில் இருந்து அதன் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்து நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தை திரும்பவும் போதிய வகையில் திருத்தங்கள் செய்தும், இந்திய அரசு வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் நிதி உதவி பெற்றும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் நல்ல முறையில் இயங்கும் சங்கங்கள் மூலம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 10,000 வீடுகள் கட்டவும் கருதப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வீடு ஒன்றுக்கு வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் கடனாக ரூ. 3,500 வீதமும் இந்திய அரசிடமிருந்து மானியமாக ரூ. 1,500 வீதமும் தொகை பெறும்.

1979 மார்ச் 31]

வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் வாங்கும் தொகைக்கான வட்டியை மாநில அரசு மான்யமாக வழங்கும். ஒரு நெசவாளர் செலுத்தத்தக்க மாதத் தவணை ரூ. 15 ஆகும். இந்தத் திட்டம் குறித்து இந்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்றதும் உடன் செயல்படுத்தப்படும். 1979–80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

VI. கைத்தறித் துணி நூல் துறையின் பிரிவுகள்.

கைத்தறித் தொழிலின் நிலையான வளர்ச்சிக்காக கூட்டுறவு முறையில் கைத்தறித் தொழிலை ஆதரித்து மேம்பாடு செய்யும் பொருட்டும் இடு பொருட்கள், மூலப் பொருள்கள், இன்றியமையா அடிப்படைத் தேவைகளை அளிக்கும் பொருட்டும் அரசுச் சார்புள்ள நிறுவனங்களைப் பொதுத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அவையாவன :—

1. வியாபார உதவிக்காக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவின்கீழ் இல்லாதவர்களுக்கு உதவ தமிழ்நாடு கைத்தறி நிதியுதவி வணிகக் கழகமும் தரமான நியாய விலையில் நூல் விநியோகத்திற்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளும், கைத்தறித் துணிகளை பதனிட கூட்டுறவு பதனிடும் தொழிற்சாலையுமாகும். இத்துறையில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக இப்பிரிவுகளும் நிறுவனங்களாக பணியாற்றுகின்றன. இந்நிறுவனங்கள் வேலை செய்யும் விதம் பற்றியும் அவைகளின் வருங்காலத் திட்டங்கள் பற்றியும் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம்:—

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கோ-ஆப்டெக்ஸ் என்ற பெயரில் பிரபலமான தலைமைச் சங்கமாகும். இம்மாநிலத்திலுள்ள எல்லா ஆரம்பக் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் இதன் கிளைச் சங்கங்களாகும். இக்கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு ரூ. 3·33 காடி. அதில் அரசுத் தொகை ரூ. 2·85 கோடி.

கோ-ஆப்டெக்ஸ் தரவேண்டிய குறுகிய கால கடனின் நிலுவையைச் சரிசெய்து அத்தொகையை பங்குத் தொகை மூலத்தில் சேர்ப்பதற்கு மேலும் 50 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நூல், சாயம், இரசாயனப் பொருள்கள் போன்ற மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து தொடக்க நெசவாளர்க்ள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யவும் அவைகளால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறிப் பொருட்களுக்கு விற்பனை உதவி அளிப்பதுமே கோ-ஆப்டெக்ஸின் முதன்மையான

நோக்கமாகும். ரிசர்வ் வங்கி இயல்பான வரம்பின்கீழ் நடைமுறை மூலதனமாக ரூ. 6·50 லட்சமும், பண்டிகைக் காலங்களில் அதிக கொள்முதலுக்காக சிறப்பு வரம்பின்கீழ் அளிக்கப்படும் தொகையாக ரூ. 3·50 லட்சமும் அளித்துள்ளது.

கூட்டுறவு நூற்பு ஆலைகளின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் நூலை கோ-ஆப்டெக்ஸ் அதன் 19 நூல் கிடங்குகள் மூலமாக தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்கின்றது. இந்நிறுவனத்தின்கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் 225 சில்லறை விற்பனை நிலையங்களும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் 150 விற்பனை நிலையங்களும் உள்ளன. இது தவிர 128 தனி விற்பனையாளர்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில், கைத்தறிப் பொருட்கள் விற்பனைக்காக முகவரமைப்பு முறையில் அமர்த்தியுள்ளது.

1978 ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் ரூ. 19·71 கோடிகள் மதிப்புள்ள கைத்தறி துணிகளை தொடக்கச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து ரூ. 29·67 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. 1977 ஆம் ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 23·00 கோடி. இவ்வாறாக 1978ஆம் ஆண்டைய இலக்கு ரூ. 30 கோடி விற்பனையை அடைந்துள்ளது.

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களில் 60 சதவீதம் பேர்களை கூட்டுறவின்கீழ் கொண்டு வரும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் புதிய பலநெசவாளர் கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது தவிர ஏற்கெனவே உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அதிக அங்கத்தினர்களும் சேர்க்கப்படுகின்றனர். இயங்காமல் உள்ள தறிகளில் அதிக அங்கத்தினர்களும் சேர்க்கப்படுகின்றனர். இயங்காமல் உள்ள தறிகளை இயங்க வைக்கும் நோக்கத்துடன், நலிந்தும், செயல்படாமலும் உள்ள சங்கங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட முறைகளின் பலனாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 60 சதவீதம் பேர் கூட்டுறவின்கீழ் கொண்டுவரப்படுவர் எனவும் கைத்தறியின் மூலமாக சுமார் ரூ. 80 கோடியிலிருந்து ரூ. 90 கோடி வரை கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது கோ-ஆப்டெக்ஸ் தொடக்கச் சங்கங்களின் 50 சதவீத உற்பத்தியை கொள்முதல் செய்கின்றது. இதே நிலையில் கொள்முதல் செய்ய வேண்டுமானால் வருகின்ற ஐந்தாண்டிற்குள் வருடத்திற்கு ரூ. 40 கோடியிலிருந்து 45 கோடிக்கு கொள்முதல் செய்வதற்கு இயலும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் தயார் செய்யப்பட வேண்டும். அந்த அளவிற்கு கைத்தறி பொருட்களை விற்பனை செய்வதென்பது, அதுவும் மில் மற்றும் விசைத் தறியின் உற்பத்தி விற்பனையுடன் கடும் போட்டியிடுவதென்பது உண்மையிலேயே ஒரு கடினமான அறை

1979 மார்ச் 31]

கூவலாக ஏற்றுக் கொள்கின்ற ஒரு செயலாகும். இந்நோக்கத்தை கருத்திற் கொண்டு கணிசமான அளவிற்கு விற்பனையை அதிகரிக்க பல திட்டங்களை கோ-ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வருகின்றது. இது தொடர்பாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை கோ-ஆப்டெக்ஸ் எடுத்துள்ளது :—

(அ) புதிய விற்பனை நிலையங்கள் திறத்தலும் ஏற்கெனவே உள்ள விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதலும் :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் ரூ. 300 லட்சம் செலவில் 250 புதிய விற்பனை நிலையங்களை நிறுவவும் ஏற்கெனவே உள்ள 150 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் உத்தேசித்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 50 லட்சம் செலவில் 40 புதிய விற்பனை நிலையங்களைத் திறப்பதுடன் 25 விற்பனை நிலையங்களை நவீனமாக்கவும் உத்தேசித்துள்ளது.

(ஆ) புதிய வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்கள் திறத்தல் :

கைத்தறித் துணிகளில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும், அவற்றின் உற்பத்தியை மக்களின் தற்போதைய விருப்புக்கேற்றவாறு மாற்றியமைக்கவும் கோ-ஆப்டெக்ஸ் அரசிடமிருந்து ரூ. 3·50 இலட்சம் நிதியுதவி பெற்று, மதுரையில் ஒரு வடிவமைப்பு மற்றும் பணி நிலையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரூ. 17·50 இலட்சம் செலவில் இதைப் போன்ற மேலும் ஐந்து வடிவமைப்பு மற்றும் பணி நிலையங்கள் ஏற்படுத்தப்படும். 1979–80 ஆம் ஆண்டு அவ்வாறு உத்தேசிக்கப்பட்ட இரண்டு வடிவமைப்புகள் சேலத்திலும் கோயம்புத்தூரிலும் ஏற்படுத்தப்படும்.

(இ) பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி :

கடந்த தீபாவளியின் போது கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி பாலியஸ்டரில் அச்சிட்ட சட்டைத் துணிகளை அறிமுகம் செய்தது. 1978 ஆம் ஆண்டு தீபாவளியின்போது இந்த பாலியஸ்டர் அச்சிட்ட சட்டைத் துணிகளில் இரண்டு லட்சம் மீட்டர் விற்பனை செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு பொங்கலின்போது மற்றுமொரு லட்சம் மீட்டர் துணிகள் விற்பனைக்கு அனுப்பப்பட்டது. தற்போது 550 கைத்தறிகள் இவ்வகை பாலியஸ்டர் பிளன்டட் காம்பிரிக்ஸ் வகைத் துணிகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வகைத் துணிகளை உற்பத்தி செய்யும் தறிகளின் எண்ணிக்கையை இவ்வாண்டு 1,000 ஆகவும், அடுத்த இரண்டாண்டுகளில் 3,000 ஆகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) ஜனதா துணிகள் உற்பத்தி :

சுமார் 15,000 கைத்தறிகள் ஜனதா வகை வேஷ்டிகள், லுங்கிகள் மற்றும் சேலைகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1979–80 ஆம் ஆண்டிற்கு 20 மில்லியன் மீட்டர் ஜனதா துணிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று குறியீட்டளவாக குறிக்கப்பட்டுள்ளது. மூலப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதைக் கருதி ஜனதா துணிகளில் புதிய வகைகளைச் சேர்க்குமாறும், ஜனதா துணிகளின் விலையை உயர்த்துமாறும் கேட்டு செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) ரெடிமேட் ஆடைகள் தயாரிப்பு நிலையங்கள் :

கோ–ஆப்டெக்ஸ்-க்கு, சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் 120 தையல் இயந்திரங்களடங்கிய 'ரெடிமேட்' ஆடைகள் உற்பத்தி செய்யும் நிலையங்களை நிறுவுவதற்கு ரூ. 17.73 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. தற்பொழுது சென்னையிலுள்ள அந்த நிலையங்களில் ஒன்று 90 தையல் இயந்திரங்களுடன் செயல்பட்டு வருகிறது. ஏனைய இரண்டு நிலையங்களும் விரைவில் நிறுவப்படும். கைத்தறி ரெடிமேட் ஆடைகளுக்கு உள்நாட்டுச் சந்தையிலும், வெளி நாட்டுச் சந்தையிலும் ஏற்படக்கூடிய வரவேற்பைப் பொறுத்து வரும் ஆண்டுகளில் ரெடிமேட் ஆடைகள் வியாபாரம் அதிகரிக்கப்படும்.

(ஊ) ஏற்றுமதி :

'கோ–ஆப்டெக்ஸ்' ஏற்றுமதியைக் கவனிப்பதற்கென "கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்ற தனிப் பிரிவை ஏற்படுத்தி, படிப்படியாக ஏற்றுமதியைப் பெருக்கி வருகிறது. 1978 ஆம் ஆண்டில் ரூ. 76.15 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளை இப்பிரிவு ஏற்றுமதி செய்தது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதிகள் அதிகரிக்கப்பட்டு 1979–80 ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் ரூ. 3 கோடி என்ற ஏற்றுமதி குறியீட்டளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

(எ) கடன் விற்பனைத் திட்டம் :

'கோ–ஆப்டெக்ஸ்' மூலமாக அரசுப் பணியாளர்கள் உள்ளாட்சித் துறைப் பணியாளர்கள் முதலியவர்களுக்குக் கடன் விற்பனைத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் நடப்பு ஆண்டில் ரூ. 4·86 கோடி அளவுக்கு கடன் விற்பனை நடைபெற்றது.

1979 மார்ச் 31]

(ஏ) கொள்முதல் செய்தல் :

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருக்கும் சரக்கு இருப்புகளைக் குறைக்கும் நோக்குடன் கோ—ஆப்டெக்ஸின் கொள்முதல் முறைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. கோ—ஆப்டெக்ஸ் தேவையான ரகங்களுக்கு காலாண்டுக்கு ஒரு முறை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னதாகவே தேவையான ஆணையைக் கொடுக்கிறது. அவற்றை உற்பத்தி செய்து கோ—ஆப்டெக்ஸுக்கு ஏற்றவாறு கொடுக்குமாறு அச்சங்கங்கள் கோரப்படும். தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்னல் ஏற்படாதவாறு பணமும் கொடுக்கப்படும்.

3. தமிழ்நாடு கைத்தறி நிதி, வர்த்தக நிறுவனம்.

கூட்டுறவு அமைப்புக்கு வெளியே செயல்பட்டுவரும் கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறியாளர்களுக்கும் இதனோடு தொடர்புடைய ஏனைய தொழில்களுக்கும் நிதியுதவி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1964 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி நிதி, வர்த்தக நிறுவனம் துவங்கப்பட்டது. இந்த நிறுவனம் பல்வேறு வட்டி வீதங்களில் கடன் திட்டங்கள் மூலம் ரூ. 1,000 வரை $12\frac{1}{2}$ சதவீதம் வட்டியும் ரூ 5,000 வரை $13\frac{1}{2}$ சதவீதம் வட்டியும் என்ற வீதத்தில் கடன் வழங்கி வருகின்றது. 1—1—1978 முதல் 31—12—1978 வரை இந் நிறுவனம் ரூ. 119.30 இலட்சம் அளவுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

(அ) கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் :

மத்திய அரசின் நிதியுதவியுடன் தமிழக அரசு நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும், இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் நிறுவியுள்ளது. இந்த நிறுவனங்கள், சிவராமன் குழுவினர் கைத்தறிகள் குறித்து அளித்த பரிந்துரைகளுக்கிணங்க, நெசவாளர்களுக்கு நூல் வழங்குதல், நெசவுக்கு முன்னும் பின்னும் தேவைப்படும் வசதி, கடன் வசதி, விற்பனை வசதி ஆகியவற்றை ஒரே அமைப்பின்கீழ் செய்து கொடுப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் பணி விவரங்கள் இதுவரை அடைந்த முன்னேற்றங்கள் பின்வருமாறு :—

தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும்.	கைத்தறிகளின் எண்ணிக்கை	1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கை.	மொத்த திட்ட மதிப்பு.	அரசு அளித்த நிதி உதவி.	தற்போதைய மாத உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
1. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், காஞ்சிபுரம்.	5,000	3,066	79.45	57.24	5.80
2. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், ஈரோடு.	5,000	1,218	106.00	71.44	6.75
3. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், சேலம்.	5,000	613	86.00	20.00	1.00
4. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டம், மதுரை.	5,000	586	120.00	20.00	1.00
5. கைத்தறித் துணி ஏற்றுமதித் திட்டம், கரூர்.	1,000	701	40.00	34.85	6.75
6. கைத்தறித் துணி ஏற்றுமதித் திட்டம், குறிஞ்சிப்பாடி.	1,000	703	32.00	5.00	1.20
	22,000	6,887	463.45	208.53	22.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 மார்ச் 31]

இந்த ஆறு வளர்ச்சித் திட்டங்களிலும் தறிகளின் எண்ணிக்கை 10,000 ஆக உயர்த்தப்படும். 1979—80ஆம் ஆண்டில் மேலும் 6,000 கூடுதல் தறிகள் இந்த ஆறு வளர்ச்சித் திட்டங்களில் சேர்க்கப்படும்.

முதலில் காஞ்சீபுரம், ஈரோடு, கரூர், சேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களிலுள்ள வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்காக தமிழ்நாடு கைத்தறி நிதி, வர்த்தக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. மதுரையிலுள்ள திட்டம் கூட்டுறவுத் திட்டமாக தனியாகத் தொடங்கப்பட்டது. கோ-ஆப்டெக்ஸின் முன்னேற்றமான விற்பனை ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டும், இவ்வளர்ச்சித் திட்டங்களின் எதிர்கால நலனை உத்தேசித்தும் எல்லா முனைப்பு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும், ஏற்றுமதி ரக உற்பத்தித் திட்டங்களையும் கூட்டுறவு நிறுவனங்களாக மாற்ற தற்பொழுது முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் அனைத்திற்கும் தகுந்த உற்பத்தித் திட்டங்களை வழங்குமாறும், இவை அனைத்திற்கும் விற்பனை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கோ-ஆப்டெக்ஸ்க்கு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இத்திட்டங்களில் உற்பத்தியான துணிகளை விற்பனை செய்வதற்கென அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு கைத்தறி நிதி, வர்த்தக நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள கோ—ஆப்டெக்ஸிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியினை கொள்முதல் செய்வதுபோல், கோ-ஆப்டெக்ஸ், இவ்வளர்ச்சித் திட்டங்களில் உற்பத்தியாகும் 50 சதவீதம் கைத்தறித் துணிகளை இந்த ஆண்டு முதல் கொள்முதல் செய்யும். மிகுதியுள்ள 50 சதவீதம் உற்பத்தி இவ்வளர்ச்சித்திட்டங்களினால் மொத்த வியாபாரிகளுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் நேரடியாக விற்பனை செய்யப்படும்.

4. கூட்டுறவு நூற்பாலைகள்.

இம்மாநிலத்தில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் 2.94 இலட்சம் கதிர்கள் நிறுவனத் திறனுடன் இயங்கி வருகின்றன. இவைகள் 20—லிருந்து 120 வரையிலான நம்பர் எண்ணுள்ள நூல்களை உற்பத்தி செய்கின்றன. திருவில்லிபுத்தூர், மற்றும் நாசரேத் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு ஆலைகளும் தங்களது திறனை 25,000 கதிர்களாக ஏற்கனவே விரிவுபடுத்தியுள்ளன. மீதமுள்ள 10 ஆலைகளில் 9 ஆலைகள் ஒவ்வொன்றும் தங்களது நிறுவனத் திறனை 25,000 கதிர்களாக விரிவுபடுத்த ரூ. 12 கோடி அளவில் திட்டம் இயற்றி விரிவு

படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளன. சேலம், வேலூர், மேலூர், மாயவரம், தாராபுரம், காஞ்சீபுரம், கரூர் ஆகிய இடங்களிலுள்ள ஆலைகள் விரிவுபடுத்தும் பணியை முடித்து விட்டன. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள ஆலைகளின் விரிவுபடுத்தும் பணிகளும் விரைவில் முடிவுறும் நிலையிலுள்ளன. தற்போது எல்லா ஆலைகளும் ரூ. 6 கோடி செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. இதில் ரூ. 4 கோடியை இந்திய தொழிலியல் வளர்ச்சி வங்கி குறைந்த வட்டிக் கடனாக வழங்கியுள்ளது. இவ்வாலைகள் தங்களது உற்பத்தியைப் பெருக்கவும், நூலின் தரத்தை உயர்த்தவும், இந்த நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. 12 கூட்டுறவு நூற்பாலைகளும் 1978 ஜனவரி முதல் டிசம்பர் முடிய மொத்தமாக ரூ. 200.00 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளன. ஆனால் இவ்வாலைகள் 31—12—77வுடன் முடிந்த ஆண்டில் அடைந்த நிகர நட்டம் ரூ. 114.00 இலட்சமாகும். இவ்வாலைகளில் 1977ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 123.74 லட்சம் கிலோ நூல்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்க 1978ஆம் ஆண்டின் நிகரான காலத்தில் 142.09 இலட்சம் கிலோ நூல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் துணி ஆலைகளில் ஒரு தொழிலாளி பெறும் சராசரி கூலியானது பிற மாநில துணி ஆலைகளில் உள்ள ஒரு தொழிலாளி பெறும் சராசரி கூலியை விடக் கூடுதலாகும்.

5. தமிழ்நாடு பொன் இழை ஆலை, காஞ்சிபுரம்.

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு பொன் இழை ஆலையின் நிறுவனத்திறன் ஆண்டு ஒன்றுக்கு 4,000 மார்க் பொன் இழையாகும். இங்கு உற்பத்தியாகும் பொன் இழைகள், பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள 20 நூற்பு இயந்திரங்களில், சில தொழில் நுட்பச் சிக்கல்கள் காரணமாக, கடந்த ஆண்டு வரையில் 10 இயந்திரங்கள்தான் இயங்கி வந்தன. அப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தற்போது 20 இயந்திரங்களும் இயங்கி வருகின்றன. 1977ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 4.52 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 993 மார்க் பொன் இழைகள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1978ஆம் ஆண்டில் 7.46 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1,277 மார்க் பொன் இழை உற்பத்தி செய்யப்பட்டது. 1977 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் இந்த ஆலைக்கு ரூ. 1.35 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. அந்த நிலையை மாற்றி 1978ஆம் ஆண்டில் 0.29 இலட்சம் மொத்த ஆதாயம் ஈட்டியது. இந்நிறுவனத்தின் நிதிநிலை இடர்பாட்டைத் தீர்க்க அரசு, குறித்தகாலக் கடனாக ரூ. 3 இலட்சம் வழங்கியுள்ளது.

1979 மார்ச் 31]

6. தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, ஈரோடு.

ஈரோடு தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலையில் சலவை செய்தல், சுருக்கம் நீக்குதல், மெருகேற்றுதல் போன்ற செய்முறைப்படுத்தும் வசதிகள் உள்ளன. இவற்றின் திறன் வருமாறு:—

1. சலவை செய்தல், சாயமிடுதல்	..	5 இலட்சம் மீட்டர்கள் (மாதமொன்றுக்கு).
2. மெருகேற்றுதல்	..	2.5 இலட்சம் மீட்டர்கள் (மாதமொன்றுக்கு).
3. முன்கூட்டியே சுருங்கச் செய்தல் சுருக்கம் நீக்குதல்.		2.5 இலட்ம் மீட்டர்கள் (மாதமொன்றுக்கு).

உற்பத்தித் திறனை மாதமொன்றுக்கு 10 இலட்சம் மீட்டர்களாக அதிகரிக்கும் வகையில் பல்வேறு பிரிவுகளின் திறன்களையும் சமநிலைப்படுத்துவதற்காகவும், அச்சடிக்கும் பிரிவு ஏற்படுத்துவதற்காகவும் இந்த ஆலை தற்போது தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 22.50 இலட்சம் நிதி உதவியுடன் விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 1979 ஏப்ரல் மாதம் 15ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

1978ஆம் ஆண்டில் 28.27 இலட்சம் மீட்டர் துணி செய்முறைப்படுத்தப்பட்டது. 1977இல் 17.15 இலட்சம் மீட்டர்தான் செய்முறைப்படுத்தப்பட்டது. இதுபோன்று 1977இல் 15,519 கட்டுகள் நூல் செய்முறைப்படுத்தப்பட்டிருக்க 1978ஆம் ஆண்டு 25,224 கட்டுகள் நூல் செய்முறைப்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1978 ஜூலை முதல் டிசம்பர் முடிய உள்ள காலத்தில் ரூ. 1. 8 இலட்சப் நிகர லாபம் ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டின் நிகரான கால அளவில் ரூ. 1.56 இலட்சம் நட்டமடைந்தது. நாளாவட்டத்தில் ஈரோடு தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தும் ஆலையிலுள்ள வசதிகள் அதிகரித்து வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளுக்கு போதுமானதாக இருக்காது. ஆதலால், மதுரை மாவட்டத்தில் ரூ. 20 இலட்சம் செலவில் துணி செய்முறைப்படுத்தும் சிறிய பிரிவு ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பாலியஸ்டர் பருத்தி சலவைத் துணிகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. சட்டைத் துணிகள், சேலைகள் மற்றும் சூட்டிங் ரகத் துணிகளும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டு இம்மாநிலத்தில் பரிசோதனை ரீதியில் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இம்மாதிரியான துணிகளை செய்முறைப்படுத்த இம்மாநிலத்தில் தற்போது வசதிகள் இல்லாத காரணத்தால் கைத்தறியில் உற்பத்தியாகும் இப்படிப்பட்ட துணிகளை செய்முறைப்படுத்த இப்போது பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அதிகப் போக்குவரத்துச் செலவுகளும் இதரச் செலவுகளும் ஆகின்றன. இதற்காக ஈரோடிலுள்ள தமிழ் நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தும் ஆலையில் செயற்கை இழையால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்று ரூ.31 இலட்சச் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நவீன சாய ஆலைகள்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் போதுமான அளவு செய்முறைப்படுத்தும் வசதி இல்லாதிருப்பது ஒரு பெரிய குறையாகும். தற்சமயம் 12 பெரிய சாயச் சாலைகளும் 180 சிறிய சாயச் சாலைகளும் நாளொன்றுக்கு 60 பேல்கள் உற்பத்தித் திறன் கொண்டவைகளாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு நவீன சாயத் தொழிற்சாலைகள் காஞ்சீபுரம், கரூர் திட்டங்களால் நிறுவப்பட்டுள்ளன. ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தும் ஆலையில் நாள் ஒன்றுக்கு 10 பேல்கள் உற்பத்தித் திறன் கொண்ட நூல் சிட்டம் சாய இயந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற பெரிய நவீன சாயத் தொழிற்சாலைகளை சலவை சாயமேற்றுதல் வசதிகளுடன் கைத்தறிகள் நிறைந்துள்ள இடங்களான சேலம், கோயம்புத்தூர், மதுரை, செங்கற்பட்டு, திருச்சி, திருநெல்வேலி, வட ஆற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட 5 நவீன சாயச் சாலைகளை ரூ. 60 இலட்சம் மொத்தச் செலவில் சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் நிறுவ ஏற்கனவே தொடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ. 48 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. மேலும் 3 நவீன சாயச் சாலைகளை வட ஆற்காடு, செங்கற்பட்டு, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிறுவ இந்திய அரசும் ரூ. 30 இலட்சம் அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.240 இலட்சம் மூலதனச் செலவில் 20 நவீன சாயச்சாலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1978–79, 1979–80ம் ஆண்டுகளில் ரூ. 96 இலட்சம் செலவில் 8 நவீன சாயச்சாலைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979 மார்ச் 31]

7. தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்.

25,200 கதிர்கள் நிறுவனத் திறன் கொண்ட புதுக்கோட்டை காவேரி நூற்பு நெசவு ஆலையும், 13,260 கதிர்கள் நிறுவனத் திறன் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் முத்தாநேந்தலில் உள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையும் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனால் நடத்தப்பட்டு வருகின்றன. தவிர, மேற்கண்ட நலிந்த ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூபாய் 50 லட்சத்திற்கு உத்திரவாதமும் அளித்துள்ளது. 1—4—1978 முதல் 31—12—1978வரையிலானகாலத்திற்கான நிதி நிலைச் சுருக்கம் இதே காலத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

ஆண்டு.	வட்டியும் பிற வருமானமும்.	வட்டியும் பிறசெலவும்.	இலாபம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1976–77	*29.69*	*26.02*	***3.67***
1977–78	*42.47*	*39.41*	***3.16***
1—4—1978 முதல் 31—12—1978 முடிய.	*31.92*	*29.55*	***2.37***

பன்னிரண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும், அரசு மேற் கொண்ட இரண்டாலைகளுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடி மதிப்புள்ள பஞ்சு வாங்கி விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனின் பஞ்சு கொள்முதல் பிரிவு பொறுப்பு வகிக்கிறது. மேலும் பஞ்சு மற்றும் நூலின் தரத்தை சோதனை செய்வதற்கு பரிசோதனைக்கூடம் ஒன்றை 1978-79இல் சுமார் 8.25 இலட்சம் ரூபாய் செலவில் கோவையில் இக்கார்ப்ப ரேஷன் நிறுவி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சுமார் ரூபாய் 175 இலட்சம் மூலதனச் செலவில் 10 விசைத் தறிக் கூடங்களை மாவட்டத்தின் பிற்பட்ட பகுதிகளில் நிறுவவும் திட்ட மிடப்பட்டுள்ளது. இக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 15 கோடி மதிப்புள்ள பலவகை துணிகளை உற்பத்தி செய்து படிப்படியாக முன்னேறி, துணி ஆலைகளின் உற்பத்தியுடன் போட்டியிடும்.

மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் செயல்பட வைத்தல்.

தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழிலில் 1974ஆம் ஆண்டு கடைசி மூன்று திங்கள் காலத்திலிருந்து தொடர்ந்து மந்த நிலை ஏற்பட்டது. இம் மந்த நிலையினால் பஞ்சாலைகள் பலதரப் பட்ட நிலைகளில் பாதிக்கப்பட்டன. ஒருசில ஆலைகள் மூடப் பட்டன. சில ஆலைகள் மூடப்படும் தறுவாயிலிருந்தன. ஆகவே, பஞ்சாலைத் தொழிலின் நிலைமையைப் பரிசீலித்து மூடப்பட்ட ஆலைகளைத் திறக்கவும், இடர்பாடுகள் உள்ள பிற ஆலைகள் மூடப்படாமல் தடுக்கவும் தேவையான பரிந்துரைகளை

வழங்க தமிழ்நாடு அரசு அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான ஒரு குழுவை அமைத்தது. இது போல் பஞ்சாலை கூடுதல் ஆணையர் தலைமையில் ஒரு குழுவையும் மத்திய அரசு அமைத்தது. இவ்விரண்டு குழுக்களும் தமிழ்நாட்டில் 38 பஞ்சாலைகளின் செயல்முறையைப் பரிசீலித்து தகுந்த பரிந்துரைகளை வழங்கின. இக்குழுக்களின் பரிந்துரைகளின் மேல் 16,365 தொழிலாளர்களைக் கொண்ட 10 ஆலைகளுக்கு அரசு உத்திரவாதத்தின்மேல் வங்கிகள் வாயிலாக தேவையான நடைமுறை மூலதனத்தை அளித்து, அவைகளை மீண்டும் செயல்படவைத்ததில் தமிழக அரசு பல வழிகளில் உதவி செய்தது. கோவை பவானி ஆலையும், நாகர்கோயில் நாகம்மாள் ஆலையும் அரசு உத்திரவாத உதவியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் அவைகளும் மீண்டும் செயல்படத் தொடங்கின.

மேற்கண்ட ஆலைகள் தொடர்ந்து அரசு உத்திரவாதத்தை அல்லது கடனை நம்பி செயல்படக்கூடாது என்றும், தேவையான நிதியை அவைகளே ஈட்ட வேண்டும் என்றும் அரசு கருதியது. அரசு உத்திரவாதத்திற்கு மேல் நிதி உதவி பெற்று மீண்டும் தொடங்கப்பட்டுள்ள பஞ்சாலைகளின் செயல்முறை குறித்தும் அவைகளை நீண்ட கால அடிப்படையில் சீரமைப்பு செய்வது பற்றியும் ஆராய்ந்து அரசுக்குத் தேவையான பரிந்துரைகள் செய்யும் பொருட்டு அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்தது. இக்குழு அரசு உத்திரவாதத்துடன் தொடங்கப்பட்ட இந்த ஆலைகளின் தற்போதைய செயல்திறனைப் பற்றி ஆராயும் தனது பணிகளை முடித்துவிட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்கண்ட ஆலைகள் மீண்டும் தொடங்கப்படுவதற்கு அரசு ரூ. 487.04 இலட்சத்துக்கு கடன் உத்திரவாத உதவி அளித்துள்ளது. மேலும் எட்டு ஆலைகளை தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (தனி விதிகள்) சட்டத்தின்கீழ் "நிவாரண நிறுவனங்களாக" அறிவித்துள்ளது.

அரசு உத்திரவாதம் அளிக்கப்பட்ட பஞ்சாலைகளில் கோவை பிரகாஷ் ஆலைக்காக தனியார் இந்தியன் வங்கிக்கு கொடுக்கப்பட்ட உத்திரவாதம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மேற்படி ஆலையை திருவாளர்கள் திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் (தனியார்) நிறுவனம் வாங்கிவிட்டதாலும், உத்திரவாதக் கடன் முழுமையாகக் கொடுக்கப்பட்டமையாலும் வங்கியினால் ரத்து செய்யப்பட்டு திரும்பப் பெறப்பட்டுவிட்டன. ஆலைகளின் செயல்திறன் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இவ்வாலைகள் மீண்டும் திறப்பதற்கு முன்பும் திறந்த பின்பும், அடைந்த செயல் திறன் பற்றிய ஒப்புநோக்கு விவரங்கள் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் ஆலையின் பெயரும்.	கதிர் ஷிப்டுக்கு 40 நம்பர் ஆக மாற்றப் பட்ட உற்பத்தி.		உபயோகிப்பு.		நிகர இலாபம்.	
	திறக்கும் முன்பு.	திறந்த பிறகு.	திறக்கும் முன்பு.	திறந்த பின்பு.	திறக்கும் முன்பு.	திறந்த பின்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	(கிராமில்.)		(சதவீதத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்.)	
1. மது ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ், கோவை	57.40	66.20	76.50	93.50	(—)14.99	(+)10.04
2. ஜனார்தனா மில்ஸ், கோவை	35.00	58.47	33.00	90.00	(—)10.98	(+) 9.94
3. ரவீந்திரா மில்ஸ், கோவை	54.70	63.40	35.40	93.80	(—)14.42	(+)18.36
4. கோவை கமலா மில்ஸ், கோவை	59.73	66.96	66.89	97.41	(—)37.02	(+)11.72
5. லோட்டஸ் மில்ஸ், கோவை	44.70	56.00	55.70	92.00	(—)27.52	(+)10.97
6. ஸ்ரீசக்தி டெக்ஸ்டைல்ஸ், பொள்ளாச்சி.	63.70	66.70	48.00	90.00	(—)19.91	(+)37.66

முடிவுரை :

கச்சாப் பொருள்கள் தொடர்ந்து வழங்கப்படுதல், நிதி உதவி, விற்பனை உதவி, புதிய டிசைன்கள் உருவாக்குதல், மேம்பட்ட சாயம் செய்முறைப்படுத்துதல் மூலம் நேர்த்தி செய்தல் ஆகியவைகளின் காரணமாக கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பி அணிகின்றனர். விற்பனையும் உச்ச நிலையை எட்டியுள்ளது. வேளாண்மைத் தொழிலின் நல்ல நிலை காரணமாக இவ்வாண்டு கைத்தறித் துணிகள், ஆலைத் துணிகளின் சாதகமான விற்பனை நிலைமை மேலும் சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கலாம். அத்துடன் அரசு எடுத்துள்ள பல நடவடிக்கைகள் கைத்தறித் தொழில் நிலை பீடு நடைபோட பெரிதும் உதவும். மக்களின் துணித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கைத்தறி நெசவாளர்களில் நலிவுற்ற பிரிவினருக்கு உதவுதல் ஆகிய இரு குறிக்கோள்களுடன் கைத்தறித் தொழில் தொடர்ந்து நற்பணியாற்றி நல்ல முறையில் வளர்ச்சி அடையும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[164ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை எண். 27

தமிழ்நாடு கதர்—கிராமத் தொள்ழிகள் வாரியம் கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட்டது. முன்னர், கதர் துறையாலும் தொழில் வணிகத் துறையாலும் மேற்கொள்ளப் பட்ட கதர்—கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக இந்த வாரியம் அமைக்கப்பட்டது. வேலைவாய்ப் பற்றோருக்கும் போதிய வேலையின்றி இருப்போருக்கும் பெரு மளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் பணி யாளர்களுக்குப் பயிற்சியளிப்பது உட்பட கதர்-கிராமத் தொழில் உற்பத்தி, வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்துவது இந்த வாரியத்தின் முக்கிய மான பணியாகும். மேலும் உற்பத்திக் காரியங்களுக்காக கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப்பொருட்களைச் சரியான முறையில் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதே கதர் கிராமத்தொழில்கள் திட்டத்தின் நோக்கமாகும்.

2. கதர்—கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரம்புக்குள் வரும் தொழில்களின் பட்டியல் வருமாறு:—

1. கதர்.

2. தானியங்களையும், பருப்பு வகைகளையும் செப் முறைப்படுத்துதல்.

3. கிராமச் செக்கு எண்ணெய்.

4. கிராமத் தோல் தொழில்.

5. கரும்பு வெல்லம், கந்தசாரி சர்க்கரை தயாரித்தல்.

6. பனைவெல்லம், பனைப் பொருட்களைத் தயாரித்தல்.

7. சமையலுக்குப் பயன்படுத்தப்படாத எண்ணெய் சோப்பு,

8. கையால் தயாரிக்கப்பட்ட காகிதம்.

9. தேனீ வளர்த்தல்.

[1979 மார்ச் 31

10. கிராம மட்பாண்டத் தொழில்.

11. நார்.

12. தச்சுத் தொழிலும், கருமார் தொழிலும்.

13. சுண்ணாம்பு தயாரித்தல்.

14. மருந்துக்கான வனச் செடிகளையும் பழங்களையும் சேகரித்தல்.

15. பழங்களைப் பதப்படுத்தல், பாதுகாத்தல்.

16. பிரம்பும் மூங்கிலும்.

17 'கத்தா' தயாரித்தல்.

18. மரப்பிசினையும், ரெசினையும் தயாரித்தல்.

19. அவலரக்கு.

மாநில அரசு அனுமதித்துள்ள கீழ்க்காணும் கூடுதல் தொழில்களை கதர் ஆணைக் குழுவிடமிருந்து நிதியுதவியைப் பெறாமல் உருவாக்கி வருகிறது.

1. அகர் பத்தி.
2. சிகைக்காய் தூள்.
3. பற்பொடி.
4. நீலகிரித் தைலம்.

3. கதர்–கிராமத் தொழில், கிராமங்களில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய தொழில் என அரசு ஏற்பளித்துள்ளது. கிராமப் பொருளாதாரம் மேம்பாடடைவதற்கு இது உதவும் மேலும், வறிய நிலையிலுள்ள கிராமக் கைவினைஞர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தை கொடுக்கும் கிராமப்புறப் பகுதிகளில் கிராம குடிசைத் தொழில்களை உருவாக்கி அவற்றை மேம்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும்பொருட்டு கிராம குடிசைத் தொழிலில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி, அத்தொழிலுக்கு அதிக ஆதரவு தரும் வகையில் பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையைத் திருத்தியமைக்க அரசு முடிவுசெய்துள்ளது. அதன்படி அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், அரசுத் துறை நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்கள் முதலியவற்றிற்குத் தேவைப்படும் பண்டகப் பொருட்கள், கையினால் செய்யப்படும் தாள், எண்ணெய்கள், சோப்பு, பாத அணிகள், செருப்புகள், தோலினால் செய்யப்பட்ட பிற பொருட்கள், மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள், ரொட்டி முதலியன, பிரம்பு மூங்கில்

1979 மார்ச் 31]

வகைகள், மட்பாண்டங்கள் போன்றவற்றை தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்குச் சொந்தமான பிரிவுகள் அல்லது அதன் நிதியுதவி பெற்ற பிரிவுகளிடமிருந்து தான் வாங்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது.

4. பல்வேறு அரசுத் துறைகள், பொதுத் துறைகள், கழகங்கள், சட்டப்படிக்கான வாரியங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், உள்ளாட்சி அதிகார மன்றங்கள் ஆகியவற்றின் தேவைகளைத் தெரிந்து கொள்வதற்காக விரைவானதொரு ஆய்வு நடத்தப்பட்டது. பல்வேறு இனங்களின்கீழ் இந்த நிறுவனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11.35 கோடி மதிப்புள்ள பொருள்கள் தேவையெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கைகுத்தல் அரிசி அடங்காது. ரூ. 2.92 கோடி மதிப்புள்ள கைக்குத்தல் அரிசி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தற்போது உள்ள பிரிவுகளில் பேரளவு உற்பத்தித் திறன் எவ்வளவோ அந்த அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்கவும், துறையின் தேவையைச் சரிக்கட்ட படிப்படியான திட்டத்தின்கீழ் தேவையான இடங்களில் புதிய பிரிவுகளைத் தொடங்கவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

5. கதர் உற்பத்தியும் விற்பனையும் 1970–71 ஆம் ஆண்டில் முறையே ரூ. 2,38.84 இலட்சமாகவும், ரூ. 3,06.75 இலட்சமாகவும் இருந்து 1977–78-ல் ரூ. 5,11.09 இலட்சமாகவும் ரூ. 6,07.64 இலட்சமாவும் அதிகரித்துள்ளன, கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தியும் விற்பனையும் கூட 1970–71ல் முறையே ரூ. 8,76.52 இலட்சமாகவும் ரூ. 9,64.72 இலட்சமாகவும் இருந்து 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 19,25.53 இலட்சமாகவும் ரூ. 21,79.59 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. 1978–79 ஆம் ஆண்டில், கதர்-கிராமத் தொழில்களின்கீழ் முறையே ரூ. 6,25.00 இலட்சம் ரூ. 27,70.00 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் விற்பனையாகும், புதிய பிரிவுகள் தொடங்கப்படுவதாலும், சங்கங்கள், தனிப்பட்ட கைவினைஞர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் நிதி உதவி அதிகரிக்கப்டட்டுள்ளாதாலும் கதர்-கிராமத் தொழில்களின் உற்பத்தி 1979–80-ல் முறையே ரூ. 5,95.00 இலட்சத்தையும் ரூ. 30,20.00 இலட்சத்தையும் எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6 (1) துறைப் பிரிவுகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் புதிய பிரிவுகளை நிறுவவும், (2) உரிய ஆய்வுக்குப் பின்னர் பல்வேறு தொழில்களின்கீழ், ஏராளமான கைவினைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கவும், (3) துறைப் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களையும், சங்கங்கள், தனிப்பட்ட கைவினைஞர்கள் ஆகியோர் உற்பத்தி செய்த பொருட்களையும் தேவையான

இடங்களில் நுகர்வோர் அமைப்புகளுடன் உரிய ஏற்பாடு செய்துகொண்டு விற்பனை செய்யவும் திட்டவட்டமான முயற்சிகள் எடுக்கவேண்டியது அவசியம். இதற்காக மாவட்ட அளவில் வாரியத்தின் பணிகளை ''கதர் என்றும் ''கிராமத் தொழில்கள்'' என்றும் இரண்டாக பிரிக்க முடிவு செய்யப்பட்டது. இதனால் உதவி இயக்குநர்கள், தமது பொறுப்பின்கீழ் உள்ள தொழிலின் மேம்பாட்டில் அதிக நாட்டம் செலுத்த முடியும்.

கதர்.

7, துறைப் பிரிவுகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. வாரியம், கச்சாப் பட்டிலிருந்து கதர் பட்டுத் துணியையும் உற்பத்தி செய்கிறது. கிசான் நூல், அம்பர் நூல் ஆகியவற்றை வாரியம் நூற்போரிடமிருந்து வாங்குகிறது. வாரியம் தற்போது 308 கிராம நூற்பு நிலையஙகளை தொழில் கொட்டகை முறையின்கீழ் நடத்தி வருகிறது ஒவ்வொரு நிலையத்திலும் 32 கைவினைஞர்கள் பெரும்பாலும் பெண்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். கிராம நூற்பு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் நூல், நூற்போரிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கிசான், அம்பர் நூல் ஆகியவை நெசவாளர்களுக்கு கதர் துணி நெய்வதற்கு 78 கதர்த் துணை நிலையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. தற்போது கிராம நூற்பு நிலையங்கள் 10,000 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்த நுற்பு நிலையங்களில் பணிபுரியும் ஒவ்வொரு கைவினைஞருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 முதல் ரூ. 3.00 வரை ஊதியம் கிடைக்கிறது. நூற்போரின் ஊதியம் ஒரு சிட்டத்திற்கு 3 காசிலிருந்து 4 காசாக இந்த ஆண்டு பொங்கல் தினம் முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் ஒரு நாளைக்கு சராசரி 75 காசு அதிகமாகப் பெற இயலும். எனவே, ஒரு நாளைக்கு அவர்களின் ஊதியம் ரூ. 3·25, ரூ. 3.75 ஆக உயரும்.

8. ஆயத்த உடைகளையும் (Readymade garments) வாரியம் தயாரித்து வருகிறது. ரூ. 10.63 இலட்சம் மதிப்புள்ள ஆயத்த உடைகள் 1978-79ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (அதாவது 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரையில்) தயாரிக்கப்பட்டன. அதே காலத்தில் ரூ. 14.28 இலட்சம் மதிப்புள்ள ஆயத்த உடைகள் விற்கப்பட்டன. 1979-80-ம் ஆண்டிற்கான தயாரிப்பு இலக்கு ரூ. 15.00 இலட்சம் ஆகும். மேலும் பண்டிகைக் காலங்களில் பொது மக்கள் வாங்கும் பொருட்டு ரூ. 70.00 இலட்சம் மதிப்புள்ள பூப்போட்ட கதர் துணிகள் விற்பனைக்கு வழங்கப்பட்டன. 1978ஆம் ஆண்டு

1979 மார்ச் 31]

காந்தி பிறந்த நாள், தீபாவளி, பக்ரீத் ஆகிய திருவிழாக் காலங்களில் ரூ. 55.00 இலட்சம் மதிப்புள்ள பூப்போட்ட கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

9. 1978-79ஆம் ஆண்டு திட்டத்தில் 150 புதிய கிராம நூற்பு நிலையங்களையும், 10 மஸ்லின் துணிப் பிரிவுகளையும் அமைக்க கருதப்பட்டுள்ளது. கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு 20 புதிய அமைப்பிலான சர்க்கா தொகுதிகளை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. எஞ்சியுள்ள 130 சர்க்காத் தொகுதிகளும் 10 மஸ்லின் தொகுதிகளும் இந்த ஆண்டில் பெறப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகுதிகள் செயல்படத் தொடங்கினால் 5,400 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். 1979-80 ஆம் ஆண்டிலும் கிராம நூற்பு நிலையங்கள் 150, மஸ்லின் தொகுதிகள் 10 ஆகியவற்றை கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதியுதவியுடன் தொடங்க வாரியம் திட்டமிட்டுள்ளது. இது மேலும் 5,400 பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பை நல்கும்.

10. மாநில அரசின் கொள்கை, அது வழங்கிய ஆதரவு விலை ஆகியவற்றின் காரணமாக பருத்திக் கதர் உற்பத்தி விற்பனை ஆகியவற்றில் வாரியம் பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைய முடிந்தது. அனைத்து அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சிகள், சட்டப்படி அமைந்த வாரியங்கள் உள்பட பொது நிறுவனங்கள் ஆகியவை, அவற்றின் பணியாளர்களுக்குச் சீருடை, அலுவலகங்களில் உள்ள பொருள்களுக்குத் தேவைப்படும் துணிகளில் 50 சதவீதத்தைக் கதராக வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டன.

11. தீபாவளி, பக்ரீத், கிறித்துமஸ், பொங்கல் போன்ற முக்கிய திருவிழாக் காலங்களிலும், இராஜாஜி நூற்றாண்டு விழாக் காலத்திலும் 67 நாட்களுக்கு 5 சதவீத சில்லறை விற்பனைத் தள்ளுபடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. திரு. காமராஜ் நினைவு விழாத் தொடர்பாக 1978ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளிலிருந்து 15 நாட்களுக்கும், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் இவர்களின் நினைவு நாள் விழாத் தொடர்பாக 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் முதல் மேலும் 15 நாட்களுக்கும் கதர் விற்பனைக்குச் சிறப்பு கூடுதல் தள்ளுபடி வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

12. இம்மாநிலம் முழுவதிலும் பரவியுள்ள 165 விற்பனைப் பிரிவுகள் மூலம், வாரியம் அதன் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கிறது. 1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 607.64 இலட்சம் மதிப்புடைய கதர் துணி விற்பனை செய்யப்பட்டது 1978-79ஆம் ஆண்டில் கதர்த் துணி விற்பனை ரூபாய் 62.5

[1979 மார்ச் 31

இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் கதர் உற்பத்தி, விற்பனை இவற்றின் அளவு முறையே ரூபாய் 595 இலட்சம், ரூபாய் 650 இலட்சமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

13. நூற்போர், நெசவாளர்கள், சிட்டத்தில் நூலைச் சுற்று பவர்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள், தையற் காரர்கள் முதலியவர்கள் போன்ற ஏறத்தாழ அரை இலட்சம் பேருக்கு கதர்த் திட்டங்கள் பகுதி நேர, முழுநேர வேலை வாய்ப்பளிக்கின்றன. ரூபாய் 200 இலட்சம் அளவிற்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

14. 4,000 நெசவாளர்களுக்கு விழுதுகள், பண்ணை முதலிய வற்றை 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 வீதம் வழங்க 1979-80 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்கள்.

15. கிராமத்திலுள்ள மக்களின் ஏழ்மை நிலையைப் போக்க வும், உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களையும், வேலையாட்களையும் பயன்படுத்தி, நுகர்வோர்களது தேவை களுக்குப் பொருட்களை வழங்க வகை செய்யவும், கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வளமான கிராமப் பொரு ளாதாரத்தை உருவாக்க வேண்டிய தற்போதைய நிலையில்; பல்வேறு கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வாரியம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. கீழ்க்காணும் கிராமத் தொழில்களை வாரியம் துறையின் பிரிவுகள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்திவருகிறது :—

1. பனைவெல்லம்.

2. நாட்டுச் செக்கு எண்ணெய்.

3. கைக்குத்தல் அரிசி (தானியங்களையும் பருப்பு வகை களையும் பதப்படுத்துதல்).

4. நாட்டுத் தோல்.

5 மட்பாண்டங்கள் (செங்கற்கள், ஓடுகள்).

6. சுண்ணாம்புக் கல், சுண்ணாம்புச் சூளை (காளவாய்).

1979 மார்ச் 31]

7. தேனீ வளர்த்தல்.

8. தச்சு-கருமார் தொழில்.

9. பழங்களைப் பதப்படுத்துதலும், பாதுகாத்தலும்.

10. கையால் செய்யப்பட்ட காகிதம்.

11. வெல்லம், கந்தசாரி சர்க்கரை.

12. சமையலுக்குப் பயன்படுத்தப்படாத எண்ணெய், சோப்பு.

13. நார்த்தொழில்.

14. பிரம்பு, மூங்கில்.

1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 2,500.00 இலட்சம் மதிப்புடைய கிராமத் தொழில் தயாரிப்புப் பொருள்கள் தயாரிக்கப் படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையின் மதிப்பு ரூபாய் 2,770 இலட்சம் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 2.78 இலட்சம் பேர்களுக்கு ரூபாய் 960 இலட்சம் ஊதியமாக வழங்கப்படும்.

16. வேலை வாய்ப்பிற்கான சாத்தியக் கூறுகளைக் கருதிப் பார்த்து, திட்டக் காலத்தில் கிராமத் தொழில்களின்கீழ் பெரிய அளவில் பின்வரும் திட்டங்களைத் தொடங்க வாரியம் திட்டமிட்டுள்ளது.

கிராம எண்ணெய்த் தொழில்.

17. தமிழ் நாடு ஓராண்டிற்கு 12 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்கிறது. இதில் 2 இலட்சம் டன் வித்துக்கள், எண்ணெய் உற்பத்தியல்லாத பிறவற்றிற்காக ஒதுக்கப்பட்டபோதிலும், 10 இலட்சம் டன் வித்துக்கள் எண்ணெய் பிழிவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள சுழல் வகை இயந்திரத்தில் எண்ணெய்ச் செக்குகளும் பிறவகை எண்ணெய்ச் செக்குகளும் சுமார் 5 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களைப் பிழியும் பழைமையான நாட்டுச் செக்குகள், மேலும் 0.50 இலட்சம் டன் வித்துக்களைப் பிழியும். இதன் வேலை வாய்ப்பு, சாத்தியக் கூறுகளைக் கருத்தில் கொண்டு திட்டக் காலத்தில் மின் விசையினால் இயங்கும் 10,000 செக்குகளை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 500 செக்குகளை (Ghamis) வழங்குவது என்று

கருதப்பட்டுள்ளது. இதுவரையில் விசையால் இயங்கும் செக்குகள் அகமதாபாத்திலுள்ள அம்பர் சரஞ்சம் பந்தரிலிருந்து வாங்கப்பட்டு தனியாருக்கு வழங்கப்பட்டன. விசையால் இயங்கும் இந்த செக்குகளைத் தயாரித்து வழங்குவதற்காக அரசு நிறுவனமான ''டான்சியிடம்'' வாரியம், தேவைக் குறிப்பைக் கொடுத்துள்ளது. இவற்றை 1979 மார்ச்சுக்கு முன்னர் ''டான்சி'' வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80-ல் வாரியம் விசையால் இயங்கும் 1,000 செக்குகளை வழங்கக் கருதியுள்ளது.

கையால் தயாரிக்கப்படும் காகிதப் பிரிவுகள்.

18. இன்றைய நாள் நிலவரப்படி வாரியம் 8 துறைப் பிரிவுகளையும், மூன்று கூட்டுறவுச் சங்கங்களையும் நடத்தி வருகின்றது. இந்த ஆண்டில் கக்கன்புரம், பரப்பாடி ஆகிய இவ்விரு இடங்களிலும் இயங்கா நிலையில் இருந்த கையால் தயாரிக்கப்படும் காகிதச் சங்கங்களை, வாரியம் மீண்டும் இயங்கச் செய்துள்ளது. அருப்புக்கோட்டை, செம்பனார்கோயில் ஆகிய இவ்விரு இடங்களில் மேலும் இரண்டு சங்கங்களை மீண்டும் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 5 பிரிவுகளைப் புதிதாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பனைவெல்லத் தொழில்.

19. தமிழ் நாட்டில் 4 கோடி பனை மரங்கள் உள்ளன. அவற்றில், தற்போது ஒரு கோடி மரங்களிலிருந்துதான் பதநீர் இறக்குவது அல்லது ஏனைய பனைபடு பொருட்கள் தயாரிப்பது நடைபெறுகிறது. சுமார் 2.5 இலட்சம் பேர் பனை வெல்லத் தொழிலிலும், பனைபடு பொருட்கள் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

மலைப் பகுதிகளிலுள்ள மரங்களையும், பனைக் கன்றுகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், இம்மாநிலத்தில் சுமார் 2 கோடி மரங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்புத் திட்டக் கால அளவில் படிப்படியாக நிறைவேற்றப்படும் முறையில் 2 கோடி மரங்களைப் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பை வாரியம் கருதிப் பார்த்து வருகிறது. 4.8 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதும், திட்டக் காலத்தின் இறுதியில் ரூ. 75 கோடி ப்மதிப்புள்ள பனைபடு பொருட்களைத் தயாரிக்கக் கூடியது என்று

1979 மார்ச் 31]

மதிப்பிடப்பட்டதுமான பயிற்சி உற்பத்தித் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. இவ்வாரியத்தின் ஒரு பிரிவான மாநிலப் பனை வெல்லக் கூட்டமைப்பு 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பனை நாரை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. தயாரிக்கப்பட்ட இத்திட்டத்தைச் செயல்படுத்துவதால் கணிச மான அளவிற்குப் பனை நாரையும், ஏனைய பனைபடு பொருட் களையும் ஏற்றுமதி செய்வதை அதிகரிக்க இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் ரூ. 5 இலட்சம் மொத்த முதலீட்டுச் செலவில் நவீன தூரிகை செய்யும் பிரிவு ஒன்று தொடங்க வாரியம் பரிசீலித்து வருகிறது.

பனை வெல்லம் தயாரிக்கும் தொழிலில் 'ஜனதா காப்பீட்டு' திட்டத்தின் கீழ் பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் பெரு மளவிற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பதநீர் இறக்கும் தொழில் மிகவும் அபாயகரமானதும், இடையூறானதுமாதலால், பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் பலர், மரம் ஏறுகின்ற போது இறந்து போகின்றனர். ஆண்டிற்கு ரூ. 12 தவணைத் தொகை செலுத்தி 'ஜனதா ஆயுள் காப்பீட்டு' பெற்றுள்ள இந்தக் கைவினைஞர்கள் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத் திற்கு ரூ. 10,000 கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 22,274 பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான அனுகூலத் திட்டத்தின்கீழ் இத் தொழிலாளர் களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு அரசு அனுமதித்துள்ள நிதிகளிலிருந்து, நடப்பாண்டில் ஒவ்வொரு இறப்பிற்கும் ரூ. 1,000 என்ற வீதத்தில் ரூ. 98,000 தொகையை வாரியம் அனுமதித்துள்ளது.

சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங் களிலுள்ள 'பாம்கோலா' பிரிவுகள், நிறைவளிக்கும் வகையில் இயங்கி வருவதோடு, இந்த மென்-பானங்கள் மக்களிடையே பிரமலமாகி வருகின்றன. கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும், புதுடில்லியில் 'பாம்கோலா' பிரிவு ஒன்று தொடங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் மேம்பாட்டு மும்முரத் திட்டம்.

20. 1978–79ஆம் ஆண்டில், பழங்குடியினர் வாழும் பகுதி களில் பழங்குடியினர் மேம்பாட்டு மும்முரத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக ரூ. 2.51 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் (1) தருமபுரி மாவட்டம், சித்தேரியில் 20 பேர்களுக்குக் கூடை முடையும் பயிற்சியும், (2) தென்னார்க்காடு மாவட்டம், கல்ராயன் மலையில் 20 பேர்களுக்குப் பிரம்புத் தொழிலில் பயிற்சியும் அளிப்பதற்காக இரண்டு பயிற்சி திட்டங்

களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கல்ராயன் மலையிலுள்ள கருமார்கள் 5 பேருக்குக் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்க ரூ. 2,500-ம் 20 எமரி சக்கிகள் (Emery Chakkies) வழங்க ரூ. 4,375-ம் அரசு அனுமதித்துள்ளது. பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1979–80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5·00 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

21. 1978–79ஆம் ஆண்டு, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வாரியத்திடம் நிலுவையாக உள்ள தொகையுடன், அரசால் அனுமதி அளிக்கப்பட்ட ரூ. 7 இலட்சத்தைக் கொண்டு, 150 பேருக்கு 1,500 தேன் கூடுகளையும், 55 நபர்களுக்கு தேனடையிலிருந்து தேன் பிழியும் பொறிகள் 55-ம் வாரியம் வழங்கியுள்ளது. 1979–80-லும் இத்திட்டத்தின் கீழ் 150 பழங்குடியினர்களுக்கு 1,500 தேன் கூடுகளையும், 50 நபர்களுக்கு 50 தேன் பிழியும் பொறிகளையும் வாங்க அரசு வழங்கும் நிதியுதவியைக் கொண்டு 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் நிதி உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

வறட்சிப்பாங்கான பகுதி திட்டம்.

22. தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 1978–79 நடப்பு ஆண்டிற்காக, முறையே கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ. 4·07 இலட்சமும், ரூ. 14·99 இலட்சமும் மானியமாக அனுமதிக்கப்பட்டது; அவையாவன :

	ரூபாய் இலட்சத்தில்
தர்மபுரி மாவட்டம்—	
(1) தலைக்கு ரூ. 250 வீதம் பதநீர் இறக்குவோர் 1,500 பேருக்கு மரக் குத்தகைக்காக வழங்கப்பட்ட உதவித் தொகை	3·75
(2) பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்களுக்கு வழங்கப்பட்ட மானியம்	0·32
மொத்தம் ..	4·07

1979 மார்ச் 31]

	ரூபாய் இலட்சத்தில்.
இராமநாதபுரம் மாவட்டம் —	
(1) தலைக்கு ரூ. 300 வீதம், பதநீர் எடுப்போருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை—1,500 பேருக்கு	4·50
(2) தலைக்கு ரூ. 50 வீதம் பாய்முடைவோருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை—1,000 பேருக்கு	0·50
(3) நிர்வாக உதவித் தொகை—60 சங்கங்களுக்கு.	3·06
(4) பாய் முடைதல், அழகுப் பொருள்கள் தயாரித்தல், பனை நார் தொழில் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் மையங்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை—39 மையங்களுக்கு.	4·39
(5) பனைமரம் நடுதல்—2 இலட்சம் பனங் கொட்டைகள்	0·94
(6) விபத்து நிதி—30 சங்கங்களுக்கு ..	0·39
(7) கருவிகள்—1,000 பேருக்கு பயன் பெறுவோர்.	0·75
(8) ஆயுள் ஈட்டுறுதி—5,000 பேருக்கு பயன் பெறுவோர்	0.30
(9) இத்திட்டங்களை செயல்படுத்தத் தேவையான பணியாளரமைப்பு (கணக்கர் ஒருவர், நான்கு மேற்பார்வையாளர்கள்) ..	0·16
மொத்தம் ..	**14 99**

சிறு உழவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பால் நிதியுதவி வழங்கப்பட்ட திட்டங்கள்.

23. சிறு உழவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றிற்கு 1978–79-ல் அனுமதி வழங்கப்பட்டது. இதன் மொத்த மூலதனம் ரூ. 5·00 இலட்சம் ஆகும். யூனிட் ஒன்றுக்கு ரூ. 500 செலவில், தேனீக் கூடுகளை பொருத்துவதற்கான சாதனம் மற்றும் தேனீத் தொகுதிகளுடன் கூடிய 10 செயற்கைத் தேன் கூடுகளை, தெரிந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுக்க இத்திட்டம் வகை செய்கிறது. 1,000 விவசாயிகளுக்கு செயற்கைத் தேன் கூடுகளையும் கொடுக்க கருதப்பட்டுள்ளது. சிறு உழவர்கள்

மேம்பாட்டு ஏஜென்சியிடமிருந்து பெற கருதப்பட்ட உதவித் தொகை ரூ. 1·67 இலட்சம் ஆகும். எஞ்சிய தொகை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கேட்கப்பட வேண்டும்.

ஆராய்ச்சியும் வளர்ச்சியும்.

24. கதர் கிராமத் தொழில்களின் கீழ் ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக ரூ. 32 இலட்சம் ஒதுக்கவும், திட்ட காலத்தில் விற்பனைப் பிரிவு ஒன்றைத் தொடங்கவும் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1979—80 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஆராய்ச்சி விற்பனைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ. 5·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(1) கதர்.—ஆறாவது திட்டம் மிக அண்மையில் இருப்பதையும் இரு வகையிலான புதிய நெறிமுறைகளையும் (அதாவது துறையில் மரபு வழியில் ஏற்கனவே பயிற்சி பெற்று வந்த பணியாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு அளிக்க உறுதி செய்வது, ஏராளமானவர்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்), கருத்தில் கொண்டு, பொருள் மேம்பாடு, புதிய கச்சாப் பொருட்களைக் கண்டறிதல், வேலை உத்திகளை பல்வகைப் படுத்துதல் வடிவமைத்தல் முதவியவை உட்பட, ஆராய்ச்சி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வாரியம் கருதியது. 1979—80-ல் கதர் பட்டிற்காக, வடிவமைத்தல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இப் பிரிவினை ஏற்படுத்தும் போது, பட்டு, சரிகை ஆகியவற்றில் கண்கவரும் வண்ணம் மற்றும் வண்ணச் சேர்க்கைகளுக்கான வண்ண முறைகள் பாணிகள் வடிவமைப்புகள் ஆகியவை குறித்து ஆராய்ச்சியையும் பரிசோதனைகளையும் நடத்த வேண்டி நிலையம் ஒன்றினை ஏற்படுத்துவது என்ற வாரியத்தின் நீண்ட நாள் தேவையினை இது சரிக்கட்டும். இந்தப் பிரிவு வடிவமைத்தல், நெசவு அச்சிடுதல் ஆகிய மூன்று தனிப் பிரிவுகளாகக் கொண்டிருக்கும். 1979—80-ல் இதற்கு தொடரா இனச் செலவு வகையில் ரூ. 3·28 இலட்சம் செலவாகும். தொடர் இனச் செலவு வகையில் ரூ. 0·36 இலட்சம் செலவாகும்.

(2) நுங்கினைப் பாதுகாத்தல்.—கோடைகாலத்தில் மட்டுமே நுங்கைப் பெற முடியும். நுங்கைப் பாதுகாப்பதற்கான உத்திகளோ அல்லது வசதிகளோ இல்லாததால், மிகவும் சுவை மிக்க இவ்வகைப் பழம் வீணாக்கப்பட்டு வருகிறது. இந்த இயற்கை வகை விளைபொருள் வீணாவதைத் தடுத்து இதனை ஆண்டு முழுவதிலும் கிடைக்கச் செய்யும் பொருட்டு, ஆண்டுமுழுதிற்கும் நுங்கினைப் பாதுகாத்து வைத்தல் குறித்த முறையைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதன் மூலம் அறிய வேண்டும். எனவே நுங்கினைப் பாதுகாக்க வேண்டிய உத்திகளை கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சிப் பணிப் பொறுப்பினை வேளாண்மைப்

1979 மார்ச் 31]

பல்கலைகழகத்திடம் அல்லது யாதொரு பிற ஏஜென்சியிடம் ஒப்படைக்கக் கருதப்படுகிறது. இப்பணிக்காக ஒதுக்கக் கருதப் பட்டுள்ள மொத்த மானியம் ரூ. 30,000 ஆகும். அத்தொகையில் ரூ. 15,000, 1979-80-ல் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(3) விசைச் செக்குகளை மேம்பாடடையச் செய்தல்.— விசைச் செக்கு, நாட்டுச் செக்குத் தொழிலில் ஈடுபட்டுள்ள கிராம கைவினைஞர்களிடையேயும், படித்து வேலை வாய்ப்பற்றிருப் பவர்களிடையேயும், தற்போது பிரபலமாகி வருகிறது. விசைச் செக்கு ஒன்று, தற்போது நாளொன்றுக்கு 80 கிலோகிராம் எண்ணெய் பிழியும் திறனுடையதாகும். அதன் உற்பத்தி 41 சதவீதமாகும். அதிகரிக்கப்பட்ட திறனும் உயர் உற்பத்தியும் விசைச் செக்குகள் மேற்கொண்டும் சிக்கனமாக செயல்படுவதற்கு உதவி புரியும் என்பதோடு கிராமப்புற பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவும். இதனைக் கருத்தில் கொண்டு ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டுள்ள முகவரமைப்பிற்கு மானிய உதவி கொடுப்பதன் மூலம் 'டான்சி', 'மிராடோ' (Tansi, Meerado) அல்லது தொழில் நுட்ப பல்கலைக் கழகம் போன்ற முகவரமைப்பு ஒன்றின் வாயிலாக ஆராய்ச்சிப் பணியை நடத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிப் பணிக்காக ஒதுக்கக் கருதப்பட்டுள்ள மொத்த மானியம் ரூ. 30,000 ஆகும். இதில் 1979-80-ல் 50 சதவீதத் தொகை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(4) விற்பனை.—கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சிக் கும் 1979-80-ல் செயல்படுத்துவதற்காக கருதப்படும் கிராம கைவினைஞர்களுக்கு பெருமளவில் நிதியுதவி அளிக்கும் திட்டங் களுக்கும் முக்கியத்துவம் அளிப்பதன் மூலம், கதர் கிராமத் தொழில்களின்கீழ் 1979-80-ல் முறையே ரூ. 595 இலட்சம் ரூ. 3,020 இலட்சம் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற் காக அங்காடிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். வாரியம் எங்கெல்லாம் கூட்டுறவு உற்பத்திப் பொருட்களையும் தனிப்பட்ட கைவினைஞர்கள் தயாரித்த பொருட்களையும் விற்பனை செய்ய அவசியம் உள்ளதோ அங்கெல்லாம், நுகர்வோர் சங்கங்களுடனோ அல்லது அமைப்புக்களுடனோ இணைந்து உரிய ஏற்பாடு செய்வதன்மூலம், விற்பனை வசதி களுக்கு ஏற்பாடும் செய்ய வேண்டும். இப்பணியை கவனிக்க வேண்டி, வாரியத்தின் மத்திய அலுவலகத்தில் விற்பனைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. விற்பனைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல், விளம்பரம் செய்தல், அது தொடர்பான பிற இனங்கள் ஆகியவற்றிற்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 1.06 இலட்சம் செலவாகும்.

வாரியத்தின் நிதி நிலை

25. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், (1) கதர் நிதி, (2) கிராமத் தொழில் நிதி என்ற தனிப்பட்ட இரு தலைப்புகளின்கீழ் அரசு வரவு-செலவுத் திட்டத்தைப் போலவே தனது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கிறது.

பம்பாய் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு, இந்தியக் அரசால் ஏற்பளிக்கப்படக்கூடிய தனது நிதியுதவியின் தன்மையையொட்டி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகத் தேவைப்படும் நிதியுதவியை வாரியத்திற்கு அளிக்கிறது. தமிழ்நாடு அரசு, வணிகமுறையல்லா நடவடிக்கைகள் குறித்து வாரியத்தின் வரவுக்கும் செலவுக்குமிடையே உள்ள நிகர செலவு வேறுபாட்டுத் தொகையைக் கொடுக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978–79-ல் இறுதியாக ஒப்புக் கொள்ளப்பட்டதின்படி கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு கீழ்க்கண்ட தொகையை ஒதுக்கியுள்ளது.

	மூலத் திட்டம்.		கூடுதல் திட்டம்.		மொத்தம்.	
	மானியம்.	கடன்.	மானியம்.	கடன்.	மானியம்.	கடன்.
	(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
கதர்	2.78	1,25.87	4.57	81.71	7.35	207.58
கிராமத் தொழில்கள்	16.40	69.25	24.84	97.85	41.24	167.10
		10.00*		177.00*		187.00*
மொத்தம் ..	19.18	205.12	29.41	356.56	48.59	561.68

*வங்கிகளிடமிருந்து பெறும் நிதி.

எனினும் கிராமத் தொழில்களுக்கென ஒப்புக்கொள்ளப்பட்ட கூடுதல் திட்டத்தின் கடன் பகுதி குறித்து வங்கி நிதியுதவியை நாடுமாறு ஆணைக்குழு, வாரியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. ஆணைக்குழு தனது சொந்த நிதிவாயில்களிலிருந்தே நிதிகளுக்கு அனுமதி வழங்க கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

26. கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து பெறும் நிதி உதவி தவிர, வாரியம் நிகர செலவு மானியமாகவும், குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் மாநில அரசிடமிருந்தும் நிதியுதவி பெறுகிறது. மாநில அரசு கொடுக்கும் உதவித் தொகைகள், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், மற்ற பல்வகைப்பட்ட வருமானங்கள் ஆகியவைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	1978–79.	1979–80.
	(ரூபாய் இலட்சத்தில்)	
I. மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்.		
1. நிகர செலவு மானியம்—		
கதர் நிதி	86.00*	32.45
*(நிகர செலவு மானியம் பழைய பாக்கிகளும் சேர்த்து)		
கிராமத் தொழில் நிதி ..	40.70	40.02
தணிக்கைக் கட்டணங்கள் ..	12.50	12.50
2. கதர் விற்பனைமீது தள்ளுபடி	45.00	60.00
3. வறட்சிப் பாங்கான பகுதி திட்டம், பழங்குடியினர் நலம் ஆகிய குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ..	22.58	7.54
மொத்தம் ..	206.78	152.51

	1978–79.	1979–80.
II. வாரியத்தின் வரவுகள்.—		
கதர் கிராமத் தொழில் பொருள்கள் விற்பனை மற்றும் பலவகைப்பட்ட வருமானங்கள்	621.45	667.79

1979 மார்ச் 31]

கோரிக்கை எண் 27, கதர்—1979-80.

321. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்.
கதர் தொழில்.

(ரூபாய்களில்.)

I. திட்டத்தில் சேராதவை—

AA. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கதர் வளர்ச்சிக்குரிய உதவி மானியங்கள்	32,45,000
AB. தணிக்கைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கென தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள்	12,50,000
AD. கிராமத் தொழில்கள் நிதிக்கென தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள்	40,02,000
AF. பதநீர் இறக்கும் தொழிலாளர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கென தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள்	50,000

II. மாநிலத் திட்டம்—

JB. கதர் நெசவாளர்களுக்கு துணைக் கருவிகள் வழங்குவதற்கென தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள்	1,00,000
JC. கதர் விற்பனைத் தள்ளுபடிக்கான உதவி மானியங்கள்	60,00,000
JA. பழங்குடியினருக்கு தேனீ கூடுகள் வழங்குவதற்கென அளிக்கப்படும் மானியங்கள்	5,00,000
JF. கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்	4,000
AM. பழங்குடி மக்களுக்கு உதவித் திட்டம்	—

[1979 மார்ச் 31

IV. மத்தியத் துறை—

X A. நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பை வளப்படுத்துவதற்கென தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள்	75,000
XB. இன்றியமையாத எண்ணெய்களை வடிப்பதற்கும், வடிப்பக இயந்திரங்களை நீலகிரி மாவட்டத்தில் விநியோகிப்பதற்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்களும், உதவி மானியங்களும்	25,000
மொத்தம் ..	1,52,51,000

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS